ஓம்:

கணபதி துணை

ஷண்முக நாதன்

அல்லது

தனை வெசிய மைனர்

மேலைச் சிவபுரி,

திரு-சொ. பனையப்ப செட்டியார்

இயற்றியது.

சென்னை

பி. ஆர். இராமையர் கம்பெனியில்

அச்சிடப்பெற்றது.

விலை நபர்] 1927 [ஒன்றே கால்

AN INTRODUCTION

I had been asked to write an introduction by my esteemed friend Mr. **S. Panaiyappa Chettiar,** the author for his new novel "**Shanmuganathan**" or "**The Dhana Vysia Minor.**" As his name as a first class novelist has spread throughout the Tamil Nadu I feel no difficulty in introducing this novel to the novel-reading public.

The novel "**Shanmuganathan**" is admirably done and it reveals his high powers of plot-construction and delineation of character as also his high knowledge of society, and mastery of simple language but elegant and idiomatic style.

The heroine "**Kohilam**" is a model of Indian Chastity. Her ready refusal to love the most wicked wretch Shanmuganathan in spite of his threats, and her strenuous speech will teach the young girls the value of Modesty. The illiteracy, vague conduct, and immoral society and the enormous wealth lead Shanmuganathan to lead a vicious life. That love can be had not only by riches but by the pure heart and stainless character is well shown through the character of **Masilamani.** In this novel it is urged that superstitious believes are to be abolished. I have no doubt it will be appreciated by all and translated into action. In conclusion I boldly say this work really deserves credit.

I confidently anticipate for him a career of successful achievement which will place him among the foremost of our Tamil authors and heartily wish him every success in gaining popular appreciation by the Grace of the Almighty.

Melasivapuri
25—10—27

S. NATESA AIYAR,
Sanmarga Sabah.

முகவுரை

தொன்னூற் பரப்பைத் தருவி யுலகியலே
நன்குணர்ந்தெல் லோருமொரு நல்விருந்தா—யின்பமுறச்
சண்முகசா தப்பெயராற் றந்தனனே னூர் காதை; புகழ்
எண்சோ பனையப்ப னீங்கு.

மேலச்சிவபுரி, திருவாளர், சோ. பனையப்ப செட்டியா ரவர்கள் இயற்றிய "வீழ்முகநாதன்—அல்லது—தன வைசிய மைனர்" என்னும் இந் நூலை முழுவதும் படித்துப் பார்த்தேன். எளிய—இனிய செந்தமிழ் நடையில் இலக்கண வழுவின்றி எழுதப் பெற்றுள்ளது. திருக்குறள், கம்பராமாயணம், திருக்குற்றாலத் தலபுராணம் முதலிய அரிய நூல்களினின்றும் சிறந்த மேற்கோள் கள் எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன. முதலாவது அதிகாரத்தில் அறத்தைச் செய்ய வேண்டிய முறையும், தற்காலம் பயனின்றிச் செய்யப்படுகின்ற அறங்களினியல்பும், இரண்டாவது அதிகாரத் தில் உண்மைக் காதலினியல்பும், பொருள் ஒன்றையே கருதிச் சிறு பெண்களை வயது முதிர்ந்தவர்களுக்கு மணஞ் செய்து கொடுப் பதனாலுண்டாந் துன்ப வாழ்க்கையின் போக்கும், மூன்றாவது அதிகாரத்தில் அறியாமையுடையாரிடத்து அகப்பட்ட பொருள் அவர்களை எவ்வாறு ஆட்டி வைக்கிற தென்பதும், அதனால் அவர் கள் 'தமது நிலைமைக்குத் தக்கது; தகாதது' என்றாராய்த லின்றிச் செய்கின்ற காரியங்களும், நான்காவது அதிகாரத்தில் காம நெறி படருங் கண்ணினுரியல்பும், தம் எண்ணத்தை நிறைவேற் றிக் கொள்ளும் பொருட்டு அன்னார் படும் பாடுகளும், மூடிவு பெரு விடத்துப் படுந் துன்பங்களும், ஐந்தாவது, அதிகாரத்தில் வேசையர்கள் தம்பால் வரும் ஆடவர்களை மயக்கிப் பொருள் பறித் தற்காகச் செய்கின்ற தந்திரங்களும், அவர்பாற்பட்ட ஆடவர்கள்

மதி யிழத்து செய்யுங் காரியங்களும், ஆறுவது அதிகாரத்தில் தன் மனை யல்லதைப் பிறர்மனையவரை அன்னையிற்றீரா ரன்னாராண்மை யின் வலியும், பிறர்மனை நயத்தலி னிழிவும், அதனு லுண்டாகும் அனிறந்த துன்பங்களும், ஏழாவது அதிகாரத்தில் மக்களுலகில் சாதாரண மக்களின் உணர்ச்சிக் கெட்டாத சிகழ்ச்சிகள் திடீரெனத் தோன்றி அவற்று லுண்டாகும் துன்பங்களும், எட்டாம் அதிகாரத் தில் காமப்பேய்க் கோட்பட்டார் செய்யும் முயற்சித் திறங்களும், உளவாம் துன்பங்களும், உரிய மனைவியோடு கூடி யனுபவிக்கும் இன்பத்தின் சிறப்பும், ஒன்பதாம் அதிகாரத்தில் மங்கையர்களின் கருத்தறியாது அவர்களின் காதற்குரிய ரல்லாதார்க்கு மணம் செய்த கொடுத்தலினுல் அப் பெண்கள் தங்கள் வாழ்காளில் அடை கின்ற துன்பங்களும், அம் மனம் அவர்களேத் தீய ஒழுக்கத்திற் செலுத்துதற் கேதுவாதலும், பெண்களேப் பெற்றோர் கடமைகளும், பத்தாம் அதிகாரத்தில் உண்மைக் காதலர்கள் தங்கள் வாழ்க்கையில் எவ்வாறு இன்பமுறுகின்ருர்க ளென்பதும், காதலரின் ஒன்றுபட்ட மனமே இன்ப வாழ்க்கைக்குக் காரணமாவ தன்றி, பெரிய மாளிகைகளும், விசாலமான நிலப் பரப்பும், திரண்ட பொருளும் இன்ப வாழ்க்கையைத் தராமாட்டா வென்பதும், தன்னேக் காதலிக் காத ஒரு பெண்ணேத் தான் காதலிப்பதால் வரும் இடுக்கண்களும், பதினேராம் அதிகாரத்தில் தீயவழியிற் செல்வோர் எதிர்பாராத துன்பங்களே அநுபவிக்க நேரிடுமென்பதும், தூன்மார்க்கப் பெண் களின் தந்திரச் சொற்களும், செய்கைகளும், பன்னிரண்டாம் அதிகாரத்தில் தெய்வத்தை நம்பினவர்கட்கு அது துணேபுரியு மென்பதும், அதன் நிறனும், கற்புடைப் பெண்களின் கலங்கா மனத்தின் தன்மையும், பதின்மூன்றுவது அதிகாரத்தில் தீயோர் சேர்க்கையினுல் உண்டாகும் தீங்குகளும், அன்னூர் காலமறிந்து வஞ்சித்தற் பொருட்டுக் காட்டுங் காவொழுக்கங்களும், பதினன்காம் அதிகாரத்தில் சிலர் ஜோதிடரெனப் பெயர் வைத்துக்கொண்டு பிறரை ஏமாற்றிப் பொருள்பறிக்கும் வகையும், சிலர் இச் சோதிட ரின் மாயவலையிற்பட்டு அவர்கள் ஆட்டிவைக்கிறபடி ஆடுதலும், பதினைந்தாம் அதிகாரத்தில் ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கு

கையிலேயே ஆராய்ந்து செய்தலினும் பின்வரும் இன்னல்களும், தீமை செய்தார் தீமையையே அநுபவிப்பாரென்பதும், பிறவும் நன்கு விளக்கிக் காட்டப் பெற்றுள்ளன.

முடிவாகக் கூறுமிடத்து மக்கள் வாழ்க்கையைப் பண்படுத்தி நல்வழியிற் செலுத்தி இம்மை மறுமைப் பயன்களை எளிதினடைந்து இன்புறச் செய்தற்கு இந்நூல் ஒரு சிறந்த துணையாதுமென்பதை இந்நூலைக் கண்ணுறூஉம் அறிஞர்கள் மறுக்கமாட்டார்களென்பது எனது அபிப்பிராயம்.

இந் நூலாசிரியராகிய திரு. சொ. பனையப்ப செட்டியாரவர்கள், இதுபோன்ற நூல்கள் பலவற்றையும் எழுதி யுதவுமாறு அவர் நிறைந்த செல்வத்தையும், நோயற்ற வாழ்வையும், நீண்ட ஆயுளையும் பெற்று வாழும் வண்ணம் எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளாகிய ஸ்ரீ சிவபெருமான் திருவருள் புரிவாராக! சுபம்! சுபம்!! சுபம்!!!

மேலைச்சிவபுரி
25—10—27.

R. P. அமிர்தலிங்கம் பிள்ளை,
தமிழ்ப் பண்டிதர்.

நூலாசிரியர் கருத்து

"விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் ; மெய்ம்மைகுன்ரு
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் ; முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் ; பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே"

செந்தமிழன்பர்களே !

"ஷண்முகநாதன்—அல்லது, தனவைசிய மைனர்" என்னும் இப் புனைந்துரைத் தமிழ்க்கதை புதிய வகையில் எழுதப்பெற்றது. இதைப் படிப்போர், அறிவில்லாதவர்பாற் செல்வம் சேருவதால் அவர்கட்கு உண்டாகும் தீமைகளையும், அவர்களால் ஜனசமூகத் துக்கு நேரும் துன்பங்களையும், பொருத்தமில்லாமல் செய்யப்படு கின்ற மணங்களால் உளவாகும் ஆற்றற்கரிய பேரிடுக்கண்களையும் தெள்ளிதின் உணரலாம். இத்தகைய இன்னல்கள் நீங்கி, மக்க ளுலகம் நன்னிலைமை யுறுதல் வேண்டுமென்ற பெரு நோக்கங் கொண்டு இக்கதை எழுதப்பெற்ற தாகையால், எனது வெளியீடுக ளாகிய "மணிவாசகன், சந்திரசேகரன், காந்திமதி" என்ற கற்பனைக் கதைகளைப் படித்தின்புற்ற தமிழன்பர்கள் இதையும் ஆதரிப்பார்களெனப் பெரிதும் நம்புகின்றேன். எனது வேண்டு கோட் கிணங்கி இந் நூலை முழுதும் படித்துச் சிறந்த முகவுரை யளித்த தமிழ்ப்பண்டிதர் திரு. R. P. அமிர்தலிங்கம் பிள்ளை யவர்கட்கும், திரு. S. நடேசய்யாவர்கட்கும், உவகைப் பாக்கள் உதவிய அன்பர்கட்கும் எனது மனப்பூர்வமான வந்தனத்தைச் செலுத்துவதுடன், இதை யிடையூறின்றி நிறைவேற்றுவித்த திருவருளைப் பல்காலும் சிந்திக்கின்றேன்.

இங்ஙனம்,

மேலைச்சிவபுரி
24—11—27.

சொ. பனையப்ப செட்டியார்,
சன்மார்க்க சபை.

மேலைச்சிவபுரித் தமிழறிஞர்,

திருவாளர், V. வேங்கடராமையரவர்கள் கூறியது.

" மங்கல நிறைந்தபல செங்கமல வாவிகள்
மருவு மேலைச் சிவபுரீ
மாசற்ற தீஞ்சுவைச் செந்தமி ழுணர்ந்தவன் ;
மதிதுட்ப மிக்கதீரன் ;
துங்கமிகு வணிகர்குல சிங்கமென வந்தநற்
சொக்கலிங் கத்துமைந்தன் ;
சொல்லரிய பிரசங்க வல்லவன் ; நல்லவன் ;
தூயபனை யப்பநேயன் ;
நங்கருணை வள்ளலாம் நிங்களணி யண்ணலடி
நாளும் வணங்குசீலன் ;
நாவலெனு நல்லமுதை ஆவலுட னேயுண்ண
நல்கினுன், மல்குபுகழான் ;
தங்குசுவை யிந்நாவல் எந்நாவ லென்னிலோ,
சாற்றுவே னேற்றபெயரை ;
தாரணியில் நாவல்கட் கோரணி யெனத்திகழ்
தக்க ஷண்முகநாதனே."

மலேசைத் தமிழ்ப் புலவர்,

திரு. மீ. முத்துச்சாமி பிள்ளையவர்கள் கூறிய

உவகைப் பாக்கள்.

தென்புகழ் நிறைந்தொளிரும் தீந்தமிழார் தெரிவையர்க்குத்
திலகமே போல்
பாங்குபெறப் பலவளமும் படைத்தினிய பைந்தமிழ்தேர்
பாவல் லோரும்,
ஆங்கிலசாட் டதிகாரிகளும் அறிந்துவியப் புறும்வண்ணம்
அமைத்து நீதி
தாங்குதன வைசியரா டதனியல்பை யாவர்கொலோ
சாற்று வாரே! (1)

ஆயபெரு நாடதனில் அளகையர்கோன் தனிநகரோ!
அமரர் கோமான்
மேயதிருப் பொன்னகரோ! எனப்புலவர் மகிழ்ந்துரைக்கும்
மேன்மை வாய்ந்த
தாயசில புரிநகர்க்கண் அன்பெலா மோருருக்கொண்
டணைந்தா லென்னத்
தூயதன வணிகர்குலக் கடற்றோன்றி ஒளிவிலவு
சுடரோ னன்றோன்; (2)

கரும்பிரச மதுவுண்டு களிதூங்கும் முல்லைமலர்க்
கண்ணி வேய்ந்தோன்;
பெரும்பிரசக் கம்பலால் அவைதோறும் பேசுதிறற்
பெருமை வாய்ந்தோன்;

முடிகொண்டான், தமிழ்ப்பண்டிதர், திரு. M. M. நாராயண சாமி ஐயாவர்கள் :—"காந்திமதி" என்ற புதிய நாவலைப் படித்து மகிழ்ந்தேன். உலகியற்கையை நன்கறிந்து, அதனை ஒரு பயன் கருதி, கதை மூலமாகப் படிப்போர் மனம் கலியாவண்ணம் பாங்குபெற அமைத்தெழுதப்பட்டதே, "நாவல்" எனப்படும். உலகியற்கைக்கு மாறுபடாமை, இனிய பாலைத் தடை, படிப்போர் மனமகிழ்ச்சி ஆகிய மூன்றும் நாவலுக்குரிய உறுப்புக்களாகும். இம்மூன்று வகையிலும் நன்கு பயின்றவர்களே "நாவல்" எழுதுவதற்குத் தகுதி யுடையவர்கள். திருவாளர், கோ. பனையப்பச் செட்டியார் அவர்களின் நாவல்களில் முக்குணமும் முதிர்ந்து காணப்படுவதை வாசகர்கள் நன்கறிவார்கள். இதில் மணத்தின் மாண்பும், செல்வச் சிறப்பும், உண்மைக் காதலின் வன்மையும், தீயோர் செய்கையும், மதியின் வலிமையும், வஞ்சனையின் கொடுமையும், பண்டைத் தமிழ் நாட்டின் பெருமையும், தற்காலத்தின் எளிமையும், அப்பெருமையைப் பெறும் வழியும், கடவுளின் சோதனையில் தைரியங் காட்டுவோர் பெறும் இன்பமும், கீழோர் கட்பின் இழிவும், கற்புடைமையின் சிறப்பும், "கன்றுக்கு வித்தாகும் கல்லொழுக்கம் ; தீயொழுக்கம்—என்றும் இடும்பை தரும்" என்பதும் விரித்துக் கூறப்பட்டுள்ளன. * * * *

அட்டவணை (CONTENTS)

அதிகாரம்		பக்கம்
1.	ஐம்பது வயதில் அருமைத் திருமணம்	... 1
2.	கசப்பான வாழ்க்கைக் கடல்	... 17
3.	மைனருக்கு வந்த மகத்துவம்	... 37
4.	காரிருளில் வந்த கட்டழகி	... 51
5.	இளங்காட்டூர் ஜமீன்தார் இயல்பு	... 67
6.	சென்றவிடத்தும் தீமை விளைதல்	... 86
7.	வைரமாலையின் மர்மம்	... 103
8.	இதுவோ காமத் தியற்கை!	... 122
9.	ஆசைக் கயிற்றில் ஊசலாடுதல்	... 144
10.	காதலர்தங் கனிவுரைகள்	... 163
11.	சிவபூஜையில் கரடி புகுதல்	... 180
12.	கூட்டைவிட்டோடிய குயில்	... 200
13.	துப்பறிபவனின் செப்பருந் திறமை	... 215
14.	ஜோதிட சிரோமணி—சுப்ராமையர்	... 230
15.	முடிவுரை	... 241

ஓம் :

கணபதி துணை

வெண்முகநாதன்

அல்லது

தனவைசிய மைனர்

"நல்லார்கட் பட்ட வறுமையி னின்னுதே
கல்லார்கட் பட்ட திரு"—பொய்யா மொழியார்.

முதலாவது அதிகாரம்

ஐம்பது வயதில் அருமைத் திருமணம்

"நன்றாயிருக்கிறது! உமக்கென்ன? இந்த விகாடியில் காவை யசைத்தால், ஆயிரம் பெண்கள் வந்து காலில் விழுமாட்டார்களா? வயதாகி விட்டதென்று கூறுகிறீர்; அதனாலென்ன? பண தேவதையின் பூஜை மிருந்த இக்காலத்தில், வயதாகிவிட்டதைக் கவனிப்பார் யார்? வயது என்பது இக்காலத்தில் தள்ளுபடி யாகி விட்டது. ஒரு கலியாணம் முடிப்பதா பெருங் காரியம்? பண மில்லாதவனுக்குத்தான் கலியாணம் பேச உரிமை

யில்லை. பேசாமலிரும்; இந்த ஆண்டிலேயே முடித்து விடுவோம்" என்று திவான்பகதூர் இராமசுப்ப சாஸ்திரிகள் வெள்ளையன் செட்டியாரை நோக்கிக் கூறினர்.

வெள்ளையன் செட்டியார்:—அதற்கு நான் சொல்லவில்லை; கலியாணமோ, இரண்டாவது தாரம்; நம்முடைய பையன் ஷண்முகநாதன் மணஞ் செய்யவேண்டிய பருவத்திலிருக்கிறான். அவனுக்கு முதலில் மணம் முடிக்காமல் நான் செய்துகொண்டால், ஊரிலுள்ளவர்கள் பல வகையாகப் பேசுவார்களே யென்றபயந்தான் என்னைப் பின்னடையச் செய்கின்றது. அதற்கு யோஜனை யென்ன?

இராமசுப்ப:—ஊரிலுள்ளவர்கள் எவ்விதம் பேசினாலும் நமக் கென்ன? இன்றியமையாத காரியம் ஒவ்வொன்றுக்கும் ஊரார் அபிப்பிராயத்தை எதிர்பார்க்க முடியுமா? முதலாவது உங்கள் குடும்பத்தை நடத்துவதற்குத் தகுந்த மனைவி வேண்டாமா? தங்கள் உறவினர் தானே, மேல மீட்டுச் சுப்பிரமணியன் செட்டியார்? அவருடைய பெண் வள்ளியம்மையை நான் பார்த்திருக்கிறேன். பெண் மிகுந்த வனப்பு வாய்ந்தவள். படிப்பும் சுமாராக விருக்கிறது. ஆனால் வயது பதினைந்து தானிருக்கும். சுப்பிரமணியன் செட்டியாருக்கு நீங்கள் தெரிவித்தால், உடனே இணங்கி விடுவார். அப்படியே செய்யுங்கள்.

வே. செட்டியார்:—பெண் சிறியதானாலும், நல்ல புத்திசாலி யென்பது நமக்குத் தெரியும். என்னை மணஞ் செய்து கொள்ளப் பெண் சம்மதிக்குமா? நான் இருக்கிற பிடுங்கலுக்கும், அதனுடைய அழகுக்கும்.....

இராமசுப்ப:—போமய்யா, பைத்தியம்! இரண்டு ஜரிகை வேஷ்டியை அணிந்து, வைர நகையைப் பூண்டு

கொண்டால், எல்லாம் சரிப்பட்டுவிடும். அழகென்ன அழகு? அழகு சோறு போடுமா? நீர் நினைத்தால் எந்தக் காரியந்தான் முடியாது? எல்லாம் தட்டுப் போடுகிற போடல்லவா? ஐந்து லக்ஷ ரூபாய்க்கு உரியாயிருக்கும் நீர் யோஜனை பண்ணலாமா?

வே. செட்டியார் :—சரி, சரி; சுப்பிரமணியன் செட்டியார் மிகுந்த ஏழ்மை நிலையிலுள்ளவர். பெண்ணுக்காகக் குறைந்தது இருபத்தேழாயிரமாவது கேட்பாரென்றே கருதுகிறேன்.

இராமசுப்ப :—காரியம் பெரிதா, பணம் பெரிதா? எப்படியாகிலும் விரைவில் முடிப்பதைப் பாருங்கள்—என்றார்.

சரபோஜிராஜபுரம் என்பது அழகிய சிற்றூர். அது சோழநாட்டைச் சேர்ந்ததென்றால், நீர்வளம், நிலவளம் முதலியவற்றைக் குறித்துக் கேட்பானேன்? அந்த ஊரில் தனவைசியர் குடும்பங்கள் இருநூற்றுக்கு மேலுண்டு. அவர்களுள் வெள்ளையன் செட்டியார் மிகுந்த செல்வாக்குள்ளவர். இப்பொழுது அவருக்கு வயது ஐம்பதுக்கு மேலிருக்கலாம். அவருடைய மனைவி இறந்து ஏழு ஆண்டுகளாயின. வெள்ளையன் செட்டியாருக்கு மூன்று குழந்தைகள் பிறந்தன; ஆயினும், வாந்திபேதி, காய்ச்சல், அம்மை முதலிய தண்டக்காரர்கள் கொண்டுபோனது போக, ஷண்முகநாதன் ஒருவனே எஞ்சினான். வெள்ளையன் செட்டியார், பெரும் படிப்பாளியன்று; சாதாரணமாகத் தின்னைப் பள்ளிக்கூடத்தில் படித்தவர். வயது ஐம்பதாறும் கட்டுத்தளராத தேகமுடையவர். திவான்பகதூர் இராமசுப்ப சாஸ்திரிகள் அவருடைய ஆப்த நண்பர். அவரோடு பழகியது முதல் வெள்ளையன் செட்டியார், பிராந்தியைத் தவிர வேறு எந்தக் கெட்ட பொருளையும் தொடுவதில்லை.

அவருடைய வாயிலிருந்து எந்த நேரமும் அந்தப் பிராந்தியின் திவ்ய மணம் கமழ்ந்து கொண்டேயிருக்கும்; ஆனால், எவ்வளவு அதிகமாகக் குடித்தாலும் மயக்கமென்பதே உண்டாவதில்லை. அவருடைய தந்தையார் இறந்த அறப்பெருந் தகையாராதலால், தஞ்சாவூரிலிருந்து மாயவரத்திற்குப் போகும் வழியில் பெரிய சத்திரமொன்று கட்டி வைத்திருந்தார். அதில், வருவோர்க்கெல்லாம் தாராளமாக உண வளிப்பதுண்டு. அவருக்குப் பிறகு, பட்டத்திற்கு வந்த நமது புத்திரசிகாமணியாகிய வெள்ளையன் செட்டியார், பணத்தை வீண் விரயஞ் செய்யப் பிரியமில்லாதவராய் அதைத் தமது மாளிகை கட்டுவதிலும், மோட்டார் வாங்குவதிலும், இன்னும் பல தகுதியுள்ள விஷயங்களிலும் செலவிட்டார். ஆனால், அவ்வழியிற் போகும் மனிதர்கள் தத்தம் உணவைக் கொண்டுவந்து சத்திரத்தில் வைத்து உண்பதில் தமக்கு யாதொரு விதமான தடையுமில்லையென்று தாராளமாக உத்தரவளித்துவிட்டார். சத்திரத்தைச் சிறிதும் கவனியாமல் இருந்த வேலைக்காரர்களையும் நீக்கிவிட்டார். இப்பொழுது சத்திரத்திற்குப் பேய்கள் தான் காவலாக இருந்து வருகின்றன. அச்சத்திரத்தின் முன் கதவு, அறைந்த வீட்டுக்காரனால், தீயில் வைத்தெரிக்கப் பட்டு அநேக நாட்களாயின. சத்திரம் மிகப் பெரிது. அதனுள் பல அறைகளும், கூடங்களும் நிறைந்துள்ளன வாயினும், கட்டிடம் முழுவதுமே இடிந்து கூடிய விரைவில் மண்ணோடு மண்ணாய்ப் போவதற்குத் தயாராயிருந்தது.

ஷண்முகநாதனுடைய குணமோ, ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. அவன் தஞ்சைக் கல்யாணசுந்தரம் உயர்தரக் கல்லூரியில் (Kalyanasundaram's High School) படித்துக்கொண்டிருந்தான். அவன், மற்றையோரைப்

போல ஒரு முறை இரு முறை பரீக்ஷைக்குப் போகவில்லை. முகம்மதிய அரசனொருவன் நம் மிந்தியாவின்மீது ஏழு முறை படையெடுத்து வந்ததாகச் சொல்லுவார்கள். ஆனால், நமது ஷண்முகநாதன் பிரவேசப் பரீக்ஷையின்மீது (Matriculation) பன்னிரண்டு முறை படையெடுத்துச் சென்று தோல்வியடைந்த சுத்தவீரன். பரீக்ஷையில் தேறி விட்டால், தாங்கள் சிரமப்பட்டுப் படித்துப் பரீக்ஷை தேறிற்றென்றும், பரீக்ஷையில் தேறுமற்போனால், தெய்வாதீனத்தால் தவறிப் போயிற்றென்றும் சொல்லிக்கொள்ளும் மற்ற மாணாக்கர்களைப் போலவே, அவனும் சொல்லிக் கொண்டான். பரீக்ஷையில் தேறிவிட்டால், கடவுளை மறந்து, அவரை மூலையில் ஒதுக்கி வைக்கும் மாணாக்கர் கட்குப் பரீக்ஷை தேறுமலிருப்பதும் ஒரு விதத்தில் நலந்தான்! எனெனின், பரீக்ஷை தவறினது காரணமாகவாவது கடவுளை நினைக்கிறார்க ளன்றோ? ஷண்முகநாதன், கொஞ்சம் வயதானதும் சீட்டு விளையாடக் கற்றுக்கொண்டான். பொடி உபயோகிக்கும் வழக்கம் இவனுக்கு நீண்ட காலத்திற்கு முன்னேயே வந்துவிட்டது. செலவுக்குப் பணம் வேண்டும்பொழுது கொஞ்சக்காலம் வரையில் தகப்பனாரிடம் சண்டை போட்டு, "பணம் தந்தால்தான் சாப்பிடுவேன்" என்று பட்டினி கிடந்து, பணத்தை வாங்கிச் சில்லறையாகச் செலவு செய்தான். பிறகு, வீட்டில் பணம் இருந்தால் தெரியாமல் எடுத்துக்கொண்டு போய் விடுகிறது. வெள்ளையன் செட்டியார், இவனுடைய கெட்ட செய்கைகளைக் கண்டித்தால், "நமக்கு இருப்பது ஒரே பிள்ளை; தெரியாத்தனமாக ஏதாவது ரூபாய் எடுத்தால், அதற்காக அவனை அடிக்கிறீர்களே, அவன் செலவழித்து நம்முடைய பணம் குறைந்துபோனால் போகட்டும்; அயல் வீட்டில் கிருடவில்லையே; வயது வந்தால் எல்லாம்

சரியாய்விடும். அவனை யொன்றும் செய்யவேண்டாம்" என்று தாயார் இருக்கும்பொழுது பரிந்து பேசுவாள். இத் தொந்தரவைப் பார்த்து எப்படியாவது தொலைந்து போகட்டுமென்று பேசாமல் இருந்துவிட்டார். ஷண்முக நாதனுக்கு வயது இருபது வந்ததும் சில சமயங்களில் பணப் பெட்டிக்குத் திறவுகோல் தயார்செய்து ரூபாய் திருடி வந்தான். இவன் பெரியவன் ஆனதைப் பார்த்த சிலர், "உங்கள் செலவுக்கு ரூபாய் வேண்டுமானால், வாங்கிக் கொடுக்கிறோம்" என்று முன் வந்தார்கள். ஷண்முகநாதன், தனக்குச் சுக்கிர திசை அடிக்கிறதென்று கருதிக்கொண்டான். மெதுவாய்த் தாசி வீட்டிற்கும் போக வரப் பழக்கமுண்டாயிற்று. சிலரிடம் ஆயிரம், இரண்டாயிரம் கடன் வாங்கிச் செலவு செய்தான். இவற்றை யெல்லாம் கண்ட வெள்ளையன் செட்டியார், அவனுக்குக் கலியாணம் செய்துவிட நினைத்தார். இவனுடைய தற்காலத் திருவிளையாடல்கள் எங்கும் பிரசித்தமாகிவிட்டபடியால், ஒருவரும் பெண்தர இணங்கவில்லை. இந்நிலையில், இராமசுப்ப சாஸ்திரிகள், வெள்ளையன் செட்டியாரை மறு மணம் புரிந்துகொள்ளும்படி நுண்டிக்கொண்டிருந்தார். ஆகவே, அதற்கிணங்கிக் கலியாணம் பேசத் தொடங்கினர்.

மேல வீட்டுச் சுப்பிரமணியன் செட்டியார், இத் தகைய சம்பந்தம் தம்முடைய முன்னோர் செய்த தவப் பயனும் கிடைத்ததென்று மறு பேச்சின்றி ஒப்புக்கொண்டார். கலியாண நாள் குறிக்கப்பட்டது. அதற்காக வேண்டிய சாமான்கள் வந்து குவிந்துகொண்டிருந்தன. வெள்ளையன் செட்டியார், கலியாணச் செலவின் பொருட்டு நாற்பதாயிரம் ரூபாய் செலவழிப்பதென்று பட்டியல் தயாரித்தார். ஆனால், அப் பட்டியலில் விக்நேஸ்வர பூஜைக்கும், தருமச் செலவுக்கும் ரூபாய் ஐந்துதான்

போடப்பட்டிருந்தது. இக் காலத்தில் பணக்காரரில் பெரும்பாலர் வீண் பெருமைக்கும், டம்பத்துக்கும் ஆசைப் பட்டே தருமஞ் செய்கிறார்கள். புதுப்பணம் படைத்தவர்கள் எந்த விதத்திலாவது தம்முடைய பெயர் ஊர் முழுவதும் பரவுதற் போதுமென்று கருதி, அவர்களால் தருமம் என்று நினைக்கப்படுகின்ற சில அதருமங்கட்குப் பெருந் தொகையான பணத்தைச் செலவு செய்கிறார்கள். ஆனால், உபயோகமானதும், உண்மையானதுமான தருமத்தில் பைசாக் கூடச் செலவு செய்யமாட்டார்கள். வயது முதிர்ந்த ஒரு பிறவிக் குருடன் தன் வீட்டிற்கு வந்து ஒரு வேளைச் சாப்பாடு கேட்டால், அவனைக் கண்டபடி திட்டி, அடித்துத் துரத்தும் ஒரு பிரபு, ருஷிய தேசத்திற் பஞ்ச முண்டாகியிருக்கிறதென்றும், அதற்காகச் சிலர் பாதுகாப்பு நிதி சேர்க்கிறார்க ளென்றும் கேள்விப் பட்டால், உடனே ரூபாய் பதினாயிரம் தந்தி மணியார்டரில் அனுப்புகிறார். இங்ஙனம் செய்வதற்குக் காரண மென்ன? குருடனுக்குச் சோறு போட்டால், அவன் வயிறார வுண்டு இவரை வாழ்த்திக்கொண்டு போவானே தவிர, இவர் தனக்குச் செய்த உபகாரத்தை உலகத்தார் அறியும்படி பறைசாற்ற மாட்டான். ஆனால், பஞ்ச நிவர்த்திக்குப் பணம் அனுப்பினாலோ, மேனாட்டிலுள்ளவர்கள் இவரைப் புகழ்ந்து, பொதுக் கூட்டங்கள் கூட்டி, இவருடைய தரும சிந்தனையைப் புகழ்ந்து பேசுவார்கள். அங்குள்ள பத்திரிகைகளும் இவர் கொடுத்த பணத்தைப் பற்றிப் பல தலையங்கங்கள் வரைந்து ஆரவாரஞ் செய்யும். இதனால் இவருடைய பெயரும், புகழும், உலகம் முழுவதும், பெரிய வைக்கோற் போரில் தீப் பிடித்தால், எவ்வளவு விரைவில் பற்றிக் கொள்ளுமோ, அவ்வளவு விரைவில் பரவி விடுகின்றன. இது தான் காரணம். ஒரு சிற்றூரில்

வெள்ளச் சேத முண்டாகி, அதனால் ஏழை மக்கள் சோற்றுக் கில்லாமல் துன்புறுகிறார்க ளென்றால், ஒரு பைசாக்கூடக் கொடுப்பதற்குப் பிரபுக்கள் முன் வருவதில்லை. எளியவன் ஒருவன், காலணாக் கேட்டால், 'செட்டி வீட்டுக் காசு கொல்லையில் முளைத்துக் கிடக்கிறதோ?' என்று இன் சொல்லும் நல் கூரும் ஒரு செட்டியார், நன்முயும், உறுதியாயு மிருக்கும் சிவாலயங்களை இடித்துக் கட்டிக் கும்பாபிடேகம் செய்வதில் லக்ஷக் கணக்கான ரூபாய்களைச் செலவிடுகிறாரே, அதற்கென்ன காரணம்? அவர் விரும்புகிற புகழற்ற புகழும், பெருமையுமே காரணம். ஒரு பிரபு தனிமையா யிருக்கும்போது, ஒரு எளியவன் சென்று, "வயிறு பசிக்கின்றது!" என்றால், அவர் மிகுந்த கோபங் கொண்டு, "அடே, இந்தத் தடியன் அடிக்கடி வந்து தொந்தரை செய்கிறான்; இவனைத் தூணிற் சேர்த்துக் கட்டி சையப் புடைத்தனுப்பு" என்று அளவிலாக் கருணை யுடன் உத்தரவு போடும் ஒருவர், பத்து மனிதர்களுடன் உட்கார்ந்து பேசிக்கொண் டிருக்கும்போது, வேறொருவன் சென்று, "ஐயா, என்னுடைய மகனுக்குக் கலியாணம் முடியும்படி உதவி செய்யுங்கள்" என்றால், உடனே தன் னுடைய காரியஸ்தரை நோக்கி அதிகாரத்துடன் கூப்பிட்டு, "ஏய்! பெட்டியைத் திறந்து ஐம்பது ரூபாய் நோட் டொன்று எடுத்து வாரும்" என்று திறவுகோலைக்கொடுத்து, நோட்டு வந்ததும், சுற்றி யிருக்கும் பத்து மனிதர்கட்கும் கேட்கும்படி ஐந்து வீட்டிற் கப்புறமும் ஒலிக்கும்படியான கிய குரலில், "ஐயா! இந்தாருங்கள். இச் சமயம் இந்த ஐம்பது ரூபாயை வைத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிப் பணத்தைக் கொடுக்கிறார். இவ்விதம் இவர்கள் தற்புகழ்ச்சிக்காகவும், சுய நலத்துக்காகவும் பொருளைச் செலவு செய்த போதிலும், உண்மையாகவே வறுமையினால்

வருந்துகிறவனுக்குக் கஷ்டம் எள்ளளவாவது நீங்குமா? இவர்கட்கு உண்மையான புகழும், பெருமையும் உண்டாகுமா? இங்ஙனமாக இருபதாம் நூற்றாண்டின் நவீன நாகரீக வசப்பட்டு வழி தெரியாமல் தவிக்கும் நம்மவர்களில் பெரும்பாலார் — அதிலும் செல்வவந்தர்கள்—உண்மைத் தருமத்துக்குப் பணம் செலவு செய்ய மனமில்லாதவராய் இருக்கிறார்க ளாகையால், புதுப் பணம் படைத்தவரான நமது வெள்ளையன் செட்டியார், தம்முடைய கலியாணச் செலவிற்கு ரூபாய் நாற்பதாயிரம் மதிப்புப் போட்டதில் விக்நேஸ்வர பூஜைக்கும், தருமச் செலவுக்கும் ஐந்து ரூபாய் குறிப்பிட்டதைக் குறைந்ததென்று யாராவது கூறமுடியுமா? அப்படியே மனமுவந்து ஒரு வேளை ஆயிரம் ரூபாய் செலவு செய்ய முன் வருகிறார் என்று வைத்துக்கொள்ளுவோம்; அந்த விக்நேஸ்வரர், "வெள்ளையன் செட்டியார் என்னுடைய பூஜைக்கு ஆயிரம் ரூபாய் செலவிட்டதற்காக நான் பெரிதும் நன்றி பாராட்டுகிறேன்" என்று மெட்ராஸ் "மெயில்" பத்திரிகைக்கும், சென்னைச் "சுதேசமித்திரன்" பத்திரிகைக்கும், லண்டன் "டெய்லி நியூ" சுக்கும் எழுதி அவரைத் தூதி செய்யப் போகின்றாரா? இல்லையன்றோ? ஆகவே, அவர் விக்நேஸ்வர பூஜைக்குச் செய்தது ஒரு விதத்தில் ஒப்புக்கொள்ளக் கூடியதே. எனெனின், எல்லாம் வல்ல கடவுள் மனிதருடைய மேலுபசாரத்தை வேண்டுவாரல்லர்; அவருக்கு வேண்டுவது உண்மைப் 'பக்தி' ஒன்றே. ஆதலான், நமது வெள்ளையன் செட்டியார் போட்டிருந்த மதிப்பு அவரைப்பற்றிய மட்டில் நியாயமானதே.

கலியாண நாள் நெருங்கிற்று. அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் யாவும் விரைவிற் செய்யப்பெற்று முடிந்தன. கலியாண நாளில் கூடியிருந்த கூட்டத்திற்கு ஒரு எல்லை

யின்று. அநேகம் பட்டதாரிகளும் பெரிய மனிதர்களென்று மதிக்கப்படுவோரும் வந்து கூடியிட்டனர். நமது வெள்ளையன் செட்டியாரை இப்பொழுது காண்போர், "இவருக்குச் சென்ற இளமைப்பருவம் திரும்பவும் வந்துவிட்டதோ!" என றுவர். மாப்பிள்ளைக் கோலத்துடன் இலங்கும் அவர், கழுத்தில் வைரமிழைத்த கெவுடு ஒன்றும், இன்னும் பல ஆணிகளும் பூண்திருந்தார். காதில் வைரத்தோடுகள் பிரகாசித்தன. விரல்களில் பச்சை, வைரம், சிவப்பு முதலிய கற்கள் வைத்திழைக்கப்பட்ட மோதிரங்கள் ஒளிவிசின. அவர், தூரதிருஷ்டிக் கண்ணுடிகொண்டு பார்த்தால் மட்டும் தெரியக்கூடிய அவ்வளவு பெரிய சாந்துப் பொட்டொன்று நெற்றியில் வைத்திருந்தார். குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம் முதலிய வாசனைத் திரவியங்கள் சேர்க்கப் பெற்ற சந்தனத்தை மார்பிலும், கைகளிலும் பூசிக்கொண்டிருந்தார். அவருடைய சரீரமோ, ஒளியோடும், வழு வழுப்பான மென்மையோடும் இலங்கிற்று. அவருடைய உடலில் தண்ணீராவது, எண்ணெயாவது பட்டால், அதைத் துடைக்கவேண்டிய அவசியமேயில்லை. ஏனெனின், தாமரையிலையில் தண்ணீர் படுமாயின், அஃது எப்படி உருண்டுகொண்டே சென்று, ஒட்டிக்கொள்ளாமல் கீழே விழுந்துவிடுமோ, அப்படியே அவருடைய சரீரத்தில் தண்ணீராவது, எண்ணெயாவது தங்காமல் விழுந்துவிடும். இவ்விதம் அலங்காரங்களோடும், விமரிசையோடும் விளங்கிய வெள்ளையன் செட்டியார் மணவறைக்கு வந்தார். வாத்தியங்கள் முழங்கின; புரோகிதர்கள் கலியாணத்திற்குச் செய்ய வேண்டிய சுப கருமங்களையெல்லாம் வேதவிதிப்படி செய்தார்கள். பெண்ணுகிய வள்ளியம்மைக்குத் திருமஞ்சனமாட்டிப் புதுப்புடவை யணிவித்து, ஆபரணங்கள் பூட்டி அலங்கரித்தார்கள்.

நீலநிறப் பட்டாடையொன்றை அவள் உடுத்திருந்தாள். அவளுடைய அழகு பார்ப்போர் மனதைக் காந்தம் போற் கவரத்தக்கதா யிருந்தது. செயற்கையழகு செய்யப்பட்டிருந்தாளோ எனின் அப்படியன்று! அவள் அணிந்திருந்த பட்டாடையின் இருமருங்கும் சற்றேறக்குறைய மூன்று விரற்கடை அகலமுள்ள பொற்சரிகை சேர்க்கப் பட்டிருந்தது. முந்தானையில் ஒரு சாண் அகலமுள்ள சரிகைக் கரை இடையிடையே பூவேலை செய்யப்பட்டுப் பிரகாசித்தது. இதன் கோடியானது வள்ளியம்மையின் வலப் பக்கத்து இடுப்பிலிருந்து இடதுதோள் வரையிலும் சென்று, அங்கிருந்தபடியே பின்புறமாக விழுந்து அவளுடைய கணைக்கால் வரையிலும்சென்று தொங்கினபடியே அசைந்து கொண்டிருந்தது. இடுப்பிலிருந்து பின்புறமாகத் தொங்கும் கொய்சகத்தையும், இடுப்பிலிருந்து இடது தோட் பக்கமாய்ச் செல்லும் மார்ச் சீலையையும் சேர்த்துப் பிடித்த படியே அவளுடைய இடையில் கல்லிழைத்த ஒட்டியாணம் பிரகாசித்தது. பட்டைதீர்ந்த உயர்ந்த இரத்தினங்கள் ஏழு அமைந்த சிறு தோடுகள் மாதுளை விதையைப்போலத் துலங்கின. வலது நாசியில் ஒரு வைர மூக்குத்தியும், இடது நாசியில் ஒரு பச்சை மூக்குத்தியும் 'ஜிலு ஜிலு' என்று மிளிர்ந்தன. கைகளில் தங்கக் காப்பும், கொலுசும், கால்களில் சதங்கையும் காணப்பட்டன. இவ்வளவுதான் அவளணிந்திருந்த ஆபரணங்கள்! கல்லிழைத்த அட்டிகையொன்றைக் கழுத்தில் அணிந்திருந்தாளாயினும், அது திமிர்ந்த மார்க்கச்சில் மறைந்துபோயிற்று. அவளுக்குச் செயற்கை யழகு இவ்வளவுதான்! எலுமிச்சம்பழ நிறமான அவளுடைய சரீரப் பொலிவுக்கும், அவள் கண்களில் விளங்கிய குளிர்ந்த பிரகாசத்திற்கும், 'மல்கோவா' என்ற உயர்ந்த மாங்கனியைப்போல, இடையிடையே

செங்கிறம் தோன்றிய கதுப்புக்களுக்கும், சாணைபிடித்த வைரக் கற்களைப்போல், அவள் புன்முறுவல் கொள்ளும் போது சற்றேதெரியும் அவளுடைய பற்களின் காந்திக்கும் இணையாக, அவளுடைய செயற்கை யழகு இல்லையானாலும், இந்த இயற்கை யழகே அந்தச் செயற்கை யழகைப் பிரகாசிக்கும்படி செய்தது. படங்கள் வரைவதில் மிகத் தேர்ச்சிபெற்ற இரவிவர்மாகூட இவளைக் கண்டிருந்தால், படம் எழுத இயலாதென்பதை உணர்ந்திருப்பார். மணமக்கள் இருவரையும் மணையில் உட்காரவைத்தார். வேதப் பிராமணர்கள் ஹோமம் வளர்த்து, மாங்கல்யத்தை யெடுத்து வெள்ளையன் செட்டியார் கையிற் கொடுத்து, வள்ளியம்மையின் கழுத்திற் பூட்டும்படி செய்தனர். 'டாம் டாம்' என்று மேளவாத்தியம் முழங்கின. பிறகு அம்மி மிதித்தல், அருந்ததிபார்த்தல் போன்ற பல சடங்குகள் நிறைவேறின.

அன்று பகல் கடைபெற்ற சாப்பாட்டின் பெருமையை நம்மாற் கூறவியலாது. திருவாவடுதுறைக் குரு பூஜையில் சாப்பாடு மிக நன்றாக விருக்குமென்று, சாப்பாட்டுச் சோதனையில் தேர்ச்சிபெற்ற சிலர் கூறுவர். அந்தச் சாப்பாடுகூட இணையாகுமோ, இணையாகாதோ சந்தேகந்தான்! வந்திருந்த பெரிய மனிதர்கள் ஒவ்வொருவரும் பிறரை யுபசரிப்பதாகப் பாவனை செய்துகொண்டே, தங்கள் காரியத்தைக் கவனித்தனர். மாளிகைக்கு வெளியே பல வழைப்பரதங்களும், பிச்சைச்சார்களும் காத்துக்கொண்டிருந்தனர். அவர்களைப் பசி யொருபுறம் வாட்டிற்று; வெயில் ஒருபுறம் வருத்திற்று; பலநாட் பட்டினியால் மயக்கங்கொண்டு சாய்ந்துகிடந்தார் சிலர்; தங்கட்கேதாவது கிடைக்குமென்று அகமகிழ்ந்து பேசிக்கொண்டிருந்தார் பலர்; பசியின்கொடுமை தாங்கமுடியாமல் "ஐயா,

சிறிது அன்னம் போடுங்கள்" என்று வாய்விட்டுக் கதறினர் சிலர். மாளிகைக்கு வெளியே ஏழை மக்களின் நிலை இவ்வாறிருப்ப, மாளிகைக்குள் கனதனவான்கள் விலாப் புடைக்க வுண்டு, வெற்றிலை முதலியன போட்டுக்கொண்டு உல்லாசமாய் உரையாடிக்கொண் டிருந்தனர். ஏழைப் பாதேசிகளைக் கவனிப்பார் யாரும் இல்லை!

பகல் விருந்து இவ்வளவு சிறப்பாயிருந்தது. மாலை நான்குமணிக்குச் சங்கீதக் கச்சேரிகள் தொடக்கமாயின. அவற்றுள் சதிர்க்கக்சேரி ஒன்றைத்தான் நாம் இப்பொழுது குறிப்பிடுகிறோம். சேலத்திலிருந்து மீனாக்ஷி யென்ற பெண் சதுராடு வதற்கு வந்திருந்தாள். அம்மாது சாதாரணமாக நடந்து வந்தாளானால், பார்ப்பவருக்கு ஒருமலை யசைந்து வருவதுபோலவே யிருக்கும். அவளுக்கு வயது முப்பத்தைந் திருக்கலாம். மற்றப்பெண்கள் கண்ணுக்கும், புருவத்துக்கும் மை தீட்டிக் கொள்வதைப் போல், அவள் தீட்டிக் கொள்ளும் வழக்கமில்லை. ஏனெனின், அவளுடைய உடம்பின் நிறத்தைக் காட்டிலும், கருமையான மை தீட்டினால் மாத்திரமே அது தீட்டப் பெற்றிருப்பதாய்த் தெரியும். ஆனால், இவ்வளவு கருமையான மை கிடைப்பதரிது! அவளுடம்பு அவ்வளவு கருப்பாயும், பளபளப்பாயும், வன்மையாயு மிருந்தது. தூரத்திலிருந்து இவளைப் பார்ப்போர், உயர்ந்த கருப்பு வர்ணம் பூசப்பட்ட பூதவாகனம்' என்றே கருதுவர். அவளுடைய முகம் பார்ப்பதற்குச் சிறிது அழகாகவே யிருந்தது. அவளுடைய தலை மயிருடன் சேர்த்துக் கட்டப்பட்டிருந்த கவரி மயிர் மிகக் கருத்திருந்ததால், அதன் அடிப்புறத்தில் அகப்பட்டிருந்த தலை மயிரின் வெண்மை நிறம் கூர்ந்து கவனித்தோர்க்கன்றி, ஏனையோர்க்குப் புலப்படாது. அவளுடைய இடை, அவள் உடலைப்போல் மூன்று பங்குதான் பெரிது. கைகள்

யானைத் துதிக்கையைப் போன்றிருந்தன. கால்கள் பல்லக்குக் கொம்பைப்போல் வலுத்திருப்பினும், அந்த வலுவு எல்லாருடைய கண்கட்டும் புலப்படாதபடி அவ்வளவு ஜாக்கிரதையாக மடப்பது வழக்கம். இவ்வளவு சிறப்பு வாய்ந்த மீனாக்ஷி, தன் உடம்பை வணங்கிக் கைகாட்டி நாட்டியஞ் செய்யத் தொடங்கியவுடன், சபையிலுள்ளோர் யாவரும் அவளையும், அவளுடைய நாட்டியத்தையும் இமை கொட்டாமற் பார்த்து மகிழ்ந்தார்கள். இறுதியில் அங்கு வந்திருந்த யாவருக்கும், ஸ்பென்ஸர் கம்பெனியாரால் தயாரிக்கப்பெற்ற சோடா, லெமனேட், ஜிஞ்ஜர்பீர், ஐஸ் கிரீம் சோடா, சோஸ்வல், லிம்ஜூஸ், இவைபோன்ற பல புதிய பானங்கள் ஆயிரம் சிசாக்கள் வரை உடைத்துக் கொடுக்கப்பெற்றன. இத்தகைய சிறப்புடன் கலியாணம் இனிமையாய் நடைபெற்றது.

பிறகு, இக் கலியாணத்தின் பொருட்டு வந்த சில தமிழ்ப் புலவர்கள் நமது வெள்ளையன் செட்டியார்மீது சில வாழ்த்துக் கவிகள் பாடினார்கள். தேன் மணக்குந் தமிழ்ப் பாட்டை அவர்கள் கூறினார்களாயினும், வெள்ளையன் செட்டியார், தமது வெள்ளை யறிவைப் புலப்படுத்துவது போலப் பெரும் கருணை கூர்ந்து அவர்கட்கு ஒவ்வொரு ரூபாய் சன்மானம் அளித்தார். அவர்களுள், ஒரு புலவர் செட்டியாரைத் தனிமையிற் கண்டு தளவளாவும் பொருட்டுச் சென்றிருந்தார். அவருடைய பெயர்: வெண்பாப் புனை வீராசவ முதலியார் என்பது. அவர், செட்டியாரைக் கண்டு, தம்முடைய வரவை வணக்கமாகத் தெரிவிக்கத் தொடங்கி, "கர்ணனதானும், கல்விச் சமுத்திரமும், கற்பகத் தருப்போன்று வரையாது கொடுக்கும் வள்ளலுமாகிய தங்களிடம்....." என்று மேலும் கூறுவதற்குள்,

வேள்ளாயன் செட்டியார் :—ஐயா ! நமக்கு நீங்கள் சொன்னது ஒன்றும் புரியவில்லை. சும்மா தமிழிலேயே சொல்லுங்கள். நீங்கள் வந்த காரியமென்ன ?

வெண்பாப் புலி :—தங்களுடைய அளவிடற்கரிய புகழைக் கேட்டுத் தங்களைப் பார்த்துவிட்டுப் போகலாமென வந்தேன்.

வெ. செட்டியார் :—அப்படிச் சொல்லுங்களய்யா, என்னால் ஆகவேண்டிய தென்ன ?

வெண்பாப் புலி :—நீங்கள் செய்வது அப்புற மிருக்கட்டும். ஒரு செய்யுள் சொல்லுகிறேன் கேளுங்கள். கம்பர் என்பவர் மஹா கவி. பாட்டுக்கள் மிக இன்பமாயிருக்கும்—

"மையறு மலரினீங்கி யான்செய்மா தவத்தின்வந்து
செய்யவ ளிருந்தாளென்று செழுமணிக் கொடிகளென்னும்
கையேநீட்டியந்தக் கடிநகர் கமலச்செங்கண்
ஐயனை யொல்லைவாவென் றழைப்பது போன்றதம்மா !"

பாருங்கள் ! எவ்வளவு அழகாகக் கூறியிருக்கிறார் !

வெ. செட்டியார் :—பலே ! மிக இன்பமாயிருக்கிறது ! கடாச்சவராக் கென்று தெரியாமலா சொன்னார்கள் ?

வெண்பாப் புலி :—செய்யுளை நன்றாக வுட்கொண்டீர்களா?

வெ. செட்டியார் :—அதைச் சொல்லவும் வேண்டுமா ? அப்பொழுதே ஆச்சே !

வெண்பாப் புலி:—எப்பொழுது? மத்தியானமே ஆச்சுதோ?

வெ. செட்டியார் :—ஆமாம்.

வெண்பாப் புலி :—பகலில் எத்தனை முறை ஆச்சு ?

வெ. செட்டியார் :—அதுதான் நீங்களிப்போது சொன்னீர்களே !

வெண்பாப் புலி :—பகலில் சாப்பாடாஇலிட்ட தென்று சொல்லுகிறீர்கள் ?

வே. செட்டியார் :—ஆமாம் ; சாப்பாடுதான்.

வெண்பாப் புலி :—ஐயா, தங்களறிவின் பெருமையும், தமிழ்ப் பயிற்சியும் யாருக்குக் இடைக்கும் ? பொன்மலர் நாற்றமுடையது போல், தங்கட்கு இரண்டு செல்வங் களும் பொருந்தி யிருப்பது பெரிதும் பாராட்டத் தக்கதே.

வே. செட்டியார் :—தங்களைப் போன்ற அறிவுடையோரின் கருணையினாலே, நமக்கும் தமிழிலே கொஞ்சம் அறி வுண்டு—என்று கூறி, ஐந்து ரூபாய் சன்மானம் பண்ணி யனுப்பினர். இதிலிருந்தே நம்முடைய வெள்ளையன் செட்டியார் தன்மையை நன்றாக வுணர்ந்து கொள்ளலாம்.

இரண்டாவது அதிகாரம்

கசப்பான வாழ்க்கைக் கடல்

உலகத்தில் மனிதருடைய வாழ்க்கையில் நிகழும் சம்பவங்களுள் : அதிசயமானதும், விசித்திரமானதும் ஆச்சரியப்படத் தக்கதுமான சம்பவம் என்னவெனின், திடீரென்றும், எதிர்பாராத விதமாயும், ஒரு விநாடியிலோ, ஒரு மணியிலோ, சமாதானத்தை யொழித்துக் குழப்பத்தையும், இன்பத்தைப் போக்கித் துன்பத்தையுங் கொண்டு வந்துவிடுகிற நிகழ்ச்சி யென்று கூறலாம். இவ்வுலக வாழ்க்கையில் துன்பகரமான நிகழ்ச்சிகள் அடிக்கடி உண்டாகி, மனிதர்களுடைய நம்பிக்கைகளை யெல்லாம் அழித்து, அவர்களுடைய நெஞ்சத்தைப் பிளந்து, மகிழ்ச்சியைச் சிதற வடித்து, துன்பங்களை மலைபோலக் குவிக்கின்றன. அத்தகைய துன்பங்கள் முன் அறிவிப்பின்றி, திடீரென்று புயல் காற்றைப்போல, மனிதனுடைய இன்ப நிலையில்—மகிழ்ச்சியின் உச்சியில்—கலக்கமற்று வாழும் போதே பெரும்பாலும் வீசுகின்றன. இதனால், எத்தனையோ குடும்பங்கள் மிகவு முயர்ந்த நிலையிலிருந்து திடீரென்று தாழ்ந்த நிலைமைக்கு வந்திருக்கின்றன. இது கண்கூடாகக் கண்ட சான்று—அநுபவம்.

நமது வெள்ளையன் செட்டியார், புதிதாக மணஞ் செய்துகொண்டு, உலகத்தில் இன்னும் கொஞ்ச நாட்களையும் இன்பமாய்க் கழித்துவிடலாமென்று கருதினார். ஆனால், அம்மணமே அவருடைய வாழ்நாளின் நிம்மதியைக் கெடுக்கும் கூரியவா ளாயிற்று. இவரோ, வயது சென்றவர்; மனைவி வள்ளியம்மையோ, இளம்பருவமுடைய நங்கை;

ஒரு வாலிபனை மணந்து இன்பம் துய்க்கவேண்டிய அவள், கிழவனுக்கு வாழ்க்கைப்பட்டது முதல் அவரை வெறுக்கத் தொடங்கினாள். இருவருக்கும் போர் நிகழாத நாள் இல்லை யென்றே இயம்புதல் வேண்டும். இயற்கை யழகுகளும், செயற்கை யழகுகளும் நிறைந்து எத்தனையோ மனிதர் கட்குப் பேரின்ப மயமாய்த் தோன்றும் இவ்வுலகம், வெள்ளையன் செட்டியாருக்கு மாத்திரம் பன்னருந் துன்பம் பயிற்ற நிரயமாக—மனிதர் இயக்கமற்ற கொடியதோர் பாலை நிலமாகத்—தோன்றிற்று! இன்பத்தையும், மகிழ்ச்சி யையும் பெறவேண்டுமென்று பல வகையில் முயன்றா ராயினும், அவற்றுள் ஒன்றேனும் அவருக்குக் கைகூட வில்லை. காரணம்: அவர் பிறழ வுணர்ந்து ஆற்றிக் கொண்ட புன் மணமே யாம். எனெனின், அவருடைய மணம் கேவலமான—பரத்தமையில்லாத—ஒரு ஆண் மிருகத்துக் கும், ஒரு பெண் மிருகத்துக்கும் எற்படும் சம்பந்தத்தைப் போன்றதோர் சம்பந்தத்தை உண்டாக்கியதே தவிர, வேறின்று. வெறும் சரீர சம்பந்தத்துக்காக—கேவலமான காம இச்சையை நிறைவேற்றிக் கொள்வதற்காக — மனித னிடத்தில் அமைந்திருக்கும் மிருகக் குணத்தை வெளிப் படுத்துவதற்கென்றே எற்பட்ட மணமாக இருந்ததே தவிர, உண்மை யன்புடனுவது, காத லுணர்ச்சியுடனுவது, சிறந்த நோக்கத்துடனுவது செய்யப் பெற்ற மணமாக வில்லை. எந்த உணர்ச்சி, மணம் என்பதைத் தூய்மை யுடையதாயும், தாழ்மையுடையதாயும், கடவுட் டன்மை யுடையதாயும் செய்கின்றதோ—எந்த உணர்ச்சி, இல்லறத் தைச் சிறப்பித்து, கணவன் மனைவியருள் ஒற்றுமையை உண்டாக்கி, அவர்களைப் பேரின்பப் பெருங் கடலுள் அமிழ்த்தியும் வருகின்றதோ—எந்த உணர்ச்சி, கணவ னிடத்தில் மனைவிக்கு நம்பிக்கையையும், மனைவியினிடத்

தில் கணவனுக்கு நம்பிக்கையையும் உண்டாக்கி, அவர்களை இன்புறச் செய்கின்றதோ—அந்த உணர்ச்சி—அஃதாவது காதல் ததும்பும் இன்ப அன்புணர்ச்சி—இன்பத்துள் இன்பமாயிலங்கும் அன்புணர்ச்சி—கருத்தைக் கருத்துடன் சேர்த்தும், உயிரை உயிரோடு பிணித்தும் ஒன்று படுத்தக் கூடிய அன்புணர்ச்சி—உடலின் தொடர்பால் உண்டாகும் சம்பந்தத்தைக் காட்டிலும் மிக நெருங்கிய சம்பந்தத்தையும், வலிமை பொருந்திய சம்பந்தத்தையும், கணவன்—மனைவியர்க்குள் ஏற்படுத்தி, அழிதன் மாலைத்தாகிய உடலிருக்கும்பொழுதும், அஃது அழிந்த பின்பும் அச் சம்பந்தம் என்றும்—எக்காலத்தும்—எவ்விடத்தும் இருக்கும்படி. அந்தக் கணவன்—மனைவியரின் உயிரைப் பக்குவப்படுத்தும் வலியுடைய அன்புணர்ச்சி—அத்தகைய அன்புணர்ச்சியுடன் அவருடைய மணம் இல்லாமையே துன்பத்திற்கும், துயரத்திற்கும் காரணம் என்பதை நாம் கூறவும் வேண்டுமா ?

காதலினும் சிறந்த இன்பம் வேறில்லை யென்பது அறிவுடையோர் கொள்கை. 'காதல்' என்பதும், 'அன்பு' என்பதும் மிருகத்தன்மை பொருந்திய உடலின் தொடர்பைப் பொறுத்தது யிருக்கிற தென்பதை யார்தான் அறியாதார் ? மிருகத் தன்மை பொருந்திய உடலுறவு ஒன்றை மாத்திரம் கருதிக் கணவன்—மனைவியர் ஒருவரையொருவர் விரும்புவார்களானால், அந்த உரிமையைக் 'காதல்' என்று கழற முடியுமா ? 'காதல்' என்பதன் உண்மைக் கருத்து : அஃது ஒரு தெய்வ சக்தி என்பதன்றோ ? தெய்வத் தன்மை பொருந்தியதும், என்றும் உள்ளதும், என்றும் மாறுதலுமான—தூய்மையான—'காதலை' நாம் கேவலம் காம விச்சைக்கு ஒப்பிடல் பொருந்துமா ? நவீன நாகரிகம் மிகுந்த இக்காலத்தில் எந்தப் பொருளையும் பணத்திற்கு

வாங்கலாம்; இப்பொழுது நினைத்தாலே ஒரு அரசனையே விடலாம்—அதற்குரிய ஆற்றலும், பொறுப்பும் வேண்டியதில்லை—பெரும் பட்டங்கள் பெறலாம். ஆனால், கேவலம் உப்பு, புளிப்போல—காதல் என்பதைக் காசு கொடுத்து வாங்க முடியாது. காதலால் இன்பமும் உண்டாம்; துன்பமும் உண்டாம். துன்பம் உண்டாமெனக் கொள்ளின், காதல் நல்லதா? கெட்டதா? அதை நல்வழியாற் பெறின், அதினும் நல்லதும், இனியதும் வேறன்று; அதைத் தீவெறியாற் பெறின், அதினுங் கெட்டதும், கொடியதும் வேறன்று. நன்னெறியான் நன் மனைவியைப் பெற்று, மணந்து வாழும் நல் வாழ்க்கையினும், அரிய நிலையும், இன்பமும் இம்மையிற்றானுண்டா? இன்றேல், மறுமையிற்றானுண்டா? தீவெறியால், அதுவும் கெட்டவளைக் காதலித்தடைந்து, கெடு நெறிப்பட்டுத் துன்புற்று வாழும் வாழ்க்கையினும், கேடான கேடும், நிரயமும் பிறிதொன்றுண்டா? அங்ஙனமாயின், நன்னெறியால் நன் மனைவியைக் காதலித்து மணத்த லெவ்வாறு? அதனுளதாம் இன்பமென்னை? 'காதல்' என்பது கணவன்—மனைவியரிடை நிகழும் ஒரு அன்பேயன்றி வேறன்று. இக் காதலே, ஆடவனுக்கும், பெண்ணுக்கும் இடையில் நின்று, ஒருவரோடொருவரைக் கவர்ந்திழுக்குங் காந்தம்—மின்சாரம்; காதலே, ஒரு பெண்ணையும், ஒரு ஆடவனையும் பிரியவொட்டாமல் ஓரே பிணிப்பாய் இறுக்கிக்கட்டும் கயிறு; காதலே, இத்துன்ப மயமான உலகமென்னும் கடலிடைப்பட்டழுந்தினர் ஏறும் இன்பக்கரை; காதலே, கணவன்—மனைவியிருவரையும் பிறர் முகம் பார்க்கவொட்டாது தடுத்து, ஒருவரையொருவர் காக்கச் செய்யுங் காவல். ஒரு பெண்ணுக்கும் ஆடவனுக்கும் நிகழ்ந்த 'காதலைக் காண்டற்கு அறிகுறியாய்ச் செய்யப்படுங் கருமமே மணம். இவ்வா

றின்றி, தந்தையினுடைய பொருளாசைக்கும், தாயினுடைய சாதி யாசைக்கும் 'மணம்' என்பது பெயராக மாட்டாது. கணவன்—மனைவியர் தெஞ்சொத்த சம்மதம் மணமேயன்றி, தாயும், தந்தையும் தங்கள் நோக்கப்படியும், அடித்து அமுல் செய்து பயமுறுத்திச் செய்யும் 'மணம்' மணமேயன்று. இவ்வாறு சம்மதமின்றிச் செய்யப்படும் மணமே, விலங்கு ; அதுவே சிறை.

இவ்வாறு 'காதல்' என்னுங் கவர்ச்சியைக் கவனியாமல் செய்த எண்ணிலாத மணங்களால் விளைந்த கேடுகளைச் சொல்லவும் இயலாது ; எண்ணவும் முடியாது. காதலித்த கணவனைக் கைவிட்டுப் பெற்றோர் கொடுமையால் பிறரை மணந்த பெண்களே, இப்போது தெறி பிறழ்ந்து தெருத்தெருவாய்த் திரிகின்றனர். ஒரு பெண்ணை விருப்பமில்லாத ஒருவனுக்குக் கட்டிக் கொடுப்பதிலும், மணமே செய்யாமல் வீட்டிற்றானே வைத்துக்கொள்ளுதல் சாலச் சிறந்தது. அங்ஙனம் செய்வதால் பொருட் செலவுமில்லை ; வீண் பெயரும் வந்து சேராது. ஒரு பெண்ணை, அவள் விரும்பாத ஒரு கிழவனுக்குக் கட்டி யழுவதிலும், அவளை யழைத்து, "அம்மா! இஷ்டமுள்ள பேருக்கு மனைவியாயிரு" என்று கூறிவிடுதல் மிக வுயர்ந்தது.

இத்தகைய காதலுணர்ச்சியுடன் இக்காலத்தில் மணங்கள் நடைபெறுகின்றனவா என்பதே கேள்வி. நம்முடைய வெள்ளையன் செட்டியாரின் மணம் எப்படிப்பட்டது? வள்ளியம்மையின் அழகுக்காக—உடலுக்காக—மணஞ் செய்து கொண்டார். வள்ளியம்மையினுடைய பெற்றோர், அவளை வெள்ளையன் செட்டியாருடைய புகழுக்காக—அவருடைய பொருளுக்காக—மணஞ் செய்து கொடுத்தார்கள். பொதுவாகப் பார்க்கிறபொழுது செல்வர்களின் புத்திரர்கட்குச்

செல்வர்களின் புத்திரிகளையும், வறியவர்களுடைய பிள்ளை கட்கு, வறியவர்களின் பெண்களையும் பொருளைக் கருதி அநேக மணங்கள் செய்கின்றனர். அன்றி, பிற நலங்களைக் குறித்தன்று என்பதை யாவரும் அறிவர். உயர்ந்த 'ஜோன் எக்ஷால்' பிராந்தியைத் தவிர வேறொன்றையும் விரும்பாத வீணர்க்கு நற்குணம் படைத்த பெண்களையும், உயர்குணம் படைத்த ஒருவனுக்கு அடங்காப்பிடாரிகளை யும், பள்ளிக்கூடத்தில் மழைக்கேணும் ஒதுங்கி யறியா மேதாவிகட்குக் கல்வித் களஞ்சியமான பெண்களையும், எல்லாக் கலைகளையும் இனி துணர்ந்த அறிவாளிக்கு, சட்டி சுரண்டுவதும், அடுப் பூதுவதுமன்றி வேறறியாப் பதர்களை யும், விலைமாதரையே தெய்வமென வணங்கும் அறிவிலி கட்கு, அருந்ததி யனைய கற்பரசிகளையும், பிற மாதரை யெல் லாம் 'தாய்' என வணங்கும் பரம யோக்கியர்க்குச் சொல் லொணாக் கெட்ட நடத்தையுள்ளவர்களையும், வயதின் மூப் பால் ஒருநொடி போலிலங்கும் இழவர்கட்குக் கொஞ்சங் கிளி போன்ற மங்கைப் பருவ மட மாதரையும் போலி மணஞ் செய்து பொருளாசையாற் கெடும் மனிதர் தொகைக்கு அளவுண்டோ?

கணவன்—மனைவியர் இருவரையும் இரு கண்களென யும், இரண்டு சக்கரங்களெனவும் புலவர் கூறுகின்றனர்.

"தருமமெனும் பண்டமிடுஞ் சகடமா மனைவாழ்க்கை
கருமதுகம் பிணித்துமனைக் காதலியுந் தானுமென
இருவராய் முறைசெலுத்தி னெத்துணைத்தா ரமுஞ்செல்லும்
ஒருவராய்ப் பூண்டிழுப்பி னேரிறையுஞ் செல்லாதால்"

இவ்வாறு கணவன்—மனைவியர் ஒத்து வாழ்வதற்குக் கார ணம் யாது? அது பொருளா, அல்லது குணமா? பொரு ளாயின், செல்வருடைய பெண்கள்கூடத் தங்கள் கண

வரை மதியாது நடப்பதற்குக் காரணமென்ன? ஒரு ஏழையினுடைய மனைவி, தன் கணவனைத் தெய்வமென வணங்குதற்குக் காரணமென்ன? ஒரு கூலிக்காரனுடைய மனைவிக்கு உள்ளபடியே யிருக்கும் பதி விசுவாஸமும், கற் பொழுக்கமும் பெரும்பான்மையும் கனதனவான் வீட்டுப் பெண்கட்கு இல்லையென்றே சொல்லும்படியான விதமாய் அவர்களுடைய தற்பெருமையும், அடக்க மின்மையும் குறிப்பிடுவதை நாம் அநுபவத்தில் பார்த்து வருகிறோ மன்றோ? தங்களுடைய ஜீவியத்தையும், சரீர சுகத்தையும் ஒரு பொருட்படுத்தாமல் எவ்விதமான கஷ்டங்களையும், வருத்தங்களையும் பொறுமையுடன் சகித்துக்கொண்டு எப் படியாவது தங்கள் காதலர்கள் சுகமாயிருந்தால் போதும், திருப்தியடைந்தால் போதும் என்பதையே குறியாகக் கொண்டு தங்கட்கு உண்ண உணவில்லாமலும், உடுக்க உடையில்லாமலும் இருந்தபோதிலும் தங்கள் காதலரின் சௌக்கியத்தில் மிக்க கவனம் செலுத்திவரும் உத்தமப் பெண்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். தாங்கள் விரும்பிய புருடரின் அன்பைப் பெற்றால் போதுமென்று நினைத்து, அதை அடையும்பொருட்டு உயிரையும் ஒரு பொருட்படுத்தாமல், மனதையும் சட்டை செய்யாமல் எந்தக் காரியத்தையும் தைரியமாய்ச் செய்யக்கூடிய பெண் கள் எத்தனையோ பேர் இக்காலத்தில் இருந்து வருகிறார் கள். இதற்குக் காரணமென்ன? காதலின் பெருக்கே காரணம். பொருளை விரும்பி ஒரு பெண், தன் கணவனை விரும்புவாளானால், அப்பொருள் அவனை விட்டுப் போகுங் கால் அவள் அன்பும் போய்விடுமன்றோ? அவன்மீது அன் பில்லாமற்போகவே, அவள் மற வழியில் நடக்கத் துணிவா ளன்றோ? கேவலம் பொருள்பற்றி யுண்டாகும் அன்பிற் கும், விலைமாதருடைய அன்பிற்கும் பேதமென்ன? ஆகவே,

மணமக்களுடைய சம்மதம் தெரிந்து மணஞ்செய்தலே பொருத்தமாகும். இனிக் கதையைத் தொடங்குவோம்.

வெள்ளையன் செட்டியாருக்கு மணம் நடந்து இரண்டு ஆண்டுகளாயின. மணஞ் செய்யும்போது வள்ளியம்மை இறு குழந்தையா யிருந்தாள். அவளுக்கு அறிவு வந்தது முதல், தனக்கு இவ்விதம் மணம் முடித்த பெற்றோர்மீது கொந்தகொண்டாள். அதனல் செட்டியாரை வெறுத்தாள். தன் கணவனைத் திட்டுவதென்றல் அப்புண்ணிய வதிக்கு மிக மகிழ்ச்சி. மலையி னுச்சியிலிருந்து அருவி தங்குதலில்லாமல் ஓடி வருவதைப்போல், வள்ளியம்மை யின் வாயிலிருந்து டகரப் பிரயோகங்கள் புறப்பட்டுக் கொண்டே யிருக்கும். செட்டியார், எண்சாணுடம்பும் ஒரு சாணைக் குன்றி, அசைவற்று நின்று உருகுவார். பார்ப்பவர்க்கு இவர் என் இந்தப் பெண்ணுருவத்தை மணஞ் செய்துகொண்டா ரென்ற வருத்தமே யுண்டாகும். வெள்ளையன் செட்டியார், இவளை மணந்த பிறகு பட்ட துன்பத்திற் களவில்லை. என் மணஞ் செய்துகொண்டோ மென்று நைந்தார். இந்த யோசனை முன்னேயே வந்திருந்தால் மிக நன்றாயிருக்கும். இனி யென்செய்வது! விதியிருந்தால் விடுகிறதா? வள்ளியம்மையின் தலையில் எழுதிய பாக்கியம் அவ்வளவுதான்!

ஒருநாள் வெள்ளையன் செட்டியார், வள்ளியம்மையை நோக்கி, "என்னடி, என்னுடன் பேசிக்கொண்டிருந்த திவான்பகதூர் சுப்பிரமணிய சாஸ்திரிகளுடைய உடம்பில் எச்சில் உமிழ்ந்துவிட்டாய். ஏதாவது சொன்னல், அரக்கியைப்போல் மேல் விழுந்து அடிக்கிறாய். ஐயோ! தெய்வமே! உதைபட்டுச் சாகவோ, உன்னை மணஞ் செய்துகொண்டேன்! என்னுடைய நண்பருக்கு எவ்வளவோ சமாதானஞ் சொல்லி யனுப்ப நேர்ந்தது—என்றார்.

வள்ளியம்மை :—உங்கள் பக்கத்தில் அவர் இருக்கிறார் என்று முன்னமே சொல்ல முடியாமற் போய் விட்டதா ? நீங்கள் ஒருவரே இருக்கிறீர்கள் என்று கருதி, ஜன்னலின் மறைவிலிருந்தபடியே உமிழ்ந்து விட்டேன். அதனாலென்ன ? பிரமாதப்படுத்துகிறீர்களே ; குடியா முழுகிவிட்டது ?

வெ. செட்டியார் :—என்மீது துப்பினாற் குற்றமில்லை போலும் !

வள்ளியம்மை :—எத்தனை நேரமும் என்னை யடித்து, வைது அழச்செய்வதே உங்கட்கு வேலை. என் தங்கையை மணஞ் செய்துகொண்ட அந்த மதராந்தகத்துச் செட்டியாருக்கே என்னையும் மணஞ் செய்துகொடுத்திருந்தால், நான் எவ்வளவோ இன்பம் அடைந்திருப்பேன். அவள் அப்பொழுதே கைம் பெண்ணாகிச் சுகமாயிருக்கிறாள். என்னை முதலில் அவருக்கே கொடுப்பதாக என் தந்தை தீர்மானித்திருந்தார். இடையில் நீங்கள் வந்து ஐயாயிரம் ரூபாய் கூடக் கொடுப்பதாய்ச் சொன்னபடியால், என் தந்தை—அவன் பாழாய்ப்போக ! உமக்குக் கலியாணஞ்செய்து தொலைத்தான். என் தங்கை, இப்போது சுதந்திரத்துடன் இருக்கிறாள். நான் உம்முடன் துன்பப்பட்டு நாள்தொறும் அழுதவண்ணமாயிருக்கிறேன்.

வெ. செட்டியார் :—போதும் ; நிறுத்து ! என்னையும் சாகச் சொல்லுகிறாயா ?

வள்ளியம்மை :—நான் உம்மை இறக்கவா சொன்னேன் ? இதுவும் தலைவிதிதான் ! என்னுடைய எண்ணமெல்லாம் கெட்டு, என்னுடைய ஆசையெல்லாம் விரயமாகி, வாழ்வு தாழ்வாகி, என் அழகெல்லாம் பய

னற்று, என் விருப்பத்திற்கு மாறுக; ஐம்பதுவயது வாலிபனுகிய உம்மை மணக்து, இந்தக் கேடுகெட்ட வாழ்வு வாழ்வதைவிட, மடிந்துபோகவோ, அல்லது காலியிழக்கவோ நேருமானல், அதை நான் மகிழ்ச்சி யோடு எதிர்பார்க்கிறேன். நீங்கள் எதற்காக இறக்க வேண்டும்? எந்நேரமும் என்னை அழச் செய்து கொண்டும், இன்னும் பற்றுக் குறைக்கு ஆண்டிற்கு ஒவ்வொரு பெண்ணை மணஞ்செய்து, அவர்கள் உயிரை இயமனுலகத்திற்கு அனுப்பிக்கொண்டும் ஆயிரம் ஆண்டுகள்வரை வாழ்ந்திரும். நான் கைம்பெண்ணுக வேண்டுமென்பது என் நோக்கமல்லாது, நீங்கள் இறக்கவேண்டுமென்பது என் நோக்கமன்று.

வே. செட்டியார் :—ஆமாம்; நீ நிரம்ப அறிவுள்ளவள். உனக்குங் கடவுள் வாயைப் படைத்துவிட்டார். நான் இறக்காமல் நீ எவ்விதம் கைம்பெண்ணுவாய்?

வள்ளியம்மை :—எனக்கு அவ்வளவு தூரம் பொருள் சொல் லத் தெரியாது. நீங்கள் தமிழைக் கரைத்துக்குடித்த புலி; எப்படி வேண்டுமானலும் வைத்துக்கொள்ளுங் கள்.

வே. செட்டியார் :—நீ என்ன என்னைத் தாங்குகிறுய்? உனக்காகத்தானே மூன்று வேலைக்காரர்கள் வைத் திருக்கிறேன்? கழுதைக்குக் கொஞ்சமாவது அறி விருக்கிறதா? பேசுவதைப் பார்!

வள்ளியம்மை :—நான் என்னசெய்வேன்! நீங்கள் எத்தனை வேலைக்காரரை வைத்தாலும், எனக்கு உங்கள் மீது அன்பில்லாதபோது, நான் அதை வலிந்து பெற முடியுமா? போகிறதென்று வேலைக்குவேலை தவறு மற் சோறுபோட்டால், இன்னும் பேசுவீரல்லவா?

வெ. செட்டியார் :—அந்தமட்டி லிருந்தால் போதும். அதற்குமேலும் போய்க் கண்டபடி பேசுகிறாய்.

வள்ளியம்மை :—அட, கிழட்டுப் பிணமே! என்னை மணஞ் செய்துகொண்டு நீங்கள் இன்பமடைந்த தென்ன? அல்லது, நான்தான் அதுபவித்த சுகமென்ன? ஒரு இழவுமில்லை! உம்முடைய பணத்துக்காகவா உயிருடன் ஒரு பெண்ணைக் கொலை செய்வதுபோல், என்னை மணந்து என் மகிழ்ச்சியையும் பாழாக்க வேண்டும்? எதற்காக உமக்குச் சாகப்போகிற வயதில் இந்தப் புத்திவந்தது? என்னமோ அறிவில்லாமல் மணந்துவிட்டீர்; போகட்டும்; நான் கேட்பதை யெல்லாம் வாங்கித்தந்து, என் மனங்கோணுமலாவது நடந்து கொள்ளுகிறீரா? அதுவுமில்லையே! வைரத் தில் ஒரு நெக்லெஸ் மாலை வேண்டுமென்று மூன்று மாதமாய்ச் சொல்லியழுகிறேன்; ஆகட்டும், போகட்டு மென்று வீண் போக்குத்தான் சொல்லுகிறீர்கள்— என்று அழத் தொடங்கினாள்.

இதைப்பார்த்த செட்டியார் மனந்தாங்காமல், "ஐயோ! பாபம்! இந்தப் பெண்பாவத்தை என்னென்று சொல்வது! இறுதிக்காலத்தில்—சாகப்போகுங் காலத்தில் இந்தச் சங்கடத்திற் குள்ளானேன்! என்செய்வது! குழந்தைப் பெண்! வயது பதினைந்துதானே! எனக்கோ, வயது ஐம்பதுக்குமேல் ஆகிவிட்டது. இனி யென் வயதுவரை அவள் இருந்துவிட்டால், வேறு துன்பம் வேண்டாம்"—என்று தன் மனதிற்குள் கருதிக்கொண்டு அவளிடம் சென்று, வலிந்து தழுவித் தம்முடைய மணிபர்ஸ் வாயால் ஒரு அன்பு முத்தம் ஈந்து, "லக்ஷ்மியம்! என் அழுகிறாய்? இப் பொழுதே சென்னைக்கு நம்முடைய கடைக்கு எழுதி, இன்னும் ஒரு வாரத்திற்குள் மாலை தருவித்துத் தருகிறேன்.

கண்ணே! அழாதே" என்று சமாதானம்செய்து, பக்கத்தில் அமர்ந்தார். இதன் பிறகு வள்ளியம்மை சிறிது முகமலர்ச்சியுடன் செட்டியாரோடு பேசத்தொடங்கினாள். வெள்ளையன் செட்டியாருக்கு அது பரம சந்தோஷமாயிற்று. இந்த மகிழ்ச்சியில், ஷண்முகநாதனுக்கு இன்னும் மணஞ் செய்யவில்லையே என்ற கவலை தோன்றியது. பிறகு, வள்ளியம்மையைப் பார்த்து, "நம்முடைய பையன் இரண்டொரு இடங்களில் கடன்வாங்கி யிருப்பதாய்க் கேள்வியுற்றேன்" என்றார்.

வள்ளியம்மை :— உங்களால்தான் அவன் கெட்டுப்போய் விட்டான். அவனுக்குத் தக்க பருவத்தில் மணஞ் செய்திருந்தால், இப்படி நடப்பானா? தங்கள் தங்கையின் மகனைக் கொடுக்கும்படி நான் போகும்போதெல்லாம் கேட்கிறேன்; அவர்கள் முடிவு சொல்லுகிறார்களில்லை. தங்கள் தங்கையின் கணவர் மிக நல்லவர். நீங்கள்போய்க் கேட்டால், உடனே சம்மதித்து விடுவார். உங்கட்கு வீட்டைவிட்டுப்போக முடியவில்லை. உள்ளூர்தானே? இதற்குக்கூடச் சங்கடமா?

வே. செட்டியார் :— அவர் மாட்டேனென்று சொல்லமாட்டார். இவ்வளவு சொத்தையும் விடுவதற்கு யாருக்காவது மனம்வருமா?

வள்ளியம்மை :— அவர்கள் காலுக்குச் செருப்பாக நடந்தாலன்றோ காரியத்தை முடித்துக்கொண்டு வரலாம். நாம் நெருங்காம லிருந்தால், அவர்கள் பாட்டுக்கு வேறு யாருக்காவது முடிவு சொல்லிவிடுவார்கள். என்னவோ தெரியாமல் பையன் செலவழிக்கிறான். அதற்கு 'என் மானம் போய்விட்டது' என்கிறீர்கள். அந்தப் பெண்ணைக் கேட்டு முடிக்க உங்களால் இயலா

மல் 'பணம் நஷ்டமாய்ப் போகிறது' என்கிறீர்கள். இதற் கென்ன செய்வது ?

வே. செட்டியார் :—நீதான் எத்தனையோ முறை கேட்டே னென்றாயே ; அதற்கு என்ன சொன்னார்கள் ?

வள்ளியம்மை :—விதியிருந்தால் கூட்டிவைக்கட்டு மென்றார் கள்.

வே. செட்டியார் :—என் தங்கை யொன்றும் சொல்ல வில்லையா ?

வள்ளியம்மை :—இல்லை. நீங்கள் போய்க்கேட்டாலென்ன?

வே. செட்டியார் :—நான் போய்க்கேட்கலாம் ; சண்டை போடலாம். நம்முடைய பிள்ளை என்ன ஒழுங்காக விருக்கிறான் ? எப்படிக்கொடுக்கிறதென்றால், நாம் என்ன சொல்வது ?

வள்ளியம்மை :—இது தானே பெரியகாரியம் ? 'இப் பொழுது ஒழுங்காயிருக்கிறான்' என்று சொல்லுகிறது. ஆயிரம் பொய்சொல்லிக்கூட ஒரு கலியாணம் முடிக்க லாம்' என்பது தர்மசாஸ்திரமல்லவா ?

வே. செட்டியார் :—நேற்று அவர்கள் வீட்டுப்பக்கத்திலெல் லாம் போய் அட்டகாசஞ்செய்துவிட்டு வந்திருக்கி றான். தவிர, இவன், அவர்கள் வீட்டுக்குப்போன போது "இனி இங்கு வரவேண்டாம்" என்று சொன்னலிங்கம் செட்டியார் கண்டித்திருக்கிறா னென்று நீதான் கூறினாய். என்னையும் 'வரவேண்டாம்' என்று சொல்லுவதுதான் பாக்கி. நமக்கு எவ்வளவு பண மிருந்தாலும், நடத்தை ஒழுங்காயில்லாமற் போனால் யாரும் இகழத்தான் செய்வார்கள்.

வள்ளியம்மை :—அதைப் பார்த்தால் முடியுமா ? எப்படி யாவது முடிக்கத்தானே வேண்டும் ?

வெ. செட்டியார் :—வேறு யாராவது பெண் தருகிறே னென்று முன்வந்தாலும், நம்முடைய பிள்ளையின் நடத்தையைக் கேட்டவுடன் பேசாமற் போய்விடு கிறார்கள். என்ன பாபஞ் செய்தேனோ தெரிய வில்லை! அதெல்லாம் சேர்ந்து எனக்கு ஒரு பிள்ளை யாய்ப் பிறந்திருக்கிறது. சொத்தெல்லாம் போகிற தோடு மானக் குறைவும் ஏற்படுகிறது. இனி யென் உயிர் ஒன்றுதான் பாக்கி. அதுவும் போய்விட்டால் மிக நல்லதாகும்.

வள்ளியம்மை :—இன்றைக்கு மாத்திரம் ஒருமுறை போய்க் கேளுங்கள். முடியாதென்றால் வந்துவிடுங்கள்—என்றாள்.

இதைக் கேட்டுக்கொண்டே உள்துழைந்த ஷண்முக நாதன், "உங்களால் கண்டிப்பாக முடியாதானால், நான் முயற்சி செய்து, அந்தப் பெண்ணை நானே தூக்கிக்கொண்டு வந்துவிடுகிறேன். இந்தப் பயல் இப்படி யிருக்கிறானென்று எண்ணுகிறதுங்கள். ஒடுகிற பாம்புக்கு இத்தனை கால் என்று கூட எண்ணிவிடுவேன்—என்றான்.

வெ. செட்டியார் :—ஐயா, நல்லது! அப்படியே செய்து கொள்ளுங்கள்.

ஷண்முகநாதன் :—நீர் பெரியவரென்று முழுமரம்போ லிருக்கின்றீர்; இல்லாவிட்டால் நான் பார்த்துக் கொள்ளுவேன்—என்றான்.

வள்ளியம்மை :—"அவன்பேரில் ஏனாது கோபித்துக் கொள்ளுகிறீர்கள். அவன் குழந்தை; எதைக்கண்டான்! போங்கள். குளித்துவிட்டுச் சாப்பிடுங்கள்" என்றாள்.

வெள்ளையன் செட்டியார், அவ்விதமே சாப்பாடு செய்துகொண்டு தம்முடைய நண்பர் சுப்பிரமணிய சாஸ்திரி

களுடன் சொர்ணலிங்க செட்டியார் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார். முகப்புத் திண்ணையில் உட்கார்ந்திருந்த சொர்ண லிங்கஞ் செட்டியார், இவர்கள் வரவைப் பார்த்து எழுந்து, "அத்தான்! வாவேண்டும்; ஐயாவான்! வாவேண்டும்" என்று உபசரித்தார். பிறகு "அத்தான்! உங்களுடன் கலந்து பேசி வெகு நாட்களாகிவிட்டன. என் தகப்பனு ரிருக்கிற பொழுது அடிக்கடி வருவீர்கள்; விசாரிப்பீர்கள். இப்பொழுதோ, நினைத்தபோது ஆண்டிற் கொருமுறை வருகிறீர்கள். என்ன, அயலூரா? உள்ளூரிலேயே இந்தப் பாடானுல், அயலூராயின் நினைக்கக்கூட மாட்டீர்கள்" என்றார்.

வெள்ளையன் செட்டியார்:—என்னடா, மளமளவென்று பேசுகிறாய். 'மாவிருக்கிற மணம் போலத்தானே இருக்கும் கூழிருக்கிற குணம்?' நீ நம்மிடம் ஓட்டினுல் தானே, நான் உன்னிடம் பிரியமாயிருக்கலாம்.

சொர்னலிங்கஞ் செட்டியார்:—அத்தான்! எனக்கு உங்களிடத்தில் உள்ள விருப்பம் மாறிப்போகுமா? நமது வம்சத்தில் இல்லாதபடி ஷண்முகநாதன் நம்மை வேண்டுமென்றே அவமானப்படுத்துகிறான். அதனுல் எனக்கும் நெருங்கப் பயமாயிருக்கிறது. நமக்குத்தான் 'ஆண் குழந்தையில்லை; தங்களிடம் இருக்கிறபடியால், நம் முடைய கலியாணியை அவனுக்குக் கொடுத்துவிடு வோம்' எல்லாக் குடும்பமும் ஒன்றுய்ச் சேமமாய் வாழ லாம் என்று நினைத்தேன். அதற்குள் பையன் இப் படித் தலைகீழாக ஆடுகிறான்.

வெ. செட்டியார்:—போடா, இப்பொழுது யார் கையைப் பிடித்திழுத்தான்?

சோர்னலிங்கம் :—ஆமாம் ; போதும் ; நிறுத்துங்கள் உங்கள் பிள்ளை சங்கதியை. கையைப் பிடித்திழுத்தால் சும்மா விடுவார்களோ ?

வெ. செட்டியார் :—பிறகேன் அப்படி நினைத்தேன், இப்படி நினைத்தேன், என்கிறாய் ? எல்லாம் பசப்பு வார்த்தைகள் !

சோர்னலிங்கம் :—நீங்கள் எப்படிக் கருதினாலும் சரி, நான் உண்மையிலேயே அவ்விதம் நினைத்திருந்தேன். இவனுடைய கடைத்தைக் கேடும், தாசி வீட்டிற்குப் போகிறதும், காலிப் பயல்களோடு சேர்ந்து ஊரைப் புரளி செய்கிறதும், கம்மால் தாங்கவியலவில்லை. உங்கட்கென்ன தெரியும் ? கடக்கிற திருவிழா வெல்லாம் எங்கள் வீட்டிற் கருகில்தான். இப்போது அவனைத் தாசி தங்கமணி வீட்டில் காட்டுகிறேன் ; வாரும்.

வெ. செட்டியார் :—கொஞ்ச நாளாய் அவன் ஒழுங்காயிருக்கிறான். நீங்கள் முந்தின சங்கதியை வைத்துக் கொண்டு சொல்லுகிறீர்கள்.

சோர்னலிங்கம் :—அப்படி யிருந்தால் கேட்பானேன் ? நான்கு நாட்கள் ஒழுங்காயிருந்தால், பெண்ணைக் கொடுக்கத் தடையென்ன ? அத்தான் ! உங்கட்கு வீண் பைத்தியம் ! எப்பொழுது அவன் சூதாடத் தொடங்கினானோ, அப்பொழுதே அவன் வீணாய்ப் போய்விட்டான். அஃதுடன் தாசியின் வீடே கதியாயிருக்கிறான். போதாக் குறைக்குக் குடிப்பதிலும் தேர்ந்து விட்டான். இனி, அவன் உருப்படப் போவதில்லை. நீர் 'நல்லவனாகிவிட்டான்' என்கிறீர். இப்பொழுது அவன் தாசி தங்கமணியின் வீட்டில்

சீட்டாடிக்கொண் டிருப்பான் ; நான் வேண்டுமானால் காட்டுகிறேன்.

வே. செட்டியார் :—போடா, அவன் வீட்டிலிருப்பதை நான் பார்த்துவிட்டு வந்தேன். நீ 'தாசி வீட்டிலிருக்கின்றான்' என்கிறாய். நான் என்ன சொல்வது !—என்றார்.

இதைக் கேட்ட சொர்ணலிங்கம் செட்டியார், அங்கு நின்ற வேலைக்காரனாகிய கருப்பணை நோக்கி, "டே, இங்கே வா ; நமது மாப்பிள்ளை ஷண்முகநாதன், தாசி தங்கமணி வீட்டில் என்ன செய்து கொண்டிருக்கிறானென்பதைப் பார்த்து வா" என்றார். அவன் உடனே புறப்பட்டுப் போய், தாசி தங்கமணி வீட்டில் இரண்டு நாழிகை வரை நின்று பார்த்துவிட்டுத் திரும்பி வந்தான். சொர்ணலிங்கஞ் செட்டியார், "என்ன சங்கதி ?" என்று கேட்டார்.

கருப்பன் :—போய்ப் பார்த்தேன் ; அங்கே தான் இருக்கிறாங்க.

சொர்ணலிங்கம் :—என்னடா செய்கிறான் ? மறைக்காமற் சொல் !

கருப்பன் :—சீட்டு விளையாண்டாங்களாம்.....

சொ. செட்டியார் :—அதற்கென்ன ? பயமில்லாமற் சொல்.

கருப்பன் :—என்ன சொல்றது ? அவரு தோத்துப்பூட்டாராம் ; அதுக்காக அவுங்க தலையிலே சீட்டே வைத்து, அதுக்குமேலே வேப்பந் தழையைக் கட்டி, கை, கால்களெல்லாம் எறுக்கந் தழையைக் கட்டி, நாலு பேர் மோளகாரப் பயலுவ சேந்து மோளம் அடிக்கிறாங்க. மாப்புள்ளே, அவுங்களுக்குப் பொறத்தாலே வருத்தமா நிக்கிறாங்க. எல்லாரும் கைகொட்டிச் சிரிக்கிறாங்க—என்றான்.

சொன்னவிங்கஞ் செட்டியார், வெள்ளையன் செட்டியாரை நோக்கி, "அத்தான்! கேட்டீர்களா? பிள்ளையாண்டான் திருவிளையாடலை! நீங்கள் குழந்தை நல்லவனென்கிறீர்கள். நான் என்ன செய்வது! எழுந்து கால், கையை அலம்புங்கள். கொஞ்சம் காபி சாப்பிடலாம்" என்றார். இதைக் கேட்ட வெள்ளையன் செட்டியார், அப்படியே திகைத்துப் போய், பேசுவதற்கும் வெட்கப்பட்டு, அங்குக் கொடுத்த காபியைச் சாப்பிட்டு விட்டுத் தமது நண்பர்—சுப்பிரமணிய சாஸ்திரிகளுடன் வீட்டிற்குத் திரும்பினர். இவர் வரவைக் கண்ட வள்ளியம்மை, இச் சங்கதியைக் கேட்க மிக ஆவலுற்றவள் போற் பாவனை செய்துகொண்டு, "போன காரியம் பழமோ, காயோ? என்றாள்.

வெ. செட்டியார்:—பழம் பழுத்துக் கீழே உதிர்ந்து விட்டதென்று கூடச் சொல்லலாம்.

வள்ளியம்மை:—இஃது உங்கள் வழக்கந் தானே; கேட்டால் தான் என்னிடம் அந்தரங்கம் சொல்லுவதில்லையே! உள்ள சேதி கேட்டு ஒருநாளும் வாழ்ந்ததில்லை.

வெ. செட்டியார்:—வருவதற்கு முன்னல் பேச்சாகக் கொட்டுகிறாயே; சொல்லுவதற்குத் தகவ லிருந்தாலன்றோ சொல்லலாம்?

வள்ளியம்மை:—ஒன்று மில்லையோ?

வெ. செட்டியார்:—அந்தக் கலம் பூச்சியந்தான்!

வள்ளியம்மை:—தொலைந்தது சனியன்! தலையை முழுகுங்கள்.

வெ. செட்டியார்:—பேசாமற் போ; நம்முடைய பிள்ளைக்குப் 'பெண் தாமாட்டேன்' என்று சொல்லிவிட்டார்கள். வேறென்ன?" என்றார்.

இந்தச் சமயத்தில், எங்கேயோ வெளியே போயிருந்த ஷண்முகநாதன், கால் செருப்போடும், கைத் தடியோடும், அரைக் கைச்சட்டையோடும், குஞ்சமிட்டுக் கட்டிய தலைப் பாகையோடும், வாய் நிறைய இரசம் வடியும் வெற்றிலை பாக்கோடும் உள்ளே நுழைந்தான். இவனைக் கண்ட வெள்ளையன் செட்டியார், "இப்பொழுதுதான் மகிழ்ச்சியாயிற்று. உன்னைப் பெற்ற பயன், இன்றுதான் கிடைத்தது. அட, தெய்வமே! இதுவுந் தலைவிதியா!" என்று தலையில் அடித்துக் கொண்டார். ஆத்திரத்தில் அழுந்த அடித்துக் கொண்டபடியால், வாயிலிருந்த பொய்ப் பல் கீழே விழுந்து விட்டது. இந் நிகழ்ச்சியைக் கண்ட ஷண்முகநாதன், சிரிப்புடன் "என்னைக் கண்டால் உமக்கேன் இவ்வளவு வயிற்றெரிச்சலா யிருக்கு?" என்றான்.

வெ. செட்டியார் :—நான் போகும்போது வீட்டிலிருந்த வன் தாசி தங்கமணி வீட்டிற்கு எப்படிப் போனாய்?

ஷண்முக :—கால்களால் நடந்து போனேன்.

வெ. செட்டியார் :—பேசு; பேசு. நன்றாய்த் திமிர் பேசுகிறாய்?

ஷண்முக :—பின்பு என்ன சொல்லட்டும்? வேலையிருந்து போனேன்.

வெ. செட்டியார் :—என்ன வேலை?

ஷண்முக :—அவை யெல்லாம் சொல்லக்கூடிய தல்ல.

வெ. செட்டியார் :—நீ சொல்லவேண்டா மய்யா! நீ சீட்டாடித் தோற்றுப்போய், உன் தலையில் வேப்பந் தழையைக் கட்டி, மேளங் கொட்டினதை ஊர் முழுதும் கேட்டுச் சிரிக்கிறது. தடிப் பயலே! என்னை நாலு விதத்திலும் மானத்தைக் கெடுக்கிறாயே; இஃது உனக்குத் தருமமா! சொத்தெல்லாம் போனதும்

போகட்டும். அவமான மடையுலாமா? 'பையன் ஒழுங்கா யிருக்கிறான்; பெண்ணைக் கொடும்" என்று என் மைத்துனரைக் கேட்டேன். நீ தேவடியாள் வீட்டில் இந்த மாதிரி யிருக்கிறு யென்று தெரிந்த தடா, பாபி! என்னடா செய்வேன்!

ஷண்முக:—இஃதென்ன பிரமாதம்? விளையாட்டுக்கு அப் படிச் செய்தார்கள். என்னை யடிப்பார்களா? அடித் தால் கையை வாங்கிவிடமாட்டேனு? அதனால் பெண் கொடுப்பது தடைப்பட்டுப் போயிற்றே? அப்படிப் பட்ட பெண் எனக்கு வேண்டாம்—என்று கூறி, வெளியே சென்று விட்டான். இதன் பிறகு சில நாட் கள் சென்றன. ஷண்முகநாதன், ஏதோ ஒரு காரிய மாகச் சென்னைக்குப் புறப்பட வேண்டு மெனக் கருதி, அதன் பொருட்டுத் தன் தந்தையை உத்தரவு கேட் டான். அவர் இணங்காமல், 'கலியாணம் முடியும் வரையிலாவது ஓரிடத்திற்கும் போகாமல் இவ்விடத் திலேயே இரு' என்றார். ஷண்முகநாதன், அவரிடமும் சொல்லிக்கொள்ளாமலே மறுநாள் புறப்பட்டு விட் டான். அதுதானே மைனர் திருவிளையாடலுக்கு அழகு?

எங்கே யிருந்து உண்டாகின்றதோ, அஃது அங்கே போய்த் தான் ஒடுங்க வேண்டும். மண்ணிலிருந்து உண்டாவது மண்ணிலேயே போய்ச் சேரும். மனிதர்கள் தாங்கள் இந்த வுலகத்திற் பிறந்தது எதற்காக? இந்த வுலகத்தில் செய்ய வேண்டிய காரிய மென்ன? என்பதைக் கருதாமல், மது வுண்டு மயங்கினவன் போலவும், பேய்த் தேரைத் தெளிந்த கண்ணீன்று அதைப் பின் பற்றிச் செல்லுவது போலவும், பொன்னும், பொருளுமே நிலையுள்ளன வென்று கருதி, பொருள் தேடுவதில் அவாக்கொண்டு அலைகின்றனர்.

எவ்வளவுதான் ஒருவன் செல்வமுடையவனாக இருந்த போதிலும்கூட அச் செல்வத்தை நுகரும் உடலும், அந் நுகர்ச்சியைத் தருஞ் செல்வமும் ஒருநாள் இல்லாவிட்டால், ஒரு நாள் மண்ணோடு மண்ணாய்ப் போவதில் ஐயமின்று. ஆனால், அறிவு எங்கே யிருந்து வந்தது, அஃது எங்கே போய்ச் சேருகின்றது என்பதைப் பெரும்பாலோர் அறிய மாட்டார். முடிவாகப் பார்க்கும்போது, அறிவைப் பூமியி லிருந்து வெட்டி யெடுக்க வியலாது; காசு கொடுத்து அறிவை வாங்க முடியாது; எளிதாக எலத்தில் எடுக்க முடியாது. ஏனெனில், அது கடவுளிடமிருந்து வந்தது; பொருள் பூமியிலிருந்து வந்தபடியால், அது நம்மைக் கீழே தள்ளும்; அறிவு கடவுளிடமிருந்து வந்தபடியால், அது நம்மை மேலேறச் செய்யும். இதை உணர்வார் யார்? செல்வ மென்பது ஒருவனிடத்துள்ள தீக்குணங்களையும், தீச் செய் கைகளையும் தெளிவாய் எடுத்துக் காட்டுகின்ற கண்ணாடி போன்றிருக்கிறது. மனிதப் பிறவிக்குத் 'திருப்தி' என்ப தில்லை யாகையால், பணத்தைத் திரட்டுவதில் மேன்மேலும் ஊக்கங் காட்டுகின்றனர். உலகம் எவ்வளவு அற்பமாக விருக்கிறது! எல்லாம் பணம்! பணத்தைத் தவிர வேறொன்று மில்லை. சனீஸ்பர பகவானுடைய "இன்னல்"

போ. தேவர் :—என்னுடைய நண்ப ரொருவர், திவான் பஹதூர்ப் பட்டம் பெறுவதற்கு மூன்று லக்ஷம் செல வழித்தார். அதற்குப் பய னுண்டாகாமற் போக வில்லை. இப்பொழுது அவருக்கு அரண்மனைகளிற் கூடத் தடபுடலான விருந்துகள் நடைபெறுகின்றன. எல்லாம் தூட்டுப் போடுகிற போடுதான் !

ஷண்முகநாதன் :—மூன்று லக்ஷம் செலவழித்தால் திவான் பஹதூர்ப் பட்டம் வாங்கிவிடலாமா ?

போ. தேவர் :—நண்பரே ! பணத்தைக் கொண்டு வாங்க முடியாத பொருள்கள் இவ்வுலகத்தி லிருக்கின்றன வென்று கருதுகிறீரா ?

ஷண்முகநாதன் :—எந்தப் பொருள்கள் ?

போ. தேவர் :—கௌரவம், கண்ணியம் முதலியவைகளைத் தான் வைத்துக் கொள்வோம், இவைகளைப் பணங் கொடுத்து வாங்கலா மென்று நினைக்கிறுயா, முடியா தென்று நினைக்கிறுயா ?

ஷண்முகநாதன் :—நீர் எவ்விதங் கருதுகிறீர் ?

போ. தேவர் :—நண்பரே ! எதை வேண்டுமானாலும் பணங் கொடுத்து வாங்கலா மென்பது எனது கருத்து. மதிப்பு, பெருமை என்று சொல்லப்படுவன வெல்லாம் பணத்தைப் பொறுத்த சங்கதியாக இருக்கிறதே தவிர, வேறன்று. அந்தரங்கமாகப் பணத்தைக் கொடுத்தால், ஒரு 'ராவ்பஹதூர்' பட்டம் வாங்கி விடலாம். பெரிய அதிகாரிகட்கு இரண்டு முறை விருந்து வைத்தால், ஒரு 'திவான்பஹதூர்' பட்டம் பெற்றுவிடலாம். பெருந் தொகையான பணத்தைக் கொடுத்தால் ஒரு அரசாங்கத்தை விலைக்கு வாங்கி விடலாம். நம்முடைய மதாசாரியர்கட்கு இவ்வுலகத் தில் நாம் நிறையப் பணம் கொடுத்தால், மேலுலக

Missing Pages : 37 to 42

Single Page

மாகிய மோக்ஷத்தில் நமக்கு இடம் வசதியாய்த் தயார் செய்து வைத்துவிடுவார்கள். இவ் வுலகத்தில் காற்றும், தண்ணீரும், ஞாயிற்றின் ஒளியுந்தான் நமக்கு இலவசமாகக் கிடைக்கின்றன—ஆனால், இச் சென்னை போன்ற நகரங்களில் தண்ணீரும், காற்றுங்கூட விலை கொடுத்து வாங்கவேண்டியதிருக்கின்றன—மற்றவை களை யெல்லாம் பணங் கொடுத்துத் தான் பெறவேண்டும். ஆனால், நீரோ ஐந்துலக்ஷ ரூபாய்க்கு அதிபதி; எந்தப் பொருளையும் பணம் கொடுத்து வாங்கலாம். நண்பரே, உம்முடைய பணத்தை யெந்த வழியில் செலவிடப் போகிறீர்?

ஷண்முகநாதன்:—என்னுடைய விருப்பப்படி செலவு செய்வேன்.

போ. தேவர்:—விருப்பப்படி யென்றால், விளங்க வில்லையே! உம்முடைய பொருளைக் கொண்டு ஏழைகளைக் காப்பாற்றப் போகிறீரா? கல்வியை விருத்தி செய்யப் போகிறீரா? ஏழைப் பிள்ளைகட்கு இலவசமாகப் படிப்புச் சொல்லிக் கொடுக்கப் போகிறீரா? கைத்தொழிலை விருத்தி செய்யப் போகிறீரா? அல்லது, பெரிய அதிகாரிகட்கு விருந்து வைக்கப் போகிறீரா? அல்லது அதிகாரிகளின் உருவச் சிலை திறந்துவைக்கப் போகிறீரா? எந்த விதத்தில் செலவு செய்வீர்?

ஷண்முகநாதன்:—இந்த வழிகளி லெல்லாம் செலவு செய்யவே மாட்டேன். தலைபோன போதிலும் பிறருடைய நன்மைக்காக ஒரு பைசாக்கூடச் செலவு செய்ய மாட்டேன்.

போ. தேவர்:—"சரி; அது போகட்டும். நீர் இரண்டு வருடம் வரையில் இங்கிருக்க விரும்புவதால், ஒரு மாளிகை வேண்டியது அவசியந் தானே?" என்றார்.

அவர் சொல்லியது ஷண்முகநாதனுக்கும் சரியென்றே தோன்றியது. ஆகையால், அவரைக் கொண்டே ஒரு மாளிகை வாங்கும்படியாக ஏற்பாடு செய்தான். மயிலாப்பூரிலுள்ள "சுகுண விலாசம்" என்ற மாளிகையை வாங்குவதென்று தீர்மானித்தனர். அம்மாளிகை, வக்கீல் சௌந்தரராஜையங்காருக்கு உரியது. மறுநாள் இருவரும் சௌந்தரராஜையங்காரின் வீட்டிற்குச் சென்றனர். அவர், இருவரையும் வரவேற்றதுடன், ஷண்முகநாதனை நோக்கி, "நீங்கள் தான் சரபோஜிராஜபுரம் வெள்ளையன் செட்டியாரின் குமாரரோ?" என்று கேட்டார். அதற்குப் பொன்னுசாமி தேவர், "ஆம்" என்று பதிலளித்தார்.

சௌந்தர :—இவ்வளவு இளம்பிராயத்தில் பெரிய செல்வத்தைப் பெறுதற்கு இவர்கள் என்ன புண்ணியம் செய்தார்களோ! இளமையில் செல்வம் இருந்தால் தான் அதற்கு மதிப்பு உண்டு. தள்ளாத காலத்தில் எவ்வளவு செல்வ மிருந்துதான் பயனென்ன? வைத்தியனுக்கும், மருந்திற்குந் தான் பயன்படும். செல்வத்திற் குரியவன் பாயும் படுக்கையுமா யிருக்க, சுற்றியுள்ளவர்கள் உண்டு களித்துச் செல்லுவார்கள்.

பொ. தேவர் :—உண்மை தான்; சிறு வயதில் பெரும் பொருட்குத் தலைவனாவது மிகவும் புதுமையான சங்கதியே. ஆனாலும், இதோ இருக்கிறாரே ஷண்முகநாதன் செட்டியார், பெரும் பணக்காரர்; எல்லாவற்றையும் வீணே வைத்திருக்காமல் செலவழிப்பதில் விருப்பமுடையவர்.

சௌந்தர :—"இளமைப் பருவமோ, முதுமைப் பருவமோ, எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். உலகத்தில் செல்வமுடையவர்களில் பெரும்பாலோர்

தங்கள் செல்வத்தை அநுபவிப்பதில்லை. வாயையும், வயிற்றையும் ஒடுக்கிக் கஷ்டப்பட்டுத் தேடுவதும், சுற்றியுள்ளவர்கள் சுகமாய்ச் சாப்பிட்டுப் போவதுமே வழக்கமாக இருக்கிறது. யாருக்கு யார் சதம்? ஒன்றுமில்லையே! மயானத்திற் கப்புறம் எட்டி யோசடி வைப்பவர் யாரும் இல்லை! அப்படியிருந்தும், மனிதர்கள் சிரஞ்சீவியாய் வாழ்வதைப் போல் நினைத்து, எண்ணுதெண்ணமெல்லாம் எண்ணி, ஆகாயக்கோட்டை கட்டுகிறார்கள். இவ்வளவிற்கும் காரணம் அவர்களுடைய அறியாமையே!" என்றார்.

பிறகு, ஐயங்காருடைய மாளிகையை மூப்பதாயிரம் ரூபாய் விலை பேசி முடித்தனர். பணம் உடனே சொக்கமாகக் கொடுக்கப்பட்டது. இரண்டு நாட்கட்குப் பிறகு, ஷண்முகநாதன் பெயருக்குப் பதிவான ரிஜிஸ்டர்ட் பத்திரம் வந்து சேர்ந்தது. தான் துன்புற்றுச் சம்பாதிக்காமல், பெரியோர் தேடி வைத்த பணத்தை எவ்வளவுவேண்டுமாயினும் செலவிடுவதில் கஷ்டம் தோன்றுதிருத்தல் இயல்புதானே? இவை நடந்த ஒரு வாரத்திற்குப் பிறகு, ஷண்முகநாதன் அம் மாளிகையிலேயே வசித்து வலானான். நான்கு புறங்களிலும் பெரிய மதில்கள் சூழ்ந்து, தென்னஞ் சோலை, மாஞ்சோலைகளும் நிறைந்து, கண்டவர் மனதைக் கவரும்படியாய் ஒரு பெரிய தோட்டம் அம் மாளிகையைச் சுற்றி யிருந்தது. நான்கு மதில்களுள் கீழ்புறத்து மதிலின் வடக்குக் கோடியிலும், தெற்குக் கோடியிலும் இரண்டு வாயில்கள் உண்டு. தேக்குமரச் சட்டத்தால் கோக்கப்பட்ட கதவுகள் அவ் வாயிற் படிகட்குப் போடப்பட்டிருந்தன. தெற்குக்கோடியிலிருக்கும் வாயிலில் துழைந்தால், வலக்கைப் பக்கத்தில் ஒரு தடாகம் தோன்றும். இடக்கைப் பக்கத்தில் தென்னை மாங்கள் அணி யணியாக வைத்துப் பயிர் செய்யப்

பட்டிருந்தன. குளத்தின் மேற்குக் கரையில் ஒரு சிறிய மேடை தோன்றும். அந்த மேடையின் வட திசையில் ஒரு சிறிய வழி மேற்கு நோக்கிச் செல்லும். அவ் வழியே சென்றால், இடது கைப்புறத்தில் மற்றொரு குளம் தோன்றும். அத் தடாகத்தில் குடிப்பதற்கு மாத்திரந்தான் தண்ணீர் எடுக்கலாம். இம் மாளிகைக் கருகில் உள்ளவர்கள் இந்தக் குளத்திற்கு வந்துதான் தண்ணீர் முகந்து செல்லுவார்கள். பெருஞ் செல்வர்கள் வீட்டிற்குக் கூட இதிலிருந்து தண்ணீர் கொண்டு போவதுண்டு. ஏழைகள் இத் தண்ணீரைக் குடங்குடமாய்க் கொண்டு போனால், செல்வர்கள் வண்டி வண்டியாய்க் கொண்டு போவார்கள். இக் குளத்தின் கீழ்க் கரையில் ஒரு மண்டபம் கட்டப்பட்டிருக்கிறது. இந்தச் சுற்றிலும் அழகிய பூச்செடிகள் நிறைந்துள்ளபடியால், பார்ப்பவர் கண்ணிற்கு இனிய விருந்தாய் விளங்கும். இத் தோட்டத்தில் வடக்கு வாயிற்படியில் நுழைந்தால், இரு புறத்திலும் மரக் கிராதிகள் அடைத்திருப்பதையும், அவைகளில் பச்சை வர்ணம் பூசப்பட்டிருப்பதையும் காணலாம். இக் கிராதி யடைப்புக்கு உட் புறத்தில் மாதுளை, எலுமிச்சை, கொய்யா முதலிய மரங்கள் பல வைக்கப்பட்டிருப்பதுடன், மல்லிகை, முல்லை, ரோஜா, சம்பகம், இருவாட்சி, முதலிய நறு மலர்ச் செடிகளும் வைத்துப் பயிர் செய்யப்பட்டிருந்தன. அவைகளில் பச்சைத் தாவகூஷக் கொடிகள் படர்ந்திருப்பதையும், கொடி முந்திரிப் பழங்கள் குலை குலையாய்த் தொங்குவதையுங் கண்ட சிறுவர்கள், அவற்றை ஒரு வருங் காணுதபொழுது பறித்து உண்பதுண்டு. அம் மாளிகையைச் சுற்றியுள்ள பூஞ்சோலை, பல செடிகளும், மரங்களுஞ் செறிந்து, இயற்கை அழகு (Natural-Beauty) கண்டு மகிழ விரும்புவோர்க்கு ஒரு பெரும் பொக்கிஷமாக மிளிர்ந்தது. சுருக்கமாகக் கூறு மிடத்து,

"வள்ளைப்பா டலின்மடவார் வளரிசையை மலர்க்குழன்மேற்
கள்ளைப்பா னஞ்செயல்போற் கற்குமளி ; யளியிசையைப்
பிள்ளைக்கோ கிலம்பயிலும் ; குயிலிசையைப் பெருஞ்சோலைக்
கிள்ளைப்பே டைபயின்று பூவையுடன் கிளக்குமால்"

"தேம்பழுக்கு முப்புடைக்காய் தேமாவின் மிசைத்தூங்கும் ;
மாம்பழத்தின் சூலகனத்து வருக்கைதனுஞ் சுளைபிதிர்க்கும் ;
காம்பழுத்து முட்கனியாற் கமுகமடல் கழுத்தொசியும் ;
பூம்பழுக்காய்க் குலைசாய்ப்பத் தலைசாய்க்கும் பொற்கதலி"

என்று வருணிக்கலாம். இத் தகைய ஒப்புயர்வற்ற மாளிகைக்கு நமது ஷண்முகநாதன் உரியவனுனன். இவை நடந்து இரண்டு மாதங்களாயின. ஷண்முகநாதன் செட்டியாரும், பொன்னுசாமித் தேவரும் நீலகிரிக்குச் சென்று, ஒரு மாதம் வரையில் இன்பமாய்க் காலங் கழித்து விட்டுத் திரும்பினர். பொன்னுசாமித் தேவருடைய வேண்டுகோளின்படி, சென்னையிலுள்ள பிரபலமான அதிகாரிகள் யாவருக்கும் ஒரு விருந்து வைப்பதாக ஏற்பாடு கடை பெற்றது. அழைப்புக் கார்டுகள் ஆயிரம் வரை அச்சடித்துக் கொடுக்கப் பெற்றன. குறிப்பிட்ட அன்று மாலையில், புற்றிலிருந்து ஈசல் கிளம்புவதைப் போல, பல பெரிய மனிதர்கள் 'சுகுண விலாச'த்தை நோக்கி வந்தனர். அவர்கள் யாவரையும் பார்த்தால், மிகுந்த செல்வமுடையவர்கள் போற் காணப்பட்டனர். அவர்களில் ஒருவரிருவரைத் தவிர, மற்றையோரை ஷண்முகநாதனுக்கு நன்முய்த் தெரியாது. அவர்கள் பேசிக்கொண்டமாதிரியால், ஒருவர் ஹானரபிள் ஐயா வையங்கார் என்றும், ராவ்பகதூர் நாராயணக் கவுண்டர் என்றும், சோடஸாவதானம் சுப்பையா நாயுடு F. R. S. A. என்றும், அஷ்டாவதானம் அருணகிரிப் பிள்ளை M. L. C. என்றும், ஆசுகவி, ஆனந்தகிருஷ்ண முதலியார் என்றும் புலப்

பட்டன. இன்னும் இவர்களைப்போலப் பட்டங்களும், மதிப்பும் பெற்ற வேறு பலரும் வந்து சேர்ந்தனர். பொன்னுச்சாமித் தேவர், அவரவர்கள் தரத்திற்குத் தக்க படி வரவேற்று உபசரித்தார். சிலர், கடுக்கூடத்(Hall)திற் போடப்பட்டிருந்த நாற்காலிகளைக் குறித்து வியந்து பேசினர்; சிலர், ஷண்முகநாதன் செட்டியாருடைய தோட்டத்தைப் புகழ்ந்து பேசினர்; சிலர், மாளிகையின் அமைப்பைக் குறித்துப் பேசினர்; சிலர், ஷண்முகநாதன் செட்டியாருக்குக் கிடைத்த பாக்கியத்தைப் பற்றிப் பேசினர். அன்று காலையில் வெளியான ஆங்கிலப் பத்திரிகைகளிற்கூட இவ்விருந்து நடைபெறு மென்று குறிப்பிடப் பெற்றிருந்தது. அநேக ஆண்களும், பெண்களும் வீட்டைச் சுற்றிக்கொண்டு நின்றனர். கூடத்தில் எல்லாருக்கும் சிற்றுண்டிகள் மேஜையின்மீது வட்டிக்கப் பெற்றிருந்தன. யாவரும் அவற்றை யுண்டு, காபி குடித்து மகிழ்ச்சியோடு பேசிக்கொண்டிருந்தனர். கந்தங் கலந்த மந்த மாருதம் மென்மையாய் வீசிக்கொண்டிருந்தது. இவ் வமயத்தில் சென்னை, உயர்தர மன்றத்தில் (High Court) நீதிபதியா யிருந்தவரும், பெரும் படிப்பாளியும், சற்று வயது முதிர்ந்தவருமாகிய திரு. எஸ். அநந்த காராயணையர், எழுந்து நின்று, தம்முடைய தங்க மூக்குக் கண்ணாடியைத் துடைத்துப் போட்டுக்கொண்டு,

" சகோதரர்களே!

நம்மை யெல்லாம் ஒரு பொருட்டாகக் கருதி, பெரும் பொருள் செலவிட்டு அரியதோர் விருந்து செய்தமையினாலேயே, செட்டியாருடைய பெருந்தன்மை புலப்படுகின்றது. அவர்கள் பெரிய குடும்பத்தில்—உயரிய தனவைசிய மாபில்—உதித்தவர்கள்; பெருஞ் செல்வத்திற் குரியவர்கள்;

கூர்த்த அறிவும், நன்னடத்தையுமுடையவர்கள். இத் தகைய செட்டியாரவர்கட்குப் புதிய ஆண்டுத் தொடக்கத்தில் மாகிமை தங்கிய பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார், கௌரவப்பட்டம் ஒன்றை அளித்து மகிழ்விப்பார்களென்று எதிர்பார்க்கிறோம். அதற்கிடையில்—என்னை இக்கூட்டத்தில் பேசுபவனைத் தேர்ந்தெடுத்த முறையில்—கனம் செட்டியாரவர்கட்குக் "கோடை வள்ளல்" என்ற பட்டத்தை உரிமையாக்கக் கருதுகின்றேன்"

என்று கூறியவுடன் அங்கிருந்த பெரியோர்கள் செய்த காகோஷத்தினால், பத்து நிமிடிகள் வரை பேசுதற்கே முடியவில்லை. பிறகு, பொன்னுச்சாமித் தேவரவர்கள் அதை யாதரித்துப் பேசினர். அதன் பின்பு வாழ்த்துக் கூறுடன் கூடிய காகோஷம் காதுகளைத் துளைத்தது. உடனே ஷண்முகநாதன் செட்டியாருடைய கழுத்தில் பூமாலைகள் வந்து குவிந்துவிட்டன. இதன் பொருட்டு நன்றி கூற வேண்டுவது முறையாதலால், நமது செட்டியார் எழுந்து நின்று, பொன்னுச்சாமித் தேவரால் எழுதப்பட்டுப் பாடம் செய்து வைத்திருந்ததைக் கீழ்க்கண்டபடி ஒப்பித்தார்:—

"பெரியோர்களே!

பெரும் படிப்பாளிகளும், பெரிய அதிகாரிகளும் நிறைந்த கூட்டத்தில் என்னைப் பொருட்படுத்திக் கௌரவித்ததற்காக நான் என்னுடைய மனப் பூர்வமான நன்றியைச் செலுத்துகின்றேன். மற்றவர்களைவிட நான் அறிவினாலாவது, செல்வத்தினாலாவது, பழக்கத்தினாலாவது, ஆண்டினாலாவது உயர்ந்தேனல்லேன். என்னிடம் இல்லாத குணங்களே யெல்லாம் இருப்பதாகப் பாவித்துப் பட்டம் அளித்திருக்கிறீர்கள். அதற்குக் காரணம்: உங்கட்கென்பாலுள்ள

அன்பின் மிகுதி யென்றே கருதுகிறேன். 'புது நாகரீகம்' என்ற பேய் தலை விரித்தாடும் இக்காலத்தில், உள்ளவாறு உண்மையான நாகரீகத்தின் பொருள் இன்னதென்றே பெரும்பாலோர் அறியாமலிருக்கின்றனர். நாகரீகத்தின் செல்கதி தன் மனம் போனவாறு சென்று கொண்டிருக் கிறது. சிலர், விதவா விவாகம் செய்வதை மேற்கொண்டு அதற்காவனபுரிகின்றனர்; சிலர், ஜாதி வேறுபாடு கூடா தெனக் கருதிக் கண்டவற்றைத் தின்று, உறங்கிக் காலங் கழிக்கின்றனர். இவை யாவும் நாகரீகமல்ல. நம்முடைய நாகரீகம், செயல்கள் யாவும் நம்முடைய தேசத்திற்குப் பயன்படத்தக்கனவா யிருத்தல் வேண்டும். வீண் டம்பத் தால் நாம் யாது பயனடையப் போகிறோம்? ஆகவே, உண்மை நாகரீகத்தின் பொருளை நம்மவர் உணரும்படி இறைவன் அருள்புரிவானாக!"

என்று பேசி முடித்தான். பிறகு வந்தேமாதரம் கூறப்பட்டு, விருந்து இனிமையாய் நிறைவெய்தியது.

நான்காவது அதிகாரம்

காரிருளில் வந்த கட்டழகி

"அழகு" என்பதை, மனிதர் மனம் ஈர்க்கும் ஒரு காந்தம் என்று கூறலாம். இயற்கையிலேயே மிகுந்த அழகுவாய்ந்து, அந்த அழகோடு, கருந்த இளமைப் பருவத்தையும் ஒரு பெண் அடைந்திருந்தாளானால், அத்தகைய பெண்ணை முதன் முதலில் பார்க்கும் ஒருவன், அவளைக் கண்டவுடன் இடத்தையும், காலத்தையும், அவள் உடுத்திருந்த ஆடைகளையும், அவள் பூண்திருந்த அணி

கனியும், அழகையும், வேல்விழிப் பார்வையையும் பின்னர் ஒருபொழுதும்,—தான் இறக்கும் வரையிலும்—மறக்கவே மாட்டான். மானிளங்கன்று போற் பிறழ்கின்ற அவளுடைய கண்களும், அப்பொழு தலர்ந்த அரவிந்தம் போன்ற வதனமும், வளர்ந்த நெற்றியும், பவளச் செவ்வாயும், கார்மேகம்போன்ற விரிந்த குழலும், முற்றத் துறந்த முனிபுங்கவரையும் தன்னடி வீழச் செய்யும் பிற அங்கங்களும் அவன் மனதைவிட்டு அரைக் கணமும் அகலாதிருப்பதால், அவன் தனது ஆண்டகைமையையும், வலிமையையும் இழந்து, காம வயப்பட்டு அம்மங்கை நல்லாளுக்கு அடிமையாகிறான். அவள் சாதாரணமாக ஏதாவதொரு காரியை நோக்கிக்கொண் டிருந்தாலும், அவன் மட்டும் தன்னைத்தான் மிகுந்த ஆசையோடும், விருப்பத்தோடும் பார்த்தாள் என்று நினைத்துக்கொள்கிறான்.

அஞ்சனம்போன்ற காரிருள் சூழ்ந்துகொண்டிருக்கவும், வண்டுகளின் இரைச்சல் காதைத் துளைக்கவும், சாலையின் இருமருங்கிலும் உள்ள மரங்கள் தழைத்து வளர்ந்து ஆகாயத்தில் தோன்றும் மீன்களைக் கண்ணுக்குத் தோன்றுவண்ணம் குடைபோற் கவிந்திருக்கவும், அச்சத்தைத் தாக்கூடியதும், திருவொற்றியூரிலிருந்து சென்னைக்கு வருவது மானபாதையில் தனியாக ஒரு மாது, நள்ளிரவில் கொஞ்ச தூரம் ஓடுவதும், பின் சற்று தூரம் நடப்பதுமாகப் பயமின்றிச் சென்றுகொண் டிருந்தாள். அப்பெண்ணின் முகத்தைப் பார்த்தால், நெடுந்தூரம் நடந்து வந்தவள் போற் காணப்பட்டாள். அவளுடைய பார்வை யெல்லாம் பின் பக்கத்திலேயே யிருந்தது. அவளுடைய முகத்தில் மாத்திரம் துன்பக் குறிகள் அதிகப்பட்டுக்கொண்டே யிருந்தன. பின்னும் அப்பெண் கொஞ்சதூரம் சென்று, ஓரிடத்தில் நின்று, பின்னல் திரும்பிப் பார்த்து, பெரு

மூச்செறிந்து, "அந்த அம்மாள் ஒரு சமயம் தப்பான வழியைத் தெரிவித்திருப்பாளோ? அல்லது நான்தான் அவள் சொன்ன வழியைவிட்டு வேறு வழியில் வந்து விட்டேனோ? ஆமாம்; அவ்விதந்தான் இருக்கும். அவ் வுத்தமியின்மீது குறை கூறுவதற் கிடமில்லை! அவள் குறித்த வழியைத் தப்பவிட்டு வேறொன்றைப் பின்பற்றி வந்துவிட்டே னென்பது நிச்சயம். நான் அங்கிருந்து புறப்பட்டு அதிக நேரமாயிற்றே! இப்பொழுது மணி சுமார் பன்னிரண் டிருக்குமென்று நினைக்கிறேன். நடப்பதும், ஓடுவதுமாக வந்ததில் மணிக்கு நான்கு மைல் வீதம் வந் திருப்பே னென்று நினைக்கிறேன். என்னே மதியீனம்! சுமார் இரண்டு மைல் தூரம் நடந்தால், புகைவண்டி யிருக் கும் இடத்தை அடையவேண்டியதிருக்க, அதைச் சற்றும் மதியாமல் ஓடோடியும் இவ்வளவு தூரம் வந்திருக்கின் றேனே! இப்பாதை எவ்வூருக்குச் செல்லக் கூடியதோ? இவ்வளவு தூரம் வந்தும், இடையில் ஒரு மனிதரேனும் எதிரிற் காணப்படவில்லை. ஒரு சமயம் இப்பாதை புகை வண்டிச் சாலைக்கே (Railway Station) செல்லக் கூடியதா யிருக்குமோ? அங்ஙனமாயின், சந்தோஷ மடைவேன். என் கால்கள் வலிக்கின்றன! எனினும், அதைக் கருதாமல் செல்வேன். அவ்விதமின்றி, இவ்வழி வேறெங்கேனும் சென்று, மறுபடியும் அப்படுபாவி கிருஷ்ண தேவரிடம் அகப்படுவேனாயின், என் கதி யென்னவாகும்! அந்தன் மார்க்கன் என்னுடைய கற்பை அழித்த பின்பே மறு வார்த்தை யாடுவான். ஆ! தெய்வமே, நீ என் வேண்டு கோட் கிரங்கி, அவ்வுத்தமியின் மனதிற் புகுந்து, என்னை அங்கிருந்து தப்புவிக்கும்படி செய்தும், இப்பாதையில்— இருண்ட இடத்தில்—என்னைக் கொண்டுவந்து நிறுத்தி வேடிக்கை பார்ப்பது உனக்கு அழகா? கருணைக் கடலாகிய

நீ என்பாற் சிறிது இரக்கம் வைத்தால் அது குறைந்து விடுமா? உன் கண்ணோட்டத்தை இங்குச் செலுத்தி எளை யைக் காப்பாற்றமாட்டாயா? ஆபத்திலிருந்து என்னை நீக்கி, இவ்வாறு துன்புறுத்துவதைவிடப் பாம்பைபேனும், கொடிய விலங்குகளையேனும் ஏவி என்னைக் கொன்று உன் பாதாரவிந்தத்திற் சேர்த்துக்கொள்ளலாமே! என் இத் தகைய இன்னல் உண்டாகுமாறு செய்கின்றாய்? எவ்வழி சென்றாலும் துக்கம் உண்டாகுமே யன்றிச் சுகமிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. திரும்பச் சென்றால், அச்சண்டா ளன் கையிற்படுவே னென்பதிற் சந்தேகம் இல்லை. முன் செல்வதற்கும் மனம் துணியவில்லை. என்னை யறியாமலே இவ்வளவு தூரம் வந்திருக்கிறேன். இதுவும் உனது திரு வினோயாடலேபோலும்! எல்லாம் வல்ல நின் தன்மையை யார் அறியவல்லார்? உமது தூண்டுதலால் இவ்வழியைப் பின்பற்றி நான் வந்துள்ளேனதலால், கன்மையே எனக் குண்டாக வேண்டுமென்று நினைக்கிறேன்" என்று மன வுறுதி செய்துகொண்டு மேலும் நடக்கலானாள்.

இங்ஙனம் தனிவழியே செல்லும் அம்மாது, கொஞ்ச தூரம் போனவுடன், "யார் அது? நில்!" என்ற சொற் களைக் கேட்டுத் திடுக்கிட்டு நின்றாள்; சப்தம் வந்த திக்கைப் பார்த்தாள். அருகிலிருக்கும் பொருள் புலனாகா வண்ணம் இருளாயிருந்தபடியால், அவளுக்கு யாதொரு உருவமும் தெரியவில்லை. மேற் குறித்த உத்திரவு பிறந்தவுடன் இரண்டு நிமிடங்களாயின. உலகத் தோற்ற முதல் வந்த அமாவாசை யெல்லாம் ஒன்று சேர்ந்தாற்போலக் கருத்த மேனியையும், திரண்டு, பருத்த உருவத்தையுமுடைய ஒருவன், சாலை மரத்தின் பின் பக்கத்திலிருந்து வந்து, "ஏ, பெண்ணே! நீ யார்? இவ்விரவில் எங்குச் செல்கிறாய்?" என்று கேட்டுக்கொண்டே அவளை யுற்று நோக்கினான்.

கடு இரவையும், மனிதரற்ற இடத்தையும், அவனுடைய பயங்கரமான உருவத்தையும் கண்ட அம்மாது, நடுங்கினாள்; எனினும், சிறிது தைரியத்துடன், "ஐயா! நான் ஒரு ஏழை; வயிறு வளர்ப்பதன் பொருட்டு, ஊர் ஊராய்ச் செல்பவள். அருகிலிருக்கும் புகைவண்டிப் பேட்டைக்குச் செல்லுகிறேன். உங்கட்குப் பயன்படத் தக்க பொருள் எதுவும் என்னிடத்தில் இல்லை. ஆகையால், இங்கேயத்தில் நான் தனிவழியே போய்க்கொண்டிருக்கிறேன். என்னிடமேதேனும் இருந்தால், கொடுத்துவிட்டுப் போவேன். ஒன்றுமில்லையே!" என்றாள். அவன், "நீ பிச்சை யெடுத்து உண்ணும் ஏழையா யிருந்தாலும், சாமர்த்தியமாய்ப் பேசக் கற்றுக்கொண்டிருக்கிறாய். அதுவும் உனக்கு வேண்டியதுதான். தவிர, உன் அழகிய முகத்தையும், இனிய குரலையும், இணையற்ற உனது மற்ற அங்கங்களையும் கண்ட எவனும் உன்மீது விருப்பத்தைச் செலுத்துவா னென்பதில் ஐயமில்லை. அவ்வாறிருக்க, நீ யேன் இவ்விதம் கஷ்டப்பட்டு ஜீவனம் பண்ண வேண்டும்?" என்று கேட்டான். அதற்கு அப் பெண், "ஐயா! இது வரையும் கிடைத்து வந்த கஞ்சி என் னுயிருள்ள வரையுங் கிடைத்தாற் போதும். இதைவிட நான் விரும்பக்கூடிய சுகம் வேறு ஒன்றுமில்லை. தயை செய்து என்னை மன்னிக்க வேண்டும். விடியு முன்னதாவது ஒரு ஊருக்குப் போய்விட வேண்டும்" என்று சொல்லி நடந்தாள். அவன், அவளைப் போகவிடாமல் தடுத்து, "பெண்ணே! உன்னிடத்தில் லேதேனும் இருந்தால், கொடுப்பதாகக் கூறினு யன்றே? உன்னிட மிருக்கு மொன்றைக் கேட்கிறேன். கொடுப்பாயா?" என்றான். அதற்கு அவள், "என்னிடம் நீங்கள் விரும்பக்கூடியது ஒன்றுமில்லையே!" என்றாள். அவன், நான் கேட்பது இன்ன தென்பதை உணராமற் பேசு

கிறாய் உன் வாயால் எனக்கு ஒரு முத்தம் கொடு" என்று அருகில் நெருங்கினான். அப் பெண், சிறிது விலகிக்கொண்டு, "ஒருவருமில்லாத விடத்தில் தனியின்றி வந்த என்னை இவ்வாறு கேட்பது ஒரு ஆடவனுக்கு முறையன்று. பிச்சை யெடுத்து உண்ணும் பெண்களிலும் கற்புடையவர்கள் உண்டு என்பதை அறிந்து கொள்ளும். வீணாக என் மனதைப் புண்ணாக்காமல் என்னைப் போகும்படி விட்டால், உமக்குக் கோடி புண்ணியமுண்டாகும்" என்று வேண்ட, அம் மனிதன், "பிச்சைக்காரியா யிருந்தாலும், மிக ஒழுங்காகப் பேசுகிறாய். ஆனால் என்னை நீ அறிந்து கொள்ளவில்லை. புண்ணிய பாவத்திற்குக் கட்டுப்பட்டவனா யிருந்தால், இத் தொழிலில் இறங்குவேனா? உன் வார்த்தையில் மயங்கி விடுவே னென்று எண்ணவேண்டாம். ஆதலின் உன்னை வற்புறுத்தா முன் நான் சொன்னபடி செய்வாயாக" என்று கூறினான். ஐம்பெரும் பாவங்களி லொன்றான திருட்டுத் தொழிலுடையவனை நல்ல வார்த்தைகளால் திருப்ப முயல் வது வீண் என்பதை யுணர்ந்த அப் பெண் அவனிட மிருந்து தப்புவதற்கு வேறு வழி யொன்று மறியாமல் தான் வந்த வழியே திரும்ப ஓடினாள். இவ்விதம் நிகழு மென்பதை எதிர் பார்க்காத அக் கள்வன், அவளைப் பின் பற்றி யோடினான். இதற்குள்ளாக அப் பெண், முப்பதடி தூரம் ஓடிவிட்டாள். அவளைப் பின்பற்றிய கள்வன் தேகப் பருமனுடையவ னாதலின், விரைவாக ஓட முடியவில்லை. எனினும், விடாமற் பின் தொடர்ந்தான். இவ்வாறு அவன் ஓடும்பொழுது பாதையில் கிடந்த கொடியொன்று தடுக்க, 'தடால்' என்று பூமியின்மீது விழுந்தான். மார்பில் அடி பலமாகத் தாக்கியபடியாலும், அங்குக் கிடந்த கல்லில் நெற்றி மோதியதாலும் அவன் மூர்ச்சை யடைந்தான். அவன் விழுந்த சப்தத்தையும், அச் சமயம் அவன் கூவிய

தையுங் கேட்ட அம்மாது, திரும்பிப் பார்த்து நின்றாள். அவன் எழுந்திராமற் கிடப்பதைக் கண்டு, மூர்ச்சையுற் றிருப்பானென்று ஐயமுற்று, அவனுக்கு உதவிசெய்ய விரும்பி, அவன் கிடந்த இடத்திற்கு வந்தாள். "ஒருவா னுதன்னை எமாற்றும் பொருட்டுப் பாசாங்கு செய்கிறானே!" என்றும் ஐயமுற்றாள். பிறகு, "அவ்விதம் இருக்காது" என்று கருதி அவன் அருகிற் சென்று குனிந்து பார்த்தாள். நெற்றியிலிருந்து இரத்தம் வடிந்ததோடு, மூக்கிலும், வாயி லும் காணப்பட்டது. சுவாசம் வருவதைக் கண்டு மூர்ச்சை அடைந்திருக்கிறானென்று, தெரிந்துகொண்டாள். "விடி யும் வரை அவன் மூர்ச்சையா யிருந்து வழியில் வரும் வண்டிகளால் இறந்துவிடுவானே!" என்ற இரக்கத்தால், சிறிது உபசாரம் செய்யலாமா வென்று கருதினாளாயினும், பாம்பிற்குப் பால் வார்த்தாலும், அது விஷத்தை யன்றோ தரும்?" என்ற யோஜனை பின்னிடச் செய்தது. அச் சமயம் ஏதோ பின்னற் சப்தம் உண்டாக, ஆஹா என்ன வென்று திரும்பிப் பார்த்தாள்.

அதே சமயத்தில் ஒரு மின்சார வண்டி (Motor Car) வேகமாக வந்தது. அவ் வண்டியிலிருந்த இரண்டு மனிதர் கள் சட்டென்று கீழே இறங்கினர். அம்மனிதர்களைக் கண்ட அம் மாது, 'மறைந்துகொள்ளலாமா' என்று எண்ணினாள். ஆனால், அவர்கள் மிக விரைவில் அருகில் நெருங்கிவிட்டனர். ஆகையால், அவ்விடத்தைவிட்டு அசை யாமல் நின்றாள். பிறகு, 'இவர்களும் அவனைச் சேர்ந்த வர்களோ!' என்று கருதி வருந்தினாள். அவ் விரண்டு மனிதர்களும், அப் பெண் நின்ற இடத்திற்கு வந்து, "அம்மா! நீ யார்? இவ் விசவில் தனியாக எங்குச் செல் கிறாய்? இம் மனிதன் யார்? இவனைப் பார்த்தால், நிருட னைப் போற் காணப்படுகிறதே; மூர்ச்சையுற் றிருக்கிறானே?

அல்லது, இறந்துவிட்டானா?" என்று அவர்களில் ஒருவன் கேட்டான். அதற்கு அம்மாது, "சகோதரர்களே! நான் ஒரு ஏழை; புகைவண்டிச் சாலையை அடைவதற்காக இவ் வழியில் வந்தேன். இம் மனிதன் என்னைச் சந்தித்துப் பிடிப்பதன் பொருட்டுத் துரத்திக்கொண்டு வந்தான்; தற் செயலாய் கால் இடறிக் கீழே விழுந்து மூர்ச்சையானான். ஒரு சமயம் இறந்துவிட்டானோ, என்னமோ, தெரியவில்லை யென்று பார்த்துக்கொண்டிருக்கிறேன்" என்றாள். அவர் களுள் ஒருவன், "என்ன எண்ணங்கொண்டு உன்னைப் பிடிக்க வந்தானோ! கடவுள் உடனே தண்டித்துவிட்டார். நாங்கள் மயிலாப்பூருக்குச் செல்லுகிறோம். உனக்கு விருப்ப மானால், எங்களுடன் வரலாம். காலத்தையும், இடத்தை யும், இவன் செய்த காரியத்தையும் நோக்க, இவன் இறக்க வேண்டியது முறையே யெனினும், நம்மால் ஒரு உயிரைக் காப்பாற்ற இயன்றபோது, அவ்வாறு செய்யாமலிருப்பது நன்றன்று. ஆதலான், இவனைத் தூக்கிச் சாலைக்கு அப்புறம் கொடத்துவோம். இன்றேல் வண்டிகளால் நசுக்குண்டு இறந்து போவான்" என்று தன்னுடன் வந்தவன் உதவியால், திருடனைத் தூக்கி யப்புறப்படுத்தினர்.

இவர்களுடைய வார்த்தைகளையும், செய்கைகளையும் கண்ட அப் பெண், அவர்கள் மீது நல்லபிப்பிராயங் கொண் டும், அவர்களை வழிப்போக்கர்களென்றும், நற்குணமுடைய வர்களென்றும் கருதி அவர்கள் துணைகொண்டு போதல் நன்மையே யெனத் தீர்மானித்தாள். பிறகு அம் மனிதர் களுடைய வேண்டுகோட் கிரங்கி, அவர்கள் வந்த மின்சார வண்டியில் ஏறிக்கொண்டாள். வண்டி போய்க்கொண் டிருக்கும் போது, அவர்களி லொருவன், அப் பெண்ணைப் பார்த்து, "அம்மா! நீ யார் என்பதைக் கேட்டதற்குச் சரியான பதில் சொல்லவில்லையே?" என்று கேட்டான்.

ப் பெண் :—என் பெயர்: கோகிலம். நான் பிச்சை யெடுத்
உ துண்பவள்.

ஆம் மனிதன்:—அஃது எனக்கு நிஜ மிருக்கிறது. அஃது
உண்மையான மொழி யன்றென்றே மறுபடியுங் கேட்
குமா கிறேன்.

கோ கோகிலம் :—நீங்கள் இவ்விதங் கூறினால், நான் என்ன
பதில் சொல்வது? உண்மையைச் சொன்னேன்; நீங்
கு கட்கு நம்பிக்கை யில்லைப்போலும்! இதற்கு நான்
சே என் செய வல்லேன்!

வந்தவருள் மற்றவன் :—உன்னைப் பார்த்த எவனும் பிச்சை
வீட்டுப் பெண்ணென்று சொல்லப் பின் வாங்க மாட்
டான். அவ்விதமிருக்க, நீ பிச்சைக்காரி யென்று
சொன்னால், யார்தான் நம்புவார்கள்? அதோ அங்
குக் கிடக்குந் திருடனுக்குச் சொல்லி யிருந்தால் நம்பி
யிருப்பான்.

முதலிற் பேசியவன் :—குமாரசுவாமி! என் மனதிலுள்ள
தையே கூறினாய்!

குமாரசுவாமி :—செட்டியாரவர்கள்! மேலும் இப்பெண்ணின்
கூர்த்த மொழிகளையும், நடை யுடை பாவனைகளையுங்
கொண்டு நோக்கும்போது, நான் சொன்னதை யுறுதிப்
படுத்துகின்றது. அஃதன்றியும், வீட்டிற் கோபித்துக்
கொண்டேனும், அல்லது எவ்விடத்திலேயோ, தனி
யாக இருந்தபோது துஷ்டர்கள் கையிற் சிக்குண்டு
மறுபடியுந் தெய்வச் செயலால் தப்பி, இன்ன விடத்
திற்குப் போவதென்னுங் குறிப்பில்லாமலும் இம்
மங்கை போகிறாள் என்றும் நம்புகிறேன்.

ஷண்முகநாதன் :—அஃதென்ன அவ்வளவு உறுதியாகச்
சொல்லுகிறாய்? இதற்குமுன் இப் பெண்ணை யெங்
கேனும் பார்த்திருக்கிறாயா?

குமாரசுவாமி :—" இதற்கு முன் பார்த்ததில்லை ; எனினும் நான் சொன்ன உண்மையைக் காட்டுகிறேன் ; பாருங்கள் !" என்று கூறிவிட்டு, அம்மாதை நோக்கி, "அருகிலிருக்கும் ஊரையாவது, அல்லது இன்னவிடத்திற்குப் போக வுத்தேசித்திருக்கிறே னென்பதையாவது உன்னால் கூறமுடியுமா ? அம்மா, பயமில்லாமற் சொல் !" என்றான்.

கோகிலம் :—அண்ணா ! தயைசெய்து என்னை மன்னிக்க வேண்டும். அத்தகைய கேள்விகட்குப் பதில் சொல்ல என்னால் முடியாமலிருப்பது பற்றி வருந்துகிறேன். இரத்தினபோர்க்கு ஊரின் பெயரை அறிந்துகொள்ள வேண்டிய தவசியமில்லை யாதலாலும், இனிமேற் செல்வது இன்னவிடத்திற்குத் தான் என்னுங் குறிப்பு அவர்கட்கில்லை யாதலாலும், அருகிலுள்ள ஊரின் பெயரை விசாரித்துத் தெரிந்து கொள்ளக் காரண மின்றுதலாலும் தங்கள் கேள்விக்கு விடையளிக்க என்னால் கூடவில்லை. எம்போன்றார்க்கு எல்லா ஊர்களும் ஒன்றுதான் !

குமாரசுவாமி:—நீ உன் உண்மையை மறைத்துரைக்கிறா யென்பதை நான் நன்றாக வுணர்ந்துகொண்டேன் ; எனினும், உனக்கு அதை வெளியிட விருப்பமில்லாதிருக்கும்போது, நான் வற்புறுத்திக் கேட்பது முறையன்று. போகட்டும் ; உன் பிறப்பிடத்தையாவது சொல்வாயா ?

கோகிலம் :—நான் முன்பு உரைத்ததைத்தான் மறுபடியும் சொல்லவேண்டியதிருக்கிறது. என் பிறப்பிடத்தைத் தெரிந்துகொள்வதற்குரியகாரணம் எனக்குத் தோன்றவில்லை யாதலாலும், அதை யறிந்துகொள்வதால்

உண்டாகக்கூடிய நன்மை இன்னதென எனக்குப் புலப்படவில்லை யாதலாலும், இது குறித்து என் பெற்றோர்களைக் கேட்கவில்லை.

குமாரசுவாமி :—உன் தாய் தந்தைய ரிருக்கிறார்களா ?

கோகிலம் :—அந்தப் பாக்கியம் எனக்கில்லை ; நான் ஒரு அநாதை.

குமாரசுவாமி :—உனக்கு மணமாகி விட்டதா ?

கோகிலம் :—இல்லை ; நான் தனியாகவே யிருக்கிறேன்.

குமாரசுவாமி :—மணம் ஆகவில்லை யென்று கூறுகிறாயா, அல்லது உன் கணவர் இறந்துவிட்டாரென்று கூறுகிறாயா ?

ஷண்முகநாதன் :—அடே, குமாரசுவாமி ! இப் பெண் ஒரு ஆடவனாக விருந்தால், நீ கேட்கும் கேள்விகட்குச் சரியான பதில் கூசாமல்லாமற் சொல்லக்கூடும். நமக்கு அறிமுகமில்லாத பெண்ணைத் தனி யிடத்திற் சந்தித்து இவ்வாறு கேட்பது நமக்கழகன்று. ஆதலின், நீ இவ் விஷயத்தைக் குறித்து இனி வார்த்தையாடாமலிரு—என்று கூறிவிட்டுக் கோகிலத்தை நோக்கி, "நான் ஒன்று கேட்கிறேன். அதற் கிணங்கி நடக்க உன்னால் முடியுமா ?" என்று கேட்டான்.

கோகிலம் :—"தெரிவித்தால் அதன்படி நடக்க முடியுமா, —முடியாதா என்பதைப் பிறகு தெரிவிக்கிறேன்" என்றாள்.

குமாரசுவாமி :—"வார்த்தையிற் சிக்கி ஏமாந்து போகக் கூடிய பெண்ணென்று செட்டியாரவர்கள் கருதவேண்டாம்" என்றான்.

ஷண்முகநாதன் :—இதில் ஏமாற்ற மொன்றுமில்லை. அம்மா ! உனக்கு எழுதப் படிக்கத் தெரியுமா ?

கோகிலம் :—மிகுதியாகத் தெரியுமென்று சொல்வதற்கில்லை. ஏதோ கொஞ்சந் தெரியும்.

ஷண்முகநாதன் :—உயர்ந்த படிப்பு வேண்டுமென்று நான் சொல்லவில்லை. எழுதவும், படிக்கவுந் தெரிந்தாற் போதுமானது. எங்கள் மாளிகைக்கு அடுத்த வீட்டில் ஒரு முதலியார் வசிக்கிறார். அவருக்கு இரண்டு பெண் குழந்தைகளுண்டு. அவர்கட்குப் படிப்புச் சொல்லிக் கொடுத்துக் கொண்டும், வீட்டு வேலையிலும் கிறிது சகாயம் செய்துகொண்டும் வருவாயானால், சாதம் போட்டு, மாசம் பதினைந்து ரூபாய் சம்பளம் தரும்படி செய்கிறேன். உனக்கு விருப்பமானதைச் சொல்!

கோகிலம் :—தங்கள் விருப்பத்தை நிறைவேற்ற இயலாதவளாயிருக்கிறேன். இதைவிட அதிகங் கூறவும் முடியாது.

குமாரசுவாமி :—சரி ; சரி. இப் பதிலைத்தான் நான் முன்பே எதிர் பார்த்தேன்.

ஷண்முகநாதன் :—அம்மா! உனக்கு வீட்டு வேலை செய்ய விருப்பம் இல்லையாயின், அவர்கள் வீட்டுக் குழந்தைகட்குப் படிப்பு மாத்திரம் சொல்லிக் கொடுக்கலாம். முதலியாரும் நிரம்ப கல்லவர்.

கோகிலம் :—வீட்டு வேலை செய்வதற்கென்றே பெண்கள் பிறந்திருக்கிறபோது, அதைச் செய்ய விரும்பாத பெண்ணையும் பெண் என்று கூறுதல் பொருந்துமா ?

ஷண்முகநாதன் :—அவ்விதமில்லையெனின், வேறு காரணமென்ன ?

கோகிலம் :—நான் சொல்லாமலே அதைத் தாங்கள் அறிந்து கொள்ளுவீர்களென்று எண்ணினேன். அவ்விதமின்றித் தாங்கள் கேட்பதாற் சொல்லுகிறேன் : இவ்வுல

கத்தில் உள்ள மாதர், மாந்தர் ஒவ்வொருவரும் எவ்வாறு அவரவர்களுடைய உருவங்களில் அதிகமாய் மாறுபட்டிருக்கிறார்களோ, அவ்வாறே குணத்திலும், தன்மையிலும் வேறுபட்டுள்ளார்க ளென்பது அநுபவமா யறிந்த உண்மை. பாப காரியங்கள் செய்வதிலேயே சிலர் நோக்கமுடையவர்களா யிருக்கிறார்கள்; சிலர், புண்ணியம் புரிவதில் விருப்ப முடையவர்களா யிருக்கிறார்கள்; சிலர், பணத்தைத் தேடுவதிலேயே முழு நோக்க முடையவர்களா யிருக்கிறார்கள்; சிலர், செலவழிப்பதையே பெருந் தொழிலாகக்கொண்டிருக்கிறார்கள்; சில பெண்கள், கற்பைக் காத்தலே விலையில்லா முழு மணியெனக் கருதுகின்றனர்; சில பெண்கள், விபசாரமே பேரின்பமெனக் கருதுகின்றனர்; சிலர், பணமும், அதனாலாய பயனும் அதிகமாகப் படைக்கப்பெற் றிருந்தாலும், அவ்வளவில் திருப்தியடையாமல் மேலும் மேலும் பணத்தைத் தேடுவதில் முயல்கின்றனர்! ஏனெனின், மனித ஜென்மத்திற்கே 'திருப்தி' என்பது கிடையாதன்றே? கந்தையுங் கஞ்சியும் பெற்றுத் திருப்தியுடையாராய் வாழ்வோர் ஆங்காங்கு ஒரு சிலருளர். ஆகவே, உலகம் பலவீதம் என்றேற்படுகிறது. நான் பிச்சை யெடுத்துண்பதில் கஷ்டப்படுகிறே னென் றெண்ணி, அதை நீக்கிவிடலாமென்னுங் கருத்துக் கொண்டு, என்னைத் தங்கள் வீட்டிற் கழைக்கிறீர்கள். அவ்வாறு கருதுதல் இயல்பேயாகும். அதை விரும்பக் கூடியவர் பலருண்டு. ஆனால், எனக்கு இறைவனால் தரப்படுகின்ற ஒருவகை யுணவையே இதுகாறும் மகிழ்ச்சியுடன் உண்டுவருகிறேன். இது வரையும் அதில் எனக்கு யாதொரு கஷ்டமும் உண்டாகவில்லை; இனியும் உண்டாகா தென்பது என்

நம்பிக்கை. அது பொய்யுரை தென்பது உறுதி. இருப்பதைக் கொண்டு திருப்தி யடைவதே என்னியல்பு. ஒருவிதமான ஆசையும் என் னுளத்தில் இல்லை. இவற்றை யெல்லாம் ஆய்ந்து பார்ப்பீர்களாயின் நான் சொன்னதன் உண்மை தெள்ளிதின் விளங்கும்.

ஷண்முகநாதன் :—அம்மா ! இனி யுன்னை வற்புறுத்துவதில் எனக்கு விருப்பமில்லை. உன்னைப் பார்த்ததும் எனக்கு உன்மீது ஒருவித நல்லெண்ணம் உண்டாகி விட்டபடியால், உனக்குண்டாகி யிருக்குங் கஷ்டத்தை நீக்கிச் சுகமுறச் செய்யலாம் என்றெண்ணி, என் மனதில் தோன்றியதைச் சொன்னேன். உனக்கு அதில் உடன்பாடில்லையானால், நான் யாது கூற வியலும் ! அன்றியும், உன்னுடைய வரலாற்றை மாத்திரம் சிறிது கூறுவாயானால், அதுவாவது எங்கள் மனதிற்குச் சிறிது சாந்தமாக விருக்கும்.

கோகிலம் :—நீங்கள் இவ்வளவு தூரஞ் சொல்வதால், என் வரலாற்றைச் சுருக்கிக் கூறுகிறேன் : இளங்காட்டூர் ஜமீன் என்பது தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ளது. அதற்கு இப்பொழுது கிருஷ்ண தேவரும், அவருடைய சகோதரர் பொன்னுசாமித் தேவரும் உரியவர்களாக விருக்கிறார்கள். அவர்கட்கு நான் முறைக்கு அத்தை மகளாவேன். என் தாய் தந்தையர் இறந்து நெடு நாட்களாயின. ஜமீன்தார்களான இருவரும் இச் சென்னைக்கு வந்து பத்து ஆண்டுகளாயின. என் னுடைய பாட்டியும் அவர்களுடனேயே வசித்து வருகிறாள். ஆதலின், அவளைப் பார்க்கும்பொருட்டு நான், என்னுடைய சொந்த ஊராகிய கிருத்தணிகையி லிருந்து நேற்று மாலையில் வந்தேன். ஜமீன்தார் கிருஷ்ண தேவர், என்னைப் பார்த்தவுடன் மையல்

கொண்டு காமப் பேய் பிடித்து ஆடத் தொடங்கினர். இன்று இரவு பத்துமணி யிருக்கலாம். என்னைத் தனிமையிற் கண்டு, பலாத்காரம் செய்ய ஆரம்பிக்கையில் நான் தெய்வச் செயலால் தப்பி, அங்குள்ள வேலைக்காரியின் உதவியால் புறப்பட்டு வரும் வழியிலேயே அக் கள்வன் என்னைப் பின் தொடர்ந்தான். பிறகு நடந்தது நீங்கள் அறிந்ததே—என்றாள்.

இதற்குள் மின்சார வண்டி சுகுண விலாசத்தின் முன் வந்து நின்றது. யாவரும் வண்டியை விட்டுக் கீழே யிறங்கினர். ஷண்முகநாதன், வேலைக்காரியை அழைத்துக் கோகிலத்திற்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கும்படி ஏற்பாடு செய்தான். பிறகு, குமாரசுவாமியைப் பார்த்து "டே! உருப்படி எப்படி?" என்று கேட்டான்.

குமாரசுவாமி :—அதைப்பற்றிக் கேட்கவும் வேண்டுமா? மேலும் கன்றாகப் படித்தவள் போலவுங் காணப்படுகிறாள். அழகோ, ஒன்றுங் கூற வேண்டியதில்லை. பழம் நழுவிப் பாலில் விழுந்து, அது நழுவித் தங்கள் வாயில் விழுந்தது போலிருக்கிறது. இப்பெண் நமது கையில் அகப்பட்டது, எத்தனையோ லக்ஷம் பொன் கிடைத்த மாதிரியாகும். இப்பெண், உங்கள் நண்பர் பொன்னுசாமித் தேவருக்குச் சொந்தக்காரப் பெண்ணாமே; வெளிக்குத் தெரிந்தால் என்ன வாகுமோ!

ஷண்முகநாதன் :—அதற்கென்ன? நீ பெரும் பைத்தியக்காரன். எல்லாம் தூட்டைக் கொடுத்துச் சரிபண்ணி விடுவோம்—என்றான்.

நமது ஷண்முகநாதன், கோகிலத்தைக் கண்டது முதல் காமவெறி பிடித்து, தேன் குடித்த நரி போலத் தடுமாறினான். காரணம்: மின்னை தருவெடுத்து, மேக

மெனுங் குழல் மூடித்து, பொன்னூட்டிலிருந் திங்கண் போந் ததுபோல் அழகே யுருவாய் விளங்கும் கோகிலத்தின் இனிய மொழியும், உயர்ந்த கல்வியுமேயாம். மக்களின் மனதைக் கவர்வதும், அவர்கட்கு இன்பத்தை யளிப்பதும் அழகேயன்றே? அழகில் ஈடுபடாதவர் யார்? இறைவனே அழகில் மயங்கினர் என்பதற்கு, திருமால் எடுத்தருளிய மோகினி அவதாரமொன்றே சான்றாகும். விசுவாமித்திர முனிவரின் தவத்தைக் கெடுத்தது மேனகையின் அழகன்றே? என்னே அழகின் இயல்பு! என்னே அழகின் சிறப்பு! என்னே அழகின் அருமை! அழகு இன்றேல், இவ்வுலகம் என்னவாகும்? மக்கள்தாம் என்னுவார்? அவர் தம் சிறந்த வாழ்வும், நிறைந்த செல்வமும் என்னாகும்? ஆனால், மக்கள் அழகை, அழகின்பொருட்டு மாத்திரம் விரும்புவார்களாயின், அது போற்றத்தக்கதாகும்.

* * * *

கலவியிற் கனைத்துக் கருத்தழிந்த காரிகையாரின் தடுமாறிய இன்மொழியாகிய தண் மொழியினும் மேன்மையான ஓசையுடன் வீசிய தென்றற்காற்றின் இசைவாலிண்டொரு மரங்கள் தலையை அசைத்து, தன் தண்ணமிர்தத்தைக் கைம்மாறு கருதாது உலகத்தாருக்குப் பொழிய வேண்டி, விண் மீன் சூழத் தண்ணொளி பரப்பும் அழகிய முழு மதியினை, வரவேற்பதுபோல்--ஆடியதாலுண்டான ஓசையினைத் தவிர, வேறு எவ்வகையான ஓசையுங் கேட்கவில்லை. நீல வானத்தின் நடுவண் சந்திரன், பாங்கியர் புடைசூழ நடுவிற் சென்று, ஒரு பொழிலின் எழிலினை வியந்து நிற்கும் அழகிற் சிறந்த கலைமகள்போன்று, களங்கமின்றி, அரிய பெரிய ஒரு நூலினிடத்து அமைந்து கிடைக்கும் ஆழ்ந்த கருத்துக்களை நூலாராய்ச்சியில் விருப்பமுடைய அறிவாளனொருவன், தன் அறிவை ஒரு முகப்

படுத்தி, அறிந்து மகிழ்வது போன்று—உலகின் போற்புதங் களையும், அழகினையும் ஆழ்ந்து அறிபவனை யொப்ப அமைதி யோடு—பிரகாசித்துக் கொண்டிருந்தான். ஷண்முகநாத னுடைய மாளிகையில் எங்கும் அமைதியே நிறைந்திருந் தது. பின் பக்கமுள்ள தடாகத்தில் கிடந்த வெண் கற் களும், கரு மணல்களும், மற்ற பொருள்களும், கரையில் நின்று நோக்குவோர் கண்கட்குத் தெளிவாய் விளங்கினமை, எங்ஙனம் இலங்கியதெனின்—அழகிற் சிறந்த பெண் ணொருத்தி, தன் மேகலையைக் களைந்துவிட்டு இயற்கை நலங் கனிந்த தன் அழகிய சரீரத்தின் அமைதியை விண் மீதிருந்து வெண்ணிலவு பரப்பும் தண்மதி பார்த்து வியக்கு மாறு மேன்மாடியின்கண் உள்ள முற்றத்தில் ஒரு மஞ்சத்திற் படுத்து ஆழ்ந்த நித்திரை செய்வதை ஒத்திருந்தன. ஷண் முகநாதன், தன் வேலைக்காரியை அழைத்து, கோகிலத் தைப் பளிங்கு மண்டபத்திற்குத் தந்திரமாகக் கூட்டிக் கொண்டு வரும்படி சொல்லிவிட்டு, முன்னிலையே சென்று, அவள் வரவை எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். அப் பொழுது மணி பத்திருக்கலாம். வேலைக்காரி, கோகிலத்தி னறையினுட் புகுந்தாள்.

ஐந்தாவது அதிகாரம்.

இளங்காட்டூர் ஜமீன்தார் இயல்பு.

இளங்காட்டூர் என்பது பழமையான ஜமீன். இப் பொழுது இது தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந் துள்ளது. இளங்காட்டூர் ஜமீனை ஆண்டுவந்த இராஜ வம் சத்தில், இக்கதை நிகழுங்காலத்துக்கு முன்னிருந்தவர் பாண்டியதேவர் என்பவர். அவர், யாதொரு சந்தேயு

மில்லாமலிறந்துபோகவே, அவருடைய அடுத்த சகோதரரும், நமது சகோதரரின் நண்பர் பொன்னுசாமித் தேவரின் தமையனுருமாகிய கிருஷ்ணதேவர் அச்சமீனயாண்டு வந்தார். அவர் இரக்கம் சிறிது மில்லா வன்னெஞ்சர். உணவு விஷயத்தில் மாத்திரம் பெரும்பொருள் செலவிட்டு வசதியாக வைத்துக்கொள்வார். அவர், தமது ஜமீன் விஷயத்தைக் கவனிக்கவேண்டிய திருந்தாகையால், தமது உடலை ஊட்டி வளர்க்காவிடின், பலரைப் பாதுகாப்பதான பரோபகார விஷயம் நடைபெறுதென்னுங் கொள்கையைக் கொண்ட உத்தமர். மூர்க்கம், கோபம், உலோபம் முதலிய குணங்கள் யாவும் அவரிடம் குடிகொண்டிருக்கின்றன வென்று கூறலாம். அந்த ஊரில் கோபால் முதலியார் என்றொருவருளர். அவர் பெரும் பணக்காரர். சின்னட்சுட்டு முன், நமது கிருஷ்ண தேவருக்கும், அவருக்கும் வைக்கோற்போரில் மாடு மேய்ந்த விஷயமாய்க் கலகம் முதலியவை கடந்து, கிரிமினல் விவகாரமாய், அது லிவில் சம்பந்தமானது என்று தள்ளப்பட்டு, மறுபடியும் லிவில் வழியாய், மூன்று கோர்ட்டுவரை சென்று, இறுதியாய்ச் சட்ட அம்சம் இடங்கொடாததால், சென்னை உயர்தர மன்றத்தாரவர்களாலும் அங்கீகரிக்கப்படாமல் போயிற்று. அந்தரங்க சபைக்கு (Privy Council)ப் போகத் தக்கதில்லை யென்று சில தக்க வழக்கறிஞர் சொன்னபடியால், அது சிரமசாத்தியமாய்த் தீர்ந்தது. இவ்வழக்கில் இருதரத்தார்க்கும் நாற்பது இலக்ஷ ரூபாய்வரை செலவாகிவிட்டது. இதனால், ஜமீன் கடனில் மூழ்கிக்கிடந்தது. இதன் பிறகு, கிருஷ்ணதேவர் தமது சகோதரருடன் சென்னையில் வசித்து வரலானார். பொன்னுசாமித் தேவர், கலியாணசுந்தரம் கல்லூரியிற் படிக்கும்போது, நமது ஷண்முகநாதனுக்கு நண்பரானார். அவருடைய தொழில்,

சிறிது செல்வமுடையவர்களை மயக்கிப் பணம் பறிப்பதில் நடந்துகொண்டிருந்தது. அவர், கண்ணியமும், கௌரவமும் பொருந்திய உயர்ந்த குலத்திற் பிறந்தவராயினும், ஆங்கில கலாசாலையிற் படித்துத் தேர்ந்தவராயினும், சகவாச தோஷத்தாலும், பணங் குவிப்பதில் எற்பட்ட பேராசையாலும், கெட்ட காலத்தின் பலனுலும், வினைப் பயனின் வலியாலும் அவருடைய குணத்திலும், நடத்தையிலும் சில மாறுதல்கள் ஏற்பட்டன. கள்வர்களையும், கொலைத் தொழில் புரிவோரையும் நல்லவர்களென்று சொல்லும்படியான விதமாய் அவருடைய நடத்தை யிருந்தது. லஞ்சனை, பொறுமை, கபடம், களவு, காமமாகிய பல தீக்குணங்கள் அவருக்கு அமைச்சரைப்போல இருந்தன. இப்படிப்பட்ட இழி குணங்களுடைய சாமானிய மனிதர்களால் உலகத்தாருக்கு நேரிடும் இன்னல்களை சகிக்க முடியாத இயல்புடையன வென்றும், அவற்றோடு போதுமான கல்வியறிவும் வாய்க்கப் பெற்றவர்களால் ஜன சமூகத்துக்கு நேரிடும் தீங்குகளைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா? கல்வி, கபடம், தீயகுணவு ஆகிய மூன்றும் ஒருவனிடம் சேர்ந்திருந்தால், அவனால் ஜனங்கள் மிகுதியும் துன்பப்படுவார்கள் என்பதில் ஐயம் உளதோ? பொன்னுசாமித் தேவர், தமது வஞ்சகவலையை விரித்துக் கபடு, சூது, அறியாத நல்லார் பலரை அதிற் சிக்கும்படி செய்து, அவர்கட்குப் பெருந்துக்கத்தை விளைவித்து வந்தாராயினும், அவர்மட்டும் மகிழ்ச்சியாகவே வாழ்ந்துவந்தார்.

கிருஷ்ணதேவர், ஒருநாட் காலையில் உறக்கம் நீங்கி எழுந்து உட்கார்ந்த வண்ணம், தனது கண்களை மூடிக் கொண்டு சிறிது நேரம் ஆடி விழுந்தார். சில விநாடிக்குள் அவரது கண்கள் மறுபடியுந் திறந்துகொண்டன. அவர், நாற்புறமுந் திரும்பிப் பார்த்து, எதோ பேசுதற்கு விருப்

பங் கொண்டவர்போற் காணப்பட்டார். ஆனால், அவர் மிகுந்த சோம்பலினால் தனது வாயைத் திறந்து பேசுதற்கு மனமற்றவராய் மௌனமா யிருந்தார். அவரது மனதில் பொங்கியெழுந்த கோபத்தினால் அவரது கண்கள் சிவந் திருந்தன. அவர், நாற்புறத்திலும் திரும்பித் திரும்பிப் பார்த்து உருட்டி விழித்தார். அப்போது, மெதுவாகக் கதவைத் திறந்துகொண்டு, அம்மையப்பன் என்ற வேலைக் காரன் புகையப் புகைய விருந்த காபியை வெள்ளிக் கூஜா வில் எடுத்துக்கொண்டு உள்ளே நுழைந்தான். அவ்வாறு வந்தவனைக்கண்ட கிருஷ்ணதேவர், நாகப்பாம்பு போலச் சீறித் தனது பற்களை 'நறநற' என்று கடித்து, "அட, கிழட்டுப் பயலே! இந்நேரம் என்ன செய்துகொண்டிருந் தாய்?" என்று கர்ஜித்தார். கிழவன், நடுங்கி எவ்வித மறுமொழியுங் கூறாமல் அவருக்கருகில் நெருங்கி வந் தான். முன்னிலும் மிகுதிப்பட்ட கோபங்கொண்ட கிருஷ்ணதேவர் "கிழட்டுப் பிணமே! நான் எழுந்த வுடன் காபி (Bed Coffee) சாப்பிடா விட்டால், உடம் பின் சோம்பல் நீங்காமாட்டா தென்று எத்தனைதரம் உனக்குச் சொல்லி யழுகிறது? நான் எழுந்திருக்கு முன் காபியைக் கொண்டுவந்து தயாராக வைத்திருக்க வேண்டுமென்று எவ்வளவு நாள்தான் சொல்லலாம்? கிழட்டு மூளையில் ஏறவில்லையா?" என்று அதட்டினர். கிழவன், உடம்பு 'கிடு கிடு' என்று ஆடியவண்ணம் "இல்லை; இன்று வழக்கத்திற்கு முன் எழுந்துவிட்டீர்கள். நான் உடனே காபி கொண்டுவந்தேன்" என்று பணிவாகக் கூறினான். கிருஷ்ணதேவருக்கு உடனே கோபம் பொங்கி யெழுந்தது. "உம்! எதிர்த்துப் பேசக்கூடத் துணிந்து விட்டாயோ? உனக்கு அவ்வளவு திமிரா?" என்று சொல்லி எழுந்து, கிழவனுடைய கையிலிருந்த கூஜாவை

வெடுக்கென்று பிடுங்கி, அதற்குள்ளிருந்த காபி முழுவதையும் அம்மையப்பனுடைய தலையின்மீது கவிழ்த்து அபிஷேகம் செய்துவிட்டு, ஆத்திரத்தோடு அவனது கழுத்தைப் பிடித்துத் தள்ளினார். அம்மையப்பன் எட்டுக் குட்டிக்கரணம் போட்டுக்கொண்டு, உருண்டு வாயிற்படிக்கு வெளியே வீழ்ந்தான். அவனுக்கு வயது எழுபதுக்குமேலிருக்கும். அந்தோ! காபியின் சூடாலும், விழுந்ததாலுண்டான அடியின் வலியாலும் பொறுமிய வண்ணம் பெரு மூச்சு விட்டுக்கொண்டு விழுந்த இடத்திலேயே கிடந்தான். அடுத்த அறையிலிருந்த பொன்னுசாமித் தேவர், தடாலென்று விழுந்த சப்தத்தைக் கேட்டுக் திடுக்கிட்டெழுந்தார். பிறகு, விரைவாகத் தமையனுடைய அறைக்குட் புகுந்தபோது, அவர் சமாரியாய்த் திட்டிக் கொண்டிருந்ததையும், கிழவன் விழுந்து கிடந்ததையுங் கண்டு, "அண்ணே! இந்த நாயை ஏன் வேலைக்கு வைத்துக் கொண்டிருக்கவேண்டும்? நம்முடைய விருப்பப்படி நடக்காத முட்டாள் நமக்கெதற்கு? நீங்கள் ஒரு வார்த்தை சொல்லுங்கள். நானேயே வேறு ஆள்கொண்டு வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டே கிருஷ்ணதேவரிடம் நெருங்கி வந்தார். அவர் தமது தமயனிடம் நெருங்கிச் சென்றவுடன் அவர், அம்மையப்பன் செய்த பிழையைத் தெரிவித்த அளவில் அவருக்கும் கிழவன்மீது கடுங்கோபம் உண்டாயிற்று. உடனே கிழவனுடைய இரண்டு கால்களையும் பிடித்து பரபரவென்று வாயிற்படியின்மீதும், மேடு பள்ளங்களிலும் போட்டு இழுத்துக்கொண்டே சமையலறையில் அவனைப் போட்டுவிட்டுத் தானே முயன்று வேறு காபி தயாரித்து எடுத்துக்கொண்டு அண்ணனிடம் வந்து சேர்ந்தார். அவர்—கிருஷ்ணதேவர் பருகியவுடன் இருவரும் அமர்ந்து பேசத் தொடங்கினர்:-

கிருஷ்ண தேவர் :—தம்பி! நேற்றுப் போய்வந்த சங்கதி யென்ன?

பொ. தேவர் :—அண்ணமலை செட்டி, சோமநாதன் செட்டி என்ற இருவரிடமும் போய் வந்தேன். அவர்களிரு வரும் ஒரே மாதிரியாகப் பேசுகிறார்கள். ஒருவரா வது நம்பக்கம் பேசவே யில்லை.

கிருஷ்ண தேவர் :—முடிவாக என்னதான் சொன்னார்கள்?

பொ. தேவர் :—நம்முடைய கடன்களை யெல்லாம் மொத்தம் போட்டுப் பார்த்ததில், மொத்தம் இருபத்தைந்து லக்ஷம் ஆகிறது. வட்டி வேறிருக்கிறது. நம்முடைய ஜமீன் பதினைந்து லக்ஷம்தான் பெறுமாம். நம்முடைய காலம் இப்படியாகிவிட்டது!

கிருஷ்ண தேவர் :—பலே! செட்டிகள் மிகுந்த சமர்த்தர் கள். நம்முடைய ஜமீனை விட்டுவிட்டு ஓடு எடுத்துக் கொண்டு போகச் சொல்லுகிறார்களோ? காரியம் நன்று யிருக்கிறது!

பொ. தேவர் :—அண்ணே! ஜமீனை விற்கவேண்டாம். ஜமீன் போய்விட்டால் நமக்கென்ன மதிப்பிருக்கிறது? கடன் கொடுத்த கழுதைகள் வழக்குத் தொடர்ந்து வாங்கிக் கொள்ளட்டுமே!

கிருஷ்ண தேவர் :—நம்முடைய ஜமீனை விலைக்கு வாங்கிக் கொள்ளக் கூடிய—அவ்வளவு பெருஞ் செல்வர்கள் இரண்டொருவர் தவிர, பல ரில்லாதபடியால்தான அவர்கள் சொல்வதே நிர்மானமா யிருக்கின்றது. என் செய்யலாம்!

பொ. தேவர் :—எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு நாம் போய்விட வேண்டுவதுதான் போலும்!

கிருஷ்ண தேவர் :—தம்பி! எங்கே போவது?

போ. தேவர் :—இந்தக் கடனெல்லாம் போக, அவர்கள் நமக்குத் தாசூண்யமாக இருபதினாயிரம் ரூபாய் தருவார்களாம். நாம் அதை வாங்கிக்கொண்டு, நம் மூடைய கிராமங்கள், வீடுகள் யாவற்றையும் கொடுத்துவிட வேண்டுமாம்.

கிருஷ்ண தேவர் :—தம்பி! நம்முடைய கெட்ட காலம்! நமக்கு அவர்கள் தருவதாகச் சொல்லும் இருபதினாயிரம் ரூபாய் பத்து நாட் செலவுக்குக் கூட போதாதே! சரி; கடன்காரர்கள் வழக்குத் தொடர்ந்து பணம் வாங்கிக்கொள்ளட்டும்—

என்று கூறிவிட்டுப் படுக்கையிற் சாய்ந்தவண்ணம் ஆழ்ந்த யோஜனையி லிருந்தார். அதே சமயத்தில், இளங் காட்டூர் ஜமீனி லிருந்துவந்த அவர்களுடைய காரியஸ்தர் பாஷ்யமையங்கார் வந்திருப்பதாக வேலைக்காரன் கூறினன். உடனே அவரை அழைத்து வரும்படி கிருஷ்ண தேவர் கட்டளையிட்டார். பாஷ்யமையங்கார் வந்து அமர்ந்த வுடன், கிருஷ்ண தேவரை நோக்கி "எஜமானரிடம் ஒரு முக்கியமான சங்கதி சொல்லவேண்டிய திருக்கிறதென்று வருந்துகிறேன். அதைச் சொல்லும்படி உத்தரவாகிறதா?" என்று கூறினர்.

கிருஷ்ண தேவர் :—சும்மா சொல்லும்!

பாஷ்யமையங்கார் :—நம்முடைய ஜமீனிலிருந்து கொடுக்க வேண்டிய கடன்கட்காக நேற்று ஜப்தி வந்து எல்லா வற்றையும் அடைத்து முத்திரை (Seal) வைத்து விட்டார்கள். இச்சங்கதியைத் தங்களிடம் சொல்ல வேண்டுமென்றே விரைவாகப் புறப்பட்டு வந்தேன்.

கிருஷ்ண தேவர் :—அடடா! என்ன கெட்ட காலம்! இவ் வளவு அவசரமாகவா கடன்காரர்கள் வழக்குத் தொடர வேண்டும்?

போ. தேவர் :—வழக்குத் தொடர்ந்தால் தான் என்ன ? முடிவாவதற்கு ஆறு மாதங்களாவது செல்லும் ; அதுதான் உலக வழக்கம். இப்போது, இவர்கள் பிரியாது கொடுத்த வுடனே நம்முடைய சொத்துக்களை யெல்லாம் ஜப்தி செய்துவிட்டார்களே !

கிருஷ்ண தேவர் :— அப்படிச் செய்யக் காரணமென்ன ?

போ. தேவர் :—வழக்கு முடிவடைவதற்குள் நாம் நம்மிட மிருக்கும் சொத்துக்களை எங்கேயாவது ஒளித்து விடுவோ மென்ற எண்ணத்தினாலேயோ, அன்றி, நம்மிடமிருக்கும் சொத்துக்கள் நம்முடைய முழுக் கடனையும் தீர்ப்பதற்குப் போதாதென்று எண் ணினோ, இவர்கள் இவ்விதம் உத்தரவு வாங்கி யிருக் கிறார்கள்.

கிருஷ்ண தேவர் :—அட, பாபமே ! நம்முடைய இந்தப் பங்களாவும் பட்டுக் கடையுந் தவிர, மற்றப் பொருள் கள் எல்லாவற்றையும் கொண்டு போய்விட்டார்களே! நாம் இனி யென் செய்வது ! இந்தப் பயல் கோபால் முதலியா லல்லவா இவ்வளவு துன்பம் நேர்ந்தது ? நம்முடைய பணம் போய்விட்டாலும் மதிப்புக்கூட நீங்கி விடுமா ? ‘ கடுகு சிறுத்தாலும் காரம் போகாது ’ என்பார்கள். இவனை நாம் எளிதில் விடக்கூடாது. அவன் எங்கிருக்கிறா னென்று விசாரித்தாயா ?

போ. தேவர் :—அதைத் தான் நேற்றே சொன்னேனே ? அவன், மூன்று மாதமாய் மவுண்ட்ரோட்டில் ஒரு தீக்குச்சித் தொழிற்சாலை வைத்து நடத்தி வருகிறான். அது போகட்டும். இனி நம்முடைய செலவுக்கு வேண்டிய பணத்திற்கு என்ன செய்வது ?

கிருஷ்ண தேவர் :—நம்முடைய கிராமங்களில் குடிகளிடம் வரவேண்டிய வரிகளை வசூல்செய்து கொள்ளுகிறது.

போ. தேவர் :—அதுதான் முடியாது. வழக்கு முடிகிற வரையில் ஒரு செப்புக் காசுகூட நம்மிடம் தரமாட்டார்கள்.

கிருஷ்ண தேவர் :—அப்படியானால், பிழைக்கும் வழிதான் என்ன ?

போ. தேவர் :—நீங்கள் என்னைக் கலியாண சுந்தரம் கல்லூரியில் முழுதும் படித்து முடிக்கவிட்டிருந்தால், அதைக் கொண்டாவது ஒரு தொழில் செய்யலாம். பணக்காரருடைய கதியெல்லாம் இப்படித்தான் முடியும். பணம் இருக்கும் வரையில் அவர்கட்கொன்றும் பயமில்லை. பணம் போய்விட்டால், அவர்கள் ஒன்றுக்கும் உதவாத நடைப்பிணங்களே யாவர். கல்விச் செல்வமிருந்தால், அதை யிப்படி அபகரிக்க முடியுமா ? இப்பொழுது நல்ல காலமாய் ஷண்முக நாதன் செட்டியார் என்னுடைய வலையில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறார். எவ்வளவு சமயம் பார்த்துத் தட்டிவிட வேண்டியதுதான் ! சிறிய தொகை கடனைக் கேட்டால், கொடுக்க மறுக்க மாட்டார். அதை முதலாக வைத்துக்கொண்டு ஒரு வியாபாரம் செய்யலாகாதா ?

கிருஷ்ண தேவர் :—இவ்வளவு பெரிய ஜமீன் அரசாண்ட நாம் வியாபாரம் செய்வது எவ்வளவு பெரிய அவமானம் ! என்னமோ ! பார்ப்போம் ; கடவுள் விட்ட வழி விடட்டும் !

—என்று கூறிவிட்டு ஆயாசத்துடன் படுக்கையிற் சாய்ந்து கொண்டார். அவருடைய மனதில் பலவிதமான துன்பங்கள் தோன்றி வதைக்கலாயின. 'எராளமான செல்வத்தின் மத்தியிலிருந்து பெரும்போகம் நல்ல வகையி

லேயோ—தீய வகையிலேயோ—அநுபவித்து வந்த நாம், இனி எந்த வகையில் பணந்தேடி, எஞ்சிய காலத்தையுங் கழிப்பது' என்ற எண்ணம் உண்டாகி அவனை நிலைகுலையச் செய்தது. இவ்விதம் சிந்தனை கொண்டிருந்த அவர், ஏதோ நினைத்துக் கொண்டவராய் விரைவில் எழுந்து, குளித்துச் சிறிது ஆகாரம் உட்கொண்டு, கால் நடையால் புரசைப்பாக்கத்தை நோக்கிச் செல்லலானார். எதிரே வந்த அவருடைய நண்பர் வரதராஜலு நாயுடு, இவருடைய நிலையையும், அவசரமாய்ப் போவதையுங் கண்டு, "என்ன, ஜமீன்தாரவாள்! வண்டிகூட இல்லாமல் அவசரமாய்ப் போகிறீர்களே! எங்கே? இன்று திருவொற்றியூரில் உத்ஸவமாமே; நீங்கள் வருகின்றீர்களா? என்றார்.

கிருஷ்ண தேவர்:—நீங்கள் போங்கள். பின்னால் வருகிறேன்.

வரதராஜலு நாயுடு:—தனித்தேனா, சோடுடனே?

கிருஷ்ண தேவர்:—எனக்குத் துணை சோடுதானே?

வரதராஜலு நாயுடு:—இல்லை; ஒன்றியாகவோ, அல்லது அம்பாள் சகிதமாகவோ என்று கேட்டேன்.

கிருஷ்ண தேவர்:—எப்படிப் போனால் நலம்? போமய்யா! இந்த விசாரணை யிப்போது எதற்காக? அவற்றையெல்லாம் பிறகு பேசிக்கொள்வோம்.

வரதராஜலு நாயுடு:—நண்பரே! நான் என் உங்களுடைய வழியிற் குறுக்கே நிற்கவேண்டும்? நான் போகிறேன்; அம்பாள் சமேதராக எழுந்தருளினால், புண்ணியம் மிகுதிப்படுமென்று தான் சொல்லுகிறேன்.

கிருஷ்ண தேவர்:—அதனால் நலந்தானே?

வரதராஜலு நாயுடு:—ஆமாம்; கூடி அதிகமானால் குளிர்ச்சியாக மாறிவிடுமென்கிறார்களே; அதுபோலப் புண்

ணியம் அதிகமாகிப் பாவமாக மாறிவிட்டால் என் செய்வது? போகட்டும். இப்போது எங்கே அவசர மாய்ப் போகிறீர்கள்?

கிருஷ்ண தேவர் :—அவசரமொன்று மில்லை. ஒரு காரிய மாய்ப் போகிறேன்.

வரதராஜலு நாயுடு :—சரி; சரி! போகுமிடம் தெரிந்துவிட் டது.

கிருஷ்ண தேவர் :—உமக்குப் புண்ணியம் உண்டு. தயை செய்து நான் தாசி சரோஜனிபாய் வீட்டிற்குப் போய் விட்டதாக ஒருவரிடமும் சொல்ல வேண்டாம்.

வரதராஜலு நாயுடு :—எனக்கு இதுதான் வேலையா? நானுகப் போய் ஒருவரிடமும் சொல்லவில்லை. யாரா வது கேட்டாலும், 'கிருஷ்ண தேவர் தாசி சரோஜனி பாய் வீட்டில் இல்லை' என்று சொல்லி விடுகிறேன். இது சரிதானே?

கிருஷ்ணதேவர் :—நீர் அதிகக் கெட்டிக்காரர். போய் வாரும். உமது புத்தி நன்றாக வளர்ச்சி யடைந்திருக் கிறது.

வரதராஜலு நாயுடு :—எனக்குப் புத்தி மட்டானதால்தான் நான் கட்டின பெண்டாட்டியோடு திண்டாடி வேறு பெண்டாட்டி யில்லாமல் கஷ்டப்படுகிறேன். என் புத்தியைவிட உமது புத்தி இட்டிப்பாக விருக்கிற படியாலேயே உமக்கு இரண்டு பெண்டு கிடைத்தது. கட்டினது ஒன்று! கட்டாதது ஒன்று! ஒருவனுக் குப் புத்தி வளர வளர, பெண்டும் வளர்ந்துகொண்டே போகும்போலும்! கடவுள்தான் எனக்குப் புத்தி வளராமலிருக்க அருள்புரிய வேண்டும்! சரி; போய் வாருங்கள் என்று கூறித் தன்வழியே சென்றார்.

இதன் பிறகு, கிருஷ்ணதேவர் நேராகத் தாசி சரோசனிபாய் வீட்டிற்குச் சென்றார். நமது கிருஷ்ணதேவருக்கும், சரோசனிபாய்க்கும் நெடு நாட்களாக நட்புண்டு. சரோசனிபாயோ வெளிப்பார்வைக்கு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு முதலிய உத்தம குணங்களே வடிவெடுத்துக் கொண்டு, அந்தரங்கத்தில் ஒரே சமயத்தில் ஒரே புருஷனோடு பேசி அவனது மனங்கோணுமல் நடந்துகொள்ளுவாள். நமது கிருஷ்ணதேவர், அவள்மீது அளவற்ற பிரேமை கொண்டிருந்தாராகையால், வேறு ஆண் வாடை வீசக்கூடாதென்று கருதி, அவளை ஊருக்கு வெளியே ஒரு தனி மாளிகையில் இரகசியமாக வைத்திருந்தார். சரோஜனிபாய், கிருஷ்ணதேவர் தன்மீது சந்தேகங் கொள்ளாதிருக்கும் பொருட்டு வெளிவேஷம் போட்டு அவரது பெருஞ் செல்வத்தையெல்லாம் அட்டைபோல் உரிஞ்சிக் கொண்டு வந்தாள். ஜமீன்தார், தமக்கு எவ்வளவு கடன் தலைக்குமேல் இருந்தாலும், அவளுக்கு எந்த வகையிலேயோ சரிபண்ணிக் கொடுப்பதில் பின்வாங்க வில்லை. அவ்வாறு பெருத்த பணக்குவியலைக் காணக் காண, ஆசை பேராசையும், பெரும் பித்தமும் அவளது தலைக்கேறி, அவள்—இரவும், பகலும் 'பணம் பணம்' என்று பணப் பேய் கொண்டலைந்து, ஒவ்வொருநாளும் எண்ணிறந்த ஆடு தன் ராஜாக்களின் தலைகளை கூவரம் செய்துகொண்டு வந்தாள். அவள் சென்னைக்கு வந்து ஒரு வருடத்திற்குள்ளாக ஏறக்குறைய ஆயிரம் சீமான்களின் நட்பு ஏற்பட்டுவிட்டது. ஒவ்வொரு வேளையிலும் ஒவ்வொரு சீமான் அவளது தரிசனத்திற்காக வந்து காத்திருந்து, பாத காணிக்கைகள் சமர்ப்பித்து, அவளது நிறைந்த அருளுக்குப் பாத்திரமாவார்கள். ஆனால், அவள் அவர்களைக் கொண்டு தனக்குத் தபால் வழியாக ஒவ்வொருநாளும் பல கடிதங்கள்

எழுதச் செய்வாள். எப்படியெனில், கடிதம் எழுதுவோர் வேறொரு ஜமீன்தார் பெயரையெழுதி, அவர் அவளிடம் மையல்கொண் டிருப்பதாகவும், அவள் தமக்கு ஆசைநாயகியாக இருக்கச் சம்மதித்தால், தமது சமஸ்தானத்தை அவள் பெயருக்கு எழுதி வைத்துவிடுவதாயும், வேறு பல வகையாகவும் எழுதியனுப்பச் செய்வாள். அவளும், நமது ஜமீன்தாரும் ஒன்றாக விருக்கையில், தபாற்காரனைக் கடிதங் கொண்டுவந்து கொடுக்கும்படி ஏற்பாடு செய்திருப்பாள். அவள், அவைகளை வாங்கி, ஜமீன்தாருக் கெதிரில் பிரித்துப் படிப்பாள்; உடனே கோபங் கொண்டவளைப்போல கடித்து, அவைகளைத் தனது காலடியிற்போட்டு உதைத்து மிதித்து, அவற்றின்மீது எச்சிலை யுமிழ்ந்து, அவைகளையும், உடைக்கப்படாத கடிதங்களையும் சேர்த்து, நெருப்பிற் போட்டுத், தான் ஜமீன்தாரிடம் மாத்திரம் காதல் கொண் டிருப்பதாய்ப் பாவனை செய்வாள். இவ்வாறு அவள் நிரம் பவும் தந்திரமாக நடந்துகொண்டு, எந்த ஆடவனிடத்தி லும் பக்ஷபாதமாக நடவாமல், எல்லாரையும் சமமாக மகிழ்ச்சியடையச் செய்து, யாவரிடத்திலும் பெரும் பொருள் கொள்ளையடித்து வந்தாள். நமது ஜமீன்தாரோ, அந்த மங்கைநல்லாள் கற்பரசி யென்றும், அவள் அந்தப் பிறவியில் தீண்டும் பாக்கியம் பெற்றவன் தான் ஒருவனே யென்றும் நினைத்து, அளவளாவி, ஆசைக் கூத்தாடி, அவளை உச்சிமோந்து, அடிவருடி "பொன்னே! தேனே!! மணியே!!!" என்று போற்றி, உள்ளங்கால் வரையில் வைரங்களால் அலங்கரித்து, கண்ணங்களைத் தடவி, தம் முடைய பொருளெல்லாம் அவளுடைய பாதாம்புயத்திற் சமர்ப்பித்து, தெண்டனிட்டு, எழுந்து நின்று, 'ஹர ஹர' என்று பயத்தோடு உண்மைப் பக்தனைக ஒழுகிவந்தார். ஜமீன்தாருக்குள்ள பல வேலைத் தொந்தரவால், அடிக்கடி

அங்கு வருவதில்லை; ஆயினும், இவர் வந்துபோன பிறகு, சரோஜனிபாய் தன்னுடைய பதிவிரதா வேஷத்தைக் கலைத்துத் தனது உண்மை வடிவத்தோடு சுயராஜ்ய பரிபாலனஞ் செய்யத் தொடங்குவாள். அதன் பிறகு, அந்த இராணியைக் காணும் பொருட்டுப் பல போலி ராஜாக்கள், கப்பம், காணிக்கை முதலிய சிறப்புக்களோடு வருவார்கள். விலாச மெழுதப்பட்ட துண்டுக் (Visiting Cards) கடிதங்கள் பல வேலைக்காரன் மூலம் அனுப்பப்படும். அந்த அம்மாள், ஒவ்வொருவருக்கும் மனிக்கணக்கிற் பேட்டி கொடுப்பாள். ஆனால், அவள் ஒருவரோடு பேசுஞ் சங்கதியை மற்றொருவரிடத்தில் சொல்லவே மாட்டாள். அவனவனும், தானே அவளிடம் நட்பா யிருப்பவன் என்று உறுதியாக நம்பிக் கடைசிவரையில் ஏமாறும்படி, அவள் அவ்வளவு அபார திறமையோடும், சாமர்த்தியத்தோடும் தன் காரியத்தை நடத்திவந்தாள். விஷயங்களை மறைப்பதிலும், கூட்டிக் குழைத்துப் பேசுவதிலும், ஒன்றுக் கொன்று சம்பந்த மில்லாத விஷயத்தைச் சம்பந்தப்படுத்திப் பேசுவதிலும் அவளது மூளைக்கு இணையாக வேறொருவருக்கும் அமைந்திரா தென்றே சொல்லவேண்டும்.

இத்தகைய சரோஜனிபாய் வசிக்கும் மாளிகையினுட் புகுந்த கிருஷ்ணதேவர், எதிரே வந்த தனபாக்கியம் என்ற பணிப்பெண்ணை நோக்கி, "சரோஜனி என்ன செய்துக் கொண்டிருக்கிறாள்? எங்கே காணவில்லை?" என்றார்.

தனபாக்கியம்:—உள்ளே படுத்திருக்கிறாள். உடம்புக்கு அசௌகர்ய மென்றாள். மனக்கவலையோ, அல்லது வருத்தமோ அவளை காலுக்கு நாள் வருத்துகிறது. மகிழ்ச்சி யில்லாம லென்ன வாழ்வு?

கிருஷ்ண தேவர்:—என்ன கவலை? யார்மீது வருத்தம்?

தனபாக்கியம் :—உங்கள் மீதுதான் வருத்தம்போலிருக்கிறது. திருவொற்றியூரில் உத்ஸவம் நடைபெறுகிறது. உடுக்கத் துணி இடையாதாம்; நகையொன்றுமில்லையாம். உங்களிடம் சொன்னளாம். ஆகட்டும், ஆகட்டுமென்று சொல்லுகிறீர்களாம். அதனால்தான் வருத்தமாகப் படுத்திருக்கிறாள். காலமுதல் ஆகாரமே இடையாது!

கிருஷ்ண தேவர் :—அட, பைத்தியமே! இதற்குத்தானு வருத்தப்படுகிறாள்? காலைக்கே வேண்டிய புடவை கூடயும், நகைகளையும் வாங்கிவிடலாம். என்ன நகை வேண்டும்? என்ன புடவை வேண்டும்?

தனபாக்கியம் :—ரோஜா நிறத்தில், ஜரிகை போட்டதாகப் பெங்களூர்ப் பட்டு ஒன்றும், காசிப்புடவை ஒன்றும், மைசூர் சிம்மாசனம் ஒன்றும் எடுத்தாற் போதும். கழுத்திற்குக் காசுமாலை, கல்லிழைத்த அட்டிகை, வைரத் தோடு இரண்டு, இவைகள் வாங்குவதில் சிரமமொன்றுமில்லை. மற்றபடி எதாவது சில்லரை நகை வாங்குங்கள். உங்களைத்தானே கதியென நம்பியிருக்கிறாள். நீங்களில்லாவிட்டால், ஒரு நிமிடங்கூட வொரு யுகமாகத் தோன்றுகிறதாம்.

கிருஷ்ண தேவர் :—ஆமாம்; அவ்வளவு அன்பு! அவ்வளவு விசுவாசம்! எங்கே யிருக்கிறாள்? போய்ப் பார்க்கலாமா?

தனபாக்கியம் :—படுக்கையறையி லிருக்கிறாள். போங்கள்—

என்றதும், கிருஷ்ணதேவர் அவ்விதமே படுக்கையறைக்குச் சென்று, சரோஜனி படுத்திருப்பதைக் கண்டு, தட்டியெழுப்பினார். அவள், விழித்துக்கொண்டு சட்டென்றெழுந்து "வாருங்கள்! என் இவ்வளவு தாழ்கை? இது

வரை விழித்துக்கொண்டுதா னிருந்தேன்; இப்பொழுது தான் சற்று கண்ணயர்ந்தேன்" என்றாள்.

கிருஷ்ண தேவர்:—நீ சொல்வதெனக் கொன்றும் விளங்க வில்லையே!

சரோஜனி:—நீங்கள் வந்ததும் தனபாக்கியம் என்ன சொன்னாள்?

கிருஷ்ண தேவர்:—நீ பிகவும் வருத்தமாக விருக்கிறாயென்றும், என்மீது கோபங்கொண்டிருக்கிறா யென்றும், நகை, துணி முதலியன ஒன்றும் வாங்கிக் கொடுக்க வில்லை யென்று என்மீது குறைகூறினை யென்றும் சொன்னாள்.

சரோஜனி:—இதுவரையில் நீங்கள் எனக்கொன்றும் வாங்கித் தரவில்லையா?

கிருஷ்ண தேவர்:—சிற்சில சமயங்களில் ஏதாவது நகைகளும், புடவைகளும் நான் வாங்கித்தந் திருக்கவும் கூடும். சிறிது பொருளுதவி செய்திருக்கவும் கூடும். அவை போதுமானவைகளா யிருக்கமாட்டா! அது குறித்து நீ வருத்தப்பட்டு ஏதாவது சொல்லியிருக்கலாம். அதற்கு என்ன இப்போது?

சரோஜனி:—ஆனால், நான் நேரில் தங்களிடம் எப்போதாவது வருத்தப்பட்டுக் கூறியதுண்டா? அப்படியிருந்தாற் சொல்லுங்கள்!

கிருஷ்ண தேவர்:—இல்லை; நீ நேரில் கூற மாட்டாய். ஆனாலும், என்னிடம் தெரிவிக்கச் சங்கோசப்பட்டு உன் தோழி தனபாக்கியத்தினிடம் சொல்லியிருக்கலாம்.

சரோஜனி:—இதுவரையில் தாங்கள் எனக்குச் செய்து கொடுத்திருக்கும் நகைகளும், புடவைகளும் என்

னுடைய யோக்கியதைக்கு அதிகமாகவே யிருக்கின்றன. இந்த நிமிடத்தில் அவற்றைத் தாங்கள் கேட்டபோதிலும், நான் கொடுத்துவிடத் தயாராகவிருக்கிறேன். எனக்கு வேண்டுவதெல்லாம் தங்களின் தூய அன்பு ஒன்றுதான். அஃதொன்றே என் ஜன்மம் ஈடேறப் போதுமானது.

கிருஷ்ண தேவர் :—சரி ; இருக்கட்டும். திருவொற்றியூரில் உத்ஸவம் நடக்கிறதாமே ; நாம் போக வேண்டாமா ?

சரோஜனி :—ஆம் ; திருவிழாவிற்குப் போவதிருக்கட்டும். நீங்கள் என்னை காதுபேர் அறிய மணஞ்செய்து கொண்டு விடுங்கள் என்று எத்தனையோ முறை சொல்லிவிட்டேன். நீங்கள் கவனிக்கவே யில்லை. எத்தனை தான் சொல்லலாம் ? உங்கள் விருப்பம் போற் செய்யுங்கள்.

கிருஷ்ண தேவர் :—அட, பைத்தியமே ! கலியாணம் எதற்கு ? நான் உன்னிடம் அளவற்ற விருப்பம் வைத்திருக்கிறேனென்பது நீ யறிந்ததே. அஃதொன்று போதாதோ ? மனம் வேறு படுவதாயிருந்தாலன்றோ மணம் செய்து கொள்ளல் வேண்டும் ?

சரோஜனி :—ஆமாம் ; நான் பெண் தானே ? தாங்கள் சொல்லாமல் என் மூளைக்கு அவ்வளவு தூரம் எட்டுகிறதா ? எதற்காகச் சொன்னேனெனின், ஆடவர்கள் இப்படித்தான் முதலில் ஏமாற்றுகிறது ! "காரியம் ஆகும்வரை கழுதையின் காலையும் பிடி" என்பதுபோல் அவர்கள் இப்படித்தான் வாய் கொண்டமட்டும் உறுதி சொல்லி, வெகு தாராளமாய்ப் பேசுவது வழக்கம். 'பழகப் பழகப் பாலும் புளிக்கும்' என்பார்கள் ; அதுபோல, ஒரு பெண், எவ்

வளவுதான் அழகுடையவளாகவிருந்தாலும், அவள் தன் கணவனுடைய மனங் கோணுதபடி நடந்து கொண்டாலும், பிள்ளைப் பேறு, வயது முதிர்தல் முதலியவற்றால், அவர்களின் இளமைப் பொலிவும், கவர்ச்சியும் அதி சீக்கிரத்திற் போய்விடும். ஆடவருடைய ஆசையோ, அவர்கள் கிழவராகும்வரை இளமையுடையதாகவே யிருக்கிறது. அவர்கள் பிற மாதரை விரும்புவதைக் கண்டிப்பதற்குப் பெண்கட்கு அதிகாரமில்லை; ஆகையால், அவர்கள் கிழவியாய்ப் போன தங்கள் முதன் மனைவியை விட்டு, புதிய பெண்களை விரும்புகின்றனர். இஃது உலகத்திற் சாதாரணமாய் நடைபெறுங் காரியம். அக்கினி சாக்ஷியாய்த் தாலிகட்டிய மனைவியாயிருந்தால், 'தெய்வமே' என்று ஆடவன் அவளின் கட்டுப்பாட்டில் நிற்க வேண்டியது அவசியமாகிறது. என்னுடைய சங்கதி அப்படியன்று; இஃது அக்கினி சாக்ஷியாய்ச் செய்யப்படும் மணத்தைப்போல் உறுதியுடையதன்று, இரண்டொரு மாசம் வரையில் மகிழ்ச்சியாயிருப்பார்கள். காலைக்கு கான் இரண்டு குழந்தைகளைப் பெற்றுவிட்டால், தங்களின் அழுக்கான மேலாடையை நீக்குவதுபோல, என்னைவிட்டு வேறொருத்தியிடம் போய்விடுவார்கள். அதன் பிறகு என் கதி யென்னவாகும்? என் குழந்தைகளின் கதி யென்னவாகும்? இவ்விஷயங்களை யெல்லாம் நாம் முன்னாலேயே யோஜிப்பது நலமன்றோ?

கிருஷ்ண தேவர்:—இஃதெல்லாம் என்ன சந்தேகம்? எனக்குக் குழந்தையும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம். நீ இப்பொழுதிருப்பதுபோல், எப்போதும் ஒரே குழந்தையாய் என்னோடிருக்க வேண்டியது. நீ யேன்

அசாவகியமான சந்தேகங்களே யெல்லாம் எழுப்பிக் கொண்டு துன்பப்படுகிறாய்? நான்தான் தொடக்கத்தி லிருந்தே சொல்லிக்கொண்டு வருகிறேனே; உனக்கு என்ன ஆதாரம் வேண்டுமானாலும் செய்து கொடுக் கிறேன். என் மனதிலுள்ளதை வெளியிடாமல் வளைத்து வளைத்துப் பேசுகிறாய்? நாம் அக்கினி சாக்ஷி யாக மணஞ் செய்து கொள்ளவேண்டிய அவசியமே யில்லை. நான் உன்னையே ஆயுட்காலம் வரை மனை வியாகப் பாவிப்பேன். சத்தியம்! சத்தியம்!! உனக்கு என்னென்ன வழி செய்ய வேண்டுமோ, அவற்றை யெல்லாம் இப்பொழுதே செய்து கொடுக்கத் தயாராக விருக்கிறேன். உன் மனதைத் தாராளமாய் வெளி யிடலாம்; என்னென்ன வேண்டுமோ அவைகளைக் கேட்டுக்கொள்ளலாம். அன்பே! உன் விருப்பத்தைச் சொல்!

ரோஜனி:—நான் வேறே யெதைக் கேட்கப்போகிறேன்? ஒரு கடவுளிடம் வரங் கேட்பவர்கள் என்ன கேட்பார் கள்?" எப்போதும் உன் மலரடி நீங்காத பேரின்ப சுகமான முத்தியைக் கொடு!" என்புதான் கேட்பார் கள். அதுபோல, நான் கேட்பது என்னவெனின், 'நான் உள்ளவரையில்—தாங்கள் உள்ளவரையில்— எப்போதும் நிரந்தரமாக எனக்கு உரிமையுடையவர் களாகவிருந்து, என்னை ஆண்டு அநுபவித்துக்கொள்ள வேண்டும்' என்பதுதான். என் வேண்டுகோளைப் பூர்த்தி செய்வதிற் தங்கட்கு ஆக்ஷேபனை யுண்டோ?

கிருஷ்ண தேவர்:—சரி; சரி, கரும்பு தின்னக் கூலி வேண்டு மென்று எந்த மூடன் கேட்பான்? நீ கேட்ட முதல் வரத்தைத் தாராளமாய்க் கொடுத்துவிட்டேன். இன்

னும் என்ன வரம் வேண்டுமோ, அதையுங் கேள்; கொடுக்கத் தயாராக விருக்கிறேன்.—

என்று கூறி, நகைத்த வண்ணம் அவளைத் தழுவிக் கொண்டார். அதைக் கேட்ட சசோஜனி, கரை கடந்த மகிழ்ச்சியோடு "சரி; தயவுசெய்து எழுந்து வாருங்கள். இந்தக் குடும்பத்துக்குத் தாங்கள் அரசனன்றோ? தங்களுடைய சிம்மாசனத்தில் தங்களை உட்கார வைக்க வேண்டுமன்றோ?" என்று கூறி, தனது வலக்கரத்தால் அவரையணைத்துக்கொண்டு, அருகிலிருந்த வில் வைத்த கட்டிலில் உட்காரவைத்து, வெற்றிலை மடித்துச் சுருள் சுருளாகக் கொடுக்கத் தொடங்கினள். கிருஷ்ண தேவர், சுருதி கூட்டப்பட்ட வீணையைப்போல, பரமானந்த வெள்ளங் கரை புரண்டோட, அப்படியே மயங்கிக் கட் குடியனைப் போல மதியிழந்து, இன்பக் கடலில் வீழ்ந்து தத்தளித்தார்.

ஆறுவது அதிகாரம்

சென்ற விடத்தும் தீமை விளைதல்

ஒருவனுக்குப் பணமும், நிலமும், ஆடை, அணிகலனும் ஏராளமாக இருப்பதுதானே செல்வம்? செல்வமென்பது சிந்தையின் நிறைவன்றோ? அத்'திருப்தி'ச் செல்வம் எவர்களிடமிருக்கின்றதோ, அவர்களே உண்மைச் செல்வராவர். மற்றையோர் பொய்மைச் செல்வரே. சாதாரண—எளிய—மனிதர் எளிதில் திருப்தியடைந்து விடுகிறார்கள். பெரிய மனிதர்கட்கோ, அவரது பொருள் பெருகப் பெருக அதிருப்தியும், பேராவலும், அதனால் துன்பங்களும், துயரங்களும் பெருகிக் கொண்டே போகின்றன. பணத்தை மிகுதி

யாகப் பெற்றவர்கள் என்ன செய்வார்கள்? தங்கள் உடலைச் செழுமையாக வளர்த்து, அதற்கு மிஞ்சுக் கேற்றிக் கொள்வார்கள். வெளித் தோற்றமான காரியங்களிலே தான் பெரிய மனிதர்கள் பெரிய மனிதர்களாயிருக்கின்றார்கள். எளிய மனிதர், தங்கட்கு வெளிப் பகட்டின்மையால், பிறர் நம்மை அலக்ஷியஞ் செய்து விடுவார்களோ என்று கிஞ்சுவினுல், நற்குணம், நல்லொழுக்கம், அடக்கம், பணிவு முதலிய இன்றியமையாத ஆபரணங்களை அணிந்திருக்கிறார்கள். பொன்னினுடைய பேரொளியும், மன்னர் மன்னருடைய பெரும் போகமும், ஒருவனிடத்தில் இயற்கையாகவே அமைந்துள்ள நற்குணங்கட்கு இணையாகாவன்றே? பணக்காரரிடமே தாழ்ந்த குணங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. எளிய மனிதரிடம் உயர்ந்த குணம் நிரம்பியிருக்கிறது. செல்வம் எவ்விடத்தில் மிகுதிப்படுகின்றதோ, அவ்விடத்தில் தானென்ற அகங்காரமும், செருக்கும், பிற தூர்க்குணங்களும் வந்து குடி கொள்கின்றன. எளியவரிடம் அடக்கமும், தீச்செயல்கட்கு அஞ்சும் இயல்பும் தாமே அமைகின்றன.

நான்காவது அதிகாரத்தின் இறுதியிற் கூறியபடி வேலைக்காரியாகிய பொன்னம்மாள், கோலத்தை அழைத்து வரும் பொருட்டுப் போன பின் நமது ஷண்முகதாஸன், "போனவள் இன்னும் வரக் காணோமே! அங்கே வீணைப் பேசிக்கொண்டு நிற்கிறளோ? அல்லது, அந்தப் பெண் வர முடியாதென்று கூறிவிட்டாளோ? அப்படி வர முடியாதென்று சொல்லிவிட்டாலும், வந்து தகவல் சொல்லும்படி கூறினேனே; மணியும் பத்தாகிவிட்டதே! ஏழு மணிக்கன்றோ போகச் சொன்னேன்? இப்பொழுது மணி பத்தரை யாகிவிட்டதே!" என்று கெடிகாரத்தை யெடுத்துப் பார்த்தான். பிறகு, "இஃதென்ன? கெடிகாரம்! மிகத்

தாமதமாகப் போகிறதே; நல்லது, வாயிலிற் போய்ப் பார்ப்போம்" என்று அங்கே போனான். இரவானதால் வண்டுகள் பாடுகின்ற சப்தத்தைக் கேட்டுக், "கால் சதங்கைத் தொனி கேட்கிறது. நான் போய்க் கட்டிலின்மீது சாய்ந்துகொண்டு உறங்குகிறவன்போலக் கிடக்கிறேன்" என்று விரைவாகப் போய்ப் படித்துக்கொண்டு கண்களை மூடிக்கொண்டான். சில நிமிடங்கட்குப் பிறகு விழித்துக் கொண்டான்; பெண் வந்து சேரவில்லை. மறுபடி யெழுந்து காற்காலியில் உட்கார்ந்தான்; எழுந்து தோட்டத்திலுட் சுற்றினான். காற்றினூற் பூஞ்செடிகள் அசைந்து ஒருவித ஓசை யுண்டாவதைக் கேட்டு "சரி; வந்துவிட்டாள்!" என்று தீர்மானித்தான். இவ்விதம் விநாடிக்கொரு முறை எழுவதும், உட்காருவதுமாக விருந்தான். இப்படி யிருக்கும்போது, பொன்னம்மாளும், கோகிலமும் ஒரு விளக்குடன் மண்டபத்திலுட் புகுந்தார்கள். இவர்களைக் கண்டதும், ஷண்முகநாதனுடைய கண்கள் விறு விறுத்துப் போயின. உடம்பு முழுவதும் வியர்த்து, நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டது. ஒருவாறு சமாளித்துக் கொண்டு "அம்மா வா!" என்றான். பிறகு, ஒரு நாற்காலியை யிழுத்துப் போட்டு உட்காரும்படி கேட்டுக் கொண்டான். பொன்னம்மாளோ மெதுவாகப் போய்விடும்படி சைகை காட்டவே, அவள், அப்படியே நிற்பதுபோல் பாவனை செய்து, வெளியே வந்து, கதவைச் சாத்திப் பூட்டிக்கொண்டு, மாளிகைக்குப் போய்விட்டாள். பிறகு, நாயுடுவை மண்டபத்திற்குப் போய் மறைவா யிருக்கும்படி சொன்னாள். அவன், 'இன்று நம்பாடு வேட்டைதான்' என்று நிறவுகோலை வாங்கிக்கொண்டு தோட்டத்திற்கு ஓசையாய் ஓடிவந்து கதவை மெதுவாகத் திறந்து உள்ளே போய் ஒரு பூஞ்செடியின் பக்கத்தில் தூணியை விரித்துப்

படுத்துக்கொண்டான். ஷண்முகநாதன், பொன்னம்மாள் போய்விட்டதைப் பார்த்து, இனித் தன் விருப்பப்படி பேசுவோ மென்று தீர்மானித்துக்கொண்டு "பெண்மணி! உன்னைக் கண்டது முதல் என் மனம் கட்டுக்கடங்கா வேகத்துடன் பற்றிக்கொண்டது. தனியாகப் பேச வேண்டுமென்று கருதி இதுவரை யிருந்த ஆசையுட னிருந்தேன். இப்பொழுதுதான் என் மனம் பூரிப்படைந்தது. உட்கார்" என்றான்.

கோகிலம் :—நீங்கள் என்னைத் தனிமையாகப் பார்க்க வேண்டுமென்பதாயும், இவ்விடத்தி லிருப்பதாயும் பொன்னம்மாள் தெரிவித்தாள். இப்பொழுது அந்த அம்மாளையுங் காணவில்லையே!

ஷண்முகநாதன் :—அவள் சாப்பிடப் போயிருப்பாள்; இதோ வந்துவிடுவாள். என் பயப்படுகிறாய்? உட்கார்ந்துகொள். சாப்பாடு ஆகிவிட்டதா?

கோகிலம் :—சாப்பாடு ஆயிற்று; தங்களைப் பார்த்தும் முடிந்தது. ஏதாவது சங்கதி யிருந்தால் சட்டென்று சொல்லுங்கள் நான் போகவேண்டும்.

ஷண்முகநாதன் :—இஃது உன்னுடைய மாளிகையன்றோ? நீ இங்கேயே யென்னுடன் இருக்கக் கூடாதா? இம் மாளிகை வேறு யாருக்குப் பயன்படும்?

கோகிலம் :—ஐயா! நான் எங்குக் கிடந்தா லென்ன? இத் துச்சமான சரீரத்தை யெங்கு போட்டா லென்ன? ஆகைப்பற்றி யெனக்குப் பயமில்லை. கேவலம் நான் பெண் வடிவமாக விருப்பதால் கொஞ்சம் காவல் செய்ய வேண்டியதிருக்கிறது. ஆகையால், நான் போகவேண்டும். விடிந்தவுடன் புகை வண்டியில் ஊருக்குப் போய்விடுகிறேன்.

ஷண்முகநாதன் :—என் அவசரப்படுகிறாய்? நான் உன்னைச் சும்மா பேசிவிட்டுப் போகவா வரவழைத்தேன்? தயைசெய்து இந்த நாற்காலியில் உட்கார்.

கோகிலம் :—காரியம் இருந்தாற் சொல்லுங்கள்.

ஷண்முகநாதன் :—என்ன, சங்கதியை வெளிப்படையாய்ச் சொல்லவேண்டுமா? ஊகித்துக்கொள்ள வியலாதா? நாம் இருவரும் ஒன்றாய்ச் சேர்ந்திருக்கிற விஷயத்தில் நீ மறுக்கமாட்டா யென்றே நம்புகிறேன். என்னுடைய பிறவிப் பயன் இன்றுதான் கிடைத்தது. பத்து நாட்கட்கு முன், கூடலூர் ஜோஷியரிடங் கேட்டேன்; அவர், "இன்று முதல் ஒரு மாதத்திற்குள் தேவலோகப் பெண்ணும் ஒப்பாகாத உயர்ந்த அழகு வாய்ந்த ஒரு மாதை அடையப் போகிறாய்; அதனால் உனக்கு மிகுந்த புகழும், செல்வப் பெருக்கமும் உண்டாகப் போகின்றன" என்றார். அஃது உண்மையாகக் கொஞ்சமும் தவறாமல் நடைபெற்று விட்டது. இனி உன்னுடைய விருப்பத்திற்கு மாறாமல் நீ சொல்லுகிறபடி நடந்துகொள்வேன். என்னுடைய செல்வத்திற்கு நீதான் உரியவள். உன்னுடைய அன்பு மட்டும் என்னைவிட்டு நீங்காமல் உயிரும் உடலும்போ லிருக்கவேண்டியது. சரி! நேரமாகின்றது. படுக்கைபோட்டுத் தயாராயிருக்கின்றது. வா—என்று அருகில் நெருங்கினான்.

பார்த்தாள் கோகிலம். "ஏதோ கெட்டகாலம் எனக்கு வந்துவிட்டது. நான் கேவலம் பொன்னம்மாள் பேச்சைக் கேட்டு வந்ததே தவறு. அடடா! ஜமீந்தார் கெட்டவ ரென்று அடைக்கலம் புக, அதைவிட மோசமாகச் செட்டியா ரிருக்கிறார்! என் செய்வது! என்னை வேண்டு

மென்று கெடுக்கப் பொன்னம்மாள் முதலிய யாவரும் இவ்விதமோசக் கருத்துக்கு உட்படுத்திவிட்டார்கள். ஐயோ! இவர்களுடைய கெட்ட எண்ணம் எனக்குத் தெரிந்திருந்தால், நான் முன்பே புறப்பட்டு எங்கேயாவது ஓடிப்போயிருப்பேன். கடவுள் என்னை அநியாயமாய் நாலு வழியிலும் கெடுத்துவிட்டார். செட்டியாரோ, பரம துஷ்டர்—மூடர்—என்று நன்றாய்த் தெரிகிறது. நான் இங்கு வந்த பதினைந்து நாட்களாய் ஒரு வார்த்தையும் இவர் என்னுடன் பேசவில்லை. இன்று ஏதோ கெட்ட எண்ணங் கொண்டுவிட்டார். இப்பொழுது தனியாய் அகப்பட்டுக்கொண்டேன். என்னை யென்ன செய்வாரோ! மானங் கெடுங்காலம் வந்துவிட்டது! நான் இறந்தாலும் இவருடைய கருத்துக்கு உடன்பட மாட்டேன்" என்று தீர்மானித்தவளாய், "ஐயா! நான் கதியற்ற பெண். ஏதோ நீங்கள் சகோதர பாவமாக இருப்பீர்க ளென்று உங்களுடன் வந்தேன். நீங்கள் தயை கூர்ந்து என்னை விட்டுவிடுங்கள். இப்படிப்பட்ட சங்கதி யென்று தெரிந் திருந்தால், பொன்னம்மாள் கூப்பிட்டதற்கு வர இணங்கி யிருக்கமாட்டேன். இந்த ஏழையின்மீது கெட்ட எண்ணங் கொள்ளவேண்டாம். தங்களுடைய செல்வாபத்தை எண்ணி லும் சிறந்த எத்தனையோ பெண்கள் எதிர்பார்ப்பார்கள். கேவலம் பிச்சைக்காரிக்குச் சமமான என்னை யேன் விரும்பு கிறீர்கள்?

ஷண்முகநாதன்:—ஓ, அதுதான் பொய்! நீயா பிச்சைக் காரி? எனக்கு மிகவும் வருத்தமாக விருக்கிறது. எவ்வளவோ நன்மைகள் உனக்குச் செய்யக் காத்திருக் கிறேன். என்னுடைய செல்வத்திற்கே நீதான் எஜ மானி. முதன் முதல் பழகுகிறபோது எந்தப் பெண் ணுக்குங் கொஞ்சம் வெட்கமாய்த்தான் இருக்கும்.

வர வரத் தைரியமாகிவிடும். உனக்குக் கோழை மனது! என்ன நாணம்? வா—என்று கையைப் பிடித்தான்.

கோகிலம், தன் கையைச் செட்டியார் பிடித்ததும் "ஐயோ! கடவுளே! நான் என் செய்வேன்! யாருமற்ற பாவியை இப்படி அவமானப்படும்படி விட்டுவிட்டீரே! என்னுடல் நடுங்குகிறதே! ஐயா, உமக்குக் கோடி புண்ணியம் உண்டு. கையை விடும். இன்றேல், கொன்றுவிடும் வினைகத் துன்புறுத்தவேண்டாம்" என்று கூவிய வண்ணங் கீழே சாய்ந்துவிட்டாள்.

ஷண்முகநாதன்:—இஃதென்ன கதை? மூன் பணமாக எதாவது ரூபாய் வேண்டுமா? கேள்; தருகிறேன். இவ்வளவு தூரம் சம்மதித்து வந்தாய்; இப்பொழுது உனக்கு வந்த துன்பமென்ன? எழுந்திரு—என்று மறுபடியும் கையைப் பிடித்துத் தூக்கினான்.

கோகிலம்:—ஐயோ! நான் மாட்டேன். இவ்வுடலை நீர் தொடக் கூடாது. நீர் என்னைத் துன்புறுத்தினால் கொடிய பாதகனாவீர். கற்புடைப் பெண்ணைப் பல வந்தப்படுத்தினால், உம்முடைய குடும்பமே நாசமடைந்து போகும். நீரும் அதோ கதியாகிவிடுவீர்—என்று கூறிய வண்ணம் அழத் தொடங்கினாள்.

ஷண்முகநாதன்:—நீ எவ்வளவு திட்டினாலும் எனக்கு வெறுப்பு உண்டாகாது. உன்னைச் சோமல் இன்று வீடப் போவதில்லை. நீ எழுந்திருக்காவிடில், உன்னைத் தூக்கிக்கொண்டு படுக்கைக்குப் போய்விடுவேன்.

கோகிலம்:—அட, பாபி! என் கை பிய்ந்து போய்விடுதே! உம்முடைய மனைவியை வேறொருவன் பல வந்தப்படுத்தினால், பார்த்துக் கொண்டிருப்பீரோ

வேண்டாம். என்னை நஞ்சு என்று கருதிக்கொள்ளும். ஆயிரம் முறை கூறுகிறேன். இஃது உமக்கு ஆகாது. கையை விடும். நான் ஓடிப்போய் விடுகிறேன்.

ஷண்முகநாதன் :—அட, பைத்தியமே! உன்னைவிட வா இங்கு வரவழைத்தேன்? பலே! எழுந்து வருவாயா, அல்லது உன்னை நான் தூக்கிக்கொண்டு போய், உன் கூச்சத்தைத் தெளிவிக்க வேண்டுமா? அப்படிச் செய்தால்தான், நான் சொல்லுகிறபடி கேட்பாய்—என்று அருகிற்சென்று, கோகிலத்தைக் கட்டிப் பிடித்துத் தூக்கினான்.

இவ்விதம் மூட்டுத் தனமாய்ப் பிடித்துத் தொந்தரை செய்யவே, பேசவும் முடியாமல் உடல் நலிந்து தர்ச்சை யுற்றாள். தான் பூமியில் விழுந்ததும், தன் கேலியை இறுகக் கட்டிக்கொண்டு விட்டாள். "கடவுளே! என்னை இவ் வாபத்தினின்று காப்பாற்றுவது உன் பொறுப்பு" என்று மனமாரப் பிரார்த்தித்துப் பேச இயலாமற் கிடந்தாள். ஷண்முகநாதன், அவளைத் தூக்கித் தன் படுக்கையின்மீது போட்டுப் பெருமூச்சு விட்டு, "உன்னால் எனக்கு இவ்வளவு சிரமமா? இப்பொழுது உன் பேச்சு எங்கே போயிற்று? படவா! பலே, சொகுசுக்காரி" என்று ஓங்கி ஒரு அறை கன்னத்தில் அறைந்தான். அடிபட்ட அதிர்ச்சியால், கோகிலத்திற்கு மூர்ச்சையோடு மூச்சும் அடங்கிவந்தது. இதை யுணர்ந்து கொள்ளாத ஷண்முகநாதன், "என்னடி, ஜாலம் செய்கிறாய்?" என்று மறுபடியும் ஒரு அறை பளீரென்று கொடுத்தான். மூச்சு நின்றே போயிற்று. ஷண்முகநாதன், 'கோபத்தினால் பலமாய் அடித்துவிட்டோமே; மூச்சைக் காணோமே! நெற்றிப் பொட்டில் பட்டதா? உயிர்போய் விட்டதோ?'

என்று தன் விரலை மூக்கிற்கு நேரே வைத்துப் பார்த்தான். ஒன்றுமில்லை! "இஃதென்ன? திண்பமாய் முடிந்துவிட்டதே! உயிர் போய்விட்டதே!" என்று கை, கால்களைப் புரட்டிப் பார்த்தான்; விளக்கு வெளிச்சத்தைக் கொண்டு வந்து பார்த்து உண்மையிலேயே உயிர் போய்விட்டதென்று தீர்மானித்து, "நான் என் செய்வேன்! அநியாயமாய் ஒரு பெண்ணைக் கொன்று விட்டேனே! அவளை அப்பொழுதே தூக்கிவிடாமல் பிடிவாதஞ் செய்ததற்குப் பயன் இதுதான்! இவளை யிங்குத் தனியே போட்டுப் போனாலும் போய்விடலா மாயினும், வெளிக்குத் தெரிந்தால் பெரிய மோசமல்லவா?" என்று கருதித் தோட்டத்திற்கு வந்து, நாற்புறமும் சுற்றிப் பார்த்தான். பூஞ்செடியின் கீழ் ஒருவன் படுத்திருப்பதைக் கண்டு எழுப்ப, அவன் எழுந்து, "ஐயா, என்ன சங்கதி?" என்றான்.

ஷண்முகநாதன் :—அடே. குமாரசாமி! நீயா இங்குப் படுத்திருக்கிறாய்? நல்ல சமயத்தில் உதவியாக வந்து சேர்ந்தாய்.

குமாரசாமி :—ஆம்; ஒரு சமயம் என் உதவி வேண்டிய திருக்குமோ என்றே இங்குவந்து படுத்துக் கொண்டேன். அப்படியே தூங்கிவிட்டேன். என்ன சங்கதி ஆகவேண்டியது?

ஷண்முகநாதன் :—ஒன்றுமில்லை; அந்தப் பெண் வந்தாள்; ஏதோ தாறுமாறாய்ப் பேசினாள். எனக்குக் கோபம் வந்துவிட்டது; ஒரு அறை அறைந்தேன். உயிர் போய்விட்டது! இதற்கென்ன செய்யலாம்?

குமாரசாமி :—அடடா! என்ன காரியம் செய்தீர்கள்? இந்த சங்கதி வெளிக்குத் தெரிந்தால் தலைபோய் விடுமே! என்னால் ஒன்றும் முடியாது. நல்ல வேளை

யில் வீட்டுக்குப் போய் விடுகிறேன். பெண் கொலை மகா கொடியது. உங்களுடன் நானும் இருந்தால், அப்பாபம் என்னையும் பற்றிக்கொள்ளும். சான்வரமாட்டேன்.

சுண்முகநாதன் :—இருக்கட்டும் ; எனக்கு வந்த துன்பம் உனக்கு மில்லையா ? வேண்டிய ரூபாய் இனம் தருகிறேன் ; பெற்றுக்கொள். பிணத்தை அப்புறப்படுத்த வேண்டியது உன் கடமை.

மாரசாமி :— சரி ; எத்தனை ரூபாய் கொடுப்பீர்கள் ?

சுண்முகநாதன் :—எதாவது தருகிறேன் ; வா.

மாரசாமி :—அஃதெல்லாம் முடியாது. ஆயிரம் ரூபாய் கீழே வைத்துவிட வேண்டும். பைசாக்கூடக் குறைக்க முடியாது. இல்லாவிடில் வரமாட்டேன். அப்புறம் எப்படியும் செய்து கொள்ளுங்கள்—

என்று கண்டிப்பாய்க் கூறிவிடவே, சுண்முகநாதன், உடனே மாளிகைக்கு அழைத்துக் கொண்டுபோய், ஆயிரம் ரூபாய்கள் நோட்டுகளாகக் கொடுத்தான். சுமாரசாமி, அவற்றைப் பத்திரப் படுத்திவிட்டு வந்தான்.

சுண்முகநாதன் :—என்னடா, பொழுது விடியும் சமயமாயிற்றே ! சும்மா நிற்கிறாயே ?

மாரசாமி :—என்ன செய்யச் சொல்லுகிறீர்கள் ? பிரமாதப் படுத்துகிறீர்களே ; இரண்டு வாழைக் கட்டையைக் கொண்டுவந்து, அதிற் சேர்த்துக் கட்டி, ஆற்றிற் போட்டுவிட்டால், சமுத்திரத்திற் போய்ச் சேர்ந்துவிடும். இதற்கென்ன ?

சுண்முகநாதன் :—என் மீண் தொந்தரவு ? இங்கேயே ஒரு குழியை வெட்டி அதிற் புதைத்துவிட்டாலென்ன ?

குமாரசாமி :—நன்று யிருக்கிறது! இந்த யோசனை செய்தால், இருவர் தலைக்கும் நானேயே சரியான கல் வந்து விடும்.

ஷண்முகநாதன் :—சரி; வாழைக் கட்டையைக் கொண்டு வா—என்றான்.

குமாரசாமி, உடனே சென்று சுமார் அரைமணி நேரத்திற்குப் பிறகு வாழைக்கட்டையோடு வந்தான். கோகிலத்திற்குக் கொஞ்சம் உணர்ச்சி வந்ததும் கண்களைத் திறந்து பார்த்தாள். இவர்கள் பேசிக் கொள்வதை யறிந்து, "எப்படியாவது என்னை இங்கிருந்து அப்புறப்படுத்தட்டும். ஆற்றி லிறந்தாலுங் குற்றமில்லை. இவர்கள் வந்து என்னைக் கட்டும்பொழுது மாத்திரம் செத்தவள் போலவே இடக்க வேண்டும்" என்று கருதி, மூச்சை யடக்கிக்கொண்டு பேசாமற் படுத்திருந்தாள். இருவரும் வந்து பிணத்தைத் தூக்கி வாழைக் கட்டையில் வைத்துக் கட்டினார்கள். ஷண்முகநாதன், குமாரசாமியை நோக்கி, "நான் தூக்கி உன் தலைமீது வைத்துவிடுகிறேன். மெதுவாகக் கொண்டுபோய் ஆற்றிற் போட்டுவிடு" என்றான்.

குமாரசாமி :—அந்தப் பருப்பு இங்கே வேகாதையா! நான் பிணந் தூக்குகிற வழக்கமில்லை. முடியாது. தெரிந்ததைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

ஷண்முகநாதன் :—வேறே யென்னடா செய்கிறது?

குமாரசாமி :—நாலு மனிதரைக் கூட்டிக்கொண்டு வாருங்கள்.

ஷண்முகநாதன் :—ஒருவருக்குந் தெரியப்படாதே—

குமாரசாமி :—இரகசியமாக அம்மாளை அழைத்து வருகிறபோது யாருக்குத் தெரிந்தது? எல்லாம் அப்படித்தான்!

ஷண்முகநாதன் :—உன்னுடன் வேண்டுமானால் நானுந் தூக்குகிறேன். என் மானத்தைக் கெடுக்காதே ; நேரமாகிறது.

குமாரசாமி :—இந்தப் பிணம் தூக்குவதற்கு நீங்கள் தந்த ரூபாய் சரியாகப் போய்விட்டது. இத்தகவலை நான் ஒருவரிடமும் சொல்லாதிருப்பதற்கு வேறே ரூபாய் கொடுக்கவேண்டும். சம்மதமா ?

ஷண்முகநாதன் :—தருகிறேன் ; தூக்கு.

குமாரசாமி :—கையில் வைத்துவிடுங்கள். இதெல்லாம் தவறான வியாபார மன்று. சட்டி சட்டதும் கைவிட்டதுமாக விருக்கவேண்டும்.

ஷண்முகநாதன் :—இப்பொழுது பணம் இல்லை. இருந்த ரூபா யெல்லாம் உன்னிடம் தந்துவிட்டேன். நாளைக் காலையில் எங்கள் கடைக்குப் போய்ப் பணம் எடுத்து வந்து தருகிறேன். காரியத்தை முடி.

குமாரசாமி :—அப்படியானால், ஏதாவது ஈடு கொடுங்கள்.

ஷண்முகநாதன் :—என்னடா, சமயத்தில் இப்படி முரண்டு செய்கிறாய் ? நீ நமக்கு மிகவும் வேண்டியவன். உனக்கு எவ்வளவோ உதவி செய்திருக்கிறேன். முகத்தைச் சுளித்துப் பேசாதே.

குமாரசாமி :—உங்களைப் போலுள்ள பிரபுக்கள் தான் ஏழைகளிடம் இரங்குவதில்லை. இச் சமயத்தை விட்டால், வேறு இதேமாதிரி எப்பொழுது நேரப்போகிறது ? தேவடியாள், கோர்ட்டு முதலியவைகளில் தாராளமாய்ச் செலவு செய்வீர்கள் ; மற்றபடி தருமத்துக்கென்றால், செம்பா லடித்த காசுகூடக் கொடுக்க மாட்டீர்கள். உங்களைப் போன்ற பிரபுக்களிடத்தில் சமயம் நேர்ந்தபொழுது கொஞ்சங்கூடத் தாசுஷண்ய

மில்லாமல் பணம் வாங்கிவிட வேண்டும். தயை வேண்டுமென்று பேசாமலிருந்தால், பிறகு பைசாக் கூட வாங்கமுடியாது. பிறகு அடி, உதைதான் மிஞ்சும். ஆகையால், எஜமானே! கோபிக்காதேயுங்கள். ரூபாய்—அல்லது—ஈடு கொடுக்காவிட்டால், இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் செந்தேலப் பூச்சிகள் வந்து சூழ்ந்துகொள்ளும். அப்புறம்...சொல்ல வேண்டியதில்லை.

ஷண்முகநாதன் :—இந்தா, அப்பா! வைர மோதிரம்; இரண்டாயிரம் ரூபாய்க்கு வாங்கினேன்; ஈடு போதுமா?

குமாரசாமி :—போதாது. உங்களிடமுள்ள எல்லா உருப்படிகளையும் கழற்றிக் கொடுத்துவிடுங்கள். நாளைக்கு ரூபாய் தந்து திருப்பிக்கொள்ளலாம்—என்றான்.

ஷண்முகநாதன், அவ்வாறே எல்லாவற்றையும் கழற்றிக் கொடுத்தான். குமாரசாமி, அவற்றை வாங்கிக்கொண்டு தோட்டத்தில் இரகசியமாகப் பத்திரப்படுத்தப் போய்விட்டான். கோகிலம் இவர்கள் பேசிய ஒவ்வொரு வார்த்தைகளையும் மூச்சுவிடாமற் கேட்டுக்கொண்டிருந்தாள். குமாரசாமி நகையைப் பத்திரப் படுத்திவிட்டுத் திரும்பி வந்தான். ஷண்முகநாதன் "தூக்கலாம்" என்றதும், "கால்பக்கம் நீங்கள் தூக்குங்கள்" என்று தூக்கினான். ஷண்முகநாதன் கால்பக்கத்தைத் தூக்கிக் கஷ்டப்பட்டுத் தலையில் வைத்துக்கொண்டான். இருவரும் நடந்தார்கள். இம்மாளிகைக்குச் சுமார் இரண்டு மைல் தூரத்தில் அகழி போல் ஒரு ஆறு ஓடுகின்றது. இது தோட்டத்தின் தென் புறத்தில் இருக்கின்றது. அவ்வாற்றில் ஒரு பொருளைப் போட்டால், ஒரு மணிக்கு இருபதுமைல் வீதம் போகுமாயின், அதன் வேகத்தை நீங்களே ஊகித்துக்கொள்ளுங்

கள். தோட்டத்தின் நடுவிலுள்ள மண்டபத்திற்கும், இவ் வாற்றிற்கும் சுமார் இரண்டு மைல் தூரம் இருக்கலாம். குமாரசாமியும், ஷண்முகநாதனும் பிணத்தைத் தூக்கிக் கொண்டு கொஞ்சதூரம் சென்றதும், ஷண்முகநாதனால் தூக்கவே முடியவில்லை. குமாரசாமிக்கு இஃதொரு பார மாக இல்லாவிட்டாலும், "அப்பாடா! பிராணன் போகி றதே! தோளைத் திருப்பிப் போடுங்கள். என்னடா, இந்தப் பிணம் இத்தக் கனம் கனக்கிறது. ஆகா ஒரே யடியாய் அழுத்துகிறதே! அப்பா! இழவு பிணத்துக்க லகூரூபாய் கொடுத்தாலும் முடியாது. வேண்டுமானால், நீங்களே தூக்கிக்கொண்டு போங்கள்" என்று முணுமுணுத் துக்கொண்டே சென்றான். ஷண்முகநாதன், வாய்திறக் காமல் சென்றான். இருவரும் பாரத்தைச் சுமந்துகொண்டு ஆற்றின் அருகிற் போனார்கள். "படிகளின் வழியே மெள்ள இறக்கு; திடீரெனப் போட்டால், போலீஸ் புலி கள் சப்தங்கேட்டு உடனே வந்துவிடுவார்கள்" என்று ஷண்முகநாதன் சொல்லவே, இருவரும் பிணத்தை இறக் கித் தண்ணீரின் ஓமாய் வாழைக் கட்டையை நகர்த்தி நடுத்தண்ணீரில் தள்ளிவிட்டார்கள். இவர்கள் திரும்பிப் பார்க்குமுன் வாழைக் கட்டையோடு கட்டப்பட்டிருந்த பிணம் நெடுந்தூரம் போய்விட்டது. ஷண்முகநாதன் ஒருவாறு மகிழ்ச்சியுற்று ஸாலிகைக்குப் போனான். குமார சாமி, "நமக்கு வேலைபோனாலும் போகட்டும். அல்லது வேண்டாமென்றாலும் சொல்லிவிடுவோம்" என்று எண் ணித் தோட்டத்திற்குச் சென்று, கையையும், சுபாயை யும் வைத்த அடையாளப்படி எடுத்துக்கொண்டு, வெளியி லிருந்த குழாயிற் குளித்துவிட்டு வீட்டிற்குப் போய், தன் வைப்பாட்டியோடு மிகுந்த ஆனந்தமாய் மகிழ்ந்த அதிஷ்டத்தைப் பேசிக்கொண்டிருந்தான்.

நண்பர்களே! உலகத்திற் பெரும்பாலோர் ஷண்முக நாதனைப் போலவே ஒழுகுவாரென்பது வெள்ளிடை. ஆண்பாலாரினும், பெண்பாலாரினும் பலபேர் 'இக்கரைக்கு அக்கரை பச்சை' என்ற மயக்கத்திற்கு அடிமையாய், ஒன்றைவிட்டு இன்னொன்றைப் பற்றி, எவ்வகையிலும் திருப்தியடையாதவராய்த் தமது ஆயுள்காலம் வரை நிம்மதியற்று அலகைகள் போன்று வாழ்ந்து மடிந்து போவதையே சர்வ சாதாரணமாகக் கொண்டிருக்கின்றனர். எவ்வித இன்பமாயினும், தமக்குக் கிடைக்கும் சொற்பத் தோடு திருப்தியடைந்து, நிலை தவறாதிருந்து தமது ஆயுட் காலத்தைக் கழிப்போரும் இலைமறை காய்போல ஆங் காங்கு பலருளர். மனிதனது ஆசைக்கு அளவில்லை யென் பது மண்ணாசை பொன்னாசை ஆகிய இரண்டையுமே குறிப்பதாக விருக்கிறது. கோடி கோடியான பொருளைச் சேர்த்து வைத்திருப்போரும் அதை வட்டிக்குக் கொடுத்து மேன்மேலும் வளர்ப்பதிலேயே கண்ணுங் கருத்துமா யிருக்கின்றனர். உலகப்பற்றைத் துறந்த சந்நியாசிகள் கூடப் பொருளையே விரும்பி யலைகின்றனர். பட்டினத் தாரைப்போல உளமார உலகை வெறுத்துப் பொருளில் விருப்பற்று ஒழுகும் பெரியோர்கள் பல நூற்றுண்டுகட் கொருவரே தோன்றுகின்றனர். ஆகவே, மண்ணாசை, பொன்னாசை யாகிய இரண்டின் கவர்ச்சிக்கும் இலக்காகாத மனிதர் இருப்பதரிது. ஆனால், பெண்ணாசையின் தன்மை வேறு மாதிரியானது. உலகிற் பலர் தமக்கு வாய்க்கும் மனைவிகளால் உண்டாகும் இன்பத்தோடு திருப்தியடைந்து வாழ்நாளை மகிழ்ச்சியாகக் கழிக்கின்றனர். நமது ஷண்முக நாதனைப் போலப் புதிய புதிய பெண்களை விரும்பும் காம விடர்கள் நூற்றிற்குப் பதின்மர் உளரென்றே கூறலாம். அவர்கட்கு ஒருத்தியைவிட, மற்றவள் அழகாக இருக்க

வேண்டுமென்ப தவசியமில்லை. அவர்கட்கு வாய்த்த பெண், மகாலக்ஷ்மியின் அவதாரமாகவே யிருந்தாலும் அவர்கள் ஆசைப்பேய் தணிவடைவதில்லை ; கட்டி லடங்குவதுமில்லை. அவர்கள் வீட்டில் குற்றேவல் செய்யும் பணிப்பெண் நல்ல பக்குவகாலம் அடைந்திருப்பாளாயின், அந்தக் காமவிடர் கள் தமது மனைவிமார் வீட்டில் இல்லாதபொழுது அப் பெண்களைப் பிடித்திழுப்பர். ஒன்றிலில்லாத புதிய இன்பம் வேறொன்றி லிருக்குமென்ற மயக்கமே முக்கியமாக அவர் களைத் தூண்டுவதால், அந்தக் காமவிடர்க்கு அழகைப்பற்றி யாவது, குணத்தைப் பற்றியாவது அக்கரையில்லை. இவ் வாறு சிலர் வம்பற்ற கடுங் காமங்கொண்டு தலை தடுமாறித் திரிவதற்கு, முக்கியமாக அவர்கள் உடலின் மிருதிப்பட்ட திமிரே காரணமென்று சிலர் கூறுகின்றனர். அஃதுண்மை யாயின், அதிகப் பலசாலிகளாயிருப்போர் யாவரும் காம விடர்களென்றும், அவர்களே பிறர் மனை விரும்பும் பெற்றிய ரென்றும் நாம் நினைப்பதுமன்றி, பலமில்லாத மனிதர் மாத்திரமே தம் மனைவியுடன் திருப்தியடைந்து நிறையில் நிற்பவர்களென்று எண்ணுவதுபோலவும் முடியும். இலங் கையர்கோன்—இராவணன்—முதலிய அரக்கர்களை யெதிர்த் துப் போர்புரிந்து வெற்றியும், என்று மழியாப் புகழும் பெற்ற கோசலை நாடுடை வள்ளலாகிய இராமபிரான் ஏக பத்னி விரதரா யிருந்தாரென்பதிலிருந்து அவரைப் பெண் விஷயத்தில் மாத்திரம் துர்ப்பலமான தேகமுடையவ ரென்று கருதுதல் பொருந்துமா ? நாம் மனிதரைவிட்டு, காட்டு விலங்குகளை யெடுத்துக் கொள்வோம் ; மகா பயங்கர மான கொடிய குணமுடைய புலி, கரடி, சிங்கம், யானை முதலிய விலங்குகள்கூட ஒரே யொரு பெண் விலங்கைத் தமது உயிர்த் துணையாக ஏற்றுக்கொள்வதையும், அவை களைவிட்டு இணைபிரியாமல் எவ்விடத்துஞ் சென்று வேட்

டை யாடுவதையும் நாம் காண்கின்றோமே யன்றி, அம் மிருகங்கள் ஒன்றைவிட் டொன்றுகப் பல பெண் மிருகங் களைத் தேடி யலைவதைக் காண்பதரிது. ஆகவே, மனிதரது நிலையற்ற காமத்துக்கு ஒருத்தியைவிட மற்றொருத்தி அழ குடையவளாக இருக்கிறளென்பதையாவது, அல்லது மனிதர் ஏகபத்நி விரதராக வொழுகும் இதர மனிதரை விட, அதிகத் தேகத்திமிர் வாய்ந்தவராக விருக்கிறரென்பதை யாவது காரணமாகக் கூறுதல் பொருந்தாது. அற்புதமான அழகு வாய்ந்த மனைவியைப் பெற்ற புருடர்கள் அழ கில்லாத ஸ்ரீமதிகளிடத்திலும் விருப்பங் கொள்கின்றனர். மிகுந்த உடல் வலி பெற்ற புருடர்கள் தம் மனைவியிடத்தி லேயே உறுதியான அன்பை வைத்து, மற்ற பெண்பால் தம் மனதைப் போகவிடாமல் நிறையோடு ஒழுகுகின்றனர். மனிதர் இப்படிப் பலவாறுக ஒழுகுவதற்கு அவர்களின் தேகக் கூறைவிட, மனப்பான்மையே முக்கியமான காரண மென்று துணிந்து கூறலாம். மனிதரது மனப்போக்கு அவரது பூர்வ ஜென்மத் தொடர்பைப் பெற்றதென்பது யாவரும் அறிந்த விஷயமாதலால், மனிதன் ஒழுக்கமுடைய வனுயிருப்பதும், சபல புத்தியுடையவனுயிருப்பதும், அவன் எடுத்த பல ஜென்மங்களில் அவன் மனம் எவ்வித நாட்டத் தைக்கொண்டு எத்துறையில் பழகி முதிர்ச்சி பெற்றிருக் கிறதோ, அதைப் பொறுத்ததாகவே யிருக்கிறது.

ஏழாவது அதிகாரம்

வைரமாலையின் மர்மம்.

இரவு எட்டுமணி யிருக்கலாம். ஷண்முகநாதன், துப்பறியும் இரங்கநாதன் வீட்டிலிருக்கின்றாரா என்று டெலிபோன் வழியாகக் கேட்டான். வீட்டில் இல்லையென்றும், அவர் செங்கற்பட்டுக்குப்போய் இரண்டு நாட்களாயின என்றும் பதில் வந்தது. உடனே ஷண்முகநாதன் ஒரு கடிதம் தம்முடைய நண்பர் கோவிந்தசாமி பிள்ளைக்கு வரைந்தனுப்பினான் :—

" அன்புள்ள நண்பீர் !

தஞ்சைக் கலியாணசுந்தரம் கல்லூரியில் உம்முடன் படித்த ஷண்முகநாதனை மறந்திருக்க மாட்டீரென்று நம்புகின்றேன். நான் இப்பொழுது ஒரு வருடமாக இச் சென்னையில் வசித்து வருகிறேன். ஏராளமான செல்வத்தின் மத்தியில் நான் இன்பமாய்க் காலங்கழித்து வருகிறேனுயினும், எனக்கு இடி யிடித்ததுபோல் இரண்டு நாட்களுக்கு முன் ஓர் ஆபத்து நேர்ந்தது. அதை முழுதும் எழுதுவதிற் பயனில்லை. என் வேண்டுகோளை நிறைவேற்ற விரும்பின், விபரங் கூறுவேன். இவ்விதம் நேர்ந்த போராபத்தினுல் உடல் நலிந்து படுத்த படுக்கையாக விருக்கிறேன். இப்பொழுது சிறிது சௌகர்யமாகவே யிருக்கிறது. துப்பறியும் இரங்கநாதன் அவ்விடத்திலிருப்பதாகக் கேள்வியுற்றேன். நீர் தயைசெய்து அவரை உடனே இங்கு அழைத்து வருதல் நலம். எனக்கு ஒரு நிமிடங் கழிவது ஒரு யுகமாகவிருக்கிறது. கடிதங்கூட எழுதும் நிலைமையில் நான் இருக்கவில்லை. இக்கடிதம் வேறொருவரைக்கொண்டு

எழுதும்படி செய்தேன். ஆகையால், கூடிய விரைவில் வருவீர்களென்று எதிர் பார்க்கிறேன்.

"சுகுண விலாசம்"
மயிலாப்பூர்
——*

இங்ஙனம், தங்கள் நண்பன்,
"ஷண்முகநாதன்."

இக்கடிதம் செங்கற்பட்டிலுள்ள கோவிந்தசாமி பிள்ளைக்கு மறுநாட் காலையில் கிடைத்தது. கடிதத்தைத் திருப்பித் திருப்பிப் படித்த பிறகு, இரங்கநாதனை அழைத்துக்கொண்டு வரும்படி யெழுதி யிருந்தபடியால், அக்கார்யம் மிக மர்மமானதாயினும், ஒரு கை பார்த்துவிட வேண்டுமென்ற எண்ணம் அவருக்கு உண்டாயிற்று. ஆனால், இத்தகைய சங்கதி யெப்பொழுது வருமென்று இரங்கநாதன் சாதாரணமாக எதிர்பார்க்கக் கூடியவராதலால், விரைவாக இரங்கநாதன் இருக்கும் வீட்டிற்குச் சென்றார். அவர் சென்றபொழுது துப்பறியும் இரங்கநாதன் ஏதோ ஒரு வேலை செய்து கொண்டிருந்தார். அது முடிந்தவுடன் "இதோ வந்துவிட்டேன்" என்று கூறிக்கொண்டே, கோவிந்தசாமி பிள்ளையை வரவேற்று, "நீங்கள் அவசரமாய் வந்ததென்ன?" என்று வினவினார். கோவிந்தசாமி பிள்ளை, உடனே தன் கையிலிருந்த கடிதத்தை அவரிடங் கொடுத்தார். இரங்கநாதன், கடிதத்தைப் படித்து முடிந்ததும் மறுபடியும் கோவிந்தசாமி பிள்ளையின் கையிற் கொடுத்து, "சங்கதி யொன்றும் விபரமாய் வரையவில்லையே; ஆனால், விஷயம் கவனிக்கத் தக்கதே" என்றார். கோவிந்தசாமி பிள்ளை "நீங்கள் இப்பொழுதே என்னுடன் புறப்படலாமா?" என்றார். இரங்கநாதன் "ஆம்; எனக்கு இக்கேஸைக் கண்டு பிடிக்க வேண்டுமென்று தீர்மானமாகி விட்டது. வாருங்கள்; போவோம்" என்றார்.

அன்று மாலை மூன்று மணி வண்டியிற் புறப்பட்டு இருவரும் சென்னைக்கு வந்தார்கள். மைலாப்பூரிலுள்ள சுகுண விலாசத்திற்கு வந்ததும், இருவரும் வீட்டினுள் நுழைந்து, தங்கள் வரவைக் குமாரசாமி மூலமாகத் தெரிவித்தனர். இரண்டு நிமிடங்கட்குப் பிறகு, பொன்னுசாமித் தேவர், அவ்விடத்திற்கு வந்து இருவரையும் வரவேற்று, "நீங்கள் வந்ததே மகிழ்ச்சி யாயிற்று. ஷண்முகநாதன் செட்டியார் எந்நேரமும் தங்களைக் குறித்தே கேட்டுக் கொண்டிருக்கிறார். 'ஆற்றோடு போகிறவன் அறுகம் புல்லைப் பிடித்துக் கொள்வது' போல், யார் எதைச் சொன்ன போதிலும் நம்பிக் கொண்டிருக்கிறார். இப்பொழுது படுக்கையிலிருப்பதால், நேரில் வரவேற்க முடிய வில்லை" என்றார்.

இரங்கநாதன் :—நீங்கள் இந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களோ? தயை செய்து இவ்விதம் கேட்பதற்கு மன்னிக்க வேண்டும்.

பொன்னுசாமித் தேவர் :—இதற் கென்ன கோபம்? நன்றாய்க் கேட்கலாம். ஷண்முகநாதன் செட்டியார் என்னுடைய ஆருயிர் நண்பர். இதோ நிற்கும் கோவிந்தசாமி பிள்ளையும், நானும், செட்டியாரும் ஒரு சாலை மாணாக்கர்கள். ஷண்முகநாதன் செட்டியாருக்கு இந்த மாளிகையில் எவ்வளவு உரிமை யுண்டோ, அவ்வளவு உரிமை யெனக்கும் உண்டு. நல்லது! தாமதிக்க வேண்டாம். அவர், தங்களைக் காணும் பொருட்டு ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கிறார்—என்று கூறி உள்ளே அழைத்துச் சென்றார்.

இவர்கள் சென்ற அறையில் ஒரு புறம் சொகுசான கட்டிலொன்று போடப்பட்டிருந்தது. மற்றப் பக்கங்களில் உட்காருவதன் பொருட்டுப் பல நாற்காலிகள் வரிசையாகப் பரப்பப்பட்டிருந்தன. அந்த அறை முழு

வதும் பூவேலைகளால் அழகு செய்யப் பெற்றிருந்தது. அக் கட்டிலின் மீது, சாளரத்தின் அருகில் ஷண்முகநாதன் செட்டியார் வெளுத்த முகத்துடன் படுத்துக் கொண்டிருந்தார். அச் சாளரத்தின் வழியாக மலர்களின் நறுமணம் வீசிக்கொண்டிருந்தது. அவர்கள் உள்ளே நுழைந்ததும் ஷண்முகநாதன் எழுந்து, "கோவிந்தசாமி பிள்ளையவாள்! க்ஷேமமா? என்ன, உம்முடைய அங்க அடையாளமே தெரிய வில்லையே! இவர்கள் தான் துப்பறியும் இரங்க நாதன் என்பவர்களோ?" என்றான். கோவிந்தசாமி பிள்ளை, "ஆம்" என்று கூற, எல்லாரும் நாற்காலிகளில் அமர்ந்தனர். பொன்னுசாமித் தேவர், ஏதோ ஆலோசனை செய்த வண்ணம் வெளியில் உலவிக் கொண்டிருந்தனர். இரங்க நாதன் நடந்த நிகழ்ச்சிகளையும், தம்மை அழைத்த காரணத்தையும் விபரமாகச் சொல்லும்படி கேட்க, ஷண்முகநாதன் கீழ் வருமாறு சொல்லத் தொடங்கினன் :—

"நான் சென்னைக்கு வந்து ஒரு வருடமாயிற்று. என்னுடைய சொந்தக் காரியமாகப் பல வகையில் உழன்று கொண்டிருந்தாலும், பவழக்காரத் தெருவிலுள்ள எங்கள் கடைக்குப் போய் வியாபாரங்களைக் கவனிப்பதுண்டு. அக் கடையில் ஏஜண்டாக விருப்பவர், சுந்தரேசன் செட்டியார். அவர் நீண்ட கால அநுபவமும், திறமையும் வாய்ந்தவர். அவர் ஒவ்வோரமயங்களில் கடை சம்பந்தமாக ஏதாயினும் காரிய மிருந்தால், என்னுடன் கலந்து செய்வது உண்டு. நான்கு நாட்கட்கு முன் அவர் என்னை யழைத்து, ஒரு முக்கியமான சாமான் ஒன்றை என்னிடம் ஒப்புவிக்க வேண்டிய திருந்தபடியால், ஒரு மரப் பெட்டியை யென்னிடம் தந்து, "இது முதுகுளத்தூர் ஜமீன்தாருடையது; இப்பெட்டியினுள் ஒரு வைரமாலை யிருக்கின்றது; அது சுமார் அறுபதினாயிரம் ரூபாய் மதிப்பிடத்தக்கது. ஜமீன்தார்,

தமது குமாரரை வஞ்சித்து, இவ் வைர மாலையைத் தமது வைப்பாட்டியின் மகனுக்குக் கொடுப்பதாக விருந்தார். அதை யெவ்விதமாகவோ அறிந்து அவரது மூத்த குமாரன், மாலையை ஒருவரும் அறியாதபடி யெடுத்து வந்து, நம்மிடம் அடைக்கலமாகத் தந்துள்ளார். இவ்விதம் நம்மிடம் மாலை யிருக்கிற தென்பதை ஜமீன்தார் அறியக் கூடாது. தெரிந்தாற் பெருங் கேடு விளையும். வைர மாலை திருடப்பட்ட சங்கதி இப்பொழுது ஜமீன்தாருக்குத் தெரிந்துவிட்டது. ஆதலால், மாலையைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இது குறித்தும் பல விளம்பரங்கள் பத்திரிகைகளில், வந்து கொண்டிருக்கின்றன. அதை மட்டும் ஒருவன் அவர்களிடம் கொடுத்தால், என்ன விதமான பரிசுங் கொடுப்பார்கள். ஆகவே, இம்மாலையை வேறு மனிதர் யாரும் பரிசு வாங்கும் பொருட்டுத் திருடக்கூடும். அப்படி நிகழ்ந்தால், ஜமீன்தார் குமாரருக்குப் போபத்து உண்டாகும். இதை நீ வாங்கிப் போய்ப் பெட்டியில் வைத்துக் கொள். நீ முதலாளியின் புத்திர னுகையால், உன்னைத் நம்பித் தருகிறேன்" என்று கூறிக் கொடுத்தார். நான் அதை வாங்கிப் போய்—என்று மேலுங் கூறுவதற்குள், இரங்கநாதன் "ஒரு சங்கதி; நீங்கள் பேசிக் கொண்டிருந்த போது வேறு யாராவது அங்கு வந்தார்களா?" என்று வினவினர்.

ஷண்முகநாதன் :—இல்லை; ஒருவருக்குந் தெரியாது.

இரங்கநாதன் :—நீங்கள் பேசிக் கொண்டிருந்த அறை பெரியதா?

ஷண்முகநாதன் :—சுமார் ஐம்பதடி அகல மிருக்கலாம்.

இரங்கநாதன் :—அதன் நடுவிலிருந்தா பேசினீர்கள்?

ஷண்முகநாதன் :—ஆம்.

இரங்கநாதன் :—மெதுவாய்ப் பேசினீர்களோ?

ஷண்முகநாதன் :—எப்பொழுது பேசினலும், எங்கள் ஏஜண்ட் சுந்தரேசன் செட்டியார் மெதுவாகத்தான் பேசுவது வழக்கம்.

இரங்கநாதன் :—நல்லது! இனிச் சொல்லுங்கள்!

ஷண்முகநாதன் :—அவர் சொல்லிய வண்ணமே எல்லாக் கணக்குப் பிள்ளைகளும் வீடுபோகும் வரை காத்திருந்தேன்; பார்த்தசாரதி ஐயங்கார் என்பவர் மாத்திரம் அன்று நீண்டநேரம் வரை யிருந்தார்; ஆதலால், அவர் வீடு போவதற்குள் இம் மாளிகைக்குவந்து சாப்பிட்டுப் போய்விடலா மென்று வந்தேன்; நான் திரும்பப் போவதற்குள் பார்த்தசாரதி ஐயங்கார் தம் வேலையை முடித்துச் சென்றுவிட்டார். நான் உடனே அப் பெட்டியைத் திறந்து பார்த்தேன்; அவ் வைர மாலை முழுதும் தூசிபடிந்து மங்கலாக விருந்தது. அதைச் சுத்தஞ் செய்துவிடுவோம் என்று கருதி, ஒரு பழந்துணி கொண்டுவந்து சுத்தம்செய்யத் தொடங்கினேன். அன்று பகல்முழுதும் ஊரில் சுற்றிக்கொண்டு திரிந்தபடியாலும், வயிறு நிறையச் சாப்பிட்டுவிட்ட படியாலும் ஒருவிதமான சோர்வு உண்டாயிற்று. சிறிது காபி அருந்தினல் நலமாயிருக்குமெனத் தோன்றிற்று. எங்கள் கடையில், இரவில் அதிகமாக வேலை செய்யும் கணக்குப் பிள்ளைகட்குக் காபி முதலிய சௌகர்யங்கள் செய்து கொடுப்பதற்காக ஒரு வேலைக்காரனுண்டு. அவன் பின் கட்டினுள் சமையலறையி லிருப்பான். அவன்தான் காபி தயார்செய்து கொடுப்பது வழக்கம். ஆதலால், அவனை யழைக்கும் பொருட்டு மணியையடித்தேன்; காவற்காரன் வரவில்லை. யாரோ வயதுசென்ற ஒரு பெண்பிள்ளை வந்தாள். அவள் சமையற்காரனுடைய பெண்சாதி

யாம். அவளிடத்திற் காபி போட்டுக்கொண்டு வரும் படி சொன்னேன்; மறுபடியும் மாலையைத் துடைக்கத் தொடங்கினேன். சிரமம் அதிகமாகிவிட்டது. காபியும் வரவில்லை. உடனே யெழுந்து அந்த அறையில் அங்கும் இங்கும் உலாவினேன். அப்பொழுதும் காபிவராமை கண்டு, காரணம் தெரிந்துகொள்ளும் பொருட்டுச் சமையலறையை நோக்கிச் சென்றேன். அந்த வழிதான் நானிருந்த அறையிலிருந்து சமையற் கட்டிற்குப் போகிறது. இவ்வழியில் ஒரு விசாலமான கூடம் (Hall) இருக்கின்றது. அதிலிருந்து வெளிப்பக்கத்திற்கு ஒரு வழி போகின்றது. அந்த வழியில்தான் பின்புறத் தெருவிலுள்ள கணக்குப் பிள்ளைகள் வருதல் வழக்கம். நான் சமையற்கார னறையில் வந்து பார்க்கையில் அவன் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தான். அடுப்பில் வெந்நீர் காய்ந்து நாற்புறமுஞ் சிதறிக்கொண்டிருந்தது. நான் அவனைத் தட்டியெழுப்ப நினைத்தேன்; அவ்வமயம் அவன் தலைக்குமேலிருந்த மணி கிணீரென்று அடித்தது. அவன் அதைக் கேட்டுத் திடீரென்றெழுந்து, "எஜமானே!" என்றான். நான், "காபி தயாராகிவிட்டதா?" என்றேன். அவன், "வெந்நீர் போட்டுவிட்டு அயர்ச்சியால் தூங்கிவிட்டேன்; எஜமான்; மன்னிக்க வேண்டும். நீங்கள் இங்கே நிற்கிறீர்களே; மணியடித்தது யார்?" என்றான். நான், "மணியா! எந்த மணி?" என்று ஆச்சர்யத்துடன் கேட்டேன். அதற்கவன் "நீங்கள் வந்தால் எப்போதும் இருக்கும் அறையிலுள்ள மணி" என்றான். உடனே என் வயிற்றில் பகிரென்று தீப்பிடித்தது; 'அந்த முக்கியமான வைரமாலை யிருக்கும் அறையில் வேறு யாரேனும்

வந்திருப்பார்களோ!' என்று ஐயமுற்று ஓடிவந்து பார்த்தேன்; ஒருவருங் காணப்படவில்லை. வேறு எல்லாப் பொருள்களும் வைக்கப்பட்டபடியே யிருந்தன; ஆனால், மேனாயின்மீது இருந்த வைரமாலை மாத்திரம் இல்லை.

இரங்கநாதன்:—சரி; அப்புறம் என்ன செய்தீர்கள்?

ஷண்முகநாதன்:—வந்த திருடன் முன் வாயிலின் வழியாகவே வந்திருக்கவேண்டும். கூடத்து வழியில் வந்திருந்தால் எனக்குத் தெரியாமற் போகமுடியாது.

இரங்கநாதன்:—போகும் வழியிலாவது, அந்த அறையிலாவது ஒளிந்திருந்தானென்பதை நன்றாகப் பார்த்தீர்களா?

ஷண்முகநாதன்:—மறைந்திருக்க முடியாது. அங்கு மறைத்துகொள்ளத் தகுந்த மறைவிடம் யாதும் இல்லை.

இரங்கநாதன்:—சரி; அப்புறம்?

ஷண்முகநாதன்:—நான் ஓடினதைப் பார்த்த சமையற்காரனும் என் பின்னுடன் ஓடிவந்தான். நாங்களிருவரும் முன்வாயிலுக்குப் போனோம்; அப்பொழுது ஹைகோர்ட்டுக் கடிகாரம் பத்து மணி அடித்தது.

இரங்கநாதன்:—"இதுதான் முக்கியமானது!" என்று ஏதோ குறித்துக்கொண்டார்.

ஷண்முகநாதன்:—இரவு மிகவும் பயங்கரமானதாயிருந்தது. விடாமழை தூரிக்கொண்டிருந்தது. அந்த வீதியில் மனிதர் நடமாட்டமேயில்லை. அவ்வீதியில் நாங்கள் சென்றபோது, கோடியில் ஒரு போலீஸ் சேவகன் நின்றான். அவனை நோக்கி "எங்கள் கடையிலிருந்து ஒரு நகை காணாமற்போய்விட்டது; இவ்வழியே இப்பொழுது யாராவது போனார்களா?"

என்று கேட்டேன். சேவகன் "இவ்விடத்தில் அரை மணி நேரமாக நிற்கிறேன்; ஒரு உயரமான பெண் பிள்ளைதான் போனாள்" என்றான். இதைக்கேட்ட சமையற்காரன், "ஓ! அவள் என் பெண்சாதி; வேறெருவரும் போகவில்லையே?" என்றான். சேவகன் "இல்லை" என்றான். சமையற்காரன் "அப்படியானால், நிருடன் அந்த வழியாகத்தான் போயிருக்கவேண்டும்" என்று என்னிடம்சொல்லித் திரும்பினான். எனக்குச் சந்தேகம் பலப்பட்டது. அன்றியும், எப்பொழுது என்னை அந்த வழியிற் போகவேண்டா மென்றானே, அப்போதே எனக்கு அவன் மீதே சந்தேகம் உண்டாகி விட்டது. நான், சேவகனை நோக்கி "அப் பெண் எந்த வழியில் திரும்பினாள்?" என்று கேட்டேன். அவன் "எனக்குத் தெரியாது. அவளைக் கவனிக்க வேண்டிய காரணம் ஒன்றுமில்லாததால் நான் கவனிக்கவில்லை. ஆனால், அப்பெண் மிக விரைவாகப் போனாள்" என்றான். நான் "எவ்வளவு காலிகை யிருக்கும்?" என்றேன். அவன் "இப்பொழுது தானேயா போனாள்" என்றான். சமையற்காரன் "எஜமானே! என் வீணைக் காலத்தைக் கழிக்கிறீர்கள்! என் பெண்சாதி ஒன்றும் செய்திருக்க மாட்டாள். வாரும்கள்; இல்லாவிட்டால், நானாவது போகிறேன்" என்று ஓடினான். உடனே நான் பின் தொடர்ந்து அவனுடைய வாசஸ்தலத்தைத் தெரிந்து கொண்டேன். பிறகு, நானும், போலீஸ் சேவகனுமாக அந்தத் தெரு முழுவதும் திரிந்து தேடினோம்; பயனில்லை. கடைக்குப் போய் எல்லா விடத்தையும் பார்த்தோம்; ஒரு அடித்தடமும் கிடையாது.

இரங்கநாதன்:—அன்று மாலை முதல் மழை பெய்ததல்லவா?

ஷண்முகநாதன் :—ஆம் ; எட்டுமணி முதற் பெய்தது.

இரங்கநாதன் :—அன்றிரவில் உம்முடைய அறைக்கு வந்த பெண் பிள்ளையின் காலிலுள்ள சேறு, எப்படி அங்கு விரித்திருந்த ஜமக்காளத்திற் படாம லிருந்தது ?

ஷண்முகநாதன் :—அந்த எண்ணம் எனக்கும் உண்டா யிற்று. ஆனால், எங்கள் கடைக்கு வருவோர் காலைக் கழுவித் துடைத்துக் கொண்டுதான் வருதல் வழக்கம். இதற்காகவே இரண்டு வாயில்களிலும் தொட்டியில் தண்ணீர் வைத்துள்ளோம். ஏனெனில், தரையில் விலையுயர்ந்த ஜமக்காளம் விரிக்கப்பட் டிருக்கிறது.

இரங்கநாதன் :—அன்று மாலையில் மழை பெய்தும், திருட னுடைய காலடித் தடமும் படவில்லை யென்றுகிறது. நிகழ்ந்த சங்கதிகள் ஆச்சரியத்தினும் ஆச்சரியமாயும், மனிதனுடைய அறிவுக்கு எட்டாததாயு மிருக்கின் றன ! அப்புறம் என்ன நடந்தது ?

ஷண்முகநாதன் :—பிறகு, நாங்கள் அந்த அறையையும் சோதித்தோம். வேறு திருட்டு வழி யிருப்பதற் கிட மில்லை. சாளரம் கீழே யிருந்து ஐந்தாறுயர மிருக் கிறது. ஆகையால், திருடன் முன் வாயிலின் வழி யாகவே வந்திருக்க வேண்டுமென்று தீர்மானித் தோம்.

இரங்கநாதன் :—அடுப்படியைச் சோதித்தீர்களா ?

ஷண்முகநாதன் :—அடுப்படி யென்று தனியாய்க் கிடை யாது. ஒரு இயந்திர அடுப்பு-(Stove)-த்தான் உப யோகிப்பது வழக்கம். அன்றியும், மணி யடிப்பதற் குரிய கயிறு, என் மேஜைக்குமேல் தான் தொங்கு கின்றது. அந்த மணியை யடிக்க வேண்டியவர்கள்

என் மேஜை யருகில் வந்துதான் அடிக்கவேண்டும். ஆனால், திருட வந்தவன் மணியை அடிப்பானேன்? அதுதான் எனக்கு முற்றிலும் விளங்கவே யில்லை.

இரங்கநாதன் :—நிசம்ப வியப்பாகத் தான் இருக்கிறது! சரி; வந்தவன், எதேனும் கருட்டுத் துண்டு, கைக் குட்டை, பொடி டப்பி முதலியன போட்டிருக்கலா மென்று தேடிப் பார்த்தீர்களா?

ஷண்முகநாதன் :—ஆம்; ஒன்றுங் கிடைக்கவில்லை.

இரங்கநாதன் :—புகைக் குடித்த வாசனையேனும் புலப்பட வில்லையோ?

ஷண்முகநாதன் :—நான் கவனிக்கவில்லை.

இரங்கநாதன் :—இத்தகைய விஷயங்களில் எல்லாம் சுருட்டு வாசனை மிக முக்கியமானதாயிற்றே?

ஷண்முகநாதன் :—ஒரு தடயமும் அகப்படவில்லை. சமை யற்காரன் பெண்சாதி, அந்தச் சமயம் அவசரமாக வந்தாள் என்பதைத் தவிர வேறு ஆதாரமே யில்லை. சமையற்காரனே, 'அதுதான் அவள் வழக்கப்படி வீட்டிற்குப் போகும் வேளை' என்கிறான். எனக்கும், போலீஸ் சேவகனுக்கும் அவளைப் பரிசோதிக்க வேண்டுமெனத் தோன்றிற்று. இதற்குள் போலீஸ் ஸ்டேஷனுக்கு விஷயம் எட்டிவிட்டது. வாதாசாரி யார் என்ற சப் இன்ஸ்பெக்டரும், இரண்டு சேவகர் களும் வந்தார்கள். அவரும், நானும் உடனே ஒரு வண்டி வைத்துக் கொண்டு, சமையற்காரனுடைய வீட்டிற்குச் சென்றோம். அப்பொழுது அவள் வீட் டிற்கு வரவில்லை. நாங்கள் அவளுக்காகக் கொஞ்ச நேரம் வரை காத்திருந்தோம். சில நிமிடங்கட்குப் பிறகு, யாரோ கதவைத் தட்டினார்கள். கதவு திறக் கப்பட்டவுடன் நாங்கள் போயிருக்க வேண்டியது;

தவறிவிட்டோம். சுமார் ஒருமணி நேரத்திற்குப் பிறகு அவள் வந்தாள். எங்களைக் கண்டவுடன் அவள் வெருண்டு வீட்டிற்குள் போய்விட்டாள். நாங்களும் பின்தொடர்ந்தோம். வேகமாய் முன்னே போய்க் கொண்டிருந்தவள், சடேரென்று திரும்பி, என்னைத் தெரிந்து கொண்டவளாய் "எஜமானே!" என்று வியப்புடன் கூவினாள். வரதாசாரியர், "வா; வா! மூன்றுற் சமையற் கட்டிற் கோடியபோது யாரென்று நினைத்தாய்?" என்றார். அதற் கவள், "கோபிக்க வேண்டாம்; சாமி! கடைக்காரரோ என்று நினைத்தேன்; அவர்கட்கு நான் பணங் கொடுக்க வேண்டும்" என்று களங்கமின்றி மொழிந் தாள். வரதாசாரியர், "அஃதெல்லாம் சரிப்படாது. நீ இவர்கள் கடையிலிருந்து ஒரு நகையைத் திருடி, அதை யொளிக்க வேண்டி இங்கு வந்தாயென்று நினைக்கிறோம்; ஆகையால், நீ எங்களுடன் ஸ்டேஷ னுக்கு வாவேண்டும்; உன்னைச் சோதிக்க வேண்டிய திருக்கிறது. தெரிகிறதா?" என்றார். நான், அவ் வீட்டின் மூலை முடுக்கெல்லாம் தேடிப் பார்த்தேன்; நகை யிருப்பதாகத் தோன்றவில்லை. பிறகு, ஸ்டேஷ னுக்குப் போய், பெண்களைச் சோதிப்பவரிடம் அவளை ஒப்பித்தோம். கொஞ்ச நேரத்திற்குப் பிறகு, "ஒன்றும் பலிக்கவில்லை" என்ற பதில் வந்தது. அப்பொழுது தான் என்னிலைமை யெனக்குத் தெரிந் தது. அதுகாறும், அங்கும் இங்கும் ஓடிக்கொண்டு திரிந்தபடியால், வரும் தீங்கைப்பற்றி நினைக்கவே யில்லை. ஏதோ, நகை அகப்படுமென்று கருதினேன். இனிச் செயலில்லாமற் போய்விட்டபடியால், அந்த நகையின் முக்கியமும், சுந்தரேசன் செட்டியார் ஜாக்

சேதையாக வைக்கும்படி சொன்னதும், அது போல தால் ஜமீன்தாருக்கு ஏற்படும் கஷ்டமும், எனக்கும், சுந்தரேசன் செட்டியாருக்கும் உண்டாகும் மானக் கேடும் தெளிவாகப் புலப்பட்டன. அவசரப்பட்டுப் போய்விட்டால், யார்தான் சமாதானம் பண்ண இயலும்? இந்த எண்ணங்கள் தோன்றியவுடன் என் மனம் உடைந்துவிட்டது. உணர்ச்சியேயில்லை. நான் இன்னது செய்தேனென்றே யெனக்குத் தெரியாது. பிறகு, கடையிலுள்ள சிலர் வந்து, என்னை வண்டியில் வைத்து இங்குக் கொண்டு வந்தார்களாம். நான் இங்கு வந்தபோது முழுப் பைத்தியக்காரனாகவே யிருந்தேனும். பொன்னுசாமித் தேவர், ஒரு வைத்தியரை அழைத்து வந்து வெகு பிரயாசையுடன் பார்த்தார்களாம். கடையிலுள்ளவர்கள், என்னுடைய படுக்கையறை தெரியாமல் அவசரத்தில், பொன்னுசாமி தேவருடைய இப் படுக்கையில் என்னைக் கிடத்தி விட்டார்கள். குமாரசாமியே பணிவிடை செய்து வந்தான். இன்றுதான் சரியான ஞாபகம் உண்டாயிற்று. நினைவு சரியானதும், வாதாசாரியருக்கு ஆளனுப்பி வர வழைத்தேன். அவர், "வெகு சிரமப்பட்டுப் பயனடைய வில்லையென்றும், அந்தச் சமையற் காரனையும், அவன் மனைவியையும் பலவிதத்திலும் சோதித்து விட்டோமென்றும், அன்றிரவு நெடுநேரம் வரை வேலை செய்துகொண்டிருந்த பார்த்தசாரதி ஐயங்கார் மீதும் ஐயம் உண்டாகவே, அவரையும் சோதித்தாகிவிட்டது" என்றும் சொல்லிப் போய் விட்டார். பிறகு, வேறு கதியில்லாமல் தங்களை வர வழைத்தேன். நீங்களுங் கைவிட்டால், என் மானம் போய்ப் பரிதபிக்கும்படி நேரிடும்.

இரங்கநாதன் :—தாங்கள் சொல்லி வந்த சங்கதியை நான் தெளிவாகக் கேட்டுக்கொண்டேன். இனி, நான் விபரமாய்க் கேட்க வேண்டியதில்லை. ஆனால், ஒரே யொரு கேள்வி கேட்கிறேன் : நீங்கள் இந்தகை வாங்கப் பெற்றதை யாவரிடமும் சொன்னீர்களோ ?

ஷண்முகநாதன் :—ஒருவரிடமுஞ் சொல்லவில்லை.

இரங்கநாதன் :—ஆனால், பொன்னுசாமித் தேவரிடமும் சொல்லவில்லையோ ?

ஷண்முகநாதன் :—நான் தகை வாங்கிய பிறகு அவரைப் பார்க்கவேயில்லை.

இரங்கநாதன் :—உங்களைச் சேர்ந்தவர் யாரும் வரவில்லையே ?

ஷண்முகநாதன் :—கிடையாது.

இரங்கநாதன் :—தங்களைச் சேர்ந்தவர் யாருக்காகினும் அவ் வறைக்கு வரத் தெரியுமா ?

ஷண்முகநாதன் :—ஆம் ; எல்லாரையும் அழைத்துப் போயிருக்கிறேன்.

இரங்கநாதன் :—தாங்கள் இதைக் குறித்து ஒருவரிடமுந் தெரிவிக்காதிருந்தால், இக்கேள்வியே தேவையில்லை.

ஷண்முகநாதன் :—நான்தான் ஒருவரிடமும் சொல்ல வில்லையே !

இரங்கநாதன் :—சமையற்காரனைப்பற்றி எதாயினுந் தெரியுமா ?

ஷண்முகநாதன் :—அவன் நீண்ட நாளாக எங்கள் கடையிலிருப்பவன் ; மிக நம்பிக்கையானவன் ; அவ்வளவு தான் தெரியும்.

இரங்கநாதன் :—சரி ! மற்ற சங்கதிகளை நான் வரதாசாரியரிடங் கேட்டுத் தெரிந்து கொள்கிறேன்.—

என்று கூறிவிட்டு, அங்குச் சுவரில் வைக்கப்பட்டிருந்த "மோகினி" படத்தைப் பார்த்து, "ஆகா !

எவ்வளவு அற்புதமான வேலை! வசந்த காலத்தில் மரங்கள் தழைத்திருப்பதும், ஒரு மரத்தின் இலையில் ஊஞ்சல் கட்டித் தொங்குவதும், அதில் மோகினி மிகுந்த உல்லாசத்துடன் உட்கார்ந்து ஆடுவதும், இளந் தென்றலினால் அவளுடைய கூந்தல், எற்கெனவே சிறிது அசைந்து கொண்டிருந்த போதிலும், ஊஞ்சல் ஆடும் வேகத்தினால், தன்னுடைய தலைவி ஊசலில் உட்கார்ந்து ஆடி மகிழ்வதைக் கண்டு தானும் மிகுந்த மகிழ்ச்சி கொண்டதைப் போல், வெற்றி கொண்ட மன்னர்களின் கோட்டை மதில் மீது கம்பீரமாய்ப் பறந்து கொண்டிருக்கும் வெற்றிக் கொடிகளை யொப்ப நாலா பக்கத்திலும் பரவிப் பறப்பதையும், கச்சணியப்படாத அவளுடைய மார்பை விட்டுப் பிரியவும் மன மில்லாமல், அந்தத் தென்றற் காற்றை அதுபவியா திருக்கவும் மன மில்லாமல் அவளுடைய மார்ச்சீலை சிறிது விலகுவதும் மறு படியும் மூடுவதுமாக அசைந்துகொண் டிருப்பதையும், ஒரு பக்கத்துள்ள ஊசற் கயிற்றின் உட்புறமாக ஒரு கையையும், மற்றொரு பக்கத்துக் கயிற்றின் வெளிப்புறமாக ஒரு கையையும் தூக்கியபடியே கொடித்துப் பிடித்திருப்பதால் அவளுடைய அழகிய கரங்களில் பச்சை இளநரம்புகள் தோன்றுவதையும், எவ்வளவு உண்மையாகவும் பொருத்த மாகவும் இராஜாரவி வர்மா எழுதியிருக்கிறார்! சித்திரத்தின் மாண்பே மாண்பு!" என்று வேதாந்தம் பேசத் தொடங்கினார். இவரது விளையாட்டுச் செயல் ஷண்முகதாசனுக்கு மிகுந்த வெறுப்பை உண்டு பண்ணிற்று. சுமார் அரை மணி நேரம் வரை யாவரும் ஒன்றுகூடப் பேசாமல் மௌனமாக விருந்தனர். பிறகு இரங்கநாதன், ஷண்முகநாதனை நோக்கிக் கனவு நிலையிலிருந்து விழித்தவர் போல், "வைரமாலை திருடப்பட்ட நாளில் நீங்கள் எங்கேயாவது போவதாகத் தீர்மானித் திருந்தீர்களா?" என்று கேட்டார்.

ஷண்முகநாதன் :—ஆம் ; நானும், எனது நண்பர் பொன்னுசாமித் தேவனும் "மனோகரன்" நாடகம் பார்க்கும் பொருட்டுப் போவதாக எண்ணியிருந்தோம். போகும் சமயம் என்னை அழைப்பதாகக் கூறியிருந்த அவர் அன்று மாலை வரையில் வரவே யில்லை. எனக்குத் திடீரென்று இந்தக் கவலை யுண்டாகி விட்ட படியால் நான் பிறகு அதைக் கருதவில்லை—என்றான்.

இதைக் கேட்ட இரங்கநாதன், அதைக் கவனிக்காதவர் போல் ஏதோ ஆழ்ந்த சிந்தனையி லிருந்தார். வெளியில் உலவிக் கொண்டிருந்த பொன்னுசாமித் தேவர், இரங்கநாதனை நோக்கி, "இது வெளி வருமென்று நம்புகிறீர்களா?" என்று கேட்டார்.

இரங்கநாதன் :—இது பெரிய மர்மமானதாயினும், என்னைக் கூடியவரையிற் கவனித்துத் தோன்றுவதைச் சொல்லுகிறேன்.

பொன்னுசாமித் தேவர் :—ஏதேனும் ஆதாரமிருக்கின்றதா?

இரங்கநாதன் :—செட்டியார் சொன்னதிலிருந்து ஏழு சங்கதிகள் தோன்றுகின்றன. அவைகளை ஒவ்வொன்றாய்ச் சோதித்துத் தெளியவேண்டும்.

பொ. தேவர் :—யாரையாவது சந்தேகிக்கிறீர்களா?

இரங்கநாதன் :—என்னிடத்தில்தான் எனக்குச் சந்தேகம்.

பொ. தேவர் :—எவ்விதம்?

இரங்கநாதன் :—இவ்வளவு விரைவில் முடிவிற்கு வந்துவிடலாமா என்பதுதான். ஏனெனின், காரியம் அத்தகையது.

பொ. தேவர் :—ஆனால், வீட்டுக்குப் போய்த்தான் தெளிய வேண்டும் போலும்!

இரங்கநாதன் :—ஆம்; இது மிக எளிதானதன்று; என் மூளையின் முழுப் பலத்தையும் போட்டு வேலை செய்ய வேண்டும்.

ஷண்முகநாதன் :—நான் விரைவில் மறுபடியும் தங்களைப் பார்த்தல் வேண்டும். நீங்கள் அவசியம் கண்டுபிடித்து விடுவீர்களென்று எனக்கு நம்பிக்கை யுண்டாகி விட்டது.

இரங்கநாதன் :—நான் என்ன செய்யலாம்? திருவருட் செயல்!

ஷண்முகநாதன் :—அதுதான் பொதுவாயிற்றே; வேப்பேரிச் * செல்வராஜ முதலியாரின் கொலையைக் கண்டு பிடித்த தங்கட்கு இஃதொரு பெரிய காரியமா? நீங்கள் முடியாதென்றால் வேறு யாரை நம்புவது?

இரங்கநாதன் :—இன்னும் சில நாட்களில் முடிவு சொல்லு கிறேன். நீங்கள் மாத்திரம் சிறிதும் கலக்கமில்லாமல் தைரியமா யிருங்கள். எந்தவிதத்திலும் கவலையைத் தங்களிடம் ஒப்பித்துவிடுகிறேன்.

ஷண்முகநாதன் :—இவ்வளவு சொன்னதே போதும்! ஒரு சங்கதி மறந்துவிட்டேன். சற்று கோபத்திற்குமுன் சுந்தரேசன் செட்டியார் இங்கு வந்து சிறிதுநேரம் பேசிக்கொண் டிருந்தார்.

இரங்கநாதன் :—அப்பொழுது என்ன கூறினார்?

ஷண்முகநாதன் :—என் உடம்பின் நிலை தெரிந்தவரதலின், கடுமையாக வொன்றும் கூறவில்லை. தலைபோகிற

---

* இந்நூலாசிரியரால் எழுதப்பட்ட "காந்திமதி" என்ற வரலாற்று நற்றமிழ்க் கதையை வாங்கிப் படிக்க வேண்டு கிறோம். விலை ரூபா 2. கிடைக்குமிடம்:

சன்மார்க்க சபை, மேலைச்சிவபுரி. (மணப்பாறை வழி)

காரியமென்றும், நோய் தீரும்வரை இதைக் குறித்துச் சிந்தனை செய்யவேண்டா மென்றும் சாந்தமாகக் கூறிச் சென்றார்.

இரங்கநாதன் :—சரி ; அதுதான் முறை—

என்று கூறிவிட்டுக் கோவிந்தசாமி பிள்ளையை நோக்கி, "இனி நாம் போவோம்" என்றார். உடனே இருவரும் விடை பெற்றுக்கொண்டு இரங்கநாதனுடைய வீட்டை நோக்கிப் புறப்பட்டனர். வண்டியிற் போகும்போது இருவரும் சிறிதுநேரம் மௌனமாக விருந்தனர். பிறகு, இரங்கநாதன், கோவிந்தசாமி பிள்ளையை நோக்கி, "தங்கட்குத் தெரிந்தவரையில், செட்டியார் ஏதேனும் குடிவகை யுபயோகிப்பது உண்டோ ?" என்று வினவினார்.

கோவிந்தசாமி பிள்ளை :—எனக்குத் தெரியவில்லை. இருக்கலாம் !

இரங்கநாதன் :—என் கருத்தும் அதுதான். இத்தகைய சங்கதிகளில் எல்லாம் உறுதி தெரிந்துகொள்ளுதல் நலம். பாபம் ! செட்டியார் மிகுந்த துன்பத்தி லகப்பட்டுக்கொண்டு தவிக்கிறார் ! அதினின்று அவரைத் தப்புவிப்பது தெய்வப் பிரயத்தனமென்றே கருதுகிறேன். சரி ; பொன்னுசாமித் தேவரைப் பற்றியாது கருதுகிறீர் ?

கோவிந்தசாமி :—எனக்குத் தெரிந்தவரையில் அவர் நல்லொழுக்கம் உடையவர்தான் ; ஏதோ ஆதாரமிருப்பதாய்ச் சொன்னீர்களே ?

இரங்கநாதன் :—ஒன்றுதானா ? அநேகமிருக்கின்றன. ஒவ்வொன்றையும் ஆராய்ந் தன்றே தெளிதல்வேண்டும் ? நகையை ஜமீன்தார் திருடியிருக்கமாட்டார். வேறு யாரேனும் பரிசுபெறும் பொருட்டே திருடியிருத்தல்

கூடும். இனிச் சுந்தரேசன் செட்டியாரையும் விசாரித்தல் வேண்டும்.

கோவிந்தசாமி :—சுந்தரேசன் செட்டியாரா !

இரங்கநாதன் :—ஆம் ; அதனல் ஏதேனும் புலப்படலாம்.

கோவிந்தசாமி:—திருடன் வண்டியில்தான் வந்திருப்பானே?

இரங்கநாதன் :—இல்லாவிட்டால், ஷண்முகநாதன் செட்டியார் மொழிந்தபடி அந்த அறையிலும், கூடத்திலும் ஒளிந்துகொள்ள இடம் இல்லாதிருந்தால், திருடன் வெளியிலிருந்தே வந்திருக்க வேண்டும். வெளியிலிருந்து வந்தானுகில் கால் சுவடு இருக்கவேண்டும். திருட வந்தவன் காலைக் கழுவிக்கொண்டு வந்திருக்க மாட்டான். அடிச்சுவடு இல்லையென்றல்லவா செட்டியார் கூறுகிறார் ; ஆகவே, வந்தவன் வண்டியில்தான் வந்து போயிருக்க வேண்டுமென்பது என் தீர்மானம்.

கோவிந்தசாமி :—ஆம் ; அது சரிதான்.

இரங்கநாதன் :—அஃதொன்று ; இரண்டாவது, அந்த மணிச் சப்தம். அதுதான் முக்கியமானது. மணியேன் அடிக்கவேண்டும் ? திருடன் தன் சாமர்த்தியத்தைக் காட்ட வந்தானே ? அல்லது திருடனுடன் இருந்தவன் திருட்டைத் தடுக்க அடித்தானே ? அல்லது, தற்செயலாய் அடிக்கப்பட்டதோ ? போகப் போகப் பார்ப்போம்—

என்று மேலும் கூறுவதற்குள் வண்டி வீட்டின்முன் நிறுத்தப்பட்டது. இருவருங் கீழே யிறங்கினர். கோவிந்தசாமி பிள்ளை, விடை பெற்றுக்கொண்டு செங்கற்பட்டுக்குச் சென்றார்.

எட்டாவது அதிகாரம்.

இதுவோ காமத் தியற்கை!

கடவுள் மனிதர்கட்கு ஏராளமான பொருள்களைக் கொடுத்து, அவர்கள் மூளையைப் பதிலுக்கு வாங்கிக் கொள்கிறார் என்பதை நாம் உலகானுபவத்திற் பார்த்திருக்கிறோம். இக்காலத்தில் படிப்பும் இல்லாமல், அறிவும் இல்லாமல் பணத்தை மாத்திரம் வைத்துக்கொண்டு அட்டகாசஞ் செய்யும் சில மாக்களுடைய செயல்கள் எப்படியிருக்கின்றனவோ, அப்படியேதான் ஷண்முகநாதனுடைய செயல்களும் இருந்தன. அஃதாவது: தன்னுடைய பணத்தின் உதவியினால்—செல்வச் செருக்கினால்—எத்தனை பெண்களைக் கற்பழிக்க முடியுமோ, அத்தனை பெண்களைக் கற்பழித்தான்! எவ்வளவு தூரம் மதுபானங்களை அருந்த முடியுமோ, அவ்வளவு தூரம் அருந்தி இன்புற்றான்! சூதாட்டத்தில் எவ்வளவு தூரம் தன் காலத்தைச் செலவு செய்ய முடியுமோ, அவ்வளவு தூரம் செலவு செய்து கணக்கற்ற பணத்தை யிழந்தான்! இவ்விதம் காமமும், சூதும், குடியும் அவன் வாழ்நாளைப் பாழ்நாளாகச் செய்து வந்தன. இவ்வளவு தான் அவன் பணக்காரனதால் பெற்ற இம்மைப் பயன்—மறுமைப் பயன் வேறு இருக்கின்றது! அதைப்பற்றி நாம் சொல்வானேன்! கடவுள், மனிதனுடைய நன்மைக்காகவும், சுகத்துக்காகவும் இந்த உலகத்தைத் தோற்றுவித்தார். விரிந்த நீல வானத்தின் நடுவே, சிறந்த மண்டபத்தின் மத்தியில் தொங்கும் விளக்கைப்போல், விளங்கிக்கொண்டிருக்கும் இயற்கைப் பெருவிளக்காகிய சூரியனைப் பார்க்கும்போதும், அகன்று பரந்து அலைகளை வீசி யெறிந்துகொண் டிருக்கும் சமுத்திரத்

தைக் கண்ணுறும் போதும், மரங்களும், செடிகளும் நிறைந்து வானளவோங்கி நிமிர்ந்திருக்கும் மலையினை நோக்கும்போதும் அக்கடவுளின் பேராற்றலும், பெருங் கருணைத் திறனும் தெள்ளிதிற் புலப்படுகின்றனவன்றே? அவர் இவைகளிலெல்லாம் வசிக்கின்று சென்பதும், அவருடைய இயற்கை விளக்கம் இவைகளிலெல்லாம் பிரதிபலிக்கின்றன என்பதிலும் யாது தடை? கடவுள் இவைகளெ யெல்லாம் மனிதனுடைய நன்மைக்காகவும், சுகத்திற்காகவுமே உண்டாக்கி யிருக்கிறார்! ஆனால், மனிதர் அகக்கண்ணற்ற மூடர்களா யிருக்கிறார்கள்! ஆதலால், அவர்கள் கடவுளைக் காட்டிலும் தம்மையே மேலெனக் கருதிச் சிரழிகின்றனர்! புகழ், செல்வம், அதிகாரம், கௌரவம் முதலிய சிறந்த பட்டினங்களை யடைய இரண்டு வழிகள் உண்டு; ஒன்று அறநெறி; மற்றொன்று மறநெறி. அறநெறி, சிறிது நீண்டதாயும், நிறைவாயும் உள்ளதாகையால், மனிதர்களை அந்த நகரங்களிற் கொண்டுபோய்ச் சேர்க்க வல்லதாயும், மறநெறி, குறுகியதாகையால் நரகத்திற் கொண்டுபோய்ச் சேர்க்க வல்லதாயும் இலங்குகின்றன. சின்னட் பல்பினைச் சிற்றறிவுடைய மனிதர்கள் இந்த உண்மையை உணராமல், பொருளையும், புகழையும், அதிகாரத்தையும், செல்வாக்கையும் நியாயமான வழிகளில் அடைய முயல்வதைக் காட்டிலும், அநியாயமான வழிகளில் சென்று அடைய முயலுதல் எளிது என்றும், விரைவில் நிறைவேறு மென்றும் கருதுகிறார்கள்! ஆனால், தாங்கள் செல்லும் அதர்மநெறி, அந்த நகரங்களிற் கொண்டுபோய் விடாதென்பதையும், ஒருகால் விட்டாலும் அந்த நகரங்கள் தங்களை யேற்றுக்கொள்ளா தென்பதையும் அவர்கள் உணர்கின்றார்களில்லை. ஒரு திருடனுக்குக் களவாடியும், வழிப்பறி செய்தும் திரட்டிய செல்வம், நியாய வழியில் சம்பாதித்த சிறிய பொருளைப்போல்,

மகிழ்ச்சியைக் கொடுப்பதில்லை; ஒருவனுக்குப் பரஸ்திரீ மனத்தால் அடைந்த இன்பம், உண்மைக் காதலோடிருக்கும் இல்லாளுடன் அநுபவிக்கும் சுகத்தைக் காட்டிலும் சிறந்ததாக விருப்பதில்லை; மக்களைத் துன்புறுத்தி அவர்களுடைய பொருளினால் உன்னதமான அரண்மனையையும், விலையேறப்பெற்ற சிம்மாசனத்தையும் ஏற்படுத்திக்கொண்டு வாழும் ஒரு அரசனுக்கு எட்டுணையும் நிம்மதியான சுகம் கிடைப்பதில்லை. சிலர், தங்களைத் தாங்களே பெரிய அறிஞராகப் பாவித்துக்கொண்டு, "அறமெறிக்கு இது காலமன்று" என மிக வெளிதாகக் கூறிவிடுகிறார்கள்! நல்ல காரியத்திற்கு இந்த வுலகத்தில் இத்தப் பிறப்பில் பலன் ஏற்படாவிட்டால், எப்போதுமே யேற்படாதெனக் கூறுதல் அறியாமையின் பாலதாகும்! அதே மாதிரி கொடிய குற்றவாளியொருவன், இந்த உலகத்தில் தண்டனை யடையாமல் தப்பித்துக் கொண்டால், பிறகு அவனுக்கு எப்போதுமே தண்டனை யில்லையென்று நினைப்பது தவறேயாகும். மனிதன் செய்கின்ற ஒவ்வொரு காரியமும்—அந்தக் காரியம் நல்லதா யிருப்பினுஞ் சரியே; கெட்டதா யிருப்பினுஞ் சரியே—இந்த உலகத்திலோ, அல்லது வேறு உலகத்திலோ, இந்தப் பிறப்பிலோ, அல்லது வேறு பிறப்பிலோ மிக விரைவாகவோ, அல்லது மிக மெதுவாகவோ, ஒரு பலனை அளிக்காமற் போகாது. மனிதன் செய்கின்ற எத்தகைய செயலும் வீண்போவதில்லை! இவ்வுண்மையை உணராமல் "கண்டதே காட்சி; கொண்டதே கோலம்" என நினைத்து மனம்போனபடி யொழுகும் மனிதர்கள் எவ்வளவு அறிவீனரா யிருத்தல்வேண்டும்? நமது ஷண்முகநாதன், செல்வம் மாத்திரம் இருந்துவிட்டால், சுகமாயிருக்கக் கூடுமென்று தன் அறியாமையாற் கருதினான்; கடவுள், ஏராளமான பொருளையும், செல்வாக்கையும், அதிகாரத்தையும்

அவனைச் சோதிப்பதற்காகக் கொடுத்தார். ஆனால், அவன் அவைகளை முறை பிறழ்ந்த வகைகளில் உபயோகித்து இன்புற்றான்! அவன் தன்னுடைய செல்வத்தைக்கொண்டு ஏதாவது ஒரு நல்ல காரியஞ் செய்தானா? இல்லை! குலமாத ரடைய கற்பை யழித்து, அவர்களுடைய இல்லற வாழ்க் கையைக் கெடுப்பதற்கும், விலைமாதர்கட்குப் பெரும் பொருளைக் கொடுத்து அவர்களைக் கூற்றினுங் கொடிய பெண்பேய்க ளாக்குவதற்கும், குடிகாரரையும், சூதாடி களையும் அதிகப்படுத்துவதற்கும் அவன் செல்வம் பயன் பட்டதே தவிர வேறில்லை! கோடிக்கணக்கான ஏழை எளியவர்கள் சோற்றுக்கும் துணிக்கும் வழியில்லாமற் கஷ்டப்படுகிறார்களே; அவர்கட்கு ஏதாவது உதவி செய் தானா? ஏழைப் பிள்ளைகள் படிப்பதற்கு ஒரு கலாசாலையை நிறுவினானா? அறச்சாலை, வைத்யசாலை முதலிய உபயோக முள்ள தருமம் ஏதாவது செய்தானா? இல்லை! இந்த வுலகத் தில் அவனிடமிருந்த பெருஞ் செல்வத்தைக்கொண்டு அவன் செய்த அதருமச் செயல்கள் எண்ணிலடங்கா!

சென்னை முழுவதும், இன்று கருணாநந்த நாடகக் கொட்டகையில் "கோவலன் சரித்திரம்" மிகுந்த விமரிசை யாக நடத்தப்படும் என்ற பேச்சாகவே யிருந்தது. மாதவி யாக வந்து நடிக்கப்போகும் கமலவேணி யென்ற பெண் ணணங்கு எப்படி யிருப்பாளோ, அவள் அழகு எத்தகை யதோ! என்று ஜனங்கள் எண்ணி யெண்ணி மகிழ்ந்தனர். அன்று காலை எட்டு மணிக்கே கிழக்கண்டவாறு அச்சடிக்கப் பட்ட விளம்பரங்கள் ஆயிரக்கணக்காகத் தெரு முழுவதும் வழங்கப் பெற்றன :—

இன்றிரவு ! இன்றிரவு !!

நாடகப்பிரிய நண்பர்களின் பாக்கியம் !

கோவலன் சரித்திரம்.

இன்றிரவு ஒன்பதுமணி முதல் மேற்கண்ட சரித்திரம் நடத்தப்படும். தாசி மாதவியாக வந்து நடிக்கும் கோகர் ஜான் சங்கீத கானலோல ஸ்ரீமதி கமலவேணி என்ற பெண் மணியின் அபார திறமைவாய்ந்த நடிப்பு அவசியம் பார்க்கத் தக்கது. டிக்கட்டுக்கு முந்திக்கொள்ளுதல் கலம். பிந்தி னால் இடங்கிடைப்பதரிது. பிறகு எம்மீது குறை கூறக் கூடாது.

S. நாராயண நாயுடு, புரோப்ரைட்டர். } P. ஆனந்த கிருஷ்ணையர், ஸ்டேஜ் மானேஜர்.

அன்று மாலை ஏழு மணி யிருக்கலாம். கருணாநந்த நாடகக் கொட்டகையில் எள் விழ இடமில்லை. ஜனங்கள் கணக்கின்றிக் கூடி விட்டனர். கொட்டகையின் உட்பக்கம் முழுவதும் இரைச்சலும், குதூகலமுமே காணப்பட்டன. மண், பெண், பொன் என்ற மூவாசைப் பேய்கள் முற்றிலும் வெறிகொண்டு, கோபம், மோகம், உலோபம், மதம், சண்டை, பொறுமை, நட்பு, துயரம், தரித்திரம் முதலிய பல்வகைப்பட்ட தூர்க்குணங்களோடு நடனஞ் செய்யும் நாடக மேடையாகிய இவ் வெளியுலகத்திற்கு மாறாக, அந்த நாடகக் கும்பலாகிய சிறிய உலகம் மகிழ்ச்சியே நிறைந்த தாகக் காணப்பட்டது. மிகவும் விசாலமான அந்தக் கூடத் தில் எங்கும் விண்மீன்களைப்போன்று, [சரம் சரமாகத் தொங்கிய சிறிய மின்சார விளக்குகளின் ஒளி கோடிசூரியப்

பிரகாசமாக விளங்கியது. பல நிறங்களையுடைய கடுதாசி களால் அழகாகச் சித்திரிக்கப்பட்ட தோரணங்களும், பூக் களும், வானவிற்களோ, இந்திரன் சபையோ, அல்லது கந் தருவர் உலகத்தில் மன்மதனும், இரதியும் கொலுவிருக்கும் மண்டபமோ எனத் தோன்றிக் காண்போர் மனதையும், கண்களையுங் கவர்ந்தன. ஆயிரக் கணக்காக வரிசை வரிசை யாகப் பரப்பப்பட்ட வழு வழுப்பான தாற்காலிகள் லெல் லாம் எங்குப் பார்த்தாலும் வைரக் கடுக்கன்களும், வைரப் பதக்கங்களும், ஜரிகைகளும், பட்டாடைகளும் நிறைந்து தோன்றின. இந் நாடகம் பார்க்கும் பொருட்டுப் புது தாகரீக உடை யணிந்த பல பெண்மணிகள், தங்கள் கணவ ருடன் கைகோர்த்த வண்ணம்,

"மானினம் வருவபோன்றும், மயிலினந் திரிவபோன்றும்,
மீனின மிளிரல்வானின் மின்னின மிடைவபோன்றுந்,
தேனினம் பம்பியார்ப்பச் சிலம்பினம் புலம்பவெங்கும்
பூநனை கூந்தன்மாதர் பொம்மெனப் புகுந்துமொய்த்தார்"

இசாவ்பகதூர்ப் பட்டம் பெற்றவர்களும், திவான்பகதூர்ப் பட்டம் பெற்றவர்களும், வக்கீல்களும், பெரிய அதிகாரி களும், அலங்காரப் பிரியர்களும், காமவிடர்களும், இசாப் பட்டினித் திசைய முடையவர்களும், மனதைக் கவரும் இன்ப வடிவுபெற்ற பெண்டிரும், ஆடவர்களும், சிரித்த முகமும், இனித்த சொற்களுமாகக் காணப்பட்டு இன்ப வெள்ளத்தில் மிதந்துகொண் டிருந்தனர். ஆனால், அந்த வெளி மயக்கமான கூட்டத்தில் நுழைந்து, அவர்களது அந்தரங்க மேனி நிலையை ஆராயப் புகுந்தால், அங்கு உண்மையான மகிழ்ச்சியும், திருப்தியும், சாந்தமான அமைதியும், இருக்கக் காண்பது மாத்திரம் சந்தேகம். தாங்கள் உண்மையில் பரம ஏழைகளாக விருக்கிறோ மென்பதை அறவே மறந்து, தாங்கள் பெரிய முதலாளிகள்

என்ற எண்ணத்தைப் பிறர் மனதில் உண்டாக்கும் பொருட்டு ஜரிகை வேஷ்டிகளும், பட்டுச் சட்டைகளும், பெரிய தலைப்பாகைகளும் அணிந்திருந்தார் பலர்; மிகக் கொடிய பொறுமையும், கவலையுங் கொண்ட தங்களது மனதை வெளியிற் காட்டாமல் மறைக்கும் பொருட்டுப் புன்னகை புரிந்தார் பலர்; மல்லிகை, உரோஜா, முதலிய மலர்களும், வைர அணிகளும் நிறைந்த தலைகளுள் பித்தமும், பேதமையும், துர்க்குணங்களும், வெறியும் நிறைந்திருக்கப் பெற்றவர் எண்ணிலர். வேறு பலரிடத்தில் விலை மதிப்பற்ற பதக்கங்களும், முத்து மாலைகளும், வைரச் சரங்களும் அழகு செய்த நெஞ்சினுள், பல வகைப்பட்ட மோக விகாரங்களும், சதியாலோஜனைகளும் கொந்தளித்துக் கொண்டிருந்தன. புது நாகரீகத்தில் மூழ்கிய பலர், தங்கள் முகங்களில் வெண்மையான மாவை (Face Powder) அழகாகப் பூசி மினுக்கேற்றிக், காண்போர் கண்கட்கு விருந்தாயமர்ந்திருந்தனர்.

முதல் வரிசையிலிருந்த நாற்காலிகளில் பெருத்த பிரபுக்களும், அநேக வாலிபர்களும் நிறைந்து கம்பீரமாக உட்கார்ந்திருந்தனர். அவர்களின் நடுவண் நமது ஷண்முக நாதனும், பொன்னுசாமித் தேவரும் அமர்ந்திருந்தனர். அவர்கள் வாவிட்டால், நாடகம் சிறப்புறுதல் எப்படி? அச்சில்லாமல் தேரோடுதல் இயலாதன்றே? ஆங்குக் கூடியுள்ள ஜனங்கள் வருவதற்கு ஒரு மணி நேரம் முன்னேயே நமது நண்பர்கள் வந்துவிட்டனர். உட்புறத்தில் நிற்கவும் இடம் இல்லை யென்பது தெரிந்தும், நாடகக்காரர் மேன்மேலும் பணத்தை வாங்கிக்கொண்டு ஜனங்களை உள்ளே தள்ளிக்கொண்டேயிருந்தனர். ஆகையால், எலி நுழைய இடமில்லாத மூலைமுடுக்குகளிலெல்லாம் ஜனங்கள் அடங்கி யொடுங்கி நின்றனர். சிலர், நாடகராணியாகிய

கமலவேணியை மாத்திரம் பார்த்தாற்போது மென்று தலையை மாத்திரம் ஒட்டகம் போல நீட்டிப்பார்த்துக் கொண்டு நின்றனர். சிலருக்குக் கால், கைகள் நகுங்கின; சில பெண்டிரின் கால் வீரல்களொடித்து போயின. சிறிது தாமதமாக வந்த சில கிழவர்கள், அவசரமாக உள்ளே நுழையும்போது பின்னல் நின்றவர்கள் அவர்களது குடுமியைப் பிடித்து இழுத்ததால், அக் குடுமி அவர்கள் கையோடு போய்விட்டது. பாபம்! வலி பொறுக்க முடியவில்லையானலும், இனிப் பார்க்கப்போகும் ஆனந்த மயமான நாடகத்தை நினைத்து வாய் பேசாமல் இருந்தனர். புதிதாக முறுக்கேற்றி மல்லிகை மலர்போல் சலவை செய்யப்பட்ட சட்டைகள் நெருக்கடியில் சக்கை சக்கையாகக் கிழிந்து கோபித்துக்கொண்டு பல இடங்கட்கும் போயின. ஜரிகைத் தலைப்பாகைகளும், மேலாடைகளும் கீழே விழுந்து காலால் துகைந்தன. சிகரெட்டுப் புகையின் மணமும், மூச்சு விடுவதின் கொதிப்பும், நெருக்கத்தினு லுண்டாகிய வியர்வைச் சேறும் ஒன்றுகூடி, அது நரக வேதனையோ, கொடுஞ் சூடோ என்ற சந்தேகத்தை யுண்டாக்கிற்று. இத்தகைய விசாதங்கட் கிடையில் கோவலன் சரித்திரம் தொடக்கமாயிற்று. மாசன் அம்பு பாய்வதுபோல, ஒவ்வொரு நடிகர்களுந் தோன்றி, தேவாமிர்தம் போன்ற இனிய பாக்களைச் சிறந்த இராகங்களில் திறமையுடன் பாடிச் சபையோரை இன்பக் கடலுள் ஆழ்த்தினர். இறுதியாகக் கமலவேணியென்ற பெண்ணரசி, தாசிவேடம் பூண்டு நடிப்பதைக் கண்ட ஜனங்கள், திறந்த வாய் திறந்தபடி வாயில் ஈ நுழைந்தாற்கூட தெரியாத அவ்வளவு சித்தையுடனும், அடக்கமுடியாத ஆசையுடனும், கரை கடந்த ஆனந்தத் துடனும் கைகொட்டித் தங்கள் மகிழ்ச்சியின் பெருக்கைக் காட்டினர். அம் மங்கை நல்லாள், வரும்போதே யாவரும்

கேட்டு மயங்கும் வண்ணம் தியாகராஜ ஹ்ருதி யொன்றை, பன்னீர்த் துளி உதிர்வது போல இன்ப ரசமாகப் பாடிக் கொண்டு வந்தாள். அம்மாது, பொற் சரிகை விளிம்புடன் ஒளி வீசும் வெண்பட்டாடையை உடுத்துக்கொண்டும், வைரம், வைடூரியம், பச்சை, சிவப்பு முதலிய கற்கள் இழைத்த அணிகளைப் பூண்துகொண்டும், கஸ்தூரியும், புனுகும் சேர்த்துக் கரிய கூந்தலில் தடவிக் கொண்டும், உறுப்புத் திருத்தி, மயிலென நடந்து கிளி யெனப் பேசி, மிகுந்த உல்லாசத்துடன் அரங்கில் வந்த அக் கட்டழகி யைக் கண்டவுடன், காரிருளில் மின்னல் தோன்றியது போலிருந்தது. சபையி லுள்ளோர்க்கு அவ்வளவுதான் தெரியும்! தங்கள் சித்தத்தையு மிழந்து, உணர்வையு மிழந்து, அறிவையு மிழந்து சிறிது நேரம் வரை நவரத்தினக் கொலுவில் வைத்த சித்திரப் பதுமைகளைப் போல், பேச்சு மூச்சின்றித் திகைத் திருந்தனர். பத்தரை மாற்றுப் பசும் பொன்னே மூன்று புடம் போட்டுப் பிறகு உருக்கினால், அதன் நிறம் எப்படி யிருக்குமோ, அதைவிட அதிகமாகக் கமலவேணியினுடைய நிறமும், தேக காந்தியு மிருந்தது. அதிக நெட்டையாயு மில்லாமல், குட்டையாயு மில்லாமல் நடுத்தரமான உயர முடையவள்; அவளுடல் அதிகமாகப் பருத்ததன்று; மென்மையானது மன்று; அவளுடைய வளர்ச்சிக்கும், பருமனுக்குந் தகுந்ததாய், மற்ற அங்க அமைப்புக்கட்கு ஏற்றதா யிலங்கிற்று. பச்சை மூங்கிலைப் போல், இளமையையும், அடி பெருத்து நுனி சிறுத்துக் கரவு சரியாய் வழவழப்பாக வுள்ள அவளுடைய புஜங்கள், அவள் அணிந்திருந்த ஊதா நிறப் பட்டுக் கச்சுக்கு மிகுந்த அழகைக் கொடுத்தன. இன்னும் அவளின் ஒவ்வொரு அங்கங்களும் அவளணிந்திருந்த அணிகட்கு அழகைக்

கொடுத்தனவே யன்றி, அவளுடைய அங்கங்கட்கு அழகைக் கொடுக்கவில்லை.

"வடிவமை நூலிற்சொல்லும் வனப்பெலாம் அமைத்துவேதன்
கடிமலர்ச் செங்கைவண்ணங் காட்டிய உருவங்கொல்லோ !
அடுகணை வேனிலான்றன் அழுதுகோல் தோய்த்துத்திட்டும்
படிவமோ ! உயிரைவாட்டும் பாவைதன் வடிவுதானே !"

என்று வியக்கத் தக்கதாயிருந்தது. அதுகாறும் கூக்குரல் செய்துகொண்டிருந்த ஜனங்கள் யாவரும் உயிரற்ற பதுமைகள் போலத் திகைத்து, அவள்மீது சென்ற தங்கள் நாட்டத்தையும், மனத்தையும் தங்கள் வசம் திருப்பச் சக்தியற்று, பிரமிப்படைந்து, தேனில் வீழ்ந்த ஈக்கள்போல, இன்ப வெள்ளத்திற் கிடந்து கரைகாண மாட்டாமல் தத்தளித்தனர். அவளுக்கு வயது பதினெட்டுக்குமேல் விராது. உலகிலுள்ள அழகிற் சிறந்த பெண்களின் வனப்பை யெல்லாம் ஒன்று சேர்த்துக் கடைந்தெடுத்த அமிர்த ரசம் போல, அவள் யாவர் மனதையுங் கொள்ளைகொண்டாள். இத்தகைய பெண் வடிவத்தை உலகத்தில் கண் படைக்கப் பட்டவன் எவனுங் கண்டிரா னென்பது உண்மை. உலகந் தோன்றிய காலந் தொட்டுக் கோடிக் கணக்கான இரதி தேவிகளைப் படைத்த பிரம்ம தேவனுக்கே கமலவேணியின் அழகு அதுகாறுங் காணுத புதுமையாக விருந்ததினால், மற்றையோர்க்கு அஃது எங்ஙனம் இருந்திருக்குமென்பது கூறவேண்டாத தொன்று. ஆங்குக் கூடியிருந்தோரது மனதில் அதற்கு முன் வதைத்துக்கொண்டிருந்த கவலைகளும், துன்பங்களும் தெய்வாம்சம் பொருந்திய அம் மின்னற் கொடியின் தோற்றத்தால் மறைந்து, சூரியன் முன் இருள் போல வோடி யொளித்தன. காட்டிலுள்ள மான் கன்றுகள் பூமியில் கால் வைப்பது தெரியாமல் எவ்வாறு துள்ளிக் குதிக்குமோ, அவ்வாறு அவள் நடனஞ்

செய்தபோது அவளது அற்புதமேனி, பஞ்சினுலானதோ, காற்றினுலானதோ என்று ஐயமுறும்படி மண்ணினு மின்றி, விண்ணினு மின்றிப் பம்பரம் போல் சுழன்றது.

"பிடியிருக்குஞ் சிறுநடையாள் ; பெருங்காம னபிடேக
முடியிருக்குங் கனதனத்தாள் ; முத்திருக்குங் குறுநகையாள்;
துடியிருக்குஞ் சிற்றிடையாள் , சூதுபெருங் குடிலமெலாங்
குடியிருக்கும் படைவிழியாள்; குமரிருக்குஞ் சசிபோல்வாள்"

"பாடலாற் கருங்குயிலைப் பணிகொண்டாள் ; பரிமளப்பூங்
காடெலாம் பூங்குழலாற் கைவிலைகொண் டாள் ; கடல்சூழ்
நாடெலாம் பணிகொளவோ, நாகநாட் டரம்பயரை
ஆடலாற் பணிகொளவோ, அரங்கேறத் தொடங்கினுள்"

அவளது விருப்பப்படி தொடர்ந்து சென்று, வளைந்து கொடுத்த உடல், சாமுத்திரிகா லக்ஷணத்திற்கு ஓர் இம்மியும் பிசகாமல் பார்ப்பதற்குப் பதினுயிசங் கண்கள் வேண்டிய அபாசத்தோற்றமாக விருந்தது. அவளது உடலின் மேற்புறம் மெருகு கொடுத்த தங்கத் தகடாயினும், தந்தத் தகடாயினுங் கொண்டு பொருத்தப்பட்டதோ என்று சொல்லும்படி கண்ணாடி போல வழு வழுப்பாயும், பள பளப்பாயும் அமைந்து, காண்போர் முகம் அதிற் பிரதிபிம்பித்துப் பூர்ண சந்திரோதயமோ, இனிமையும், குளிர்ச்சியுந் ததும்பிய அமிர்த கலசமோ எனத் தோன்றிய அம்மடமங்கையின் தன்மை, யெவ்வாற்றுனுங் கூற வியலாததாகவே யிருந்தது. இத்தகைய சிறப்பு வாய்ந்த கமலவேணி நாடக மேடையில் தனக்கிணை தானே யென நடித்து, ஜனங்களின் மீது மோகனஸ்திரப் பிரயோகஞ் செய்து, அவர்களது அறிவை மயக்கிப் பித்தராகும்படி செய்தாள். அந்தக் கூட்டத்திலிருந்த கிழவர் முதல் சிறு குழந்தை வரையிலுள்ள யாவரும் அறிவிழந்து, பிரமை கொண்டு தடுமாறி

னர். தாங்களே அழகிற் சிறந்தவர்களென்று அதுகாறும் நினைந்து செருக்குற்றிருந்த பெண்டிர் யாவரும் பெரு மூச் செறிந்தனர். கமலவேணியே யாவரினும் மேம்பட்ட இரதி தேவி என்ற நினைவை, அத்தகைய மகளிர் மனத்துள் ளாயினுங் கொள்ள கேர்ந்தது. மூன் வரிசையில் உட்கார்ந் திருந்த கபட ஷண்முகநாதன், தென் குடித்தகரி போல மதி யிழந்து, காமவெறிகொண்டு எப்படியாகிலும் அவளது கட்பைப் பெறவேண்டு மென்றிருந்தான். அவனைக் கண் டது முதல் ஷண்முகநாதன், தன்னை மறந்து அவனே யெல் லிதம் பெறலா மென்ற யோஜனையிலிருந்தானன்றி, காடகத் தைச் சிறிதும் நோக்கவே யில்லை. அங்கிருந்த ஆடவ ரொவ் வொருவரும் அத்தகைய அவாக்கொண்டன ரென்றே கூறு தல் வேண்டும். கமலவேணியைத் தனிமையிற் கண்டு வார்த்தையாடி, அவள் விருப்பத்தை யறிய வேண்டு மென்ற எண்ணம் ஷண்முகநாதனுடைய மனதிலுதித்தது. வைர மாலை களவு போய்விட்டதைக் குறித்துப் பெரும் கவலை கொண்டிருந்த அவனுக்குக் கமலவேணியின் தரிசனம் அரு மருந்து போலிருந்தது. ஆகவே, அந்தக் கவலையையும் மறந்து, தன் உடல், பொருள், ஆவி, ஆகிய மூன்றையும் அவள்பாற் செலவிடித்து, அம்மாது கிடைப்பாளோ, கிடைக்கமாட்டாளோ என்று ஏக்கங்கொண்டு குரங்குசாகக் கொடித்த ஆண்டியைப் போல் இருந்தான். பெண்ணின் நினைவு அடிக்கடி மனத்தின்கண் உண்டாகவே, தன் கிலேசத்தை யெல்லாம் முற்றும் மறந்து, சீதாதேவியின் அழகைக் கேட்ட இராவணன், கரன், முதலியோர் மடிந் ததாலுண்டான விசனத்தையும், தன் தங்கை மூக்கிழந்ததா லுண்டான அவமானத்தையும், இராமர் இலக்குமணர்களின் வலிமையையும், தனக்குண்டான சாபத்தையும் மறந்து, சீதையின் காதலே மட்டும் உட்கொண்டதாக,

"கரனையு மறந்தான் ; தங்கை மூக்கினைக் கடிந்து நின்றோன்
உரனையு மறந்தான் ; உற்ற பழியையு மறந்தான் ; வெற்றி
அரனையுங் கொண்டகாமன் அம்பினல், முன்னைப் பெற்ற
வரனையு மறந்தான் ; கேட்ட மங்கையை மறந்திலாதான்"

என்று கம்பர் கூறியிருப்பது போலப், பெண்ணுசை யென்னும் பேயாற் பீடிக்கப்பட்டு, "எந்தப் பொருளையும் விலைக்கு வாங்கக் கூடிய இந்தக் காலத்தில், பெருஞ் செல்வத்திற் குரியவனுகிய நான் கமலவேணியை விலைக்கு வாங்குவதா கஷ்டம்? என்னை அவள் உள்ளபடியே காதலிக்காவிட்டாலும், என் பணத்தையாவது அவள் காதலிப்பாளல்லவா? என்னுடைய பணத்தைக் கருதியாவது என்னைக் காதலிப்பவள் போல் வெளிக்குக் காட்டிக்கொள்வாளல்லவா? இதைவிட உலகத்தில் எனக்கு என்ன வேண்டும்?" என்று பலவாறு எண்ணலானுன்.

கோவலன் சரித்திரத்தில் ஒரு காட்சி முடிந்ததும், மறு காட்சி தயாராகும்போது ஜனங்கள் கூச்சலிடுவார்கள். கமலவேணி திரும்பவும் எப்பொழுது வருவாளென்று ஆவலோடு காத்திருப்பார்கள். மற்ற நடிகர்கள் தோன்றினுல், அவர்களைத் திட்டி உள்ளே போகும்படி சொல்லுவார்கள். கமலவேணி மறுபடியுந் தோன்றினுல், முன்பு போல வெறி கொண்டு தலைவிரித்தாடுவார்கள். இவ்வாறு அப்பெண்மணி, நெடு நேரம்வரை அங்குக் கூடி யிருந்த ஜனங்கள் யாவரையும் குரங்குகளைப் போல் ஆட்டி வைத்தாள். சுகோஷங்களும், தலையாட்டமும், மகிழ்ச்சியை வெளியிடும் இரைச்சல்களும் கடைசி வரையில் மிகுதிப்பட்டுக் கொண்டே யிருந்தன. இறுதியில் நாடகம் முடிவடைந்தது. அதுகாறும் புளி மூட்டைபோல் ஒருவர்மேலொருவராய் அமுக்கிக் கொண்டு கிடந்த ஜனங்கள் யாவரும் சமுத்திர கோஷம்

போல் ஆரவாரித் தெழுந்து, தாறு மாறாக ஒருவர் மீது ஒருவர் விழுந்து துகைத்த வண்ணம் வெளியிற் செல்லத் தொடங்கினர். சிலர் சிலராக உள்ளே சென்றதை விட, யாவரும் ஒரே காலத்தில் வெளிப்பட முயன்றது மிகத் துக்கமான சங்கதியா யிருந்தது. குழந்தைகளே யிழந்தார் சிலர் ; அணிகளே யிழந்தார் சிலர். முடிவாகக் கூறு மிடத்து, ஒருவர் தவறுமல் எல்லாரும் தமது மனதையும், உணர்ச் சியையும் கமலவேணியினிடம் பறி கொடுத்துத் திரும் புவோராகவே யிருந்தனர் ! அவர்களுள், ஷண்முகநாதன் நிலைமையே மிகப் பரிதாபமா யிருந்தது ! பித்தனைப் போல நாடகக் கொட்டகையின் ஒரு புறத்தில் நின்று கொண்டிருந் தான்.

ஆங்கு வந்திருந்த ஜனங்களும், பொன்னுசாமித் தேவரும், நடிகர்களும் சென்று விட்டனர். ஷண்முகநாதன், நீண்ட நேரம் நின்று யோஜித்துவிட்டுப் பெருமூச்சுவிட்டுப், பிறகு காவற்காரனிடம் சென்று, " கமலவேணி யென்ற மாது எந்த இடத்தில் ஜாகை வைத்துக் கொண்டிருக் கிறாள் ?'' என்று கேட்டான். அக் காவற்காரன், இவ னுடைய நோக்கத்தை யறிந்துகொண்டு பதிற் கூறுமல் தலையை ஆட்டிய வண்ணம் இருந்தான். ஷண்முகநாதன், தன் சட்டைப் பையில் கையைவிட்டு ஒரு ஐந்துரூபாய் நோட்டை யெடுத்துக் காவற்காரன் கையில் வைத்து அமுக் கியதும், அவன் மகிழ்ச்சியோடு " அந்த அம்மாள் புதுப் பேட்டையி லிருக்கிறார்கள் '' என்றான்.

இதைக் கேட்ட ஷண்முகநாதன், தன் வண்டியி லேறிக்கொண்டு 'சுகுண விலாச'த்திற்கு வந்தான். அன் றிரவு முழுவதும் அவனுக்குத் தூக்கமே வரவில்லை. படுக் கையிற் படுத்துப் புரண்டு கொண்டிருந்தான். அவனுடைய அகக் கண்ணுக்கு முன் கமலவேணியின் அதிசுந்தர வடிவம்

தாண்டவ மாடியபடியால், அம் மாதைக் குறித்தே பல இன்பக் கனவுகள் கண்டு கொண்டிருந்தான். மறுநாள் அதிகாலையிலெழுந்து, குளித்துச் சிறிது ஆகாசம் பார்த்துக் கொண்டு, புதுப்பேட்டைக்குச் சென்று, கமலவேணியின் மாளிகையை அணுகினான். அம்மாளிகை பார்ப்பதற்கு அழகாயிருந்தது. அதைச் சுற்றிலும் ஒரு பெரிய பூந்தோட்டம் இருந்தது. ஷண்முகநாதன் தோட்டத்திலுள் நுழைந்து, அங்குப் போடப்பட்டிருந்த நாற்காலியின் மீது உட்கார்ந்து யோஜித்தவண்ணமிருந்தான். அப்போது, கமலவேணி, சிறிது தூரத்தில் வருவதைக் கண்டான். ஷண்முகநாதன், அவளைப் பல ஆடைகளுடன் நாடகக் கொட்டகையில்—இரவில்—பார்த்ததைவிட, இப்போது அவளுடைய முழு உறுப்புக்களின் அழகையும் கண்டான்; காணவே, ஆசை பன்மடங்கு பெருகிற்று. அவளைக் கண்டதும் ஷண்முகநாதன் பிரமித்து மயங்கி விட்டான். சிறிது நேரம் வரை மரம் போலிருந்தானென்பது மிகையாகாது. அந்தோ! பெண்களின் சிறந்த அழகு எத்தகையோர் மனதையுங் கரைத்துவிடத் தக்கதன்றே? கட்டிளங் காளையாகிய ஷண்முகநாதன், அவளருகிற் சென்று பேசலாமெனக் கருதினான்; ஒரு சமயம் அவள் பிரட்சியடைந்து சட்டென்று மாளிகைக்குள் போய்விடுவாளோ என்று பின் வாங்கினான். அதற்குள் அவனுக்கு வியப்பையும், கலவரத்தையும் தரத்தக்க ஒரு சம்பவம் நேர்ந்தது! அஃதாவது: முன்னே யிருக்கும் கட்டிடத்தின் ஓரத்திலிருந்து, அக் கன்னிகையை நோக்கி ஒரு மனிதன் துரிதமாய் வந்துகொண்டிருந்தான். ஷண்முகநாதன், அம் மனிதனைக் கூர்ந்து நோக்கியபோது கிருஷ்ணதேவனென்று புலப்பட்டது. "ஓகோ! இம் மனிதனும் இவளைக் காதலிக்கிறானே?" என்று தனக்குள் கூறிக்கொண்டான். பிறகு

"போய்விடுவோமா? நிற்போமா?" என்ற யோஜனையுண்டா யிற்று. ஆயினும், "அந் நங்கையைக் கண்டு பேசிவிட் டாயினும் போவோம்" என்று கருதி அவ்விடத்திலேயே யிருந்தான். அக் கன்னிகை, தன் பின்னுல் ஆள்வரும் அரவங் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். ஒரு விநாடிக்குள் அவள் முகத்தில் வியப்பும், சந்தோஷக் குறியும் தோன்றின. உடனே அவள் பாய்ந்தோடி, கிருஷ்ணதேவர் மார்பின் மீது சாய்ந்து, அவருடைய ஆலிங்கனத்திற்குள்ளானுள். ஷண்முக நாதன், அவ்விடத்தைவிட்டு அப்புறம் செல்லாமல் இவ் விஷயங்களை வியப்புடன் பார்த்துக்கொண்டு நின்றுன். சில நிமிடங்கட்குப் பிறகு அக் கன்னிகையும், கிருஷ்ண தேவரும் மாளிகைக்குள் சென்றுவிட்டனர். ஷண்முக நாதன், கொஞ்சநேரம் வரை அவ்விடத்தில் நின்றுவிட்டுப் பிறகு மெதுவாக அம்மாளிகையின் பின்பக்கத்துக்குச் சென்றுன். அங்கு வெறும் வேலி மாத்திரமே யிருந்தது. வேலியோரத்தில் தேக்கு, புன்னை, தேவதாரு முதலிய மரங்கள் அடர்த்தியா யிருந்தபடியால், அக் கன்னிகையின் மாளிகை கண்ணுக்குச் சிறிது மறைவாகவே காணப் பட்டது. ஷண்முகநாதனுடைய நெஞ்சில், "அடடா! இக்கன்னிகை கிருஷ்ணதேவருடைய வைப்பாட்டிகளுள் ஒருத்தியாக விருந்தால் நாம் அடைவதெப்படி?" என்ற எண்ணம் தோன்றியதும், சட்டென்று திரும்பிச் சிறிது தூரம் சென்றபோது, அங்கு ஏதோ பாத்திரம் தேய்த் துக்கொண்டிருந்த வேலைக்காரனை நோக்கி, "உங்கள் எஜமானியை இப்பொழுது பார்க்க முடியுமா?" என்று கேட்டான்.

வேலைக்காரன்:—முடியாது; அவர்கள் இரண்டு நிமிடத் திற்கு முன்புதான் திருவொற்றியூருக்குப் போயிருக் கிறார்கள்.

ஷண்முகநாதன் :—கிருஷ்ணதேவருக்கும், உங்கள் எஜமானிக்கும் எத்தனை நாட்களாகப் பழக்கம் உண்டு ?

வேலைக்காரன் :—ஒரு வாரமாகத்தான் அவர் வந்துகொண்டிருக்கிறார்—என்றான்.

ஷண்முகநாதன், உடனே திருவொற்றியூருக்குப் போக வேண்டிய கருத்துடன் வீதியில் நடந்துகொண்டிருக்கும் போது, திருவொற்றியூருக்குப் போகும் ஜட்காவண்டியில் இடமானதும், விரைவிற் போகக்கூடியதுமான ஒரு வண்டியைத் தேடிச் சென்றான். அன்று விசேடதின மாகையால், அவ் வண்டிக்காரன் மூன்று ரூபாய் வாடகை கேட்டான்; அதில் ஒரு பைசாக்கூடக் குறைக்க முடியாதென்று கூறிவிட்டான். ஷண்முகநாதன் அதற்குச் சம்மதித்து வண்டியில் ஏறிக்கொண்டான். ஆனால், அக்குதிரை மிக மூரட்டுத் தனமானதா யிருந்தது.

"முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே யிருந்திரண்டு பேர்தள்ள—முன்னேக்கி
வேதம்போம் வாயான் விகடரா மன்குதிரை
மாதம் போம் காத வழி"

என்றபடி விகடராமன் குதிரை (முன்னேக்கி) செல்லும் என்பது முதுமொழி; ஆனால், ஷண்முகநாதன் ஏறியுள்ள வண்டிக்குதிரை, பின்னேக்கி விரைவர்யும், சுறுசுறுப்பாயும் செல்லத் தொடங்கிற்று. பக்கத்திலுள்ள வண்டிக்காரரெல்லாம் கைகொட்டிச் சிரித்தார்கள். ஷண்முகநாதனுக்கு முதலிலுண்டான வெட்கத்தைப் பார்க்கிலும், வண்டியுடன் சாக்கடையில் கொண்டுபோய்த் தள்ளி விடுமோ! என்ற பயம் மேலிட்டது. வண்டிக்காரனுடைய சாமர்த்தியத்தைச் சிறிதும் மதியாமல் நடந்த குதிரை, அவன் கோபத்துடன் தண்டப்பிரயோகம் செய்ததும்,

"சும்மா, இருந்தாலு மிருப்பே னெழுந்தானே யாகிற், பெருங்காள மேகம் பிளாய் !" என்று பாடிய காளமேகப் புலவரின் கவிக்குச் சமமான வேகத்தில் ஓடத்தொடங் கியது. சுமார் ஒருமைல் தூரம் சென்றதும், வண்டிக்காரன் வண்டியை நிறுத்திவிட்டு, நாற்புறமும் சுற்றி யாரையோ எதிர் பார்ப்பவன்போல் பார்த்துக் கொண்டிருந்தான். வண்டிக்குப் போதுமான ஆள் சேரவில்லையென்பது அவன் எண்ணம். ஆள் சேர்ந்த பிறகன்றோ வண்டியை விடுவான்? ஒரு ஆளுக்காக வண்டிவிட முடியாதென்றும் வாதாடினான். வண்டிக்குள் நான்குபேரும், பெட்டிக்குமேல் ஒரு ஆளும் சேரவேண்டும். ஆனால், வண்டியில் ஷண்முகநாதன் மாத் திரமே யிருந்தான். இன்னும் நான்குபேர் சேர்ப்பதற்காக வண்டிக்காரன், நாற்பது முறை இங்கும் அங்கும் அலைந் தான் ; நாலாயிரம் முறை " திருவொற்றியூருக்கு ஒரு ஆள்! திருவொற்றியூருக்கு ஒரு ஆள் !" என்று கத்திக்கொண்டே திரிந்தான். ஒரு காரியத்துக்காக அவசரப்படுகிறபோது தான் பலதடைகள் குறுக்கிடுவது வழக்கம்! திருவிழாவாக இருந்தும், ஷண்முகநாதனுடைய மனம் அவசரப்படுவது போல், வண்டி போவதற்கியலாமற் போய்விட்டது. இதற் குள் குறுக்கிலும், மறுக்கிலும் வண்டியை ஓட்டியதற்காகப் போலீஸ் சேவகன் ஒருவன் வந்து அதட்டினான். அவ னுக்கு ஏதோ திட்டையெடுத்துக் கொடுத்துவிட்டுத் திரும் பித் திரும்பி விரட்டிக்கொண்டே யிருந்தான். ஷண்முக நாதன் பாடு கஷ்டமாக முடிந்தது. வண்டிக்காரனை நோக்கி " விடுகிறாயா ? நான் இறங்கிவிடவா ?" என்று கேட்டான். அதற்கவன் "பொறுங்க ஐயா! விட்டுவிடுகிறேன் ; ஆள் சேரட்டும்" என்றான். ஷண்முகநாதன் சிறிது நேரம் பொறுத்தான். ஆள் சேருகிற வழியைக் காணோம். " நீ விசையில் விடமாட்டேனென்கிறாய் ; நான் வேறு வண்டி

பார்த்துக் கொள்கிறேன்" என்று ஷண்முகநாதன் சொல்லிக் கீழே யிறங்கத் தொடங்கினான். வண்டிக்காரன் "இல்லே, ஐயா! இதோ விடுகிறேன். ஆள் சேராமற் போனும் போகிறது. கூட எட்டணாக் கொடுத்துவிடுங்கள்" என்றான். ஷண்முகநாதன் அதற்குச் சம்மதிக்கவில்லை. இருவரும் ஒரு தீர்மானத்திற்கு வராமலிருக்கையில், அவசரமாக ஒரு பெண்ணும், ஒரு ஆடவனும் இவ்வண்டியை நோக்கி வந்தார்கள். அவ்விருவரையும் வண்டிக்காரன் வாடகை பேசி யேற்றிக்கொண்டு ஓட்டத் தொடங்கினான். வண்டிக் காரன், நெடுநேரம் சுற்றிய பிறகு வாடகை கிடைத்த மகிழ்ச்சியாலும், குடி வெறியாலும் குதிரையைத் தட்டி விட்டுத் தெம்மாங்குப் பாட்டுக்களைச் சரமாரியாகப் பாடத் தொடங்கிவிட்டான். வண்டி கடுவேகமாகப் போய்க் கொண்டிருந்தது. விரைவாய்ச் செல்லச் செல்ல வண்டிக் காரனுக்கு ஆனந்தம் கிளம்பிவிட்டது! வண்டி விரைவாக ஓடுவது ஷண்முகநாதனுக்கு மகிழ்ச்சியை அளித்ததாயி னும், எங்கே ஆட்களின்மேல் ஏறிவிடுகின்றதோ என்ற பயம் உச்சியைப் பிடித்து உலுக்கிற்று.

வண்டி விரைந்து திருவொற்றியூரை அணுகியபோது, குதிரை எதையோ கண்டு மிரண்டு முன்னும் பின்னும் இழுத்தது. அந்த வேகத்தில் குதிரையைப் பூட்டப்பட் டிருந்த வார் அறுந்துபோயிற்று. உடனே குதிரை யெந்தத் திசையில் ஓடிற்றென்று எவரும் கண்டுகொள்ள முடியாத படி சுழன்று ஓடிக் கடுவேகமாகக் குறுக்கேயுள்ள வேலியிற் புகுந்து, ஒரு தோப்பின் நெருக்கத்தில் மறைந்தது. வண்டி யும், வண்டிக்குள்ளிருந்த மனிதர்களும் மிகத் துன்புற்றார் கள். படுவேகத்தில் வந்தபடியால், வண்டி அச்சு முறிந்து விட்டது. சக்கரங்கள் சுழன்று உருண்டோடின. வண்டி பக்கத்திலுள்ள நிலத்தில் விழுந்தது. குறுக்கே ஒரு வேஷி

இல்லாதிருக்குமாயின், வண்டி கொறுங்கிப் போயிருக்கும். ஷண்முகநாதன் வண்டியினுள்ளிருந்தான். அந்த ஆட வனும், பெண்ணும் அவனுக்குப் பக்கத்திலிருந்தார்கள். வண்டிக்காரன், குதிரை அறுத்துக்கொண்ட வுடனேயே கீழே குதித்துவிட்டான். ஷண்முகநாதனுக்குப் பொறித் தட்டினதுபோ லிருந்தது. ஒரு பாத்திரத்தில் ஒரு பங்கைப் போட்டுக் குலுக்கினால் என்ன நிலையிலிருக்குமோ, அந்நிலை யிற் சிறிதுங் குறைவில்லாமல் வண்டியினுள் இருந்த மூவரும் ஒருவர்மீது ஒருவர் வீழ்ந்து புரண்டனர். ஷண்முக நாதன், உருண்டுக்கொண்டே யிருந்தபடியால் "இன்று செத்தோம்!" என்றே கருதினன். அவனுடனிருந்த பெண்ணைப்பற்றிச் சொல்ல வேண்டுமா ? அவள் கூகுரலிட்ட சப்தம் கேட்டதாயினும், தேறுதல் சொல்லவோ, அன்றி உதவிபுரியவோ அவனால் முடியவில்லை. "வீழ்வார்க்கு வீழ்வார் துணை" என்றபடிகூட இல்லாமல் அவர் கள் யாவரும் வண்டி யுருண்ட வேகத்தில் மோதிக்கொண் டனர். வண்டி நான்கைந்து முறை உருண்டதாற் சிறிது வேகந்தணிந்தது. அவர்கள் புண்ணியத்தால் மேலும் உருளாதபடி ஒரு மரம் தடுத்துவிட்டது. அஃதின்றேல், வண்டி அப்புறமுள்ள மடுவில் வீழ்ந்திருக்கும். அது பார்ப் பதற்குப் பெரிய பாதாளம் போலிருந்தது. அதில் வண்டி வீழ்ந்திருக்குமானால், அவர்கட்கு வேறு குழி தோண்ட வேண்டுவதில்லை. வண்டி மரத்தில் தாக்கியபடியால், உள்ளே யிருந்த பெண்மணி விசிறி யெறியப்பட்டுக் கீழே வீழ்ந் தாள். அந்நிலைமையைக் கண்டால், ஜட்காவண்டியில் ஏறும் ஆசையே அற்றுப் போய்விடும். ஷண்முகநாதன் கீழே இறங்கியதும் ஒரு தெளிவுண்டாயிற்று. எனெனில், இனி உருள வேண்டுவதில்லையன்றே ? ஆனால், தெளி வுண்டானதும் 'இந்த வெட்கக் கேட்டை யாவரும் அறிந்து

கொள்ளுவார்களோ' என்ற பயம் உண்டாயிற்று. இதற் குள் கோவிலுக்குப் போவாரும், வருவாரும் இதைச் சூழ்ந்து கொண்டார்கள். தென்புறத்தில் வீழ்ந்த பெண், தென்புறத்திற்கே போய்விட்டாளோ என்று கருதினர். அவளுடைய ஆடை குலைந்து, ஆபரணங்கள் கழன்று, பேச்சுமூச்சின்றிக் கிடந்தாளாகையால், அவளுடன் வந்த ஆடவன், "ஏ, கோகிலம்! நடுவழியிற் சாகவா வந்தாய்?" என்று புலம்பினன். இம்மொழி ஷண்முகநாதனைத் திடுக் கிடச் செய்தது. "தண்ணீல் இறந்தவளெனக் கருதி வாழைக்கட்டையிற் கட்டி ஆற்றிற் போடப்பட்ட கோகிலமா, இவள்? வேறு?" என்று நினைத்துக் கூர்ந்து கவனித்தான். சந்தேகமில்லாமல் அக்கோகிலமென்றே புலப்பட்டது. இவ்வளவு நேரம் வண்டியில் அவளுட னிருந்தும், தான் அறியக் கூடாமைபற்றி வியப்புற்றான். ஆனால், அவள் இப்பொழுது அழகிலும், உருவத்திலும் மிகுந்து விளங்கினாள். ஷண்முகநாதனுடைய உடல் முழு வதும் வியர்வை குபீரென்று பொங்கி வழிந்தது. இன்னது செய்வதென்றே புலப்படவில்லை. அவன், கோகிலத்தை உண்மையிற் கோகிலமென்றே நினைக்கவில்லை. ஏதோ ஒரு ஆவேசமென்றே கருதினன். அவளுடன் வந்த ஆடவன், கோகிலத்தை மற்றொரு வண்டியில் வைத்து வைத்திய சாலையை நோக்கிச் சென்றான்.

ஷண்முகநாதன், தாசி கமலவேணியைத் தேடி வந்த தற்குப் பட்டபாடு போதுமென்று, வீட்டிற்குச் செல்லும் பொருட்டு நான்கடிகள் எடுத்து வைத்தான். அப்பொழுது யாரோ ஒரு ஆள் அவன் தோளில் கைவைத்ததுபோலிருந் தது. உடனே திரும்பிப் பார்த்தான். வந்தவர், "ஷண்முக நாதன் செட்டியாரவர்களா, ஏது—இவ்வளவு தூரம்?" என்றார். ஷண்முகநாதன், தெளிவுற்று "வாருங்கள்!

பொன்னுசாமித் தேவரே" என்று குழறி மொழிந்து, "தான் வண்டியினின்று வீழ்ந்ததை இவரும் அறிந்திருப் பாரோ!" என்று ஐயத்துடன் நின்றான்; பிறகு, நடந்த யாவற்றையும் விபரமாகக் கூறினான். பொன்னுசாமித் தேவர், நகைத்து "இதுவோ காமத் தியற்கை!" என்றார்.

ஆற்றில் எறியப்பட்ட கோகிலம் எப்படி உயிர்பெற்று வந்தாளென்ற சந்தேகம் இதைப் படிப்போர்கட்கு உண் டாகலாம். வாழைக்கட்டையின் மீது கிடத்தப்பட்ட கோகிலம், கொஞ்ச தூரம் மிதந்து வந்ததும், தன் மீது கட்டப்பட்ட கட்டுகள் மிகுந்த நுட்பமாயும் தளர்ச்சியாயும் இருந்ததால் அதை மெள்ள அவிழ்த்து எறிந்துவிட்டுக் கட்டை மீது தாராளமா யுட்கார்ந்தாள். சுமார் மூன்று மணி நேரம் வரையில் யாதொரு துன்பமுமின்றி, ஒரு தெப் பத்தின்மேல் வருபவரைப்போல் வருங்கால், அவ்வாற்றின் தென்பக்கமாய் ஒரு அலங்காரமான படித்துறையோடு மண்டபம் இருந்ததைப் பார்த்து, 'அதன் பக்கமாய் வாழைக்கட்டை சென்றால், படிக்கட்டின் பக்கத்தில் சாய் வாகக் கட்டப்பட்டுள்ள கைப்பிடிச் சுவரைப் பிடித்துக் கொண்டு மெள்ள ஏறிவிடலாம்' என யோஜித்து, வாழைக் கட்டை அதன் பக்கமாய்ப் போகும்படி கையால் தண் ணீரைப் பக்கத்தில் தள்ள, அக்கட்டை அச்சுவரின் பக்கமே சென்றது. அதன் அருகிற் போனதும் சுவரின்மேல் மாடத் தில் உள்ள கைப்பிடிச் சுவரைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு மெதுவாகச் சுவரில் ஏறி யுட்கார்ந்தாள். நெடு நேரம் தண்ணீரிலேயே வந்தவளாதலால், அறிவு கலங்கி அப் படித் துறையில் சாய்ந்தாள். அவ்வமயத்தில் அங்குத் திடீரெனத் தோன்றிய ஒரு அழகான வாலிபன், அம்மாதின் நிலையைக் கண்டு இரங்கி, அவளைத் தோளின் மீது தாங்கிய வண்ணம் தூக்கிச் சென்றான். அகந்தையுள்ள

மனிதன், யாரையேனும் கெடுக்க விரும்பி ஒரு கதவை மூடும்போது கருணையுள்ள கடவுள் மற்றொரு கதவைத் திறந்து விடுகிறார் என்று கூறி கண்பர்களுடைய சந்தேகத்தை நிவர்த்தி செய்கிறோம்.

பிறகு, ஆண்முகாதன் மிகவும் யோசித்து வைத்திய சாலைக்குச் சென்று, கோகிலத்தைப்பற்றி ஏதோ சில விபரங்கள் தெரிந்து கொண்டு தன் மாளிகைக்குச் சென்றான்.

ஒன்பதாவது அதிகாரம்

ஆசைக்கயிற்றில் ஊசலாடுதல்

மிகா நானியாகிய பட்டினத்துப் பிள்ளையார், "பெண் ணாகி வந்ததொரு மாயப் பிசாசம் பிடித்திட்டு, என்னைக்,—கண்ணால் வெருட்டி, மயக்கி, என் போதப் பொருள் பறிக்க, எண்ணுது மறந்தேன், இறைவா! கச்சி யேகம்பனே!!" என்று மனத்தையும், மாதரையும் அஞ்சிக் கூறினாரேனும், கேவலம், கர்மஞானமே தேர்ந்திலாத நம் போல்வார் எவ்வளவு பயந்து ஒழுக வேண்டும்? அன்றியும், மண், பெண், பொன் என்னும் மூவாசைகளுள், மண்ணாசையையும் பொருளாசையையும் ஒருவாற்றால் அறிவைத் துணைகொண்டு கடந்துவிடலாம். பெண்ணாசையோ கடப்பதரிது. கம்பர் இராமாயணத்தில், இராமபிரானுக்கு அறிவு புகட்டும்போது, வசிட்டமுனிவர்,

"ஞம கேது புவிக்கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கைய ரால்வருங்
காமம் இல்லையெனில், கடுங்கேடெனும்
நாமம் இல்லை; நாகமும் இல்லையே"

எனக் கூறியுள்ளார். இதைப் பதப் பொருட்படி கொள்ளா விட்டாலும், தீ வழிக் காமத்தால் விளையக்கூடும் கேட்டை, இது நன்கு கூறுகின்றது. மனம் அடக்கரிதாயும், காமம் விலக்கரிதாயுமிருக்க, நம்முடைய கவனக்குறைவால், காமப் பேய் வசப்படுவோமாயின், அதனின்றும் விடுபடல் அரி தினும் அரிது. இராவணனைப்போல் "சுந்தாக் குமுதச் செவ்வாய் அமுதை"யே மருந்தாகக்கொண்டு, மனம்போன வழிச் சென்று, விறகிற் பற்றிய தீப்போல மேன்மேலும் வளர்ந்தோங்கும் காமாக்கினியில் எரிந்து, அழிவோமென் பதில் ஐயமில்லை. கோட்டை கொத்தளங்களையும், கடுமை யான காவல்களையும் கடந்து, இகழ்ச்சியையும், அவமானத் தையும் சிறிதும் நினையாது, தன் கருமமே கண்ணாக வினை செய்ய வல்ல காமம், கேவலம் வெள்ளிக் காசுகட்கு அடிமை யாகிய பொருட் பெண்டிர் வயப்பட்டக்கால், தன் விருப் பத்தை நிறைவேற்றாது விடுமோ? துறவிகளும், சுத்த வீரர்களுங்கூடக் காமப் புலி முன்னின்று போராடாமல் புறங்காட்டி யோடலே தகுதி. இவற்றைச் சிறிதும் உண ராமல் ஷண்முகநாதன் காமப் படுகுழியில் வீழ்ந்து கடு மாறிக்கொண்டிருந்தான்.

இனி, நமது வெள்ளையன் செட்டியாரையும், வள்ளி யம்மையையும் கவனிப்போம். அவர்களை நாம் கண்டு பன்னாட்களாயிற்றன்றோ? வைரமாலை களவுபோன மறு நாளிலேயே நமது வெள்ளையன் செட்டியார், தமது அருமை மனைவி வள்ளியம்மையையும் அழைத்துக்கொண்டு சென் னைக்கு வந்து சேர்ந்தார். ஷண்முகநாதன் ஒழுக்கத் தவறுக இருப்பதையும், தம் மனைவி இளநங்கையாயிருப்பதையும் உணர்ந்து, இயற்கையிலேயே சந்தேகங்கொண்ட வெள்ளை யன் செட்டியார், சென்னைக்கு வந்ததும் ஷண்முகநாத னுடைய மாளிகையில் இறங்க விருப்பமில்லாதவராய்,

ஜமீன்தார் கிருஷ்ண தேவர் மாளிகைக்கு அடுத்த ஒரு சிறிய அழகான மாளிகையைக் குடிக்கூலிக்குப் பேசி, அதில் வசித்து வரலானார். இப்பொழுது வெள்ளையன் செட்டியார், வயதில் மூப்பாலும், காச நோயாலும் பெரிதும் தன்பப்பட்டுக் கொண்டிருந்தார்; ஆகையால், பருவமுற்ற பெண்கள் சாதாரணமாக விரும்பக்கூடிய ஒரு பொருளை வள்ளியம்மை வெள்ளையன் செட்டியாரிடமிருந்து எதிர் பார்க்க நியாயம் இல்லாமற் போய்விட்டது; எனவே, வள்ளியம்மையின் நிலையிலுள்ள ஒரு பெண்ணின் மனம் எத்தகைய வழியிற் செல்லுமோ, அத்தகைய வழியிற் செல்லத் தொடங்கிற்று. அதை நாம் வெளிப்படையாகக் கூற வேண்டுவதில்லை. அவள் எத்தகைய வழியிற் சென்றா லும் அவள் மீது குறைகூற நமக்கு மனம் ஒருப்படமாட் டாது. அவள் என் செய்தல் கூடும்? பாவம்! இளமைப் பருவ இன்பத்தைத் துய்க்கப்பெறாத ஒரு பெண்ணின் நெஞ்சம் எவ்வளவு துன்புறல் கூடும்? வள்ளியம்மையினு டைய தாய், தந்தையரின் மடமையைக் குறித்தே நாம் இரங்குகின்றோம். பெற்றோரின் அறியாமையால் செய்யப் பட்ட மணமக்களே பெரிதும் துன்புறுகின்றனரென்பது வெள்ளிடை மலையாம். இங்ஙனம் மூடத்தனமாக மணம் செய்பவர்களை—பிள்ளைகளைப்பெற்ற பெரிய மனிதர்களை— கேட்பார் ஒருவருமில்லை. ஏன்? அவர்கள் பெரிய மனிதர் கள்; எப்படி? வயதாகித் தலை நரைத்தவர்கள். இக் காரணம் ஒன்றினாலேயே அவர்கள் பெரிய் மனிதராய் விடுகின்றமையால், அவர்களைக் கேட்பார் ஒருவரும் இலரா கின்றனர். இப் பெரிய மனிதர்கள் தங்கள் மக்கட்குத் தங்கள் விருப்பம்போல் எங்கேனும், எப்படியேனும் மணம் செய்து தொலைக்கட்டும்! அதைப்பற்றிக் கௌரவமாகத் தங்கள் மூடமதியால் எண்ணி மகிழட்டும். அவர்களைப்

பற்றி யாதுங் கூறுதற்கு நாம் முன் வரவில்லை; அவர்களைத் திருத்தவும் நாம் முன் வரவில்லை. திருத்துவதாவது? யாரை? அவர்களையா? அந்த நிர்மூடர்களையா? தாங்கள் செய்யும் மூடக் காரியங்களை, வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாத அரிய பெரிய காரியங்களென்று எண்ணி, ஆகாயக் கோட்டையில் அகமகிழும் அந்தப் பரமஞானிகளைப் பற்றியா? இல்லை; இல்லை. அவர்களைப்பற்றிக் கூற நாம் விரும்போம். ஆனல், நல்ல உலகாதுபவமும், விரிந்த கலை ஆராய்ச்சியும் வாய்க்கப்பெற்றுத் தங்களைப்போலவே தங்கள் மக்களையும் கல்வி, கேள்விகளில் வளரவிடுத்து வாழும் உண்மை யறிவாளர்களைப்பற்றி மட்டும் இப்போது நாம் அச்சத்துடன் சில மொழிகின்றோம். இவ்வறிவாளர்கள் தங்கள் வரையில் பல விஷயங்களிற் சரியாகவே நடந்து கொள்ளுகிறார்கள் என்பது உண்மையே. அதை நாமும் ஒப்புக்கொள்ளுகிறோம். அதை மறுப்பாரில்லை. ஆனல், இவர்களிற் பெரும்பாலார் அநேகமாய்த் தம் மக்களின் மண விஷயத்தில் மாத்திரம் நாம் முற்கூறியவர்களையே பின் பற்றிச் செல்லுகின்றனர். இதனல் விளையுந் தீமைகள் பல. ஆதலால், மணமக்களுடைய விருப்பத்தைச் சிறிதுங் கேளாமலே மணஞ் செய்தலை யொழித்து, அவர்களின் சம்மதத்திற்குக் கூடியவரையில் இணங்கி—பொருத்தமாகப் பார்த்து—மணஞ் செய்விப்பதே சாலச் சிறந்ததாகும். இதுதான் நமது பண்டைத் தமிழரின் சீரிய நாகரிகமாகும். நிற்க:

நமது வெள்ளையன் செட்டியாருக்குச் சிறிது குடிக்கும் பழக்கம் உண்டு என்பதை நாம் முன்பே குறிப்பிட்டுள்ளோம். அக் கெட்ட பழக்கம் நாளடைவில் பெருத்த பைத்தியமாக மூற்றிப்போய் விட்டது. அது பெரும்பேய் போல அவரைப் பிடித்துக் கொண்ட தாகையால், அவ

ருக்கு இயற்கையான ஆகாரத்தில் வெறுப்பு ஏற்பட்டு, அன்னம், தண்ணீர் உட்கொள்வதை அடியோடு விட்டுவிட்டார். எப்போதும் பிராந்தி, ஓயின், சாம்பெயின் முதலிய வைகளையே ஆதாரமாகு மதித்து அருந்திக் கொண்டு வந்தார். எப்போதும் அவரது கண்கள் கோவைப்பழம் போலச் சிவந்தே காணப்பட்டன. அவர் வீட்டிலிருக்கும்போது ஓயாமல் குடித்து மயங்கிப் படுத்த படுக்கையாகவே யிருப்பார். வள்ளியம்மைக்கு இவர்மீது எள்ளளவும் விருப்பம் இல்லையாயினும், எதோ உலகப் பழிப்பிற்கு அஞ்சி ஒரு வகையாக கடந்துவந்தாள். வள்ளியம்மை, ஏராளமான செல்வத்திற்குத் தலைவியாகிச் சகலமான செல்வாக்கையும் அநுபவித்து இருக்க இருக்க, சில நாட்களில், அவளது தேகக்கட்டும், அழகும் பதினெயிரம் மடங்கு பெருகிக் காண்போரைப் பித்தாக்கத் தக்கவையாய் மாறிப் போயின. ஆபாணங்கள், ஆடைகள் முதலிய எல்லா வகையிலும் அவளது மனம் பூரிப்படைந்ததானாலும், கணவன் சம்பந்தப்பட்ட வரையில் அவள் மனம் குறைபட்டுக் கொண்டே வந்தது. செட்டியார், மதுவுண்டு மயங்குபவர் ஆதலால், வள்ளியம்மையை நிரம்பக் கட்டுப்பாட்டுக்குட் படுத்தவில்லை; அதிகமாக அவளை விரும்புவது மில்லை. வள்ளியம்மையின் மனம் அதே எக்கத்தினால் வருந்தி வாடி மெலிந்து தத்தளித்திருந்தது. செட்டியார் கடைக்குப் போயிருக்குங் காலங்களில், அவள் தனது மாடியின்மேல் நின்று வெளியிற் பார்த்தபடி யிருப்பது வழக்கமாதலால், அடுத்தாற்போலுள்ள கிருஷ்ணதேவரின் மாளிகை அவளது பார்வைக்கு எதிரில் நின்றுகொண்டே யிருந்தது. தெய்வலோகத்து அரம்பைபோல் மேன்மாடத்தில் நின்ற எழிலணங்கைக் கிருஷ்ணதேவரும் ஒரு நாள் பார்த்தார். கண்டது முதல் அவரது மனதில் அவள்மீது கடுமையல் தோன்றிவிட்டது.

மேன்மேலும் அவளைப் பார்த்து அவளது அற்புதமான அழகைக் கண்டு மகிழ்ச்சி யடையவேண்டுமென்ற நோக்கத் தோடு அவளையே பார்த்துக்கொண் டிருப்பார். பிறகு அவளும் அவரை நோக்கினாள். தொடக்கத்தில் இரண்டொரு நாள் அவள் நாணிக்கோணி மறைந்துகொண்டா ளானும், அதன் பிறகு அவளும் கடைக்கண் பார்வையாற் கூர்ந்து நோக்கலானாள். சில நாட்கள் வரையில் அவர்கள் ஒருவரை யொருவர் காணவேண்டு மென்ற அவாவோடு அடிக்கடி மேன்மாடத்திற்கு வந்ததும், எதிர்ப் பக்கத்தில் தமது பார்வையைச் செலுத்தியதும் நன்றாகத் தெரிந்தது. அவர் பார்க்கும்போது அவள் நாணிக் குனிவதும், அவள் பார்க்கும்போது அவர் அப்பால் திரும்புவதும் நடைபெற் றன. பிறகு சிலநாட்களில் அவர்கள் ஒருவரை யொருவர் கண்ட காலத்தில், அவர்களே மிஞ்சி அவர்களது முகம் மகிழ்ச்சியால் மலர்ந்து புன்னகை யரும்பின. இருவருக்கும் அந்த இன்பம் கொஞ்சக்காலம் வரையில் கிடைத்துக் கொண்டிருந்தது. பிறகு படிப்படியாய் இருவாது கண்களும் சந்தித்துச் சமிக்கை செய்து ஊமை ஜாடை காட்டிக் கொண்டன. கைகள் தந்தி பேசத் தொடங்கின. ஆனால், ஒருவரை ஒருவர் சந்தித்து உறவாடுதல் எப்படி? அதுதான் இருவர் மனத்தையும் வாள்போல் அறுத்துக் கொண்டிருந்தது.

இப்பொழுது நாம் வள்ளியம்மையின் நிலைமையைக் கவனிப்போம். வெள்ளையன் செட்டியார் குடிக்கூலிக்கு அமர்த்தியுள்ள மாளிகையின் பெயர், "மங்கள விலாசம்" என்பது. அம்மாளிகைக்குள் நன்று யலங்கரிக்கப்பட்ட ஒரு அறையின் ஒரு புறத்தில் பஞ்சு மெத்தையில் வள்ளியம்மை ஒரு நிண்டில் சாய்ந்துகொண்டும், தன் கையில் ஒரு கண்ணுடியைப் பிடித்தவண்ணம் அதில் தனது உரு

வத்தின் சுந்தரத்தைப் பார்த்துக் கொண்டும் பரமானந்தப் பெருங்கடலில் தத்தளிப்பவளைப் போற் காணப்பட்டாள். சிவந்த கட்டான கொழுத்த சரீரமும், வசீகரமான மைதீர் வதனமும் பெற்ற அம்மங்கை, பனாரிஸ் பட்டில் ஜரிகைப் புள்ளிகள் நிறைந்த சேலையையும், உயர்ந்த அணிகலனையும் புனைந்து கொண்டு ஒரு இளவரசி போல் தோன்றினாள். வள்ளியம்மை தனது படுக்கையறையில் தேவ கன்னிகை யொப்ப உல்லாசமாகப் படுத்திருந்தாளாயினும், அவளது முகம் மாத்திரம் அடிக்கடி மாறிக்கொண்டே யிருந்தது. இத்தகைய செல்வத்தின் உச்சியில் இருந்து இன்பம் துகரும் வள்ளியம்மைக்கு ஏதும் கவலையோ, அல்லது துன்பமோ இருக்கமாட்டா தென்று நாம் நம்பிய போதிலும், அவள் மிளாத துயரத்தை யுற்றவள் போலவே காணப்பட்டாள். அவளது நிகரற்ற வடிவம் இடையிடையே விகாரத்தை யடைந்து, அவளது நிலைமையைப் பார்ப்போருக்கு நன்கு விளங்கும்படி பளிங்குபோற் காட்டிற்று. அவளது குமுத இதழும், அஞ்சனந் தீட்டிய கண்ணும், மஞ்சன மாடிய மேனியும், கண்டார் கருத்தைக் கணத்தில் கவர்ந்து கொள்ளும் பிற உறுப்புக்களும் வாடி வதங்கிச் சோர்வைக் காட்டின. அப் பெண்ணணங்கின் உடல் நாழிகைக் கொரு முறை திடீரென்று வெடவெடவென நடுங்குவதும், உச்சி முதல் உள்ளங்கால் வரையில் சிலுசிலு வென்று மயிர்க்கூச் சடைவதும் காண்போர்க்குப் பெரிய ஐயத்தை யுண்டுபண்ணிற்று. அவளது விழிகளினின்று, "அறுகு நுனி பனியனைய" துளிகள் பெருகிக்கொண் டிருந்தன. ஒன்றுங் குறைவில்லாத இம் மாதரசி ஏனிப்படித் தவித்து நெருப்பில் வீழ்ந்த புழுவைப்போல் துடிக்கவேண்டும்? இத்தகைய பெண்மணிக்குக் கவலை யென்றால், அஃது எளிதாகவா யிருக்கும்? அந்தோ! அவளின் நிலையில் வேறொரு

மங்கை இருப்பா ளாகில், தன் இன்னலை வலிமையினால் வெல்லத் திறனற்றுத் தன் னுயிரையே மாய்த்துக் கொள் வாள். அக்காரிகை படும் நரக வேதனையை நாம் விபர மாகத் தெரிந்து கொண்டோமானால், அவளை மன்னித்து முழு அன்புடன் ஆதரிப்போ மென்பது கடவுளறிய உண்மை. தான் தீ நெறியிற் சென்றால் தீராத அவமானத் திற்கு உட்படவேண்டுமே என்ற ஓர் எண்ணம் மட்டும் வள்ளியம்மையை உருக்கி, அவளது பத்தரை மாற்றுப் பசும் பொன்னைப் பழிக்கும் உடல், பொன் உருகியோடு வது போல் கரிந்து தீய்ந்து போகும்படி செய்தது. ஆயி னும், வள்ளியம்மை அவளுடைய மனத் திடத்தையும், இயற்கை வலியையும் தளர விடவில்லை. இந் நிலையில் கிருஷ்ண தேவரைக் கவனித்து வந்தாள். திடீரென அவ ளது சோர்ந்த முகமும், மெலிந்த உடலும், அவளைக் கண்டு எவ்வழியிலேனும் அடையலா மென்ற கருத்தால் சிறிது தேறின. அவர் யாரென்றும், எவ்வூரென்றும் கொஞ்சங் கொஞ்சமாய் அக்கம் பக்கத்திற் கேட்டறிந்து கொண்டாள். உண்மையைச் சொல்லுங்கால், கிருஷ்ண தேவரைக் கண்டவுடனேயே மையல்கொண்டு விட்டாள். அவர் எவ்வூராயினும் சரி; எவ்வகுப்பினராயினும் சரி; எழ்மை நிலையிலிருப்பினும் சரி; இவை எல்லாவற்றையும் மீக்கூர்ந்த மையலால் வள்ளியம்மை கவனித்தா ளில்லை. எப்படி யேனும்.....இல்லை; இல்லை. அவரிடம் இரண் டொரு வார்த்தைகளாவது பேசி விலையாடி இன்ப சுகத் தைப் பெறவேண்டுமெனத் தீர்மானமாய்ச் சிந்தனைசெய்து விட்டாள். வள்ளியம்மை தன்னை யறியாமலே கிருஷ்ண தேவர்மீது விவரிக்க வொண்ணுத மையல்கொண்டு விட்டா ளாகையால், அவளது இயற்கையாகவே கொழுப்புள்ள தேகம் குளிர்ச்சியை விடுத்துக் கொதிப்பை யடைந்து,

காளுக்கு காள் அதிகரித்துக் கொண்டே வந்து, கட்டுக் கடங்காமற் பதறிற்று. அவள் படும் வாதையை அவளால் கொஞ்சமும் பொறுக்க இயலவில்லை. காதல் (மையல்) என்னும் இயற்கையாகவே உதிக்கும் அளவற்ற ஒரு பொருளால், வள்ளியம்மையினுடைய உடல் நிமிர்ந்து வீர்யம் பெற்றுச் சந்துகோத்திற் கெல்லாம் சுறு சுறுப்புடனும், மற்ற கோத்திற் கெல்லாம் கழற வியலாத காதற் சோர்வுடனும், கொந்தளித்துப் பொங்கி, உருகிக் குறுகி, பதறித் திகிரி, புரண்டு திரண்டு இங்ஙனம் ஆற்ற வியலாமல் திண்டாடிப் பிறகு கொண்டாடவும் செய்தது. 'இதனால் உயிர் போனாலும் சரி! கிருஷ்ணதேவரைக் கட்டி யணைத்து அவருக்கொரு முத்தம் கொடுக்கவேண்டும்' எனவும் எண்ணி விட்டாள். இங்ஙனம் அவள் கருதியபோது காதல் மயமாகவே அவள் விளங்கினாள் என்பதும், கலவி வேட்கையால் மிக வருந்தினா ளென்பதும் இனிது புலப்பட்டன. அவளுடுத்திருந்த மேகலை அவ ளறியாமலே நெகிழ்ந்து தளர்ந்தது; தோள் வளை கழன்றது; நெற்றியில் தீட்டியுள்ள செஞ்சாந்து காமத் தீயாற் கரிந்து வழிந்தது; மார்பிற் பூண்டிருந்த தண்முத்தாரம் தியங்து குலைந்தது; கண்கள் சிவந்து சுழன்று உட்சென்று குவிந்தன. அம் மங்கை நல்லாளின் செம்மேனி வண்ணங் கருக, அமுதம் ஊறி ஆம்பல் நாறும் செவ்வாய் புலர, "வான்மதி மாறினுந் தான் மதி மாறுத" வதனங் கருகிக் காம்படிந்த நறு மலர்போல் சாம்பப் பெற்றுக் கிடந்தாள்.

இங்ஙனம் எல்லையற்றுக் காட்டுத் தீப்போற் பரவிய மையலால் மதி யிழந்து, ஆவேசங் கொண்டு கிருஷ்ணதேவருடைய கட்பை விரைவிற் பெறவேண்டுமென்று மூண்ணலும் அதிகமாக உறுதி பூண்டாள். மூன் பின் அறியாத அவரை யெவ்விதம் அழைத்துப் பேசுவ தென்பதும்,

அப்படித் தான் பேசுவதைக் காதாற் கேட்டாவது, கண்ணுற் கண்டாவது யாரேனும் அறிந்துவிட்டால், தீராத அவமானத்திற்கு—வெளியிற் றலை காட்ட வியலாத அவ்வளவு பழிப்பிற்கு—இடமாகுமே எனவும் வள்ளியம்மை யெண்ணி யெண்ணிப் பாகா யுருகிப் பயனற்றுத் தன் மனதைப் புண்படுத்திக் கொண்டாள். ஆனல் எவ்வித இடையூறுகள் ஏற்படினும், அதை யவளுடைய மனம் கவனியாமல் மேன்மேலும் துடித்துக் கொண்டே யிருந்தது. கிருஷ்ணதேவரின் சுகம் பெரும்பேய் போல் பற்றி அவளை வெறி கொள்ளச் செய்துவிட்டது; அவளது வரையற்ற மோகம் புகலொணுத கடுங் காமத்திற் கிடங் கொடுத்தது; அவளது கொடிய காமம் துயரத்திற்கு வழி விட்டது. வள்ளியம்மை, கிருஷ்ணதேவரைத் தூரத்திற் பார்த்துவிட்டால், அவளது கொதிக்குந் தேகம் பனிக் கட்டியைப் போற் குளிர்ச்சி யடைந்து, அவ ளிருக்குமிட மெல்லாம் மகிழ்ச்சியே நிறைந்திருப்பதாகக் காணப்பட்டது. அவளுடைய துடிக்கும் தேகம் சற்று நிம்மதியாய் நின்றது. இஃதெல்லாவற்றிற்கும் காரணம், கிருஷ்ண தேவரது காதற் காந்தமே! சூரிய கிரணங்களைப் போன்ற அவரது காந்தக் கம்பிகள், எப்படி அச் சூரியன் பிரபஞ்சத்தின் நீரை வற்ற வைத்து அதற்குச் சூட்டைக் கொடுக்கின்றனவோ, அப்படியே காதல் என்ற ஆசையை மேன்மேலும் பெருகிக் குறுகச் செய்தன. ஆனல் கிருஷ்ணதேவர் அருகில் நெருங்கி, வள்ளியம்மையின் பக்கத்திற் போவாராகில், அவளின் சிறிது குளிர்ந்த தேகம் மீண்டுங் காமக் கொதிப்பை யடைந்து, அவளுடைய அறிவு கெட்டு, தெருவின்கண் பலநாட் பூஜையில்லாத காளி யென்ற சிறு தெய்வத்திற்கு ஆவேசம் வருவதுபோல், தானிருக்குமிடத்தி லிருந்து ஓரே பாய்ச்சலாகப் பாய்ந்து, அந்த மன்மதன்

மீது தான் போகத்தப் பெருஞ் சலதியில் மூழ்கி, அமிர்தத்தை அளவற்றுக் குடித்து, கணக்கில்லாத அன்பு முத்தங்கள் ஈந்து, அப்படியே சிறிதும் நாணம் என்பதையே அறியாமல், காமவேளின் கலின்பெறு நடனசாலையிற் குதித்தாடி, ஈருடலும் ஒருடலாய்ச் சுகம் பெறப் பதறிக்கிற்கும் என்பதில் யாதும் ஐயமில்லை. வள்ளியம்மையினுடைய தாங்க முடியாத ஆசை, அவளின் நற்குணங்களை போக்கி, பல தீக்குணங்கள் அதிகமாக உண்டாகும்படி செய்துவிட்டது. 'காதல்' என்னும் ஒப்புயர்வற்ற பொருளை நாம் உலகை அறகெறி யுய்க்கும் பெருந்துணையென்றும், கடவுள் மனமுவந் தளிக்கும் செம்பொருளென்றும் உச்சிமேற் கொண்டு போற்றுமளவிருத்தல் முடியாது. அது தோன்றக் கூடிய இடத்தில்—தகுந்த முறையில்—உண்டாகுமானால், அதை நாம் வாயார வாழ்த்துவோம். இடம் பாராமல்—தகாத விடத்தில்—அப்பொருள் தோன்றுமானால், அதன் கொடுமை கூறுந் தகைத்தன்று. ஆகையால், எவ்வளவுக் கெவ்வளவு காதலின் நற்செயல்களைத் துதிக்கின்றோமோ, அவ்வளவுக் கவ்வளவு வட்டியுடன் அப்பொருளின் தீமையையும், அதிற் சம்பந்தப்பட்டவர்கட்கு அஃது உண்டாக்கும் போபத்தினையுங் கடிகின்றோம்; எனவே, வள்ளியம்மை கிருஷ்ணதேவர்மீது கொண்ட ஆசையைக் 'காதல்' என்று வரைதற்குக்கூட நமது கரம் நடுங்குகின்றது. வள்ளியம்மை, 'கிருஷ்ண தேவரை அழைத்து, அவரிடம் தன்னுடலடக்க முடியாத காதலை வெளியிடுவோமா' என்று எண்ணினாள்; திடீரென்று தன காதற் சொற்களை மொழிந்தால், அவர் எங்கே ஒன்றும் பேசாமல் திரும்பி விடுவாரோ என்று பயந்தாள். ஆகவே அது பயனற்ற யோஜனை யென்று ஒழிந்தது. அவளுக்கு வேறு தக்க யோஜனையும் புலப்படவில்லை; கையிலக்த

காமத்தை அடக்கவும் முடியவில்லை. இறுதியாகப் பலவாறு எண்ணித் தன் கருத்தை ஒரு கடிதத்தில் வரைந்து வேலைக் காரியின் மூலமாக அனுப்பினாள்.

கிருஷ்ண தேவருக்கு இஃது ஒரு பெரிய வியப்பான சங்கதியாகவே யிருந்தது. கடிதத்தின் கையெழுத்து ஒரு பெண்ணினுடையது என்பது தோன்றவே, அவர் அதிக உற்சாகத்துடன் அதை யுடைத்துப் படிக்கலானார். ஆகா! அதில் வரையப்பட்டிருந்ததை என்னென் றியம்புவது! இக் கடிதத்தைப் படிக்கும்போது, அவரது சோர்ந்த முகமும், உடலும் சிறிது சிறிதாய் மகிழ்ச்சியை யடைந்தன. கடிதத்தை வாசித்து முடிந்ததும், அவரது கண்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தன. அக் கடிதத்தைத் தன் கண்களில் ஒத்திக்கொண்டார். சற்றுமுன் இருந்த அவரது மனவருத்தமும், தேக சிரமமும் ஆடிக் காற்றிற் பஞ்சுபோலாயின. அவரைச் சுவர்க்க லோகத்திற் கனுப்பியதுபோல, அவர் அவ்வளவு களிப்படைந்தார். கிருஷ்ண தேவர், ஒன்றுமே சந்தேகியாமல், தன்னுடைய ஆசைக் காதலியை நேரிற் கண்டு பேசப் போகிறோம் என்று பூரித்துப் புளகாங்கித மடைந்து, மாலை ஐந்துமணிக் கெல்லாம் தன்னைச் செவ்வனே அழகு படுத்திக் கொண்டு, வேகமாக நடந்து சென்றார்.

* * * * * *

மாலைக் காலத்துக் கதிரவனின் மஞ்சள் வெயில் கண்ணுக் கினியதோர் காட்சியா யிருந்தது. நில மகள் என்னும் அரசி, தான் போர்த்திருந்த வெண் பட்டாடையைக் கழற்றுவிட்டுக் கரு நிறமுடைய போர்வை யொன்றைப் போர்த்துக் கொண்டாள் என்று கூறும்படி, கதிரவன் தனது கிரணங்களை மேற்றிசையில் ஒடுக்குதலும், காரிருள்

போன்ற கருமேகம் ஆகாயத்தைப் பையப் பையச் சென்று பற்றியது. மழைத் துளிகள் சிறிது பூமியில் வீழ்ந்தன. கந்தங் கலந்த மந்தமாருதம் இனிதாக வீசிற்று. மலர்கள் நறுமணத்தை நாற்றிசையிலும் பரப்பின. பறவைகள் தத்தம் கூடுகளே நோக்கிக் கூவிக் கூவிக் குதூகலித்துச் சென்றன. கருமேகம் சூழ்ந்த வானத்தின் மேற்றிசைக் கோடியில், இன்னும் சிறிது நேரத்திற்குள் அறவே மறைந்து போகப்போகும் சூரியன், இடை யிடையே வெளிப்பட்டுத் தோன்றித் தன் செந்நிறத்தையும், மஞ்சள் வெயிலையும் உலகத்தாருக்குப் புலப்படுத்தினமை, கரிய தோர் காட்டானையின் வயிற்றைத் திடீரென்று வேடுவ னொருவன் வாளால் கிழிக்கும்போது, அதன் வயிற்றில் தோன்றும் செம்புண் போலவும், இடை யிடையே இடி முழக்கம் ஒன்றன்பின் னொன்றாக உண்டானமை, அந்த யானை வலி பொறாமல் அலறுவதுபோலவும் தோன்றின. ஏழு மணியாயிற்று. 'மங்கள விலாச'த்தில் முழுவதும் அமைதி குடிகொண்டிருந்தது. வெள்ளையன் செட்டியார், அமிர்தபானஞ் செய்துவிட்டுத் தாமிருப்பது பூலோகமோ, கைலாசமோ என்ற நிலையிலிருந்தார். வள்ளியம்மை, தனது அறிவையும் பஞ்சேந்திரியங்களையுங் கொள்ளை கொண்ட அந்தக் கட்டழகன் இன்னும் ஒரு நாழிகைக்கெல்லாம் தன் னருகில் வரப்போவதையும், தான் அதற்கு மேல் அடையப் போகும் பேரின்பத்தினையும் நினைந்து, மயங்கி மூளை குழம் பினபடி உட்கார்ந்திருந்தாள். அடுத்த நிமிடத்தில் கிருஷ்ண தேவர், தாழ்வாரத்திலிருந்த படிக்கட்டின் வழியாக ஏறி மேன்மாடத்திற்குச் செல்லலானார். படிகள் முடிந்தவுடன் ஒரு பெருத்த கூடம் காணப்பட்டது. அந்தக் கூடம் தேவேந்திரனது கொலுமண்டபம்போல மிக அழகாக அணி செய்யப்பட்டு, காண்போர் மனதை மயங்கச்

செய்வதா யமைந்திருந்தது. எங்குப் பார்த்தாலும் நீலக் கண்ணாடிகளும், இரவி வர்மாவின் விசித்திர வேலைப்பா டமைந்த படங்களும், மின்சார விளக்குகளும், இரவுக் குண்டுகளும், தந்த நாற்காலிகளும், வெல்வெட் மோபாக் களும், இதர விளக்குகளுமே மயமாக நிறைந்திருந்தன. ஆங்காங்கு சிற்பிகளாற் செதுக்கப்பட்ட விநோதமான பெண் சிலைகள் வேடிக்கையாக நிறுத்தப்பெற்றிருந்தன. தரையே தெரியாதபடி வழு வழுப்பான இரத்தினக் கம் பளங்கள் மீதே பரப்பப்பட்டிருந்தன. அந்தக் கூடத்திற்கு அடுத்தாற்போல் வள்ளியம்மையின் பள்ளியறை யிருந்தது. கிருஷ்ண தேவர் படிக்கட்டின் மூடிவையடைந்து கூடத்தில் நுழையவும், மூடப்பட்டிருந்த பள்ளியறையின் கதவுகள் உடனே திடீரென்று திறந்துவிடப் பெற்றன. நாம் இனிப் பள்ளியறையின் உள்ளே சென்று பார்ப்போம். அதன் அமைப்பையும், அழகையும் விவரித்துக்கூற இயலா தென்றே சொல்ல வேண்டும். அங்குக் காணப்பட்ட வில் (Spring) வைத்த பெருத்த கட்டில் அந்த அறை முழு வதையும் நிரப்பிக்கொண் டிருந்ததன்றி, அதன் மீது ஒரே காலத்தில் பத்துப்பேர் படுத்துக்கொள்ளத் தகுந்த இட வசதி பெற்றதாயிருந்தது. அந்த அறை முழுவதும் அத்தர், புனுகு, ஜவ்வாது, பன்னீர், மல்லிகை, உரோஜா, செம்பகம் முதலியவற்றின் ஒன்று கூடிய மணம் கமகமவென்று கமழ்ந்து, அவ்விடத்திற்கு வருவோரது மனதை மயக்கிப் பரவசப்படுத்தும் தன்மையதாயிருந்தது. சுவர் முழுவதும் நீலக்கண்ணாடிகளே நிறைந்திருந்தமையால், கட்டிலும், அதன் மீதுள்ள மனிதர் வடிவமும் அந்த கண்ணாடிக் குள் பலவாய்ப் பெருகி, மனதை மயங்கச் செய்ததோடு, அந்தப் பள்ளி யறையின் அழகை ஆயிரம் மடங்கு பெருக் கிக் காட்டின. அந்த அறையின் மேல்பக்கம் முழுவதும்

ஜரிகைத் துணுக்குகளால் விநோதமான ஓட்டு வேலைகள் செய்யப்பட் டிருந்ததன்றி, விநோதங்களும், சிருங்காரக் காட்சிகளும் நிறைந்த எண்ணிறந்த பல தேசத்துப் படங் கள் மேற்பக்கம் முழுதிலும் வைக்கப்பெற் றிருந்தன. மனிதர் கட்டிலின்மீது சாய்ந்தபடி தமது பார்வையை மேற்பக்கம் திருப்பினால், பலதேசத்து வடிவழகியர் தம் காதலருடன் இன்பமா யிருப்பதைக் கண்கூடாகக் காட்டுவ தாய் அமைந்திருந்தன. சுவரிற் பொருத்தப்பட்டிருந்த நீலக் கண்ணாடிகளால் நிலவற்றின் விசையை அழுத்தினால், அவைகள் கதவுகள் போன்று திறந்து கொள்ளும். ஒவ் வொரு நீலக் கண்ணாடியின் பின்புறத்திலும் ஒவ்வொரு பீரோ வைக்கப்பட்டுள்ளன. ஒன்றில் வள்ளியம்மையின் பல வைரமிழைத்த அணிகளும், பணங்களு மிருந்தன. மற்றொன்றில் அவளது பட்டாடைகளும், இரவிக்கைகளும், சேலைகளுமாகவே நிறைந்திருந்தன. இன்னொன்றில் மல் கோவா, ஜான்ஜ், மல்லிவாழை, திராக்ஷை முதலிய கனிவர்க் கங்கள் நிறைந்திருந்தன. இன்னொன்றில் சீப்பு, தைலம், ஸெண்டு, முதலிய சில்லரைச் சாமான்கள் வைக்கப்பட் டிருந்தன. இன்னொன்றில் ஷர்பத், இளநீர், சோடா முத லிய பானவகைகள் மல்கி யிருந்தன. இவ்வாறு அவ்வறை சயப் பள்ளியறை, உலகிலுள்ள இன்பப் பொருள்க ளெல் லாம் நிறைந்த ஒரு பண்டகசாலே (Store) போன்று அமைந்திருந்த தன்றி அவைகள் யாவினும் பன்மடங்கு திறந்து இன்ப மயமாகிய வள்ளியம்மையின் அத்தாணி மண்டபமாகும் பாக்கியத்தையும் பெற்றிருந்தது. அத் தகைய மேன்மை வாய்ந்த சயன மாளிகையின் கதவுகள் திறக்கப்பட்டவுடனே, உட்புறத்திற் சுவர்ண விக்கிரகம் போல் அழகின் திரளா யிலங்கிய ஒரு பெண்ணுருவம் நின் றது. அவளுடைய அழகு தெய்வீகத் தன்மை வாய்ந்த

தாய்த் தோன்றிய தாகையால், அவள் அப்போதே தெய்வ லோகத்திலிருந்து இந்திர விமானத்தி லமர்ந்து கீழே இறங்கியவள் போற் காணப்பட்டாள். அவளது மொத்தமான தோற்றம் அவள் அதிகப் பருமனின்றிப் பொற்கொடி போல இருப்பதாக மிளிர்ந்தது. அவள் முகம் அப்போதே மலர்ந்த நறுமலர் போல மூற்றிலும் ஒளியுடன் கூடியிருந்தது. அவள் அன்று முழுவதும் வைரங்களாலான அணிகளையே பாதாதி கேசம் வரை பூணந்திருந்தாள். அவளது மேனியில் பச்சை நிறச் சேலை யும், உரோஜா நிற இரவிக்கையும் அழகு பெற்றுக்கொண் டிருந்தன. இத்தகைய வள்ளியம்மை நிமிடத்திற்கு நிமி டம் தன்னெதிரி லிருக்கும் கடிகாரத்தைப் பார்த்த வண் ணம் தனது காதலின் முதிர்ச்சியால் தவித்துக் கொண்டு நின்றாள். அவ்வமயம் வாசலில் காலடிச் சப்தம் கேட்டது. அறைக்குள் ஒரு மனிதன் நுழைந்தான். மின்சார விளக்கு கள் பளீரென்று ஏற்றப்பட்டன. கதவுகள் தாமாகவே சப்தமின்றி மூடிக்கொண்டன. பிறகு நடந்தவை நமக்குத் தெரியாது. ஓ, வள்ளியம்மையே! உன் கதி இவ்விதமா முடிந்தது! என் செயலாம்! "ஊழிற் பெருவலி யாவுள?"

இந்த உலகத்தில் அதிசயமான பல சம்பவங்கள் நிகழ் கின்றன. அவ்விதம் நிகழும் சம்பவங்களில், பல கெட்ட வைகளாயும், பாபத்தைத் தரத் தக்கவைகளாயு மிருக்கின் றன. அவ்விதம் அவைக ளிருக்கின்றன வென்று தெரிந் தும் மனிதர்கள் அத்தகைய கார்யங்களைச் செய்து வரு கின்றது தான், இன்னும் அதிகமான வியப்பை உண்டாக்கு கின்றது; இவைகள் இவ்விதம் நிகழ்வதற்குக் காரணமா வது, சமாதானமாவது தோன்றும மிருப்பது, அதனினும் பெரு வியப்பை யுண்டாக்குகின்றது. இக் காலத்தில் இத் தேசத்தில்—பிற நாட்டிற் பன்மடங்கு பெருகியுள்ளன

வாயினும், நம் நாட்டைப் பொறுத்த மட்டில்—விபசாரம் சர்வ சாதாரணமான சம்பவமாய், உயர்ந்த குலத்தார் தாழ்ந்த குலத்தார், எளியார், வலியார், கற்றார், கல்லாதார் முதலான எல்லா வகுப்பினருக்குள்ளும் ஒப்ப நிகழும் நிகழ்ச்சியா யிருந்து வருகின்றது. அதிலும், முக்கியமாய்த் தகுந்த இயல்பும், கௌரவமும், மதிப்பும் வாய்ந்த குடும் பங்களிலேயே, பெரும்பாலும் விபசாரம் அதிகமாக நடை பெறுகிற தென்பதை அநேகர் பார்த்தும் கேட்டு மிருக் கிறார்கள். ஆனால், பெரும் குடும்பங்களில் நடைபெறும் விபசாரம், எளியார் குடும்பங்களில் நடைபெறும் விபசாரத் தைப் போல், அவ்வளவு விரைவில் வெளிக்கு வருவதில்லை. அதில இரகசியமாயும், அந்தரங்க மாயுமே நடைபெறுகின் றது. இப்படி நடைபெறும் விபசாரத்திற்கு உண்மையான காரணங் கண்டு பிடிட்பது மிகவும் அருமையாகவே யிருந்து வருகின்றது. கணவன், மாரனைப் போன்று அழகுடையவ னாக விருக்க, அவனை விடுத்து, 'அழகிருந்த ஊரிலேயே குடியிருந் தறியாத' ஒருவனை இன்னுயிர்க் காதலனாகக் கொண்டு, அவனுடன் கலந்து வாழும் பெண்கள் எத்தனை பேர்! கணவன் செல்வாக்குடையவ னாக விருந்தும், அவனை விரும்பாமல் தரித்திரத்திற்குத் தரித்திர மில்லாத ஒருவன் மீது காதல்கொண்டு, அவனுக்குப் பொருளாக் கொடுத்துத் தங்கள் உடலையும் மகிழ்ந்து கொடுக்கும் பெண்மணிகள் எத்தனை பேர்! தங்கள் வீட்டில் வேலை பார்க்கும் பணி யாளரிடமும், வண்டிக்கார ரிடமும் அந்தரங்க உரிமை பாராட்டி, அவர்களைத் தங்களா ருயிராக மதித்து, அவர் கட்குப் பலவகை யுபசாரமுஞ் செய்து, தங்கள் கணவரை னும்—பிறரேனும் அறியாமல் கலந்து மகிழும் பெண்கள் எத்தனை பேர்! 'இவர்கள் பணக்காரர் வீட்டுப் பெண்கள்; கௌரவமும் மதிப்பும் வாய்ந்த பெண்கள்' என்று கருதப்

படுகின்றனர்! அன்பர்களே! நம் தெய்வத் தீந்தமிழ் நாடு —சீதையையும், தமயந்தியையும், சாவித்திரியையும், சந்திரமதியையும் பெற்ற பாரத நாடு—இக்காலத்தில், இந் நிலைமையி லிருப்பதைப் பார்க்கும் உண்மைத் தமிழரில் எவர் மனந்தான் வருந்திக் கண்ணீர் உதிர்க்காம லிருக்கும்? எழிலில் இரதி தேவியையும், திருமகளையும் ஒத்திருக்கின்ற பெண்கள் பலர்—தங்கள் கணவரைவிட அழகிலும், செல்வாக்கிலும் குறைந்திருக்கின்ற சாதாரண மனிதர்களுடன் நட்புரிமை பூண்டு, அவர்களோடு கூட்டுறவு வைத்துக் கொண்டு, அவர்களுக்காகத் தங்கள் உயிரையுங் கொடுப்பதற்குத் தயாரா யிருக்கிறார்கள்! தங்கள் கணவரை வெறுத்தொதுக்கிவிட்டுத் தங்கள் ஆசை நாயகர்களுடன் சேர்ந்து வெளிநாடு சென்ற மாதர் எத்தனைபேர்! இன்னும் சென்று கொண்டிருக்கும் பெண்கள் எத்தனைபேர்! கள்ளக் காதலனிடத்தில் தங்கட்குள்ள ஆசைப் பெருக்கால், மணம்புரிந்த கணவனுடன் சண்டையிட்டும், கணவனையே கொன்றும், தங்கள் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளும் மங்கையர் எத்தனைபேர்! தங்களுடைய மானம், கௌரவம், மதிப்பு எல்லாவற்றையும் தங்களுடைய ஆசைக் காதலர் பொருட்டு இழந்துவிட்டு, அவ்விதம் குழந்தைகளையும் இழந்துவிட்டுத் தங்கள் காதலருடன் மனமகிழ்ந்து வரும் காரிகையார் எத்தனைபேர்! இவைகளையெல்லாம் நோக்கும்போது, பொருள் கருதியும், அழகில் மயங்கியும் பலர் விபசாரத்துக் குள்ளாகிறார்கள் என்று பொதுவாகக் கூறப்படுங் காரணம் ஒரு புறம் இருக்க, இன்ன காரணந்தா னென்று இனி தறிய முடியாத வேறு பல காரணங்களினாலும் விபசாரம் நடைபெறுகின்றன வென்பது இனிது புலப்படுகிற தன்றோ? மாறுபாடான நிலைமையி லிருக்கும் இருவர்,—அஃதாவது, அழகிற் சிறந்த ஒருத்தி வறியவனொருவனுட-

னும், கல்வி யுடையா ளொருத்தி கல்வி யறிவில்லாத ஒருவனுடனும், வயதில் மூத்தா ளொருத்தி வயதில் இளையானொருவனுடனும், உயர்ந்த குலத்தா ளொருத்தி தாழ்ந்த குலத்தா னொருவனுடனும் காதலுரிமை பூண்டு இருப்பதை நோக்கும்போது, இத்தகைய விபசார ஒழுக்கம் ஏற்படக்கூடிய காரணம் யாது என்பதை உள்ளபடியே அறிய முடியாதபடி நாம் மயக்குகிறோம். இங்ஙனம் காரணம் அறியமுடியாத ஒரு நிலைமையிற்றான் 'ஏதோ தலைவிதி அவ்விதம் நடந்தது' என்று விதியின்மீது பழி சுமத்தியும், 'காதலுக்குக் கண்ணில்லை' யென்று காதலின்மீது பழி சுமத்தியும், 'காமம் பெற்ற பெண்ணென்று கூடப்பாராது' என்று காமத்தின்மீது பழி சுமத்தியும், 'திருவருள் அங்ஙனமிருக்கதெனின், யார் என்செய்தல் கூடும்' என்று கடவுள் மீது பழி சுமத்தியும் மனிதர் தம் அறியாமையை வெளியிடுகின்றனர். ஆனால், 'இத்தகைய விபசாரம் நடைபெறுவதற்குக் காரணந்தான் என்ன?' என்று சிறி தாராயுமிடத்து, அவரவருடைய மனப் போக்கும் விருப்பமும் ஒவ்வொரு துறையிற் செல்லுகின்றன வென்பதும், மூன்னினைப் பயனால் ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டு இருவர் ஒன்று சேரவும், அவ்வமயம் அவர்களை யறியாமலே அவர்களுள் அன்பு நிகழவும், அது காரணமாக அவர்கள் மனம் ஒருமித்து உடலொருமிக்க இசைகிறார்க ளென்பதும், அப்படிப்பட்டவர்கள் கண்ணுக்குத் தங்கள் கணவன்மார்களை விடப் பன்மடங்கு தங்கள் ஆசை நாயகர்கள் சிறந்தவர்க ளென்னும் உணர்ச்சி,—இவ் வுணர்ச்சி சரியா யிருப்பினு மிருக்கலாம்—ஏற்படுகிற தென்பதும், இப் பிறழ்ந்த உணர்ச்சியே அவர்கள் விபசரிப்பதற்குக் காரணமென்பதும் இனிது புலப்படும். இத் தகைய விபசாரங்கள் தற்காலத்தில் பெரும் குடும்பங்களில் பெரும்பாலும் நடை

பெறுகின்றன வென்பது மறுக்கவும், மறைக்கவும் முடியாத ஓர் உண்மையாக விருப்பதால், நமது வள்ளியம்மை, தன் கணவன் (என்ற ஏதோ ஓர் உருவம்) இருக்கிற காலத்திலேயே, கிருஷ்ண தேவருடன் எட்புரிமை பூண்டு, அவரைத் தனது ஆருயிராகக் கருதி இன்பம் நுகர்ந்து வந்தாள் என்பது ஓர் வியப்பன்று. ஆகவே, கிருஷ்ண தேவர் அடிக்கடி அவளுடைய மாளிகைக்குச் சென்று அவளுடன் கல்லாபமா யிருந்து திரும்புவார். வள்ளியம்மை அவரையே சிறந்த காதலனாகக் கருதி, அவருடன் மிகுந்த அன்பு பாராட்டி வந்தாள். தேவரும் தமக்குச் சகட யோகம் வந்துவிட்டதென்று நினைத்துப் பெரிதும் விரும்பி வந்தார். இவ்விருவர்க்கும் ஏற்பட்ட இக் கள்ளக் காதல் இழிவுடைய தாயினும், பிற அறிந்தால் பழிப்புக்கு இடமேற் படக் கூடியதாயினும், அந்தரங்கமாகவே நிகழ்ந்து வந்ததாயினும், இவ்விருவரும் ஒருவர்மீ தொருவர் செலுத்திவந்த அன்பும், அபிமானமும் வியக்கத் தக்கனவாயும், மிகப் பலம் பொருந்தினதாயும், எளிதிற் பிரிக்கக் கூடாதனவாயும் இருந்தன.

பத்தாவது அதிகாரம்

காதலர்தங் கனிவுரைகள்

நமது அன்பர்கள் இப்போது நம்மோடுகூட ஆந்திர நாட்டிலுள்ள இராஜமகேந்திரபுரம் என்ற நகரத்திற்கு வரவேண்டும். அந்த நகரத்தில் ஒருநாள் மாலைப் பொழுதில் மிகக் குறுகலான தெருவிலுள்ள சிறிய குடிசை ஒன்றில் ஒரு வாலிபனும், ஓர் இளமங்கையும் உல்லாசமாய்

உட்கார்ந்து வார்த்தையாடிக்கொண் டிருந்தார்கள். அந்த இளமங்கை இன்ப மயமான தோற்றத்துடன் இலங்கினாள். ஒளியுடன் கூடிய புன்முறுவல் அவளுடைய செவ்விய இதழ்களில் தவழ்ந்து விளையாடிக்கொண் டிருந்தது. மகிழ்ச்சி அவளுடைய கண்களை ஒளியுடன் திகழச் செய்தது. அப் பெண்ணுக்கு வயது பதினெட் டிருக்கலாம். அவள் நிறம் சாதாரணமாய்ப் பொது நிறம் என்பதிலும் சிவப்பு; ஆனால் நல்ல சிவப்பன்று. கொஞ்சம் பச்சை கலந்தாற் போலிருந்தது. அவள் கைகளும், கால்களும் போதுமானபடி மட்டும் சதைப் பற்றுள்ளனவாயும், நல்ல வடிவாயும், அழகாயு மிருந்தன. அவள் மருங்குல், மேற் பாகத்தின் விரிவுக்கும், திரட்சிக்கும், எழுச்சிக்கும் தக்கபடி யின்றிச் சுருங்கி யிருந்தது. அவள் பூங்குழல் படிப்படியாய் இடுப்புக்குக் கீழ்வரை அவிழ்ந்து கலைந்து தொங்கிக் கொண்டிருந்தது. அவள் முகமோ, அதிக வட்டமும், அதிக நீளமு மின்றி, தனக்குத் தானன்றி வேற்றுமை யில்லாத வண்ணம் விளங்கியது. பிறைபோல் வளைந்துள்ள அவள் நெற்றியின் கீழே, புருவங்கள் கருத்து நீண்டு வளைந்திருந்தன. அவள் கண்களோ, என் சொல்வோம்! சாதாரண சமயத்தில் ஒருவாறு நம்மால் அவைகளை வருணிக்க முடியலாம்; ஆனால், இப்பொழுது தன் காதலன் பாங்கர் இருக்கும் நிலையில் அவள் கண்கள் நிலைமை நாம் கூற வல்லமோ! என்ன அன்பு! என்ன மடமை! என்ன குளிர்ச்சி! என்ன களிப்பு! என்ன கூர்மை! என்ன காந்தி! என்ன இளமை! ஆகன்று நீண்டு காதை யளாவி யிருப்பினும், மற்ற அங்கங்கள் யாவற்றினும் மிகச் சிறியனவாயுள்ள இக் கண்களில், அவை யாவற்றினும் மிகுந்து மனதைக் கவரும் அழகு எவ்வா றமைந்ததோ! கருத்திருந்தும் இவ்வளவு ஒளி வீசக் கூடிய பொருளை நாம் கண்டதே

யில்லை. மற்ற மாதர்கள் ஒருநாள் முழுதும் சுண்ணும்புக் குழம், ஒரு துலாம் காசுக் கட்டிக்கும் கேடாக வெற்றிலை சுவைத்தாலும், அவர்களுடைய உதடுகள் இப்பெண்மணி யின் இதழ்களில் இயற்கையா யமைந்த நிறத்தை யெட்டி யும் பாரா. இயல்பாகவே இவ்வண்ணம் அமைந்திருக்கத், தான் வெற்றிலை சுவைத்தால், இதழ்கள், தன்னைக் கண்ட ஆடவருயிரை யுண்டு இரத்த முற்றதுபோற் கடூரமாய்த் தோன்றுமெனக் கருதியும், இயற்கைக்கு மாறுகச் செம் முத்தங்கள் காணப்படுமென் றெண்ணியுமே இம் மங்கை நல்லாள் கருணைகூர்ந்து தாம்பூலந் தரியாது விட்டனளோ? அங்ஙனமேத் தான் பிரமனமைத்தான்; இவள் பெண்மை யையும், அதைக் காட்டும் பாவனையையும் யார் அமைத் தார்கள்? சீதா தேவியின் அழகை வருணிக்கையில், அவனோ, மனக் கண்ணு லன்றி, வெளிக் கண்ணுற் கண்டி லாத கம்பர்,

"ஈசனுர் கண்ணின் வெந்தா னென்னுமி திழுதைச்சொல்; இவ் வாசனு ரேதியாளைக் கண்டனன்; வல்ல வாற்ருற் பேசலாந் தகைமைத் தல்லாப் பெரும்பிணி பிணிப்ப, நீண்ட ஆசையா லழிந்து தேய்ந்தான் அங்கனல் வுருவ மம்மா!"

என்று கூறியுள்ளார். கண் குளிர, ஆசை தீரச், செய்தவப் பயனுற் கண்ட நாம், இக் காரிகையை இவ்வாறு வருணிப் பது பொருந்தாதோ? இம் மாசிலா மங்கையைக் காண்ப தற்கு, இராவணனைப்போல் இருபது கண்கள் இல்லாமை பற்றி நமக்குக் கொஞ்சம் வருத்தந்தான். இப்பெண் யாரோ வென ஐயுற்று நண்பர்கள் நீண்ட நாரம் போய் விடவேண்டாம். அவள்தான் கோகிலம் எனக் கூறிவிடு கிறோம். அவள் பக்கத்தில் அமர்ந்துள்ள மாசிலாமணி யென்ற வாலிபனே அவளுடைய ஆருயிர்க் காதலன். அவ் வாலிபன், கோகிலத்தை நோக்கிப் பேசத் தொடங்கி

"அன்பே! நாம் இவ்வூருக்கு வந்து ஐந்து நாட்களாகின்றன. அப்படி யிருந்தும் இந் நகரத்திலுள்ள போற்புதக் காட்சிகளையும், உன்னதமான மாளிகைகளையும் பார்க்க வேண்டுமென்ற எண்ணமாவது, விருப்பமாவது உண்டாக வில்லையே?" என்று அன்புடன் கேட்டான்.

கோகிலம்:—தங்களுடைய பேச்சுக் குரலைத் தவிர வேறு எத்தகைய ஒலிகளையுங் கேட்பதற்கு எனக்குக் காதில்லை; தங்கள் திருவுருவத்தைத் தவிர வேறு எத்தகைய காட்சிகளையுங் காண்பதற்கு எனக்குக் கண் இல்லை! என்னை நோக்கி நீங்கள் புன் முறுவலோடு வார்த்தையாடும்போது நான் சுகமாயும் மகிழ்ச்சியாயு மிருக்கிறேன். ஆதலால், வேறு காட்சிகளை நான் என் பார்த்தல் வேண்டும்?" என்று மொழிந்தாள்.

மாகிலாமணி ஏதும் பதில் கூறாது மௌனமாகவிருந்தான். அவனுடைய மனதில் பலவிதமான எண்ணங்கள், சமுத்திரத்தில் அலை ஒன்றன்பின் ஒன்றாய்க் கிளம்புவதைப்போல், இடைவிடாது உதித்தன. கோகிலமும் சிறிது நேரம்வரை யேதும் பேசிஞளில்லை. அவ்விருவரும் உட்கார்ந்திருந்த இடம் சுமார் பத்து விநாடிவரை அமைதியுடன் விளங்கிற்று. காற்றின் ஓசையைத் தவிர வேறு ஓசை கேட்கப்படவில்லை. கடைசியாக மிகுந்த முயற்சியினும் பேசுபவனைப்போல், மாகிலாமணி பேசத் தொடங்கிக் "கோகிலா! எனதன்பே! ஆருயிரே! நீ.....அறிந்து கொண்டாயா" என்று வாய்குழற நாத் தடுமாற உரைத்து மேற்கொண்டு யாதும் பேச முடியாமல் திகைத்தான். எவ்வளவு முயன்றும் அவன் மனத்திலிருந்த எண்ணங்கள் வார்த்தையாக வெளிப்பட மறுத்துவிட்டன. அவனுடைய முகம் வெளுத்தது; அவனுடைய இதழ்கள் ஈரப் பசை

யின்றி உலர்ந்தன ; கண்கள் மயக்கங் கலந்த ஒருவிதமான ஒளியுடன் பிரகாசித்தன. தன்னையே தான் மறந்து நின்றான். உண்மையைக் கூறுமிடத்து, சில நாட்களாகவே கோகிலத்தினிடம் அவன் கொண்டிருந்த காதல் இது வரையில் மறைவாகவிருந்தது போலிராமல் புலப்பட்டுத் தோன்றுவதாயிற்று. காதல் என்னும் நெருப்பு அவனை எரிக்கத் தொடங்கிற்று ; அன்பு என்னும் ஆறு கரை புரண் டோடத் தலைப்பட்டது. அவனுடைய கண்களில் காதல் என்னும் தீ கொழுந்துவிட்டெரிந்தது. பாபம் ! என் செய் வான் ! கோகிலத்தின் அழகில் மயங்கினான் ; குணத்தில் தயங்கினான். அவனுடைய உடல், பொருள், ஆவியாகிய மூன்றும் அப் பெண்மணிக்கு அடிமையாயின. கோகிலம் என்னும் ஒரு எண்ணத்தைத் தவிர, வேறு எண்ணம் அவன் மனத்திலில்லை ; வேறு எண்ணமிருக்க அவன் மனத் தில் இடமுமில்லை. நெஞ்சம் அவளுக்கே இடமாக வைத் தான். அம்மாதை ஒரு நாள் நள்ளிரவில் ஆற்றங்கரையி லிருந்து தாங்கிவந்த நாள் முதல், தன்னிலும் சிறந்த வளாக, தன்னுயிரினும் அருமையுடையவளாக அவளை அவன் கருதினான். அதிகஞ் சொல்லுவானேன் ? மாசிலாமணி கோகிலத்தைக் காதலித்ததுபோல் உலகத்தில் எந்த மனி தனுமே காதலித்திருக்க மாட்டானென்று கூறுவதே போதுமானது. கோகிலம் எதும் பதில் மொழிந்தாளில்லை. அவள் பூமியை நோக்கியபடியே அசைவற்றிருந்தாள். அவளுடைய கார்பொருவுங் கருங்கூந்தல் காற்றில் அசைந்துகொண் டிருந்ததானது, மாசிலாமணியின் கவ லையைப் போக்குதற்குச் சாமரை வீசுவதுபோலிருந்தது. அவளுடைய செவ்விய இதழ்கள் துடித்தன. அவளுடைய கண்களில் ஒருவகையான கருணை நோக்கம் பிரதி பலித்துக் கொண்டிருந்தது. கோகிலம், தன்னை யவன் காதலிக்கின்ற

னென்பதை யுணர்ந்து கொண்டாள். தன்மீது அவன் கொண்டிருந்த கரைகடந்த காதலின் பெருக்கை யுணர்ந்த கோகிலம், வியப்பாலும், மகிழ்ச்சியாலும் வாய்திறந்து பேச முடியாமல் திகைப்படைந்தாள். ஏதோ ஒரு வகையான தெய்வீக சக்தியினால் உந்தப்பட்டவளைப்போல் திடீரென்று மாசிலாமணி, கோகிலத்தைக் கட்டி யணைத்து அவளுடைய தலையை நிமிர்த்திக் "கோகிலா! கனியமுதே! மட வனமே! நான் கேட்ட கேள்விக்குத் தயைசெய்து பதி லளிக்கமாட்டாயா? கேட்கத் தகாத மொழியைக்கேட்டே னென்று உனக்கு வருத்தமா? நான் கேட்டது குற்றமாயின் அன்பே! மன்னித்திடு! உன் மனம் புண்ணாகும்படியான வார்த்தை யேதேனும் என் வாயிலிருந்து வந்திருந் தால், பெண்பாவாய்! நீ விதிக்குந் தண்டனையை மனமு வந்து ஏற்றுக்கொள்கிறேன். அன்பே! நான் எதாவது தவறு செய்திருந்தால் தயைசெய்து வெளியிடு! நான் உன்னை மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்; நான் செய்தது பெருங் குற்றமே! என் மனத்திலிருந்து வந்த இரகசியத் தை நான் இப்போது வெளியிட்டு உன்னிடம் கூறியது பெருங் குற்றமே! கண்மணி! நான் என் செய்வேன்! வெளியிடக் கூடாதென்று நினைத்து என் மனதிற்குள் வைத்திருக்க எவ்வளவோ முயன்றும், என்னை யறியாமலே வாயிலிருந்து வெளிப்பட்டுவிட்டது! எப்படி யிருந்த போதிலும், பொன்போல் வாய்! உண்மை எவ்விதத்திலும் வெளிப்பட்டுவிடும் என்பது நீ அறிந்ததுதானே? ஆனாலும், குயின் மொழியாய்! உன் தாமரை வதனமும், அங்கயற் கண்ணும், கொங்குவார் குழலும் என் ஆன்மாவை உன்வசம் ஐக்கியப்படும்படி செய்துவிட்டன; ஆதலால், உன் மீது எனக்குள்ள அடங்காக் காதலை அடக்கும் வகையறியாமல் நான் உன்னிடம் தெரிவித்தேன். அப்படி நான் தெரி

வித்தது அறியாத் தன்மையே ; மூடத்தனமே. எனெனில், உன்னை மணஞ் செய்து கொள்ளும்படியான நிலையில் நான் இல்லை. உன்னுடைய தூய காதலைப் பெறுவதற்குரிய பூர்வ ஜன்ம புண்ணியமாவது, அதிர்ஷ்டமாவது, இயல் பாவது, மதிப்பாவது ஒரு சிறிதும் வாய்க்கப்பெறுத நான், 'மூடவன் கொம்புத்தேனுக் காசைப்படுவது'போல் என் னுடைய காதலை உன்னிடம் தெரிவித்ததால் யாது பயன்? ஒன்றுமில்லை! ஆதலால், நான் செய்த குற்றங் குற்றமே!" என்று கடல் மடை திறந்தாற்போற் கூறி, மீண்டும் ஓர் முறை அவளை இறுகத் தழுவிக்கொண்டான். கோகிலம் ஒன்றும் பதில் கூறவில்லை. அவளுடைய கண்களில் நீர் ததும்பிற்று. பேசுவதற்கு அவளுடைய நாவெழவில்லை. அவளுடைய மனம் பிளவுபட்டுப் போய்விடும்போல் இருந் தது. மாசிலாமணியைத் தழுவியபடியே அவள் அறி விழந்து சாய்ந்திருந்தாள். அணை கடந்த வெள்ளம் வரை கடந்து செல்லும்போது அதனைத் தடுப்பது எவ்வளவு கடினமோ, அவ்வளவு கடினமாகவே தன் மனதிலெழுந்த எண்ணங்களைத் தடுப்பதும் இருந்ததென்பதை இனிதறிந்த மாசிலாமணி, மறுபடியும் தன்னையே தான் மறந்து பேசு லானான் : "கோகிலா! என்னுயிருக்குயிரே!" என்று அன் புடனும், பிரிவுடனும் அவளை அழைத்து, "உன்னுடைய காதலுக்கும்படி போதுமான பணக்காரனாக நான் இருக் கும் பக்ஷத்தில் உன் பொருட்டு என்ன வேண்டுமானாலும் செய்வேன்! உன்னை யெவ்விதம் இன்புறச் செய்ய முடியு மோ, உன்னை எவ்விதம் சுகமுறச் செய்ய முடியுமோ, உன்னை எவ்விதம் மகிழ்ச்சியடையும்படி செய்ய முடியுமோ அவ்விதமெல்லாம் நான் செய்வேன்! எனக்கு வேண்டுவ தெல்லாம் நீயே! உன்னைத் தவிர வேறு பெண்களை நான் கனவிலும் நினைத்தேனல்லேன். ஆயினும், நான் கொண்ட

காதல் என்னுயிற்று?" என்றான். அப்போதும் கோகிலம் மௌனமாகவே யிருந்தாள். ஆனால், அவளுடைய மெல்லிய கரங்கள் மாகிலாமணியினுடைய கைக்குள்ளிருந்தன. அவள் தலை அவனுடைய மடிமீதிருந்தது. அவன் தன்னுடைய முகத்தை அவள் முகத்திற்கு அருகில் வைத்துக்கொண்டு மிக இனிய குரலுடன், வருத்தத்தையும் இன்பத்தையும் ஒருங்கே விளைவிக்கின்ற அவளுடைய கண்களைக் கூர்ந்து கவனித்தபடியே "அன்பே! இன்னமும் பேசலாகாதா? தயைசெய்து உன் முத்தான வாய் திறந்து ஒரு மொழியாவது உரைத்தல் கூடாதா? என்னுடைய உயிர் உன்னிலேயே என் உடலில் தங்கியிருக்கிற தென்பதை இன்னமும் நீ அறிந்து கொள்ளவில்லையா? என்னுடைய எல்லா இன்பமும், எல்லாச் சுகமும், எல்லா மகிழ்ச்சியும் உன்னையே—உன் ஒருத்தியையே—பொறுத்திருக்கின்றன வென்பதை, பூங்குழலாய்! நீ உணரவில்லையா? இனி என்னுடைய வருங்கால நிலைமை உன்னையே அடைக்கலமாகக் கொண்டிருக்கிறதென்பதை நீ தெரிந்து கொள்ளவில்லையா? நீ என்னைக் காதலிக்கின்ற தென்று எனக்குத் தெரிந்தால் இந்த உலகம் "தாமரைக்கண்ணன் உலகை" விட எனக்கு இன்பம் பயக்குமன்றே? சூரியனுடைய பல கதிர்களும் சூரியகாந்தக் கல்லின் மத்தியில் ஒன்று சேருவனபோல், என்னுடைய எல்லா எண்ணங்களும், எல்லா விருப்பங்களும், எல்லா நோக்கங்களும் உன்னையே நிலைக்களனாகக் கொண்டிருக்கின்றனவென்பதை நீ அறியாயா? எல்லாம் வல்ல இறைவன் ஆன்மாவினுள் அந்தரான்மாவாய் ஏனைய உயிர்களிடத்தில் விளங்குவதுபோல், நீ யன்றே என்னுடைய ஆன்மாவுக்குள் அந்தரான்மாவாய் விளங்குகின்றாய்! நீ இல்லாவிடில் இந்த உலகம் எனக்கு என்னாகும்? சுகமெல்லாம் துக்கமன்றே? மகிழ்வெல்லாம் துயர

மன்றே ? இன்பமெல்லாம் துன்பமன்றே ? ஆதலால், இன்னமும் என்னை நீ சோதிக்காதே. என்னை வருத்தத்திற் குள்ளாக்காதே. இவ்விதம் நீ மௌனமாயிருப்பது சிறிதும் முறையன்று ; தருமமன்று ; நெறியன்று. கண்மணி ! என்னை நீ காதலிக்கின்றாயா, இல்லையா ? தயைசெய்து சொல்லு !" என்று மிகுந்த வாஞ்சையுடன் கூறி, அவளை மீண்டும் மீண்டும் அணைத்து, முத்தமிடுகையாள் கதுப்புக்களில் முத்தங்களை அடுக்கினான். அவனுடைய மொழிகள், கோகிலத்தின் மனதைக் காந்தம் கண்ட இரும்பென அவன்பால் இழுத்தன. அவனுடைய மடியிற் படுத்திருந்த கோகிலம் திடீரென்று எழுந்து உட்கார்ந்து அவனை ஒரு விநாடி கூர்ந்து நோக்கினாள். இன்ன தன்மையதென்று விரித்துரைக்க முடியாத ஏதோ ஒரு வகையான நாணமும், நாணத்தோடு கலந்த இனிமையும் அவளுடைய முகத்தில் தோன்றின. அவள் முன்னிலும் பன்மடங்கு அதிகமான எழிலுடன் விளங்கினாள்.

கோகிலம் ! நான் கேட்ட கேள்விகட்கு என் பதில் பகராமலிருக்கின்றாய் ? என்னைத் தவிர வேறு ஆடவன் மீது நீ காதல் கொண்டிருக்கிறாயா, என்ன ? அவ்விதமிருந்தாலும் வெளிப்படையாகத் தெரிவித்துவிடு ! அதற்கு இடையூறாக நான் ஒருபோதும் இரேன்" என்று வருத்தத்துடனும், ஐயத்துடனும் மாசிலாமணி கோகிலத்தை நோக்கி வினவினான்.

கோகிலம் :—" அன்பரே ! என்ன கொடுமை ! என்ன கொடுமை ! ! அவ்விதமும் நீங்கள் நினைக்கலாகுமா ? உண்மையாக நான் உங்களைத் தவிர வேறு எந்த ஆடவனையும் இதுவரையிற் காதலித்ததில்லை ; இனியுங் காதலிப்பதில்லை. இஃது உண்மை, உண்மை" என்று கூறிக் கண்ணீருகுத்தாள்.

மாசிலாமணி :—ஆ! கண்மணி! அப்படியா? நீ யென்னை உண்மை யன்புடனும், உள்ளன்புடனும் காதலிக் கின்றாயா? அப்படியானால், இன்றே என் பிறப்பு நற்பயனை யடைந்தது! ஈடேறிவிட்டது. ஆருயிரே! என்னைக் காதலிக்கின்றாயா? என்ன, இன்னொரு முறை சொல்லு; பார்க்கலாம்! காதலியே! உன் மீது எனக்கிருக்கும் காதலின் பெருக்கு இத்தகையதென் பதை நீ உணர்ந்திருந்தால்—"

என்று அவன் கூறிக்கொண்டிருக்கும்போதே, மாதவி மரத்தைக் கற்பகக்கொடி சுற்றிக்கொள்வதுபோல், அவனைக் கோகிலம் தழுவி முத்தமிட்டாள். பிறகு "அன்பரே! நீங்கள் என்னை எவ்வளவு ஆழ்ந்த அன்புடன் காதலிக் கின்றீர்கள் என்பதை நான் அறிவேன்!" என்றாள்.

மாசிலாமணி :—"அதைப்போலவே நீ என்னைக் காதலிக் கின்றாயன்றோ?" என்று மீண்டும் வினவினான்.

கோகிலம் :—"ஆம்; அதிலும் சந்தேகமா? நான் உங்களை முழு மனதிடனும், உண்மையுடனும் காதலிக்கின் றேன்"

மாசிலாமணி :—அன்பே! உன்னுடைய காதலில்லாமல் நான் உயிருடனிருக்க முடியவே முடியாது! ஆனால், உன்னை நான் காதலித் திருக்கக்கூடாது; ஒரு சமயம் காதலித்திருந்தாலும் அதை யுன்னிடம் தெரிவித் திருக்கக் கூடாது. உன்னை யடைய வேண்டுமென்று நான் நினைப்பதும், விரும்புவதும் பைத்தியம் பிடித்தவ னுடைய செய்கைபோன்றதே தவிர, வேறில்லை! இருந்தபோதிலும், அன்பே! ஒரு முத்தம் கொடு! இதையாவது இன்பத்தின் உன்னத நிலையிலிருந்து நான் மகிழ்கின்றேன். ஏனெனில், இனி எனக்கு

நேரப்போகும் துன்பத்தை யாரறிவார்? ஈசன் ஒருவனே அறிவான்!" என்று கூறினன்.

அவன் அங்ஙனங் கூறியதற்குக் காரணமுண்டு. தான் பெருத்த வறுமை நிலையிலிருப்பதாகக் கூறிக்கொண்டான். ஆகவே, அவன் ஒரு ஏழை யென்பது பெறப்படுகின்றது. உலகம் இப்பொழுதிருக்கும் நிலையில் ஒவ்வொரு காரியத்திற்கும் பணமே இன்றியமையாததா யிருக்கின்றது. ஒருவன் எவ்வளவு கல்விமானுக விருந்தபோதிலும், எவ்வளவு அழகுடையவனுக விருந்தபோதிலும், எவ்வளவு அன்புடையவனுக விருந்தபோதிலும், பணம் இல்லாதவனுக விருந்தால், ஒரு பெண்மணியின் காதலைப் பெறுவதற்கு அருகனற்றவனு யிருக்கிறான்! மேற் சொன்ன குணங்களில் ஒன்றேனும் மருந்திற்கு மில்லாதவனு யிருப்பினும், ஒருவன் பணம் மாத்திரம் நிறைய வுடையவனுக விருந்தால், அவன் எத்தகைய பெண்மணியையும் காதலிக்கும் உரிமையுடையவனுக விருக்கிறான். இந்தக் காலத்தில் நடைபெறும் மணங்களில் பெரும்பான்மையான மணங்கள் பணத்தையே குறியாகக்கொண்டு நடைபெறுகின்றன. இதை யறியாதார் யார்? தொண்ணூறு வயது சென்ற கிழவனுயிருப்பினும், எழுத்து வாசனை யறியாத முழு மூடனுக விருப்பினும், "அங்கமெலாங் குறைந்தழகு தோழ நோயரா" யிருப்பினும், நிறைய நகை போடுகிறேனென்று சொல்லுவானேயாகில், அழகிற் சிறந்த இளம் பெண்களோ, முன்பின் சிறிதும் ஆராயாமல், அவனுக்கு மணஞ் செய்து கொடுக்க எத்தனையோ பெற்றோர்கள் போட்டி போட்டுக்கொண்டு முன் வருகிறார்கள்! நிற்க: கோகிலம், அவனை உள்ளபடி காதலித்தாளென்பதிலும், அவனையே மணம்புரிய விரும்பினளென்பதிலும், சிறிதும் ஐயமின்று. அவன் எளியவனுக விருக்கிறானென்றும், ஆதலால் அவனை மணஞ் செய்துகொள்ளக்

கூடாதென்னும் அவள் நினைத்தாளில்லை. மாசிலாமணி தனவந்தனு யில்லாதிருந்தமை பற்றி அவள் மன மஞ்சுந் தானே யொழிய மனங் கசந்திலள். எனெனில், அவன் பணக்காரனுயிருந்து அவளைக் காதலிக்க நேரிட்டால், அவளுடைய பணத்துக்காக அவளைத் தான் காதலிப்பதாக அவன் நினைக்க நேரிடலாமென்னும், ஆனல் இப்போதே—அவளை அவன் பொருட்டு—தான் காதலிக்கும் உண்மை அவனுக்கு இனிது புலப்படுமென்னுங் கருதினுள். சில நிமிடங்கட்குப் பிறகு கோகிலத்தை நோக்கி "ஆனலும் இம்மாதிரியாய் ஏழ்மையான நிலையில் என்னுடு கூட இருந்தபோதிலும், எப்போதும் திருப்தியோடு காலங் கழிக்க முடியுமா ?" என்று மாசிலாமணி வினவினன்.

கோகிலம் :—" ஓ, முடியும் ! எப்போதுமே முடியும் !" என்று ஆர்வத்துடன் விடை பகர்ந்தாள்.

மாசிலாமணி :—கண்மணி ! உன்னுடைய அன்பு எவ்வளவு தூய்மையுடையதாயும், உன்னுடைய குணம் எவ்வளவு சிறப்பாயும், உன்னுடைய நடத்தை எவ்வளவு உயர்வாயும் இருக்கின்றன ! நான் உன்னை எவ்விதம் வஞ்சித்திருக்கிறேனென்பதை நினைவு கூராமலிருக்கும் படி என்னை நீ செய்து வருகின்றுய் ! என்னே யுன்றன் இயல்பு !

கோகிலம் :—என்ன ! என்னை நீங்கள் வஞ்சிக்கவாவது ! முடியாது ; முடியாது ! நீங்கள் அவ்விதம் செய்திருக்க முடியாது ! நான் நம்பவேமாட்டேன் ! அன்பரே ! நீங்கள் கூறிய மொழிக்குப் பொருளென்ன ?

மாசிலாமணி :—காதலி ! முதன் முதல் தனியாக உன்னை நான் கள்ளிரவிற் கண்டு அழைத்து வந்தபோதும், என்னுடைய காதலை வெளி யிட்டபோதும் எனாள

மான பொருள் எனக்கு இருக்கிறதென நான் உன்னிடம் சொல்லவில்லையா ?

கோகிலம் :—ஆம் ; சொன்னீர்கள் ! இப்போது நமக்குப் போதுமான பொருள் இல்லையா, என்ன ? குடிப்பதற்குக் கூழும், குடியிருப்பதற்குக் குடிசையும் நமக்கு இருக்கின்றன ! இவைகளைத் தவிர நமக்கு வேறென்ன வேண்டும் ?—நாம் இருவரும் சேர்ந்திருக்கும் வரையிலும் !

மாசிலாமணி :—கோகிலா ! நான் உன்னை வஞ்சித்து விட்டேன். அதை நீ நம்பவில்லை. ஆனால் இந்தக் குடிசையின் மட்சுவர்களையும், மடித்துப் போயிருக்குங் கூரையையும், கரி பிடித்த மட்பாண்டங்களையும் ஒரு முறை நீயே சுற்றிப் பார் ! இவைகளை நீ ஏராளமான செல்வமென்று நம்பமுடியுமா ? உணரமுடியுமா ? இவ்வகையான நிலையில் நான் இருப்பேன் என்று நீ முதலில் நினைத்திருக்க மாட்டாய் ! நான் வாக்குறுதி செய்தபோது இவ்விதந்தான் என்னுடைய செல்வம் இருக்குமென்று நீ எதிர் பார்த்திருக்க மாட்டாய் !

கோகிலம்:—அன்பரே, ஆருயிர்க் காதலரே ! நான் சொல்லுவது மெய் என்பதற்குக் கடவுள்தான் சாட்சி, அவரையே நான் கூப்பிடவேண்டும். என்னை இன்புறச் செய்வதற்கு—என்னைச் சுக நிலையில் வைப்பதற்கு—என்னைத் திருப்தி யடையச் செய்வதற்கு—மாட மாளிகைகளும், கூடகோபுரங்களும் வேண்டுவன அல்லவென்றும், இரத்தினபரணங்களும், விலையேறப் பெற்ற பொருள்களும் அவசியமல்ல வென்றும் நான் ஆணையிட்டுச் சொல்லுகிறேன் ! இந்த உலகத்தில்

என்னைவிடச் சிறந்த பாக்கியசாலி இல்லை என்றும், எந்தப் பெண்ணும் என்னைப்போல் சுகமாயும், மகிழ்ச்சியாயும் இருக்க மாட்டாளென்றும், நான் நிச்சயமாய் நம்புகின்றேன். காதலரே! நீங்கள் காலை முதல் மாலை வரையில் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைக்கும் ஒரு கூலிக்காரனுக விருந்தபோதிலும், தங்களை மணம் செய்துகொண்டதால் நம்முடைய உணவின் பொருட்டுப் புசிச்சி செய்யும் தொழிலினும் இழிந்ததோர் அருவருப்பான தொழிலை நான் செய்யும்படி நேரிட்ட போதிலும், பிச்சை யெடுத்துண்டும் ஆற்று நீரைக் கையால் முகந்து அருந்தியும் காலங் கழிக்கும்படியான அவ்வளவு கேவலமான நிலைக்கு நாம் தாழ்த்தப் பட்ட போதிலும், இந்த விசாலமான வுலகத்தில் தலை வைத்துப் படுப்பதற்கு ஒரு குடிசைகூட இல்லாமல் அலைந்து திரிந்தபோதிலும், பூமியே கட்டிலாகவும், திசைகளே கால்களாகவும், வானமே மேற்கட்டியாகவும் நமக்கு அமைந்திருந்த போதிலும், அப்போதும், என்னுடைய உதடுகளிற் புன்சிரிப்பையும், கண்களில் மகிழ்ச்சியையுங் காண்பீர்கள்!" என்று மிகுந்த ஆர்வத்துடனும், ஆவேசத்துடனும், பரபரப்புடனும் பேசினாள்.

மாசிலாமணி :—"அன்பே! உன்னுடைய குணம் இவ்வளவு சிறந்ததாக விருப்பதால் கடவுள் உனக்கு அருள் புரிவார்! பெண்களினுடைய உண்மைக் காதல் காவியங்களிலும், ஓவியங்களிலும், மேலை பாவக உணர்ச்சியிலும் மாத்திரம் இருப்பதாக மனிதர்கள் நினைப்பது தவறு என்பதையும், மக்களுடைய வாழ்க்கையில் அமைந்து உள்ளபடியே அனுபவத்திற்கு வரும்படியாகச் சிற்சில பெண்களிடமும் இருக்கின்றது என்பதையும்

இப்போது நான் கண்கூடாக அறிந்து கொண்டேன். அந்தக் காதலுக்கு உயிர் இருக்கிற தென்பதையும், எவ்வளவு துன்பங்களையும் பொறுமையுடன் தாங்கும் படியான ஆற்றல் அதற்கு வாய்ந்திருக்கிற தென்பதை யும் இப்போது நான் ஐயமறத் தெரிந்துகொண் டேன். காதலி! நீ என்னை மேலான இன்ப நிலை யிலும், உன்னதமான மகிழ்ச்சி மலையிலும் வைத் திருக்கின்றாய்! என்னுடைய பாக்கியமே பாக்கியம்!" என்று களிப்பு மீதூர நவின்றான்.

மறுநாட் காலையில் மாசிலாமணி, கோகிலத்தை ஒரு உன்னதமான மாளிகைக்கு அழைத்துக் கொண்டு போய், "கண்மணி! இதுதான் நம்முடைய உண்மையான வாஸ ஸ்தலம். இந்தப் பேரரண்மனைக்கு நீயே அரசி!" என்று கூறினான். அதுமுதல் "சம்பந்த விலாச" மாளிகையே அவர்கட்கு உரியதாயிற்று.

* * * *

இனி நாம் மாசிலாமணியையும், கோகிலத்தையும் விட்டு ஷண்முகநாதனைப் பின் தொடர்ந்து செல்லுவோம். ஷண்முகநாதன், அந்நகரத்தின் நடுவணுள்ள ஒரு உணவுச் சாலையின் (Hotel) மேன்மாடியில் அமர்ந்து, குமாரசாமி யுடன் உரையாடிக் கொண்டிருந்தான்:—

ஷண்முகநாதன்:—சரி; முடிவாக என்ன சொல்லுகிறாய்? —என்றான்.

குமாரசாமி:—அதற்குத் தான் கூறுகிறேன். அவள் பேரில் எத்தனையோ காளையர்கள் கண்ணோட்டமிட் டிருக் கின்றனர். அக் கண்ணோட்டங்களில் கள்ளங் கபடு எள்ளத்தனையும் அறியாத அவள் அகப்பட்டுக் கொள் ளும் முன்னர் நாம் முந்திக் கொள்ளுதல் வேண்டும். அவள்—கோகிலம்—மறுபடியும் தங்கள் வயப்பட்டு

விடில் எல்லாவித இன்பத்தையும் அநுபவித்து விடலாம். அப்படியானால் வேறென்ன வேண்டும்?

ஷண்முகநாதன் :—ஆம்; ஆனால், நீ அவ்வழியில் முயற்சித்தால் தானே நலமாகும்?

குமாரசாமி :—முயற்சிப்பதில் தடையில்லை. நான் கேட்ட தொகை எங்கே?

ஷண்முகநாதன் :—நீ கேட்பது ஆயிரம் இரண்டாயிரமானால் தடையின்றி இதுவரையிற் கொடுத்திருப்பேன். ஐயாயிரம் ரூபாய் வேண்டுமென்கிறாயே!

குமாரசாமி :—அதற்கென்ன செய்வது! எனக் கிதனால் ஏற்படும் சிரமம் எவ்வளவு என்பதைத் தாங்கள் அறியாதவர்களன்று! ஐயாயிரம் பெரிய காரியமா? அடையப் போகும் இன்பம் பெரிய காரியமா?

ஷண்முகநாதன் :—அவள் என் வயப்பட வேண்டுமே?

குமாரசாமி :—அஃது என்னைப் பொறுத்த வேலை. நான் முற்கூறியபடி அவளை எப்படியாவது தந்திரமாக இங்கு அழைத்துக் கொண்டுவந்து விடுகிறேன்; அல்லது தூக்கிக் கொண்டுவந்து விடுகிறேன். அதன் பிறகு நயமாக வார்த்தையை விட்டுப் பாருங்கள். காரியம் முடியாமற் போனால், கட்டாயத்தின் பேரிற் சாதித்துக் கொள்ளலாம்.

ஷண்முகநாதன் :—அப்படியானால் இப்போது ஐயாயிரம் ரூபாய்கள் நான் அவசியம் தரத்தான் வேண்டுமோ?

குமாரசாமி :—ஆகா! தடையென்ன?

ஷண்முகநாதன் :—நான் இதுவரையில் இத்தகைய வழிகளில் இரண்டு லக்ஷ ரூபாய்கட்கு அதிகமாகவே செலவழித்து விட்டேன்! இதனால் பலர் என்மீது குறை கூறுகின்றனர். உன் மூலமாக என்னிடம்

வந்த தாசிகட்கு நான் இதுவரையில் கொடுத்த பொருளுக்குக் கணக்கு வழக்கே யில்லை. இப்போது ஐயாயிர மென்றால் நான் என் செய்வது ?

குமாரசாமி :—என்ன செய்வதென்றால், கோகிலத்தை மறந்து விடுங்கள் !

ஷண்முகநாதன் :—அதுதானே முடியவில்லை.

குமாரசாமி :—இப்பொழுது தங்களிடமுள்ள ரூபாய்களில் ஒரு ஐயாயிரம் கொடுப்பது தங்கட்குச் சிரமமா ?

ஷண்முகநாதன் :—கையிலிருந்தது பதினாயிரமே யாகும். அதை நேற்றுத் தாசி கமலவேணிக்கு முன் பணமாக அனுப்பிவிட்டேன்.

குமாரசாமி :—தாசி கமலவேணிக்குப் பதினாயிரம் ரூபாய்கள் தரும்போது, அழகிற் சிறந்தவளாகிய கோகிலத்தைத் தந்திரம் செய்து இங்கு அழைத்து வரும் எனக்கு ஐயாயிரம் ரூபாய் கொடுத்தே தீரவேண்டும்.

ஷண்முகநாதன் :—இப்போது சொக்கம் கையிலிருந்தால் வஞ்சனையா ?

குமாரசாமி :—சொக்கமாக இல்லாவிடில் அவசியமில்லை. சென்னையிலுள்ள தங்கள் கடைக்கு ஒரு உண்டியல் கொடுத்து விடுங்கள்—என்றான்.

ஷண்முகநாதன், சற்று ஆலோசித்து விட்டு "நல்லது தருகிறேன்" எனக் கூறி, ஒரு உண்டியல் எழுதி அவன் கையிற் கொடுத்தான்.

பதினேராவது அதிகாரம்

சிவ பூசையில் கரடி புகுதல்

இரவு பன்னிரண்டு மணி யிருக்கலாம். தெருக்களில் மனிதர் நடமாட்டமே அப்பொழுது காணப்பட வில்லை. முனிஸிபாலிடி விளக்குகள் இந்திய மாதாவின் கதியை நினைந்து கொண்டு, பகலில் அதிகாரவர்க்கத்தினருக்குப் பயந்து, இரவில் ஒருவரு மில்லாதபோது கண்ணீர்விட் டழுதன. நாகன் என்னும் கரிய திருமேனியையுடைய ஒருவன், மங்கள விலாசத்தி னருகில் நடந்து கொண்டிருந்தான். அவன் திரும்பித் திரும்பிப் பின் பக்கத்தை நோக்கியதால், யாரையோ எதிர் பார்க்கிறா னென்று புலப்பட்டது. எதிர் பார்க்கப்பட்டவன் வராததால், "வராவிட்டால் அவனுக்குப் புத்தி கற்பிக்கிறேன்" என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான். அவனுக்கு நேரம் செல்லச் செல்லக் கோபம் அதிகரித்தது. சில நிமிடங்கட்குப் பிறகு, "இதோ வந்துவிட்டான்; மூளியாண்டி!" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். அவ்வமயம் போலீஸ் சேவகர் யாரும் காணப்படவில்லை. இராத்திரி வேளைகளில் ஜனங்களைப் பாதுகாப்பதற்காகவே போலீஸ் சேவகர்களைப் பாராக் கொடுக்கும்படி மேலதிகாரிகள் நியமித்திருக்கிறார்கள். ஆனால், நடு இரவில் ஒரு வீட்டில் கொலை நடந்தாலும், கொள்ளை நடந்தாலும், கலகம் நடந்தாலும், ஒரு சேவகனை அச்சமயம் உதவிக்கு எதிர் பார்த்தல் முடியாது. பாராவி லிருப்பதாகச் சொல்லிவிட்டு ஒழிந்த நிழலை யொன்றில் படுத்துச் சுகமாய்த் துயில் புரிவதே இந்தச் சேவகர்கட்குத் தெரியுமன்றி, உள்ள படியே தங்கள் கடமையை உணர்ந்து நடக்கத் தெரியாது.

தப்பித் தவறி இரண்டொரு சேவகர் பாராவில் இருந்த போதிலும், 'கொலே' அல்லது 'கொள்ளே' என்ற வார்த்தை களைக் கேட்டவுடன் காததூரம் சென்று பதுங்கி விடுவார் கள். அயலூரிலிருந்து வந்த யாராவது கண் மறைவான இடத்தில் மலங் கழிக்கச் சென்றால், அதைக் கவனமாகப் பார்த்திருந்து அவர்களைப் பிடித்துக் கொண்டு போவதில் இவர்கள் காட்டும் வீரத்தைப் போல் மற்றப் பெரிய சம்ப வங்களில் காட்டுவதற்கு இவர்களுடைய மனம் துணிவ தில்லே. போலீசாருக்குத் தெரியாமலே எத்தனையோ கொலைகளும், கொள்ளைகளும் நடக்கின்றன. அவர்கட்குத் தெரியாமல் நடந்தனவும், நடப்பனவும் எண்ணுதற் கிய லுமோ? அவர்கட்குத் தெரிந்தும், தெரியாதவரைப் போல் இருந்து விடுவதனாலேயே தப்பித்துக் கொண்ட கொலே பாதகர்களும் ஊரில் இல்லாமற் போகவில்லே. ஆனால், மேலதிகாரிகள் மீது நாம் குறை கூறுவதில் யாது பயன்? அவர்கள் மக்களின் நலத்தையும், தேயத் தமைதியையும், பொருள்களின் பாதுகாப்பையுங் கருதியே சேவகர்களே நிய மித்திருக்கிறார்கள். இந்தச் சேவகர்கள் தங்களுடைய கட மையை உணராமல் இருந்தால் மேலதிகாரிகள் யாதுசெய்தல் கூடும்? தகுந்த கல்வியும், உபகார சிந்தையும் இச் சேவகர் கட்குப் போதுமான அளவு இருந்தால், இவர்களும் இப் போது நடந்து வருவதுபோல் நடக்கமாட்டார்கள். நிற்க:

நாகன் என்ற திருடன் தன்னருகில் வந்த முனி யாண்டியை நோக்கி, "ஆனால், வரும்படி ஏராளமாய்க் கிடைக்கும். நீ ஒருபோதும் இதிற் கிடைக்கப் போகிற அளவு சம்பாதித்திருக்க மாட்டாய்" என்றான்.

முனியாண்டி:—அப்படியானால் சரி, உனக்குத் தைரிய மாக விருந்தால் நான் எதற்காகத் தடுக்கப் போகி றேன்? கூடவே வருகிறேன்.

நாகன் :—உனக்குப் பயமா யிருந்தாற் போய்விடு ! நான் பயங்காளிகளுடன் சேர்ந்து ஒரு காரியமும் செய்வ தில்லை.

முனியாண்டி :—இவ்விதமாய் நீ என்னிடத்திற் பேசாதே. நான் பயங்காளி யென்று எவ்விதம் தெரிந்து கொண் டாய் ?

நாகன் :—அம் மட்டோடு உன் பேச்சை நிறுத்து ! நான் முன்னே போகிறேன் ; நீ பின்னால் வா—

என்று கூறி நடந்தான். முனியாண்டி அவனைப் பின் தொடர்ந்தான். இருவருக்கும் இடையில் சுமார் ஐம்பதடி தூரம் இருந்தது. வழியில் அவர்கள் போலீசாரைச் சந் திக்கவில்லை. இருவரும் 'மங்கள விலாச'த்தின் அருகிற் சென்று, தோட்டத்துச் சுவரிலேறி உள்ளே குதித்தார் கள். அங்கே நிர்ச்சந்தடியா யிருந்தது. நாகன், தன் னுடைய பெரிய பையிலிருந்து ஒரு இரும்பத்தை யெடுத் தான். அது மிகவும் சிறியதாகவும், வலியதாகவு மிருந் தது. வீட்டுப் பின்புறக் கதவில் தாழ் இருக்க வேண்டிய இடத்தில் துளைக்கும் கருவியால் ஒரு சிறு துவாரம் செய் தான். அந்தத் துவாரத்தில் இரும்பத்தை விட்டுக் கை நழையும்படியாக அறுத்தான். அதற்குள் கையை நுழைத் துத் தாழ்க்கோலை இழுத்து விட்டான். அந்தக் கதவிற் குக் கீழே ஒரு தாழ்க்கோலும், மேலே ஒரு தாழ்க் கோலும் இருந்தன. மேலே யிருந்த தாழ்க்கோல் நாக னுக்கு எட்டாததால், முனியாண்டி தன் முழங்கால்களை யும், கைகளையும் ஊன்றிக்கொண்டு நாற்காலிபோ லிருந் தான். நாகன் அவன் முதுகின்மேல் ஏறி நின்றுகொண்டு, கீழே யிருந்த தாழ்க்கோலைத் திறந்ததுபோல் மேற்றாழ்க் கோலையும் எடுத்து விட்டான். தாழ்கள் இரண்டும் எடுக் கப்பட்ட போதிலும் கதவு திறக்க வரவில்லை. அஃது உட்

புறமாகப் பூட்டப்பட் டிருந்தது. பூட்டு இருக்கு மிடம் தெரிவதற்காக, நாகன், ஒரு கயிற்றில் கல்லைக் கட்டி, மேலே செய்த துவாரத்திலிருந்து மெதுவாகக் கீழே விட்டான். கல் பூட்டின்மேற் பட்டதும், கயிற்றை வெளியே யிழுத்து அதனுடைய நீளத்தைக் கணக்குப் பண்ணி, உட்பக்கம் பூட்டு இருக்குமிடத்திற்குச் சரியாக வெளியே துவாரம் செய்து இரம்பத்தால் அறுத்துப் பூட்டை யெடுத்துவிட்டான். பிறகு கதவைத் திறந்துகொண்டு இருவரும் உள்ளே நுழைந்தார்கள். வீட்டிற்குள் முழுதும் இருட்டா யிருந்தது. திருடர்கள் ஒரு விளக்கை ஏற்றிக் கொண்டு சமையற்கட்டில் தேடத் தொடங்கினர்கள். வெள்ளிப் பாத்திரங்கள் அகப்படுமென்பது அவர்கள் முக்ய நோக்கம். சமையற்கட்டில் அவை யகப்படவில்லை. அங்கே ஒரு அறை யிருந்தது, அவ்வறையின் கதவை நாகன் ஒரு கடப்பாறையால் திறந்துகொண்டு உள்ளே சென்றான். அதி லும் வெள்ளிப் பாத்திரங்கள் இல்லை. அவனுக்கு மிகுந்த கோபமும் ஆத்திரமும் உண்டாகி விட்டன. முனி யாண்டியை நோக்கி, "இந்த வீட்டுக்காரர்கள் மிகவும் அற்பர்கள் போலும்! பாத்திரங்களைக்கூடப் படுக்குமிடத் திற்குத் தூக்கிக்கொண்டு போயிருக்கிறார்கள். இப்பொழுது என்ன செய்வது?" என்றான்.

முனியாண்டி :—என்ன செய்கிறது? மேலே போய் அவர் கள் படுத்திருக்கும் இடத்தில் தேடிப் பார்க்க வேண்டும். இரண்டொரு தலைகளை வெட்ட வேண்டி யது நேர்ந்தாலும் நேரும்—என்றான்.

பிறகு, இருவரும் மேல் வீட்டுப் படிகளில் ஏறினர்கள். நாகன் தன் மடியிலிருந்து இரண்டு கைத் துப்பாக்கிகளை எடுத்து, ஒன்றை முனியாண்டியிடங் கொடுத்தான். அவர் கள் மேல் வீட்டிலுள்ள அறைகளை ஒவ்வொன்றாகச்

சோதித்துக்கொண்டு போனார்கள். ஒரு அறையில் கைக் கடியாரமும், தங்கச் சங்கிலியு மிருந்தன. இவற்றை நாகன் எடுத்துக் கொண்டான். மற்றோரறையில் வெளிச்சம் தெரிந் தது. சற்று நேரம் இருவரும் கதவின் அருகில் நின்று கொண் டிருந்தார்கள். அறைக்குள் ளிருக்கும் ஆளைப் பய முறுத்தி, நகைகளும் வெள்ளிப் பாத்திரங்களும் இருக்கும் இடத்தைக் காட்டச் செய்ய வேண்டுமென்பது அவர்கள் கருத்து. நாகன், பூட்டுத் துவாரத்தின் வழியாக நோக்கி விட்டு, முனியாண்டியைப் பார்த்து, "உள்ளே ஒரு பெண் ணும் ஆடவனும் இருக்கிறார்கள்; மெதுவாகக் கதவை உடைத்துத் தள்ளு" என்றான். நாம் இப்பொழுது அறையினுட் சென்று நோக்குவோம்: இரதியாகவும் மன்மதனாகவும் நடித்துக்கொண்டிருந்த வள்ளியம்மையும், கிருஷ்ணதேவரும் திடீரென்றுண்டான அந்தக் கூச்சலைக் கேட்டு, திருடரென்பதை ஊகித் தறிந்துகொண்டு பெருந் திகிலும் குலை நடுக்கமும் உண்டாக, ஒருவரை யொருவர் மறந்து அசைவற்றுப் போயினர். அவர்களது உடல்கள் கிடுகிடென்று ஆடத் தொடங்கின. பேச்சும் உச்சி மயிரைப் பிடித்து உலுக்கிற்று. வியர்வை வெள்ளமாக ஓடிற்று. ஒருவரோ டொருவர் பேசவும், ஒருவர் பக்கம் ஒருவர் தமது முகத்தைத் திருப்பவும் அஞ்சி இருவரும் இரண்டு உயிரற்ற பதுமைகள்போல உட்கார்ந்திருந்தனர். கிருஷ்ணதேவரது தேகத்தில் அதுகாறும் எழுந்து வதைத்துக்கொண் டிருந்த காமத்தீயெல்லாம் தண்ணீரில் ஆழ்த்தப்பட்ட தணல் போல, இருந்தவிடம் தெரியா மல் பறந்துபோய் விட்டன. அவ்வாறு இரதிதேவியின் ஆஸ்தான மண்டபத்தில் புதிய காதலர் இரும்புப் பொறியி லகப்பட்ட எலிகள் போலிருக்க, அவர்கள் காதுகளில் அடிகளின் ஓசையும், கதவுகள் உடைக்கப்படும் ஓசையும்

ன்றுகக் கேட்டனை. அதை யுணர்ந்த காதலர் என்ன செய்வதென்பதை அறியமாட்டாமல், பெருத்த திகில் கொண்டவராய்த் திருடர்கள் அறைக்குள் வந்துவிட்டால், தாங்கள் என்ன செய்தல் கூடும் என்று நினைத்துப் பெரிதும் கதிகலங்கி ஒருவர் முகத்தை யொருவர் பார்த்துக் கொண்டனர். அதற்குள் தடதடவென்ற ஓசை கேட்டது. அவர்களிருவரும் சடக்கென்று கட்டிலேவிட்டுக் கீழே யிறங்கினர். கிருஷ்ணதேவர், கோழைத்தனம் நிரம்பிய அதிசூரானதால், அவரது உடல் கட்டி லடங்காமல் வெட வெடவென்று நடுங்கிற்று. அவர் நாற்புறங்களிலும் திரும்பித் திரும்பிப் பார்த்து, தப்பி ஓடிப்போவதற் காகிலும், மறைந்து கொள்வதற்காகிலும் வசதி யிருக்குமோவென்று கவனிக்கிறார்; வள்ளியம்மையின் பின் பக்கமாகப் போய் மறைந்து கொள்ளுகிறார். "ஐயையோ! திருடர் இங்கே வந்துவிட்டால் என்ன செய்வது! வெளியிற் போக வேறு ஏதாவது வழி யிருக்கிறதா?" என்று கூறித் தவிக்கிறார். ஆனால், வள்ளியம்மை நிரம்பவும் மனோதிடமுள்ளவ ளாத லால், அவரையும் அழைத்துக்கொண்டு சிறிது தூரத்தி லிருந்த பலவான பித்தளைக் கட்டிலைச் சகடைகளால் உருட்டித் தள்ளிக் கதவின் பக்கத்தில் குறுக்காக மறைத்து வைத்தாள்; இன்னமும் அங்குக் கிடந்த காற்காலி கள், பூந்தொட்டிகள் முதலிய சாமான்களையெல்லாம் கொணர்ந்து கட்டிலின்மீது வைத்துக் கதவு முழுவதையும் மறைத்துவிட்டாள். திருடர்கள் கதவில் தூள் செய்து தாழ்ப்பாளை விலக்கிக்கொண்டு கதவைத் திறப்பது வழக்க மென்பதை அவள் கேள்வியுற் றிருந்தாளாதலால், அவர்கள் தாழ்ப்பாளை விலக்கினாலும் கதவை எளிதில் திறக்க முடியாமல் செய்து வைத்துவிட்டுத் தாங்கள் வெளியில் போய் விடுவதற்கு ஏதேனும் வழி யிருக்கிறதாவென்று

அவள் அங்கும் இங்கும் ஓடிப் பார்த்தாள். நாற்புறங்களிலும் இரும்புக் கம்பிகள் வைத்த ஜன்னல்கள் இருந்தன. ஜன்னல்கள் மிக உறுதியாக வைக்கப்பட்டிருந்தபடியாலும், அவைகளை விலக்கக் கடப்பாறை முதலிய எவ்விதமான கருவியும் அவ்விடத்தில் இல்லாமையாலும், அவைகளின் வழியாகத் தப்பித்துப் போவது சாத்திய மில்லாததாயிருந்தது. ஆதலால், வள்ளியம்மை தத்தளித்தவளாய் மேலே நிமிர்ந்து பார்த்தாள். அவர்கள் இருந்த அறை முதல் மாடத்திலுள்ளது. அதற்கு மேலிருந்த மொட்டை மெத்தையிலிருந்து உட்புறத்தில் வெளிச்சம் உண்டாவதற்காக, மேல் தளத்தில் இரண்டு கண்ணுடிகள் பதிக்கப்பட்டிருந்தன. அவை யொவ்வொன்றும் இரண்டடி நீள மூள்ளவையாக இருந்தமையால் அவைகளின் வழியாக ஓர் ஆள் எளிதில் நுழைந்து போவதற்கு வழி யிருந்தது. அவைகளைப் பார்த்தவுடன் வள்ளியம்மைக்கு ஒரு யுக்தி தோன்றியது. அந்த இரண்டு கண்ணுடிகளில் ஒன்றை யுடைத்து அதன் வழியாகத் தாங்கள் மொட்டை மெத்தைக்குப் போய்விட்டால், அங்கிருந்து படிகளின் வழியாகத் தோட்டத்திற்குள் இறங்கி விடலாமென்று ஓர் எண்ணம் உண்டாயிற்று. அதை யவள் இரண்டொரு வார்த்தையாகத் தேவருக்குத் தெரிவிக்க, அவரும் அதை ஆமோதித்தார்; ஆனால், அந்த மேல்தளம் அவர்களிருந்த தரையிலிருந்து இரண்டாள் உயரத்திலிருந்தது. இரண்டு கண்ணுடிகளுள் ஒன்று அந்த அறையின் நடுவிலிருந்தமையால், அதன் வழியாகப் போதல் சாத்திய மில்லாததாயிருந்தது. மற்றொன்றோ, அதிர்ஷ்டவசமாக, அவர்கள் கதவினருகில் இழுத்துவைத்த கட்டிலிற்கு மேலே, ஒரு பக்கத்திற் சிறிது விலகினாற்போல விருந்தது. அந்தக் கட்டிலின்மேற் போடப்பட்டிருந்த மேஜைகள் நாற்காலிகள்

முதலியவற்றின் மேல் ஒரு மனிதன் ஏறிக் கொசுவலைச் சட்டத்தில் நின்றுகொண்டு அந்தக் கண்ணுடியை உடைத்து விடலாமெனத் தோன்றியது. அப்படி அதைக் கிருஷ்ண தேவர் உடைத்து வழி செய்த பிறகு, இருவரும் கட்டிலி லிருந்த சாமான்களின் மேல் ஏறுவதென்றும், தேவர் வள்ளியம்மையை முதுகில் தூக்கி முதலில் தவாசத்தின் வழியாக மேலே யேற்றிவிடுகிறதென்றும், அதன் பிறகு அவர் தொற்றி ஏறிப் போய்விடுகிறதென்றும் அவர்கள் முடிவு செய்து கொண்டனர். தேவரது தேகம் 'கிடுகிடு' வென்று நடுங்கிக்கொண்டிருந்த அந்த நிலைமையில், அவர் எவ்வித முயற்சியும் செய்ய வல்லமையற்றவராக இருந்தா ரானலும், திருடரிடம் அகப்பட்டு எத்தகைய துன்பங்கள் அடைய நேரிடுமோவென்ற பேராச்சத்தினல் தூண்டப்பட்ட வராய், அவர் பக்கத்திற்கிடந்த ஒரு வெண்கலக் குவளையி னல் உடைத்துவிடலாமெனக் கருதி அதைக் கையில் எடுத் துக்கொண்டு கட்டிலின்மேல் பாய்ந்து, தாறுமாறாக நிரப்பப் பட்டுக்கிடந்த ஈற்காலிகள் மேஜைகளின்மேல் காலைவைத்து ஏறினர்; கால்கள் வெடவெடவென்று நடுங்குவதால், அவை வைக்கப்படு மிடத்திலெல்லாம் தவறிப் போய் இரண்டு மூன்று முறை அவர் கீழே விழுந்து, கால்களிலும், கைகளி லும், உடலிலும் பல விடங்களில் பித்தளைக் கட்டில் மோதி, பெருத்த காயங்கள் பெற்றார்; பல இடங்களி லிருந்து இரத்தம் வழிந்தொழுகியது; உச்சி முதல் உள்ளங்கால் வரையில் வியர்வை வெள்ளமாக வழிந்தது; தேகம் நெருப் பாகப் பற்றி எரிந்தது. அந்த நிலைமையில் கிருஷ்ணதேவர் மிகவும் பாடுபட்டுக் கட்டிலின்மீது ஏறி, நிமிர்ந்து நின்று சிறிது தூரத்திற் கப்பாலிருந்த கண்ணுடிப் பக்கமாக வளைந்து, இடது கரத்தால், கண்ணுடிக்குக் கீழே யிருந்த மேல் தளத்தின் குடைவைத் தாங்கிக்கொண்டு வலக்

கையிலிருந்த குவளையால் கண்ணுடியை உடைத்துக்கொண் டிருந்தார். அந்தக் கண்ணுடி இரண்டு விரல் கனமுள்ள தாயும், அழுத்தமானதாயும் இருந்ததாகையால், அஃது எளிதில் உடைபவில்லை. அவர், ஓசத்தில் நின்றுகொண் டிருந்தமையாலும், அவரது உதைவு உறுதியானதாக இல்லாமையாலும், அவர் கண்ணுடியைப் பலமாக அடிக்க இயலவில்லை. அவர் அந் நிலைமையிலிருக்க, வள்ளியம்மை, திருடர் என்ன செய்கிறார்கள் என்பதைக் கவனிப்பதும், மேலே நிமிர்ந்து கண்ணுடியைப் பார்ப்பதுமாக நிசம்பவும் தத்தளித்திருந்தாள். கதவிற்கு வெளியிலிருந்த திருடர்கள் கதவை யிழுத்துப் பார்த்து, அஃது உட்புறத்தில் தாளிடப் பட்டிருப்பதை உணர்ந்தனர். அப்படிப்பட்ட இடையூறு களை விலக்குவதற்குத் தக்க ஆயுதங்களை அவர்கள் கொண்டுவந்திருந்தன ராதலால், அவர்கள் ஒரு தமிழை யெடுத்துத் தாழ்ப்பாள் இருக்கக் கூடிய இடத்திற்குக் குறிப்புப் பார்த்து ஓர் அழுத்து அழுத்தித் திருகவே, கதவில் ஒரு கை நுழைபும்படியான பாகம் அறுந்து கீழே விழுந்துவிட்டது. அதனுல் உண்டான துவையில் நாகன் ஒரு கையை நுழைத்து, தாழ்ப்பாளை ஒரு நொடியில் திறந்துவிட்டுக் கதவைத் தள்ளினன்; அது சிறிதளவு திறந்துகொண்டு போய்க் கட்டில் முதலிய சாமான்களில் முட்டிக் கொண்டது. திருடருடைய தலை நுழைவதற்கு மாத்திரம் இடைவெளி யேற்பட்டதன்றி, அவர்களது உடம்பு நுழைவதற்குப் போதுமான திறப்பு உண்டாக வில்லை. அதைக் கண்ட திருடர் உண்மையை யுணர்ந்தனர். உட்புறத்தில் சாமான்கள் தடபுடலாக உருட்டப்பட்ட தனுல் சிறிது முன் உண்டான ஓசை அவர்கட்கும் எட்டிய தாகையாலும், கிருஷ்ணதேவர் கண்ணுடியை உடைத்துக் கொண்டிருந்த அடியோசை அப்போதும் வந்துகொண்

டிருந்தமையாலும், தாங்கள் கதவைத் திறவாமல் தடுக்கும் பொருட்டு உட்புறத்தில் ஏதோ ஏற்பாடுகள் செய்யப்படு கின்றன வென்பதை யுணர்ந்த கள்வர் பெரிதும் ஆத்திரமும் ஆவேசமும் வீரமும் கொண்டனர். அவர்கள் வலியுடை யோராக இருந்தமையாலும், அரக்கர் போன்று மூரட்டு மனிதர்களாக இருந்தமையாலும், இருவரும் ஒன்று கூடித் தங்களது முழுப்பலத்தையும் வெளிப்படுத்திக் கதவை யுட்புறத்தில் தள்ளவே, கதவைத் தடுப்பதற்காக உட்புறத் தில் எழுப்பப்பட்டிருந்த பொய்க்கோட்டை தலை கீழாகக் கவிழ்ந்தது. கட்டில், நாற்காலிகள், பூந்தொட்டிகள் முதலிய யாவும் தடதடவென்று அடியோடு அப்புறம் சாய்ந்து பெருத்த இடி யோசையைப் போல் சப்தித்துக்கொண்டு கீழே வீழ்ந்தன. சாமான்கள் யாவும் ஒடிந்தும், முறிந்தும், உடைந்தும், நொறுங்கியும், ஒன்றின் மேலொன்று குதிரைச் சவாரி செய்துகொண்டும், ஒன்றை யொன்று விடாமல் ஆசையுடன் கட்டிப் பிடித்துத் தழுவிக்கொண்டும், எல் லாம் நெருங்கிக் கொண்டன. கட்டிலின் மேல் சட்டத்தில் நின்று கண்ணாடியை உடைத்துக் கொண்டிருந்த கிருஷ்ண தேவர் மாயமாக மறைந்து விட்டார்.

மறு விநாடியில் கதவு திறக்கப்பட்டது; உடனே நாக னும், முனியாண்டியும் கத்திகளையும் கட்டாரிகளையுங் கையி லேந்திக் கொண்டு பெரிய மாங்களைப் போல உள்ளே நுழைந்தனர். அந்த அறையில் சுவரின்மீது அமைக்கப் பட்டிருந்த மின்னொளி (Electric Light) விளக்குப் பளிச் சென்று பிரகாசித்துக்கொண் டிருந்தது. கட்டிலும் அதன் மீதிருந்த சாமான்களும், கிருஷ்ணதேவரும், தலை கீழாகச் சாய்ந்து பெருத்த ஓசையுடன் வீழ்ந்ததைக் கண்ட வள்ளி யம்மை, கதி கலங்கிக் குலை நடுக்க மெடுத்துப் பெரிதும் தவித்தா ளாயினும், மிகவும் கூர்மை நிறைந்த அவளது

மனம் மாத்திரம் அதன் வலிமையை யிழந்துவிடவில்லை. கட்டிலும், சாமான்களுங் கவிழ்ந்த வுடனே, அவள் விரைவாக ஓடி விளக்கை அணைத்துவிட்டாள். அறை முழுவதும் இருள் சூழ்ந்துகொண்டது. பிறகு, ஒரு மூலையில் தொங்கிக் கொண்டிருந்த படுதாவின் மடிப்புக்குள் நுழைந்து மறைந்து நின்றாள். உட்புறத்தில் நுழைந்த திருடர், எங்கும் இருளா யிருந்ததைக் கண்டு, தங்கள் கையிலிருந்த தெருப்புப் பெட்டியினின்று ஒரு குச்சியை யெடுத்துக் கிழித்து நாற்புறங்களையும் நோக்கி, சுவரில் மின்னொளி விளக்கு இருப்பதைப் பார்த்து, அதனிடம் சென்று ஆணியை (Switch) அழுத்தவே, மறுபடியும் வெளிச்சம் பளீரென்று தெரிந்தது. அங்கிருந்த ஒவ்வொரு பொருளும் உடனே நன்றாகப் புலப்பட்டன; ஆனால், மனிதர் யாரையுங் காணப்படாமையால் திருடர் வியப்புற்றனர்; தாங்கள் வந்ததை யுணர்ந்து உட்புறத்திலிருந்தோர் சாமான்களைப் புரட்டியதைக் கேட்டவர்க ளாதலால், உள்ளே யிருந்த மனிதர் வேறு வழியாக வெளியிற் சென்றிருப்பார்களோ என்ற சந்தேகம் அவர்கள் மனதில் உதித்தது. அந்த அறையிலிருந்து வெளியிற் போவதற்கு ஏதேனும் வழி யிருக்கிறதா வென்று திருடர் ஆராய்ந்து பார்த்தனர். எவ்விதமான வழியுங் காணப்படவில்லை. ஒரு மூலையில் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த படுதாவின் சுருளானது அசைவதாக உணர்ந்த நாகன், மெதுவாக அந்தப் படுதாவின் அருகிற் சென்று, தனது கட்டாரியால் அதைத் தள்ளிவிட, அதற்குள் நடு நடுங்கிக் குன்றிப்போய் ஒடுங்கி நின்ற வள்ளியம்மை வெளிப்பட்டு, "அப்பா! என்னை ஒன்றும் செய்யவேண்டாம். இதோ நிறவுகோல் இருக்கிறது. அதோ இரும்புப் பெட்டி யிருக்கிறது. உங்கட்கு என்ன வேண்டுமானாலும் எடுத்துக்கொண்டு போங்கள். என்

னுடம்பி லிருக்கும் நகைகளை யெல்லாம் கொடுக்கச் சொன் னாலும் இதோ கொடுத்து விடுகிறேன்!" என்று கூறிய வண்ணம் தனது கையிலிருந்த கொத்துச் சாவியை வீட்ட, அதைப் பெற்றுக்கொண்ட நாகன், "அதுதான் அழகு; உன்னுடம்பி லிருக்கும் நகைகளைக் கழற்றிக் கொடு!" என்று கூறிவிட்டு, இரும்புப் பெட்டிக்குப் போய், அதைத் திறந்தான். ஒரு பை நிறைய ரூபாய்களும், பவுன்களும் இருந்தன; மற்றொன்றில் வைரம், சிவப்பு, நீலம், பச்சை முதலிய கற்கள் இழைக்கப்பட்ட அணிகளிருந்தன. அந்தப் பெருத்த தனத்தைக் கண்ட நாகனது முகம் மகிழ்ச்சி யால் மலர்ந்தது. அவை யாவற்றையும் அவன் எடுத்து முனியாண்டி வசம் கொடுத்துவிட்டு, இரும்புப் பெட்டியின் பக்கத்திலிருந்த இன்னொரு பெருத்த மரப் பெட்டியைத் திறந்தான். அதற்குள் விலை யுயர்ந்த சேலைகளும், தாவணி களும், இரவிக்கைகளும் நிறைந்திருந்தன. உடனே நாகன் அவற்றை யெல்லாம் வாரி யெடுத்து ஒரு பெருத்த மூட்டையாகக் கட்டி, அதையும் முனியாண்டி வசம் கொடுத்துவிட்ட தன்றி, கடைசியாகத் தன் கையிலிருந்த கட்டாரியை வள்ளியம்மையின் முகத்திற்கு நேரே காட்டிப் பயமுறுத்தி, "உஸ்! இரையாதே; பத்திரம்!" என்று கூறி நகைகளைக் கழற்றும்படி கட்டளையிட்டான். வள்ளி யம்மை தனது உடம்பிலிருந்த நகைகளை யெல்லாம் கொடுத்துவிட்டாள். நாகன் முனியாண்டி வசமிருந்த பணப் பெட்டியை வாங்கி, அதைக் கீழே வைத்துக் கொண்டு அதிலிருந்த பவுன்களையும், ரூபாய்களையும் எண் ணிக் கணக்கிடத் தொடங்கினான். அதில் சுமார் ஐநூறு பவுன்களும், இருநூறு ரூபாய்களும் இருந்தனவென்று அவன் எண்ணி முடிக்க அரை நாழிகை நேரமாயிற்று. வள்ளியம்மை, மிகவும் விலை யுயர்ந்த ஜரிகைப் பட்டா

டையை உடுத்திருந்தாளாகையால், திருடர்களது நாட்டம் அதன்மேற் சென்றது. அதையும் அவிழ்த்துக் கொடுக்கும்படி நாகன் அதட்டிக் கூற, வள்ளியம்மை வெட்கமும், சஞ்சலமும் அடைந்தவளாய், "ஐயா! என்னுடைய எல்லாப் பொருள்களையும் நீங்கள் எடுத்துக் கொள்ளும்படி மகிழ்ச்சியாக நானே கொடுத்து விட்டேன்; இந்தச் சேலை விலையுயர்ந்த தாகையால் இதையும் நீங்கள் எடுத்துக் கொள்ள ஆசைப்படலாம்; அந்த மூட்டையிலிருந்து ஒரு சாதாரணமான சேலையை எடுத்துக் கொடுங்கள்; அதை உடுத்துக் கொண்டு இதை நான் கொடுத்து விடுகிறேன்" என்று நயமாகக் கூறி இறைஞ்சி மன்றாடினாள். அந்த வேண்டுகோள் நாகனது காதில் விழவே, அவன் மூட்டையை வாங்கி அதிலிருந்த ஒரு சாதாரணச் சேலையை எடுத்துப் போட, அவள் படுதாவைப் பிடித்து இழுத்து விட்டு, அதன் மறைவிற் போய் நின்றுகொண்டு தனது இடையிலிருந்த சேலையை மெதுவாக அவிழ்த்துவிட்டு, அவர்களால் கொடுக்கப்பட்டதை யெடுத்து நிரம்பவும் தாமதமாக அணியத் தொடங்கினாள். அசை நாழிகை ஆயிற்று. அப்போதும் அவள் வெளியே வரவில்லை. அவ்வளவு நேரம் தாமதிப்பதைப் பொறுத்த நாகன், "என்ன, இவ்வளவு நேரமா? சீக்கிரம் ஆகட்டும்!" என்று அதட்ட, "இதோ ஆய்விட்டது!" என்று மறுமொழி கூறியவண்ணம் அவள் காலத்தைக் கடத்தினாள். மேலும் கால் நாழிகை சென்றது. நாகன் மிகவும் கோபங் கொண்டவனாய், "அடே யப்பா! என்ன. இந்தக் குட்டி இவ்வளவு நேரமா சேலை கட்ட? சாலம் பண்ணுகிறாள்; முனியா! அவளை இங்கே இழுத்துக் கொண்டு வாடா!" என்று அதிகாரத்துடன் கூற, அடுத்த விநாடியில் வள்ளியம்மை ஜரிகைச் சேலையைக் கொண்டுவந்து அவனிடம் கொடுத்து,

"உங்களுக்கு வேண்டியது இதோ இருக்கிறது. போய் விடுங்கள்" என்றாள். அதைக் கேட்ட நாகன், "சரி; சரி. நன்றாகக் கூறினாய்! நான் எடுத்துக் கொண்டது மிகவும் குறைந்த தொகை. மடியில் ஏதேனும் வைத்திருக் கிறாயா?" என்றான். வள்ளியம்மை, ஆமோதியுடன் தன் மடியிலிருந்த சிறிய பணப்பையையும் நாகனிடம் கொடுத் தாள். அவன், அதை வாங்கிப் பையிலிருந்ததை மேஜை யின்மேல் கொட்டி, "இருபத்தைந்து ரூபாய்கள்; நாலு ஐந்து ரூபாய் நோட்டுகள்; கொஞ்சம் சில்லறை. இவை யெல்லாம் சேர்ந்தும் மிகவும் குறைந்த தொகையாக விருக் கிறது. வெள்ளிப் பாத்திரங்கள் மிகவும் விலைபெறும். ஆகையால் இப்பொழுது நாங்கள் உன் கழுத்தை வெட்டி விட்டு வெள்ளிப் பாத்திரங்களைத் தேடி எடுத்துக்கொண்டு சென்று லென்ன?" என்றான். வள்ளியம்மை, "வெள்ளிப் பாத்திரங்கள் ஒரு அறையில் வைத்துப் பூட்டப்பட்டிருக் கின்றன. அவ்வறையின் வாசற்படி யருகில் ஒரு வேலைக் காரன் தூங்குகிறான். அவனுக்குக் கொஞ்ச தூரத்தில் கப்பால் மற்ற வேலைக்காரர்கள் படுத்திருக்கிறார்கள். அவர்க ளிடத்தில் கைத் துப்பாக்கிகள் இருக்கின்றன. பூட்டப்பட் டிருக்கும் கதவைத் திறக்கத் தொடங்கினால், சப்தம் உண் டாகும். உடனே வேலைக்காரர்கள் விழித்துக் கொள்வார் கள்" என்றாள். திருடர் இருவரும் சற்றுநேரம், 'கிசு கிசு' வென்று பேசிக்கொண் டிருந்தார்கள். அப்பொழுது வள்ளி யம்மை ஏதோ ஒன்றைக் கவனமாய்ப் பார்த்தாள். அவள் முகத்தில் மகிழ்ச்சிக் குறி தோன்றியது. அதை நாகன் கவனித்தான். அவள் தங்களைத் தந்திரமாய் ஏமாற்றப் பார்க்கிறாளென்று அவன் கண்டு கொண்டான். உடனே வள்ளியம்மையை நோக்கி, "நானும் என் கூட்டாளியும் வெள்ளிப் பாத்திரங்களை யெடுத்துக் கொள்ளாமல் போக

மாட்டோம். ஆதலால், அதை இப்போது தேடத் தொடங்குவோம். ஆனால், உன்னை இந்த அறையில் தனியே யிருக்க விடமாட்டோம். அப்படி விட்டால் நீ உடனே இரைந்து வேலைக்காரர்களை எழுப்பி விடுவாய்!" என்றான்.

வள்ளியம்மை :—நீங்கள் என்னைத் தனியே விட்டுப் போய் விடுவீர்கள் என்று நான் எண்ணவில்லை. வெள்ளிப் பாத்திரம் இருக்கும் அறை கொஞ்ச தூரத்திலிருக் கிறது. உங்களி லொருவன் போய் எடுத்து வரலாம்.

நாகன் :—அதற்கு நான் சம்மதிக்கிறேன். ஆனால் நீ வெளி யிற் போய்விடாதபடி எங்களில் ஒருவன் உன்னுடன் இருப்பான்—

என்று கூறிவிட்டு, முனியாண்டியை நோக்கி, "இந் தக் கத்தியைக் கையில் வைத்துக்கொள்; மற்றொரு கையில் துப்பாக்கியைப் பிடித்துக்கொள். அவசியமானால் அவை களை உபயோகிக்கச் சற்றும் தாமதிக்காதே. இவளுடைய முகத்தைக் கவனமாய்ப் பார்த்துக்கொண்டிரு. சப்தமிட வாய் எடுத்தாளானால், உடனே அவள் தலையை இரு துண்டாக்கி விடு" என்றான். வள்ளியம்மையின் உடல் நடுங்கிற்று. மறுபடியும் வள்ளியம்மையை நோக்கி, "பாத்திரம் இருக்குமிடத்தைச் சொன்னால் நான் போகி றேன். உன்னுடைய வேலைக்காரர்கள் என்னைப் பிடிக்கட்டு மென்று நினைத்து, அவர்கள் இருக்குமிடத்திற்கு என்னை நீ மோசமாகப் போகச் சொன்னால், நான் அவர்களி லொரு வனை என் துப்பாக்கியால் சுட்டுவிடுவேன்; துப்பாக்கிச் சப்தம் கேட்டதும் இவன் உன்னைச் சுடுவான்" என்றான்.

வள்ளியம்மை :—இந்தப் பாழுறுத்தல்க ளெல்லாம் அவ சியமில்லை. நான் இப்பொழுது சக்தி யற்றவளா

யிருக்கிறேன். உங்கள் காரியம் நிறைவேறுமல் தடுக்க என்னல் கூடுமானல், நான் அவசியம் அப்படியே செய்வேன். ஆனல், அது முடியாத காரியம்!

நாகன் :—அப்படி யானல் சரி ; வெள்ளிப் பாத்திர மிருக்கும் இடத்தைச் சொல்லு. நேரமாயிற்று.

வள்ளியம்மை :—அதோ இருக்கிறதே அந்தக் கதவின் வழியாகப் போ ; அங்குக் கீழ் நோக்கிச் செல்லும் படிகள் தெரியும். அதன் வழியாக இறங்கிச் செல்வாயானில், வலது கைப் பக்கத்தில் ஒரு அறையைப் பார்ப்பாய். அதிலேதான் பாத்திரங்களிருக்கின்றன—என்று கையில் ஒரு கொத்துச் சாவிகளைக் கொடுத்து, "இந்தச் சாவியையே உபயோகப்படுத்து" என்றுள்.

நாகன் :—அங்கே வெளிச்சம் இருக்கமாட்டாது. ஒரு மெழுகு வத்தியை எடுத்துக்கொண்டு போகிறேன்.

வள்ளியம்மை :—சரி ; எடுத்துக்கொண்டு போ.

நாகன் :—நீ விழித்துக்கொண்டிருப்பது போல் அங்கே உன்னுடைய வேலைக்காரப் பெண்கள் விழித்துக் கொண்டிருக்கலாம்!

வள்ளியம்மை :—இல்லை ; அவர்களெல்லாம் படுத்துத் தூங்குவார்கள். நீ வழியில் ஒருவரையும் சந்திக்க மாட்டாய்.

நாகன் :—நான் யாரையாவது சந்தித்தால் உனக்குத்தான் கெடுதி ; ஏதாவது சந்தேகத்தை யுண்டு பண்ணத்தக்க நிகழ்ச்சி உண்டானல், உடனே முனியாண்டி உன் உயிரை வாங்கி விடுவான்—

என்று கூறிவிட்டு, ஒரு மெழுகுதிரியைப் பற்றிக் கையிற் பிடித்துக்கொண்டு, வள்ளியம்மை காட்டிய கதவைத் திறந்து வெளியே போய், அக்கதவைச் சாத்தினன். ஆனல்,

அதைச் சரியாகச் சாத்தாமல் ஓரங்குலம் இடைவெளி தெரியும்படி சாத்தினான். மெழுகு வர்த்தியைக் கொஞ்ச தூரத்தில் வைத்துவிட்டுக் கதவின் அருகில் நின்று, இடை வெளியின் வழியாக உள்ளே என்ன நிகழ்கிற தென்று கவனிக்கத் தொடங்கினான். அவன் மனதில் ஒரு சந்தேகம் உண்டாயிற்று. அவள் தன்னை அனுப்பிவிட்டு முனியாண் டிக்கு ஏதேனும் தீங்கு செய்வாளானால், அவனுக்கு உதவி வேண்டியிருக்கு மெனக் கருதினான்; ஆகையால், சில வினாடிகள்வரை கதவருகில் நின்று கொண்டிருந்தான். வள் ளியம்மை பேசாமலும், அசையாமலும் இருந்தாள். முனி யாண்டி ஒரு கையில் கத்தியோடும், மற்றொரு கையில் துப் பாக்கியோடும் அவள் சமீபத்தில் நின்றுகொண்டு, அவள் முகத்தைக் கவனமாகப் பார்த்த வண்ணம் இருந்தான். நாகன், அவள் ஒன்றும் செய்யாதிருப்பதைக் கண்டு அப் புறம் செல்லத் தொடங்கும் சமயம் வள்ளியம்மை பேசினாள். நாகன் கவனமாய் உற்றுக் கேட்டான். அவள் முனியாண் டியை நோக்கி, "எனக்கு மிகவும் தலை வலியா யிருக்கிறது; ஆகையால், அதோ இருக்கும் தலைவலி மருந்தைத் தயை செய்து எடுத்து என்னிடம் கொடு" என்று மெலிந்த குரலில் கேட்டாள்; நாற்காலியில் பலஹீனத்தாற் சாய்ந்து விழுந் திருப்பவளைப் போற் காணப்பட்டாள். முனியாண்டி, உடனே விடை யளிக்கவில்லை. கொஞ்ச நேரம் தாமதித்துப் பிறகு, "உன்னை நான் கொடுமையாக நடத்த வில்லை. ஆனால், உன்னைவிட்டுப் போய் நான் அதை எடுத்துவர மாட்டேன். சிறிது தூரம் நடக்க உனக்கு வலிமை யிருந்தால், நீ போய் எடுத்துக்கொள்; நான் உன் பின் வருகிறேன்" என் றான். "நான் போய் எடுக்கிறேன்" என்று வள்ளியம்மை, மிகவும் தாழ்ந்த குரலிற் கூறி, நாற்காலியை விட்டெழுந்து, நடக்க முடியாதவள் போல் தத்தளித்துக் கொண்டே நடந்

தாள். முனியாண்டி ஆயுதங்களைத் தயாராய் வைத்துக் கொண்டு அவளுக் கருகில் போனபடியால், ஓட்டுக் கேட்டுக் கொண்டிருந்த நாகன், தன் கூட்டாளியின் மீது யாதுங் குற்றமில்லை யென்று தீர்மானித்தான். ஆயினும், வள்ளியம்மை ஏதோ கபடமான நோக்கத்துடனேயே இக்காரியம் செய்கிறா ளென்று கருதினான். முனியாண்டி, "மணி யடிக்கத் தொங்கவிட்டிருக்குங் கயிற்றின் அருகில் போகாதே; கயிற்றை இழுப்பதற்குக் கையை நீட்டினால், உடனே அந்தக் கையை இக் கத்தியால் வெட்டி விடுவேன்" என்று வள்ளியம்மையை எச்சரித்துக்கொண்டு நின்றான். அதற்கவள், "எனக்கு அவ்விதமான எண்ணங் கிடையாது" என்று கூறி, மருந்தை யெடுத்துக்கொண்டு திரும்பி வந்து நாற்காலியில் உட்கார்ந்தாள். பிறகு, ஜரிகை போட்டதும், தும்பைப் பூப் போன்று வெண்ணிறமுள்ளதுமான கைக்குட்டையை யெடுத்து, மருந்துச் சீசாவின் மூடியைத் திறந்து, அதிலிருந்த வெண்மையான திராவகத்தில் இரண்டு மூன்று துளி ஊற்றினாள். அத் திராவகம் நல்ல வாசனை யுடையதாயில்லை. அவள் அதை ஊற்றும்போது சீசாவையும், கைக்குட்டையையும் தன் மூக்கிலிருந்து எவ்வளவு தூரத்திற்கப்பால் வைத்திருக்கக் கூடுமோ, அவ்வளவு தூரத்திற் கப்பாற் பிடித்திருந்தாள். சீசாவை மூடும்போது கைக்குட்டையைத் தவறிப் போடுபவள் போல் போட்டுவிட்டாள். அவ்விதம் போட்டவுடன், தன் தலையை இரு கைகளாலும் நெருக்கிப் பிடித்துக்கொண்டு, தலைவலி பொறுக்க முடியாதவள் போல் நடித்து, "உஸ்! அப்பா!" என்று முணு முணுத்ததுடன், முனியாண்டியை நோக்கி, "அப்பா! உனக்குக் கோடி புண்ணிய முண்டாகும். தயை செய்து கோபிக்காமல் கீழே கிடக்கும் கைக்குட்டையை எடுத்து என் கையிற் கொடு" என்று பரிந்து வேண்டினாள். இவ் வேண்டுகோளைச் செவி

யுற்ற முனியாண்டி, சிறிது இரக்கங்கொண்டு குனிந்து அதைக் கையில் எடுத்து அவளிடம் கொடுக்குமுன், அஃது என்ன வாசனை யென்பதை அறிய வேண்டு மென்ற அவாவினால் தூண்டப்பட்டு, அந்தக் கைக்குட்டையைத் தன் மூக்கிற்கு நேரே கொண்டு போய் முகர்ந்தான். முனியாண்டிக்கு அவ்வளவு தான் தெரியும்! மந்திரத்தாற் கட்டுண்ட பாம்பைப்போற் பேச்சு மூச்சற்று 'மடார்' என்று கீழே சாய்ந்தான். கைக்குட்டையில் ஊற்றப்பட்டது மயக்க மருந்து (Chloroform) என்பதை வெளியில் நின்ற நாகன் ஐயமறத் தெரிந்துகொண்டு, மறு நிமிடம் சட்டென்று கதவைத் திறந்து உள்ளே பாய்ந்தான். அவன் வரவை இவ்வளவு விரைவில் எதிர் பார்க்காத வள்ளியம்மை திகைத்து நின்றாள். சில நிமிடங்கள் ஆயின. உள்ளே புகுந்த நாகன், முனியாண்டியின் அருகில் உட்கார்ந்து கொண்டு, ஒரு கையில் துப்பாக்கியை வள்ளியம்மையின் முகத்திற்கு நேரே பிடித்துக்கொண்டு, மற்றொரு கையில் முனியாண்டியைத் தூக்கினான். அவனுக்குக் கொஞ்சம் மயக்கம் தீங்கிற்று. வள்ளியம்மை தானிருந்த இடத்தை விட்டுக் கொஞ்சமும் நகரவில்லை. அவளுக்குத் தெரியாமல், தரையிற் கிடந்த கைக்குட்டையை எடுத்து நாகன் தன் கையில் வைத்துக் கொண்டான். பிறகு, முனியாண்டியை நோக்கி, "இப்பொழுது எப்படி யிருக்கிறது?" என்று கேட்டான்.

முனியாண்டி:—"என்ன சங்கதி? என்ன நடந்தது? எனக்கு உடம்பு ஒரு மாதிரியாக விருக்கிறது" என்று குழறினான்.

நாகன்:—"ஒன்றும் நடக்க வில்லை; மயக்கம் முழுதும் தெளியும் வரை நீ அப்படியே படுத்திரு! நான் இவளுடன் பேசுகிறேன்"

என்று கூறிவிட்டு, வள்ளியம்மையைப் பார்த்து "இந்த மோசத்தைப் பற்றி—" என்று கூறி வாக்கியத்தை முடிப்பதற்குள், திடீரென்று "யாரது அறைக்குள் வருகிறது?" என மொழிந்தான். வள்ளியம்மை, திடுக்கிட்டு வருகிறது யார் என்று பார்க்கும் பொருட்டுத் திரும்பிப் பார்த்தாள். அதே வினாடியில் நாகன் தன் கையில் வைத்திருந்த கைக்குட்டையை அவள் மூக்கிற்கு நேரே பிடித்தான். மூனியாண்டி விழுந்தது போல, அவளும் அடியற்ற மரம் தடால் என்று சாய்வதை யொப்பக் கீழே விழுந்தாள். வள்ளியம்மை, மயக்கம் நீங்கி எழுந்தபோது, காலைச் சூரியனது கிரணங்கள் சாளரத்தின் வழியாய் அறையுட் புகுந்து பிரகாசித்துக் கொண்டிருந்தன. கொஞ்சங் கொஞ்சமாக இரவு நடந்த தெல்லாம் நினைவுக்கு வந்தன. திருடர்கள் இருப்பார்களென்று சுற்றும் முற்றும் பார்த்தாள். ஒருவரையுங் காணவில்லை. உடம்பிலும், தலையிலும் அவளுக்கு வலியுண்டாயிற்று. வருத்தத்தோடு எழுந்து மேஜையைப் பார்த்தாள். வெள்ளித் தாவள மிருந்த சீசாவைக் காணவில்லை. இவ்வாறு தேடுகையில், கிருஷ்ண தேவரின் நினைவு வந்தது. ஆங்குச் சிதறிக் கிடந்த சாமான்களையெல்லாம் ஒன்று சேர்த்துப் பார்க்கிறபோது, கிருஷ்ண தேவர் மூர்ச்சை யுற்றுக் கிடக்கக் கண்டாள்; உடனே வெளிக் கதவுகளை மூடிவிட்டு, அவருடைய முகத்தில் தண்ணீரைத் தெளித்து உபசாரம் செய்யத் தொடங்கினாள். சிறிது நேரத்தில் அவர் கண்களைத் திறந்து பார்த்தார். வள்ளியம்மை, பிறகு நடந்த சங்கதிகளைச் சுருக்கமாகக் கூறி, அவரை புறக்கடை வழியாக வெளியே அனுப்பி விட்டாள்.

நண்பர்கள் இங்ஙிகழ்ச்சியிலிருந்து திருடர்கள் பத்திரமாய்த் தப்பி யோடி விட்டார்களென்பதை ஊகித்தறிந்திருக்கலாம். வள்ளியம்மைக்கு மருந்துச் சீசாவைப் பற்றி

வெளியில் ஒன்றும் சொல்ல விருப்பம் இல்லை. அதை மறைக்கும் பொருட்டுத் தந்திரமாக நிகழ்ந்ததை ஒரு வகையாக வெளியிட்டாள். யாரோ இரண்டு திருடர்கள் இரவில் தன் அறைக்குட் புகுந்ததாகவும், தான் பயந்து அலறிக் கூச்ச லிடவே ஓடி விட்டதாகவும், திடீரென்று எதிர் பாராத விதமாய் அந் நிகழ்ச்சி யுண்டானதாகையால், தான் மயக்க முற்றுக் கீழே வீழ்ந்து விட்டதாகவும் கூறினாள். அதை உண்மை யென்றே யாவரும் நம்பினர்.

பன்னிரண்டாவது அதிகாரம்

கூட்டைவிட் டோடிய குயில்.

டயிலாப்பூரிலுள்ள 'சுகுண விலாச'த்தினுட் புகுந்து சுவனிப்போம். "கோகிலா! வீண் பிடிவாதம் வேண்டாம். நீ மறுபடியும் அகப்பட்டுக்கொண்டது என்னுடைய அதிர்ஷ்ட வசமே யாகும். இனி என்னுடனிருந்து சுகமாய் வாழ்வதற்கென்ன தடை?" என்று ஷண்முகநாதன் தன் எதிரில் மிகக் கோபத்துடனும், ஆத்திரத்துடனும் உட்கார்ந் திருந்த கோகிலத்தைப் பார்த்துக் கேட்டான். அதற்கு அவள் சிறிதும் அச்சமின்றி, "ஐயா! கௌரவமான குடும் பத்திற் பிறந்த உம்முடைய நடத்தை இவ்விதமா போக வேண்டும்? நான் பூந்தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்த போது, வஞ்சகர்கட்குப் பொருளே வாரி யிறைத்து என்னை எவரும் அறியாதபடி என் வாயில் துணியை யடைத்து இங்குத் தூக்கி வந்து சிறை வைத்துத் துன்புறுத்துவதாற் பயனென்ன? என்னை நீர் என்ன செய்தாலும் சரியே! நான் மட்டும் உமது எண்ணத்திற்கு இணங்கே னென்பது

திண்ணம்!" என்று ஷண்முகநாதனை நோக்கிச் சினத்துடன் மொழிந்தாள்.

ஷண்முகநாதன் :—என்னுடைய விருப்பத்திற் குட்பட்டா விடில் உன் கருத்துத்தான் என்ன ?

கோகிலம் :—என் கருத்து ; நான் இங்கிருந்து விடுவிக்கப் படவேண்டு மென்பதே. இதைக் கேட்பானேன் ?

ஷண்முகநாதன் :—இங்கிருந்து நான் உன்னை விடுவித்தால், திரண்ட செல்வமுடையவ னாகிய உன் கணவ னுதவி யைக் கொண்டு என்னை நீ எப்பாடுதான் படுத்திவிட மாட்டாய்! ஆகையால், நீ இங்கிருந்து தப்பித்துச் செல்வதை மறந்துவிடு!

கோகிலம் :—அப்படியானால், ஏதாவது நஞ்சைக் கொடும். அதை நான் உண்டு மடிந்து போகிறேன்.

ஷண்முகநாதன் :—அதற்காகவா நான் உன்னை இவ்வளவு கஷ்டத்துடன் இங்குக் கொண்டுவந்து சேர்த்தது ?

கோகிலம் :—பின் எதற்கு ?

ஷண்முகநாதன் :—சொல்லவும் வேண்டுமா ? உன்னை என் ஆசை நாயகியாக வைத்துக் கொள்வதற்குத் தான்!

கோகிலம் :—உம்முடைய எண்ணம் அப்படி யிருந்தால்— என்று வெறுப்புடன் பாதியில் நிறுத்தினாள்.

ஷண்முகநாதன் :—உன்னுடைய எண்ணமும் அப்படி யிருக்கவேண்டு மென்பதே எனது வேண்டுகோள்.

கோகிலம் :—அதுதான் முடியாத காரியமா யிற்றே !

ஷண்முகநாதன்:—இதுதான் உனது முடிந்த தீர்மானமோ?

கோகிலம் :—ஆம் ; தடை யில்லாமல்!

ஷண்முகநாதன் :—நீ தக்க கண்ணியமான குடும்பத்தைச் சேர்ந்த பெண் என்பது எனக்குத் தெரியும். நீ எப்

படித்தக்க கண்ணியமான குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணே, அதுபோல நானும் மரியாதையுள்ள நிர்ணயமான குடும்பத்தைச் சேர்ந்த ஆண் மகன். ஆகையால், எனக்கும் உனக்கும் சரியான பொருத்தமிருக்கிறதெனக் கண்டே நான் உன்னை இங்கே வரவழைத்தேன். ஆகவே, நீ எந்த வகையிலும் ஆசேஷபணை சொல்ல இடமில்லை—என்றான்.

அதைக் கேட்ட கோகிலம் மிகுந்த கலவரமும், பிரமிப்பும் அடைந்து தத்தளிக்கலானாள். இத்தகைய துஷ்டனிடம் தனிமையில் அகப்பட்டுக் கொண்ட தான் எவ்விதம் தப்பிப் போவது என்ற கவலையும் மலைப்பும் தோன்றி வதைக்கலாயின. அந்த மடந்தை தனது கடைக்கண் பார்வையைச் செலுத்தி அந்த இடத்தின் அமைப்பை ஆராய்ச்சி செய்தாள். அஃது ஒரு பெட்டிபோல அமைக்கப்பட்டிருந்தது. மலர்கள் நிறைந்த உயர்ந்த பஞ்சணைக் கட்டில் ஒரு பக்கத்திற் போடப்பட்டிருந்தது. சுவர்களில் நீலக் கண்ணாடிகளும், சிருங்கார மயமான படங்களும் காணப்பட்டன. அறையின் மத்தியில் மேல்பாகத்தில் மின்சார விசிறி (Electric Fan) யொன்று சுழன்று அந்த அறைக்குள் குளிர்ந்த இனிய காற்றைப் பரப்பிக்கொண்டிருந்தது. சாளரங்களின் கதவுகள் சாத்தித் தாழிடப் பெற்றிருந்தன. இன்னும் மேஜை, நாற்காலிகளும், ஸோபாக்களும், பூந்தொட்டிகளும் மற்றும் பலவகைப்பட்ட பொருள்களும் நிறைந்து கிடந்தன. அந்த அறைக்கு முன்னிருந்த இரண்டாவது அறையின் வழியாகத் திரும்பிப் போவதைத் தவிர, வேறு வழியில்லை யெனக் கோகிலத்திற்குப் புலப்பட்டது. அவ்வாறு தான் தனியாக அகப்பட்டுக் கொண்டதைப் பற்றி அவள் அளவற்ற துக்கம்

அடைந்தாளாயினும், தனது மனேநிடத்தை மாத்திரம் இழக்காமல் உறுதியாகவே இருந்து கீழ்ப் பார்வையாகப் பார்த்து மெதுவாகப் பேசத் தொடங்கி, "இவ்வளவு தூரம் உங்களுடைய அதிகாரத்தையும் புத்திசாலித்தனத்தையும் உபயோகித்து வேலை செய்த நீங்கள் முக்கியமான ஒரு சங்கதியை மாத்திரம் அலக்ஷியம்செய்து விட்டீர்கள். நான் தங்கள் கருத்துக்கு இசையமாட்டே னென்பதையும், என்னுடைய மனவுறுதி எப்படிப்பட்ட தென்பதையும் நீங்கள் அறிந்து கொள்ளாமல் இவ்வளவு வீண்பாடு பட்டதுதான் எனக்குச் சிரிப்பை உண்டாக்குகிறது. ஐயா, உங்களுடைய தந்திரமெல்லாம் கொக்கின் தலையில் வெண்ணெயை வைத்துப் பிடிக்கிற தந்திரமே யன்றி வேறல்ல. என் விஷயத்தில் நீங்கள் கொண்டுள்ள கருத்து ஒருநாளும் பலியாது. என்னைப் படைத்த கடவுளே நேரில் வந்து அவருடைய வலிமை முழுவதையும் உபயோகப்படுத்தினாலும், இந்த விஷயத்தில் என் மனவுறுதியை மாற்ற அவரா லியலாதென நான் துணிந்து சொல்லுவேன். நீங்கள் என்னைக் கண்டதுண்டமாய் வெட்டிச் சித்திரவதை செய்தாலும், நான் என் கற்பு நிலை தவறும்படியாக என் னெஞ்சாலும் கருதமாட்டேன்; என் உயிரை வேண்டுமானாலும் கரை கடந்த மகிழ்ச்சியோடு இழந்துவிடுவேன்; விலை யில்லாத சாதி மாணிக்கமாகிய கற்பை மாத்திரம் இழக்க மாட்டேன்! வீணாக நீங்கள் என்னை வதைப்பதனாலும், உங்கள் காலத்தைச் செலவழிப்பதாலும் கடுகளவாவது உங்கள் எண்ணம் நிறைவேறப் போவதில்லை. தயைசெய்து என்னை வெளியில் அனுப்பிவிடுங்கள். கதவைத் தாழிட்ட குமாரசாமி காயுடு கதவருகில்தான் நிற்பாரென்று கருதுகிறேன். அவரைக் கூப்பிடுங்கள்" என்று அழுத்தமாகவும், பணிவாகவும் மொழிந்தாள்.

அப் பெண்ணினது அறிவோடு கூடிய ஊகங்களையும், ஆணித்தரமான பேச்சையுங் கேட்ட ஷண்முகநாதன் முற் றிலும் பிரமித்துப்போனானெனினும், அதைக் காட்டிக் கொள்ளாமல், அவள் தனிமையாகவே இரண்டாவது முறையும் தன்னிடம் அகப்பட்டுக்கொண் டிருந்தபடியால், தான் எப்படியாவது பலாத்காரம் செய்து அவளை வசப் படுத்தி விடலாமென்ற நினைவைக் கொண்டவனாய், அம் மாதை நோக்கிக் கேலியாகப் புன்னகைபுரிந்து, "கோகிலா! கதவைத் தாழிட்டுக் கொண்ட குமாரசாமி இப்போது கதவருகில் இருக்கமாட்டான். அவன் உன்னைக் கொண்டு வந்து விட்டபிறகு வேறொரு காரியத்தைக் கவனிக்கும்படி நான் சொல்லி யிருந்தேன். ஆகையால், அவனுவது வேறு யாராவது இப்போது கதவைத் திறந்துவிடப் பக்கத்தி லிருக்க மாட்டார்கள். நீ விரும்பமுறு விட்டாலும் குறைந் தது ஒரு நாழிகை நேரமாவது என்னுடன் இப் படுக்கை யில் இருந்தே தீரவேண்டும். நான் ஆண்பிள்ளையிற் சேர்ந் தவனில்லையா? உன்னைப்போல முதலில் துள்ளிக் குதித்த எத்தனையோ பதிவிரதைகளை நான் பார்த்தாய்விட்டது. இப்படிப் பேசுவது பெண்களின் சாகஸம் என்பதை நான் நன்று யறிவேன். நீ எப்படி உன்னைப் படைத்த கடவுளே வந்தாலும், உன்னைச் சித்திரவதை செய்தாலும், உன் னுயிரே போனாலும் என் கருத்திற்கு இணங்க மாட்டே னென்று உறுதியாய்ச் சொல்லுகிறாயோ, அது போலவே நானும் உனக்கு என் உறுதியை விபரமாய்ச் சொல்லு கிறேன். வானமே இடிந்து வீழ்ந்தாலும், என்னைப் படைத்த கடவுளே வந்து குறுக்கிட்டாலும், என் கருத்தை நிறைவேற்றாமல் உன்னை விடுவதில்லை. உன் உயிர் இருந் தாலும், அல்லது போய்விட்டாலும் எப்படியும் நான் என் நிர்மானத்தை நிறைவேற்றியே தீருவேன்" என்றான்.

இதைக் கேட்ட கோகிலம், முற்றிலும் திகைப்பும் பயமும் அடைந்து பதறி நின்ற வண்ணம் அவனைப் பார்த்து, "ஐயா! நீங்கள் சொல்வது கேழ்வரகில் நெய் ஒழுகுகிறதென்று கூறும் கதைபோ லிருக்கிற தன்றி, வேறன்று. எங்கள் குலத்தின் யோக்கியதையையும், என் மனப் போக்கையும் சிறிதுகூட அறிந்து கொள்ளாமல் நீங்கள் கேவலம் தாசிகளிடம் நடந்துகொள்வது போல என்னிடம் பேசுவது உங்கட்குக் கொஞ்சமும் தகாது. இவ்வளவு தூரம் நீங்கள் பைத்தியக்காரத்தனமாய் நடந்து கொண்டதோடு அமையுங்கள். மேலும் அக்கிரமத்தில் இறங்கி வீண் கஷ்டங்களையும், அவமானத்தையும் அடைய வேண்டாம். தயை செய்து என்னை முதலில் வெளியே அனுப்பிவிட்டு மறுவேலை பாருங்கள்!" என்றாள்.

ஷண்முகநாதன், அவளைப் பார்த்து, "பேலே! நீ மிக வுங் கெட்டிக்காரி! நீ எந்தத் தைரியத்தினால் என்னிடம் இப்படித் துணிந்து பேசுகிறா யென்பது விளங்கவில்லை. யாரிடம் நீ இவ்வளவு துணிவாய்ப் பேசுகிறா யென்பதும் தெரிந்து கொள்ளாமல் நிரம்பவும் அலக்ஷியமாகப் பேசு கிறாய். நீ எவ்வளவு தான் கூச்சலிட்டாலும் வெளியிற் கேட்க மாட்டாது. நீ இவ்விடத்தில் என் வசமாக மாட்டிக்கொண் டிருக்கிறாய். அப்படி யிருக்க, நீ கேவலம் பெண் என்பதையே அடியோடு மறந்து பெரிய போர் வீரன் போலப் பேசத் தொடங்கி விட்டாய்! ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து உன் மயிரைப் பிடித்து இழுத்து வந்து துச்சாதனன் செய்ததுபோல் உன்னை மான பங்கப் படுத்த எனக்கு வலிமை யுண்டு; தடியைக் கொண் டடித்துக் கனியைப் பழுக்க வைப்பதைவிடத் தானாகவே கனி யும்படி செய்வது நலமென்ற ஒரு நினைவினாலேயே நான் இதுவரையில் பொறுமையுட னிருந்தேன். நான் இப்

போது முடிவாகவும், இறுதியாகவும் கூறி எச்சரிக்கிறேன். மரியாதையாக நீ வழிக்கு வாப் போகிறாயா? அல்லது நான் என் பாணத்தைத் தொடுக்கலாமா? நான் ஒருவன் தானே இருக்கிறேனென்று நினைத்து நீ கடைசி வரையில் முரண்டலில் இறங்கி வெற்றி பெற்றுவிடலாமென நினைத்துக்கொண்டிருக்கலாம். அது வீண் எண்ணம். வெளிப் பக்கத்திலும் எனக்குத் துணையிருக்கிறது. வீணாக என் கோபத்தைக் கிளப்பிவிட்டு முன் போல் உதைபட்டு நல்ல உடம்பைக் கெடுத்துக் கொள்கிறாய்! நீ பேசும் மாதிரியிலிருந்து நல்ல அறிவுடையவனென்று யாரும் கண்டு கொள்வார்கள். இத்தச் சமயத்திற்குத் தகுந்தபடி நீ புத்திசாலித்தனமாக நடந்துகொண்டு போய் வா; வீணாகப் பிடிவாதம் செய்து நான் மறுபடியும் மூரட்டுத்தனத்தில் இறங்கும்படி செய்யாதே" என்றான்.

அவனது சொற்களைக் கேட்ட கோகிலம், நகைத்து, "ஐயா! நீங்கள் துச்சாதனனுடைய உவமானத்தைச் சொன்னது, கும்பகர்ணன் 'நித்திய தத்துவம்' கேட்க எண்ணி 'நித்திரை தத்துவம்' கேட்டது போலிருக்கிறது. நீங்கள் செய்யும் அக்கிரமத்தைக் கண்டிக்க இவ்விடத்தில் இப்போது யாரும் இல்லை யென்ற எண்ணத்தினால் நீங்கள் வீண் மமதைகொண்டு பேசவேண்டாம். எல்லா உலகங்களையும் படைத்துக் காத்து அழிக்கும் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பது தங்கட்குத் தெரிந்திருக்கு மென்று நினைக்கிறேன். அவர் எங்கும் நிறைந்து எல்லாருடைய செய்கைகளையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். உலகின் எந்தப் பாகத்திலும் இறையொளிவீசுகின்றது. ஒவ்வோரணுவிலும் இறைவனது ஒளி பொங்கித் ததும்பிப் பூரணமாய் நிற்கின்றது. நான் மனிதருடைய உதவி கிடைக்க முடியாத இந்த இடத்தில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறே னென்பது

அவருக்கு நன்முகத் தெரியும். நான் மனம், வாக்கு, காயங்களால் தவறுதவ ளென்பதும் அவருக்குத் தெரியும். அப்படியிருக்க, என் விஷயத்தில் நீங்கள் அக்கிரமமாக நடத்தும்படி அவர் விட்டு விடுவாரானல், அவருடைய சிருஷ்டி கேள்வி யில்லாததும், முறை யில்லாததுமாகிவிடும். அப்படி ஆகுமென்று நான் நினைக்கவே யில்லை. நான் எத்தனையோ பத்தினிப் பெண்டிரின் கதைகளைப் படித்திருக்கிறேன். அவர்க ளெல்லாரும் இப்படித்தான் பயங்கரமான தனித்த இடத்தில் உங்களைப் போன்ற துஷ்டரிடம் அகப்பட்டுக் கொண்டதாகவும், முடிவில் மிக எளிதாகத் தப்பித்து நிறை குன்றுமல் போனதாகவும் நான் படித்திருக்கிறேன். அவைகளிலிருந்து நான் கற்றுக்கொண்ட படிப்பினை யாது தெரியுமா? பெண்கள் மனப்பூர்வமாய்த் தங்கள் கற்பைக் காப்பாற்றிக் கொள்ள எண்ணி, அதேயுறுதியாக நிர்ப்பார்க ளாயின், இராவணனே வந்து அவர்களைச் சிறை யெடுத்துப் போனலும், அவர்களைக் கொண்டு போய் இரும்புக் கோட்டைக்குள் வைத்தாலும், அவர்களுடைய கற்புக் கெடாமலிருக்கும்படி கடவுள் ஏதாவது சூழ்ச்சி செய்வா ரென்ற படிப்பினையை நான் கற்றுக் கொண்டேன். அது முதல் என் கற்பைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்று கவலைப்படுவதையே விட்டு விட்டேன். பெண்கட்கு உறுதி யான மனம் ஒன்றே தேவை. மற்ற துணைக் கருவிகள் யாவும் தாமாகவே தோன்று மென்பது நிண்ணம். நீங்கள் சொன்ன துச்சாதனன் உபமானத்தில் அவனுடைய கருத்து எவ்வளவு தூரம் நிறைவேறிய தென்பதை நீங்கள் அறிவீர்க ளென்று நினைக்கிறேன். அச் செயலே அவன் அழிவதற்குக் காரணமா யிருந்த தன்றோ? ஆகையால், நீங்கள் வீணாக மனப்பால் குடிக்க வேண்டாம்! கற்பு என்பது எல்லாம் வல்ல கடவுளால் தோற்றுவிக்கப்பட்டுப் பாதுகாக்கப்படும்

ஒரு தூய்மையான தெய்வீகப் பொருள். அதை அழித்துக் கெடுக்க உங்களைப் போன்ற மனிதர்களால் ஆகுமென்று எண்ண வேண்டாம்" என்றாள்.

இதைக் கேட்ட ஷண்முகநாதன், பெரிதும் ஆத்திரமடைந்து கோபச் சிரிப்புடன் அவளை நோக்கி, "அடி, மூட்டாளே! உன்னுடைய புத்தகப் படிப்பையெல்லாம் நீ என்னிடம் அளக்கத் தொடங்குகிறாயா! அதற்கெல்லாம் இந்தச் சிங்கமா மசிகிறவன்? பிரகலாதன் தூணிலிருந்து நரசிங்கப் பெருமானை வரவழைத்த கதையையெல்லாம் கூறி நீ என்னை மிரட்டப் பார்க்கிறாயா? தெய்வம் எங்கே? நீ கண்டாயா?" என்று அதட்டிக் கேட்டான்.

கோகிலம், ஆவேசம் வந்தவளைப்போல் நிமிர்ந்து உட்கார்ந்து ஷண்முகநாதனைப் பார்த்து, "நான் காண்பேன்; நீ காணப்!" என்றாள்.

இவ்விதம் கோகிலம் கூறியவுடன், "கோகிலா! நீ எதும் அறியாத சிறுமி! தெய்வத்தைப் பற்றி உனக்கென்ன தெரியும்? தெய்வம்—கடவுள் என்பதெல்லாம் பாமரஜனங்கள்—அறிவில்லாதவர்கள்—திருந்தும் பொருட்டுக் கட்டிவிடுத்த வீண் கற்பனைகளாகும். ஏதோ இவ்வுலகிற் பிறந்தோம், இறந்து போகும் முன்னர், 'கண்டதே காட்சி; கொண்டதே கோலம்' என்றபடி நன்றாக வுண்டு, உடுத்தி வாழ வேண்டியதே மக்கள் அடைதற்குத் தகுந்த இன்பமாகும். "பெண்டிரும், உண்டியும் இன்றெனின் மாக்கட்கு—உண்டோ ஞாலத் துறுபயன்?" இதை விடுத்து ஏதோ பரம வேதாந்தம் பேசுகின்றாய்! நீ கூறுவதெல்லாம் வீண் பைத்தியக்காரத்தனமென்று நான் துணிந்து சொல்லுவேன்!" என்றான்.

அதைச் செவியுற்ற பெண்மணி, கோபமூட்டப்பட்ட பெண்சிங்கம் போலச் சீறி விழுந்து ஷண்முகநாதனை நோக்கி, "இனி நான் மரியாதையாகவும் பேச மாட்டேன்! இனியும் நீ ஏதாவது பேசுவாயானால், நான் எவ்வளவு கேவலமாக உன்னைப் பேசுவேனென்பது எனக்கே தெரியாது. வஞ்ச நெஞ்சம் படைத்த உனக்குத் தெய்வத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாவிடில் தெய்வமே யில்லையென்றும், அதைப்பற்றி என்க்கொன்றும் தெரியாதென்றும் நீ கூறுவது அறியாமையின் பாலதாகும். தாம் இருக்கும் உடலையும், உலகையும் ஒவ்வோர் இமைப்பொழுதும் காத்து வரும் கடவுளையும் இகழ்ந்து, 'எல்லாம் மண்ணே தாம்" என்று மண்ணைப் போகும் உம்போன்ற பலர் இக்காலத்தி லிருக்கிறார்கள்! உலகத் தோற்றத்தைக் கண்டு, கடவுளின் அற்புதச் செய்கைகளைப் புகழ்வதற்குப் பதிலாக, மனிதர்கள் இக்காலத்தில் அவரை இகழ்கிறார்கள். நிந்திக்கிறார்கள்! அவருடைய சட்டங்களை ஏற்று நடக்கும் பொறுமையும், அவைகளை விரும்பும் பெருங் குணமும் அவர்கட்கில்லை. எல்லாம் தங்களாலேயே நடைபெறுகின்றன என்று கருதுகிறார்கள். சுகமாய்க் காலங் கழிக்கும் போதும், மனைவி மக்களுடன் இன்பமா யிருக்கும்போதும், ஒரு காரியத்தைத் தொடங்கி, அதில் வெற்றி யடைந்த போதும், மனிதர்களில் பெரும்பாலார், 'என்னுடைய சாமர்த்தியத்தால் வெற்றி பெற்றேன்; என்னுடைய பெரு முயற்சியால் இன்பம் நுகர்கின்றேன்' என்று அகங்காரங் கொண்டு பேசுவதையும், துன்பம் நுகரும்போதும், முயன்ற காரியம் கைகூடாத போதும், "ஏ, கடவுளே! உனக்குக் கண் ணில்லையா? நீ இவ்விதம் செய்யலாமா?" என்று நிந்திப்பதையும் காள்தோறும் காண்கிறோமன்றோ? 'கடவு ளொருவர் உண்டு' என்பதை நம்புகிறவர்கள்

அவரை நிந்தித்தும், நினைவு கூராமலும் இருப்பது எவ்வளவு அறியாமை! இக்காலத்தில் உள்ளவர்கள் நன்மை வினைத்தால் தங்களுடைய செயலென்றும், தீமை வினைத்தால் கடவுளுடைய செயலென்றும் கூறுகிறார்கள். பண்டைக் காலத்து உண்மை யடியார்கள் நன்மை, தீமை, சுகம், துக்கம் ஆகிய எல்லாம் கடவுளுடைய செயலால் உண்டாகின்றன என்று கருதி, எல்லாப் பொறுப்பையும் கடவுள் மீதே போட்டுவிட்டார்கள். ஆதலால், அவர்கள் தூயவராயினர். இதற்கு மணிவாசகப் பெருமான் ஒருவரே தக்க சான்றுவர். அவரிடம் 'நான்' என்னும் அகந்தை சிறிதும் இல்லை யென்பதற்கும், எல்லாப் பாரங்களையும் கடவுள்மீது போட்டு விட்டுத் தாம் பற்றற்று இருந்தார் என்பதற்கும் அவருடைய தேன் மொழியாகிய,

"அன்றே யென்றன் ஆவியும் உடலும் உடைமை யெல்லாமும்
குன்றே யனையாய்! என்னையாட் கொண்ட போதே
[கொண்டிலையோ?
இன்றே ரிடையூ றெனக்குண்டோ? எண்டோள் முக்கண்
[எம்மானே!
நன்றே செய்வாய்; பிழை செய்வாய்; நாலே இதற்கு
[நாயகமே?"

என்ற செய்யுளே போதுமானது. இவை யாவும் உம்முடைய காதில் ஏறு தென்பது எனக்குத் தெரியும். இனி மேலாவது நீர் நல்ல வழியில் நடத்து கொள்வீர் என்ற நம்பிக்கையால் இவ்வளவு கூறினேன். தயை செய்து என்னைப் போகும்படி விட்டுவிடும்" என்றாள்.

இவ்வளவு கேவலமாகத் தன்னைப் பார்த்துக் கோகிலம் மொழிந்தவுடன், ஷண்முகநாதன் கோபமூண்டவனாக அவளை நோக்கி "அடி, கோகிலா! இனி எப்போது வேண்டுமானாலும் உன்னை நான் எனது விருப்பம் போல ஏதேனும்

செய்யக்கூடும்! அவ்விதம் செய்ய நான் விரும்பவில்லை. என் ஸ்தானத்தில் வேறொருவன் இருந்திருப்பானுகில், அவன் என்னைப் போல் இவ்வளவு பொறுமையுடன் ஒரு போதும் இரான் என்பது நிண்ணம்—

என்று மேலுங் கூறுவதற்குள், மேற்பக்கத்துச் சுவரி லுள்ள ஒரு இரகசிய வழி படார் என்று திறந்து கொண்டது. அதன் வழியாக ஒரு மனிதன் தலையை மாத்திரம் நீட்டி, ஷண்முகதாதனை நோக்கி, "எஜமானே! வீட்டின் முன்வாயிலில் பொன்னுசாமித் தேவரும், துப் பறியும் இரங்கநாதனும் தங்களைக் காண வேண்டுமென்று நிற்கிறார்கள்; உள்ளே வரும்படி செய்யலாமா?" என்று கேட்டான். அதைக் கேட்ட ஷண்முகதாதன் கோபா வேசங் கொண்டவனாய், "இந்த இழவெடுத்தவர்கட்கு இதே வேலை! இவர்கட்குச் சமயம் தெரிகிறதில்லை; சந்தர்ப்பம் தெரிகிறதில்லை. எப்போதும் ஏதாவது சொல்லி யனுப்பிக் கொண்டுதான் இருப்பார்கள். இவர்களுடன் நான் பேசிக்கொண் டிருக்க இது சமயமன்று. நான் இங்கே இல்லை யென்று சொல்லி விடுகிறேன்" என்று தீர்மானித் துக் கொண்டு, வேலைக்காரனைப் பார்த்து, "செட்டியார் விழுப்புரத்திற்குப் போய்விட்டா ரெனக் கூறி விடு" என்றான். வேலைக்காரன் "இல்லை; எஜமானே! நீங்கள் உள்ளே யிருப்பதாகக் கூறி விட்டேனே!" என்றான். இனி என் செய்வது என்று தத்தளித்த வண்ணம் ஷண்முக நாதன் நிற்கும்போது, கோகிலத்தினுடைய மூளை வேலை செய்யத் தொடங்கிற்று. கோகிலத்தினுடைய மனதில் மின்னல் தோன்றுவதுபோல ஒரு யுக்தி தோன்றியது. அந்தச் சமயத்தில் தான் ஏதாவது தந்திரம் செய்தாலன்றி, அவனிடமிருந்து தான் தப்பித்துப் போவது தர்லப மென்று நினைத்தவளாய், ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து

அறையின் கதவை ஆத்திரத்தோடு ஒரு உதை கொடுக்கவே, அது பெருத்த ஓசையுடன் முறிந்து போயிற்று. அதன் வழியாக அந்த அறையுடன் சேர்ந்தாற்போ லிருந்த முன்னறைக்குள் ஓடி இரண்டு அறைகட்கும் நடுவில் இருந்த கதவைச் சாத்தித்தானிருந்த பக்கத்தில் தாழிட்டுக் கொண் டாள். அவ்வாறு அவள் செய்வாளென்று சிறிதும் எதிர் பாராத ஷண்முகநாதன் ஒருவித மனக்கலக்கமும், ஆத்தி ரமும் அடைந்தானெனினும், கோகிலம் எப்படியும் தன் வீட்டிற்குள் அகப்பட்டுக்கொண் டிருந்தமையால், தான் உடனே அந்தக் கதவை நாதாங்கியைவிட்டு அடியோடு கிளப்பி அப்பால் வைத்துவிட்டால், அவளை ஒரு நொடியில் பிடித்து வந்து கட்டிலின் மேற் போட்டுவிடலாம் என்று தீர்மானித்துக் கதவை அசைத்துத் தூக்க முயன்றான்.

அதற்குள் நமது கோகிலம் முன் பக்கத்திலுள்ள கத வின் அருகில் ஓடி அதை இழுத்துப் பார்த்தாள். அது வெளி யில் தாளிடப் பெற்றிருந்த தாகையால், திறந்து கொள்ள வில்லை. 'என்ன விதமாய் இனி வெளியிற் போவது' என்று யோசிக்கவும் நேரமில்லை. கோகிலம் ஒரு நொடிக்குள் ஒரு தீர்மானத்திற்கு வந்தவளாய்த் தடதட வென்று ஆத்தி ரமாகவும், விசையாகவும் கதவைத் தட்டி, 'குமாரசாமி! குமாரசாமி!!" என்று இரண்டு தடவை கூப்பிட்டாள். வெளியில் தயாராக நின்ற குமாரசாமி, அவள் ஷண்முக நாதனுடைய பிடிக்கு அகப்படாமல் தப்பித்துவந்து வெளி யில் ஓடும் பொருட்டுக் கதவைத் தட்டுகிறாள் என்று முத லில் நினைத்தானெனினும், அவள் கூப்பிட்ட மாதிரி அவன் மனதில் ஒருவித சந்தேகத்தை யுண்டாக்கியது. ஆகவே, அவன் உடனே கதவருகில் நெருங்கி நின்று, பலகைகளின் இடை வெளியில் வாயை வைத்து, "எனம்மா கூப்பிடு கிறாய்? என்ன நடந்தது?" என்று மெதுவாகக் கேட்டான்.

உடனே கோகிலம், பதை பதைப்பாகவும், அவசரமாகவும் பேசத் தொடங்கி, "அப்பா! குமாரசாமி! வீட்டின் முன் வாயிலில் துப்பறியும் இரங்கநாதனும், பொன்னுசாமித் தேவரும் வந்து செட்டியாரைக் காண்பதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்க ளென்று இப்பொழுது ஒரு வேலைக் காரன் இரகசிய வழியாகக் கூறினன். அவர்கள் செட்டியா ருடைய அறைக்கு வந்து விடுவார்களானால், என் சங்கதி இருவருக்கும் ஆபத்தாக முடியும். அதற்காகச் செட்டி யார் ஒரு யோசனை செய்துள்ளார். அஃதாவது செட்டி யார் வீட்டில் இல்லையென்றும், எங்கேயோ போயிருப்ப தாயும் தகவல்கொடுத்து அவர்களை அனுப்பிவிட வேண்டு மாம். கதவைத் திற" என்று நிரம்பவும் படபடப்பாகக் கூறினள். குமாரசாமி அந்த வரலாற்றை உண்மையென்று நம்பி, உடனே தாழ்ப்பாளை விலக்கிக் கதவைத் திறந்து விட, கோகிலம் சரேலென்று வெளியில் வந்து நிரம்பவும் இரகசியமாய் அவனுடன் பேசத் தொடங்கி, "அப்பா! முன்வாயிலில் நிற்கிறவர்கள் போகும்வரை இந்தக் கதவைத் தாழிட்டுவிட்டு, நீ எங்கேயாவது போய் ஒளிந்திருந்து வரும்படி செட்டியார் சொல்லச் சொன்னார். நான் உடனே மறுபக்கம் போய் ஒளிந்து கொள்கிறேன். அவர்கள் ஒருக் கால் நம்பாமல் உள்ளேவந்து பார்ப்பார்களானால், எல் லாம் வெளிச்ச மாகிவிடும்; அதற்காகத் தான் இவ்வளவு ஏற்பாடுகள்" என்று கூறியபடி வீட்டின் பின் பக்கத்தை நோக்கி நடக்கலானாள். அவள் கூறியது முழுவதும் உண்மை போலவே இருந்ததாகையால், குமாரசாமி உடனே அந்தக் கதவைச் சாத்தித் தாழிட்டுக் கொண்டு போக முயன்றவன், "அம்மா! என்ன, அந்தப் பக்கம் போகிறீர்கள்?" என்று கேட்டான். கோகிலம், "இல்லை; நான் தருந்த இடம் பார்த்து மறைந்து கொள்கிறேன்.

நீ அவ்விடத்தில் நிற்கக்கூடாது ; உடனே போய்விடு" என்று கூறிவிட்டுத் தடதடவென்று ஒரே ஓட்டமாக அவனது கண்ணிற்படாமல் மறைந்து போய்விட்டாள். குமாரசாமியும் உடனே மறுபக்கம் ஓடிவிட்டான்.

கோகிலம் தலைகால் தெரியாமல் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து மாளிகையின் கடைசிப் பக்கத்தை அடைந்தாள். ஷண்முகநாதன் ஒருகால் கூச்சலிட்டுக் குமாரசாமியை அழைத்து உண்மையை வெளியிட்டு உடனே கதவைத் திறக்கச் செய்வானே என்ற நினைவும், அவர்கள் தன்னைத் தொடர்ந்து துரத்திக்கொண்டு வருவார்களோ என்ற பயமும், நடுக்கமும் அவளை ஒரே தள்ளாகத் தள்ளிக்கொண்டு வந்தமையால், அவளது மனம் சொல்லொணாத ரகவேதனையை அடைந்ததென்றே கூறுதல் வேண்டும். அவ்வாறு ஒரே ஓட்டமாக வந்த கோகிலம், அம்மாளிகையின் கோடியில் இரண்டு பணியாட்கள் நிற்கக் கண்டாள். தான் உள்ளே யிருந்து தப்பித்து ஓடிவந்து விட்டதைக் குறித்து அவர்கள் சிறிதும் சந்தேகங் கொள்ளாதபடி அவர்கட்கும் குமாரசாமிக்குச் சாத்திய நாமத்தையே சாத்திவிட்டு, மெதுவாக மாளிகையின் மதிலைத் தாவிகின்று, எங்கேனும் வண்டிகள் நிற்கின்றனவா என்று ஆராய்ச்சி செய்தாள். சுமார் அரைப் பர்லாங்க் தூரத்தில் ஒரு ஜட்காவண்டி நிற்பதைக் கண்டு ஓட்டமாக ஓடி, அவ்வண்டியில் ஏறிக்கொண்டு, "வண்டிக்காரனே நோக்கி, "அப்பா! எழும்பூர் புகைவண்டிச் சாலைக்குவிடு! அவசரம்! நீ கேட்கும் கூலியைத் தருகிறேன்" என்றதும், வண்டிக்காரன் மகிழ்ச்சியுடன் குதிரையை நாற்காற் பாய்ச்சலில் தட்டிவிட்டான். கோகிலத்திற்கு அப்போதுதான் உயிர் திரும்பத் தொடங்கிற்று. அதுவரையில் வெடவெட வென்று நடுங்கிக் கொண்டிருந்த அப் பெண்ணணங்கின் கைகால் முதலிய அங்கங்களெல்லாம்

அப்போதே சிறிது அமைதி யடையத் தொடங்கின. பெருத்த பயத்தினாலும், ஆத்திரத்தினாலும், அவமானத் தினாலும் பதறித் தவித்துக் கொண்டிருந்த அவள் மனம் சிறிதளவு கட்டிலடங்கி வரத் தொடங்கிற்று. கால் நாழி கைக்குப் பிறகு வண்டி எழும்பூரை யடைந்தது. அவ்வம யம் மாலை ஏழுமணி யிருக்கலாம். அப்பொழுது புறப்பட்ட புகைவண்டியி லேறிக் கோகிலம், இராஜமகேந்திர புரத்திற் குச் சென்றாள்.

பதின்மூன்றாவது அதிகாரம்

துப்பறிபவனின் செப்பருந் திறமை

காலை பத்துமணி யிருக்கலாம். துப்பறியும் இரங்க நாதன், சப்-இன்ஸ்பெக்டர் வரதாசாரியாரைப் பார்க்கச் சென்றபோது, அவர் தம்முடைய ஆபீஸி லுட் கார்ந்து ஏதோ வேலை பார்த்துக்கொண் டிருந்தார். அவ ருடைய வடிவம் குட்டையா யிருந்தது. சுறுசுறுப்பாக இருந்தபோதிலும் அவர் முகம் கடுகடுப்பாகவே தோன் றிற்று. இரங்கநாதன் இன்ன காரியமாய் வந்திருக்கிறா ரென்பதை யுணர்ந்து கொண்ட இன்ஸ்பெக்டர் சற்று வெடுவெடுப்பாகப் பேசத் தொடங்கி, "ஐயா, தாங்கள் கேஸ்களில் வேலை செய்யும் வழிகளைப்பற்றி நான் கேள்விப் பட்டிருக்கிறேன். மற்றவர்கள் என்னென்ன சமாசாரங் கள் தேடி வைத்திருக்கிறார்களோ, அவை யனைத்தையும் நீர் உபயோகப்படுத்திக் கொண்டு கேஸை முடித்துவிட்டு, நீர் கண்டு பிடித்ததாகவும், மற்றவர்களால் முடியவில்லை யென்றும் அவர்களுக்கு இழிவை யுண்டாக்குவதே உம் முடைய வழக்கம்" என்றார். இதைக் கேட்ட இரங்க

நாதன், சாந்தமாக, "ஐயா, நீர் சொல்வது சுத்தப் பிழை. நான் இன்று வரையில் நூற்றைம்பது கேஸ்களில் வேலை செய்திருக்கிறேன்; ஆனால், என்னுடைய பெயர் இரண்டில் தான் வந்திருக்கின்றன. மற்ற கேஸ்களின் வெற்றிகளையெல்லாம் வேறு பல உத்தியோகஸ்தர் தலைகளிலேயே போட்டுவிட்டேன். ஆனால், உமது பேரில் குற்றம் இல்லை; நீர் இளமைப் பருவமுடையவர்; அதிலும் இத்தப் (Division) பகுதிக்குப் புதியவர்; பழக்கம் போதாதவர்; நீர் உம்முடைய வேலையில் பெயர் பெறவேண்டுமானால், என்னுடன் கலந்து வேலை செய்யும்" என்றார்.

இதைக் கேட்ட இன்ஸ்பெக்டர் தம்முடைய வாலை முடக்கிக் கொண்டு, "சரி; நீங்கள் சொல்வதைக் கேட்கிறேன். இதுவரையில் இந்தக் கேஸில் நான் வேலை செய்து ஒன்றும் பயனடையவில்லை" என்றார்.

இரங்கநாதன் :—நல்லது; நீர் என்ன வேலை செய்தீர்?

இன்ஸ்பெக்டர் :—சமையற்காரனைப் பின் தொடர்ந்து விசாரித்ததில் அவன் மிகவும் நல்லொழுக்கமுடையவனென்று வெளியாயிற்று. ஆனால், அவன் மனைவி மட்டும் கெட்டவள் தான். அவள் சம்பந்தப்பட்டிருக்கக்கூடுமென்றே நம்புகிறேன்.

இரங்கநாதன் :—அவளைத் தொடர்ந்து பரிசோதித்தீர்களா?

இன்ஸ்பெக்டர் :—பெண்களைச் சோதிக்கும் இடத்திற்கு அனுப்பியும் பயன் இல்லை. அச் சமையற்காரன் மனைவி குடிப்பதுண்டு. அவள் குடித்துள்ள சமயங்களில் தெரிந்து கொள்ளும்படி மூன்று முறை ஆளனுப்பிப் பார்த்தும் ஆகிவிட்டது!

இரங்கநாதன் :—அவள் வீட்டிற்குக் கடைக்காரர்கள் வருகிறார்களாமே?

இன்ஸ்பெக்டர் :—ஆம் ; அவர்கட்கு நிலவை கொடுக்கப் பட்டுவிட்டது.

இரங்கநாதன் :—செட்டியார் காபி வேண்டி மணி யடித்த பொழுது அவள் ஏன் அங்கே போனாளாம் ?

இன்ஸ்பெக்டர் :—அவளின் கணவன் மிகக் கோப்பா யிருந்த தனால், தான் போனாளாம்.

இரங்கநாதன் :—உண்மை தான். கொஞ்ச நேரத்திற் கெல் லாம் அயர்ந்து நித்திரை செய்திருக்கிறானே ! சரி ; அன்றிரவு அவள் எதற்காகப் பரபரவென்று வீடு போனாளாம் ? கேட்டீர்களா ?

இன்ஸ்பெக்டர் :—அன்று தினம் வழக்கத்திற்கு மேல் நேர மாகிவிட்டதாம். அதனால் அவசரமாகப் போனாளாம்.

இரங்கநாதன் :—அவள் வீட்டிற்குச் சென்ற பிறகல்லவா நீரும் செட்டியாரும் தேடிக்கொண்டு போனீர்கள் ? அவள் ஏன் அவ்வளவு நேரம் சென்று வீட்டிற்கு வந்தாள் ?

இன்ஸ்பெக்டர் :—நாங்கள் குதிரை வண்டியிற் சென்றோம். அவள் நடந்து வந்தாளாம்.

இரங்கநாதன் :—சரி ! நீர் நன்றாக விசாரித்திருக்கிறீர். இன்னும் என்ன தெரிந்து கொண்டீர் ?

இன்ஸ்பெக்டர் :—பார்த்தசாரதி ஐயங்காரையும் கவனிக் கும்படி துப்பு வைத்துப் பார்த்தேன். ஒன்றும் பயன் படவில்லை. அதற்குமேல் போவதற்கு வழியுமில்லை.

இரங்கநாதன் :—அந்த மணி அடிக்கப்பட்டதைக் குறித்து உமது கருத்தென்ன ?

இன்ஸ்பெக்டர் :—அதுதான் எனக்கும் இடறு கட்டையா யிருக்கிறது.

இரங்கநாதன் :—உண்மை தான். இவ்வளவு தூரம் கூறிய தற்காக வந்தனம். திருடனைப் பிடித்தவுடன் தங்கட்குத் தெரியப்படுத்துகிறேன்—

என்று கூறிவிட்டுத் தன் வழியே சென்றார். மறுநாள் காலை ஆறு மணி யிருக்கலாம். இரங்கநாதன், பவழக்காரத் தெருவிலுள்ள சுந்தரேசன் செட்டியாரைப் பார்ப்பதற் காகச் சென்றார். அவர் நீண்ட நாட்களாக இச் சென்னை யில் வெள்ளோயன் செட்டியாருடைய கடையில் ஏஜண்டாக இருந்து வருபவர். இரங்கநாதன் அவரைக் காணும் பொருட்டு இரண்டு மணி நேரம் காத்திருந்தும் தரிசனங் கிடைக்கவில்லை. ஏனெனில், சுந்தரேசன் செட்டியார் அப் பொழுது தான் காலைக் கடன் முடிக்கச் சென்றிருந்தார். அவர் காலைக்கடன் முடிக்கப் போகும்போது உயர்ந்த சுருட்டில் அரைக்கட்டும், சுமார் ஏழு ரெருப்புப் பெட்டி யும் செலவானவுடன், ஏகதாளம், திரிபுடைதாளம் முத லிய தாள வரிசைகளை முதலில் தீர்த்துக் காரியத்தை முடித்து, ஒரு அடி நீளமுள்ள பற்கொம்பினால் உள்கன்னம் தேய்த்து இரத்தம் வடியும் வரை பற்கள் ஆடும்படி பல் துலக்கி, அந்தப் பற்கொம்பைத் தொண்டை வழியாய் உள்ளே விட்டுச் சிறு குடல் பெருங்குடல்களையும் சுத்தம் செய்து வாய் கழுவத் தொடங்குவார். வாய் கொப்பளிக் கச் சுமார் நான்கைந்து குடம் தண்ணீருக்கு மேலேயே நாசமாகிவிடும். பிறகு குளிக்கத் தொடங்கினால், அது பார்ப்பதற்கு ஒரு காட்டானை நீராடுதல் போலவே யிருக் கும். உடம்பு தேய்ப்பதற்கு வேண்டின் ஒரு உருண்டைக் கல்லையே அவர் உபயோகிப்பது வழக்கம். சவர்க்காரம் முதலிய நாகரீகப் பொருள்களை விரும்பாமல், பெரிய சுதேசியாக விளங்கினர். இவ்வாறு குளிக்காமற் போனால் அவருக்குத் தூக்கமே வராமாட்டாது. இங்ஙனம் காரியங்

கனைச் சாதித்துக்கொண்டு முகப்புக்கு வந்து சேரச் சுமார் நான்கு மணி நேரமாவது பிடிக்கும். அன்றையதினம் இரங்க நாதன் வந்திருப்பதைக் கேட்டுச் சிக்கிரம் வந்து இரங்க நாதனை வரவேற்றார். பிறகு, "தங்களுடைய பெயரை நான் பன்முறை கேட்டிருக்கிறேன். தாங்கள் இப்பொழுது வந்த காரணத்தையும் தெரிந்துகொண்டேன்" என்றார்.

இரங்கநாதன் :—நான் தங்களைச் சில கேள்விகள் கேட்க வேண்டும்.

சுந்தரேசன் செட்டியார் :—ஆகா! நன்றாய்க் கேட்கலாம்.

இரங்கநாதன் :—அதோ தெரிகிறதே; அந்த அறையில் தானே தாங்கள் ஷண்முகநாதன் செட்டியாரிடம் தகவல் கூறியது?

சுந்தரேசன் :—ஆம்.

இரங்கநாதன் :—அப்படியானால், ஒருவரும் ஒளிந்து கேட்க முடியாதே?

சுந்தரேசன் :—அஃதெப்படி முடியும்?

இரங்கநாதன் :—நீங்கள் அவரிடம் கொடுக்கப் போவதாக வேறு யாரிடமும் சொல்லியது உண்டா?

சுந்தரேசன் :—இடையவே இடையாது!

இரங்கநாதன் .—அது நிச்சயந்தானே?

சுந்தரேசன் :—அதில் சந்தேகமே வேண்டாம்.

இரங்கநாதன் :—இந் நிகழ்ச்சி வெளி வந்தால் துன்பம் நேரிடு மென்று கூறினீர்களன்றே? அத் துன்பம் நேரிட்டுவிட்டதா?

சுந்தரேசன் :—இன்னும் இல்லை!

இரங்கநாதன் :—ஜமீன்தாரிடம் நகை போய்ச் சேர்ந்திருந்தால், தங்கட்குத் தகவல் வந்திருக்கு மல்லவா?

சுந்தரேசன் :—ஆம் ; வந்திருக்கும்.

இரங்கநாதன் :—நகை காணுமற் போய் ஒரு மாதமாகியும் அதைப் பற்றி ஒன்றும் தெரியாததால், என்ன காரணத்தினாலோ அந்த நகை அவர்களிடம் போய்ச் சேர்வில்லை யென்று தோன்றுகிறது.

சுந்தரேசன் :—திருடினவனுக்குத் திடீரென்று ஏதேனும் பிணி உண்டாகி யிருக்கலாம். அதனால் தான் போய்ச் சேரவில்லை யென்று கருதுகிறேன்—என்றார்.

இரங்கநாதன், அவரிடம் விடை பெற்றுக்கொண்டு ஷண்முகநாதனைப் போய்க் கண்டார். அவன், அவர் ஒரு மாதமாய் வசாம்மையைக் குறித்து வருத்தப்பட்டுக் கொண்டான். ஷண்முகநாதனை நோக்கி, "நான் முன்பு தங்களிடம் விபரம் கேட்டுச் சென்ற பிறகு ஏதேனும் விசேஷம் நடந்ததா ?" என்று கேட்டார்.

ஷண்முகநாதன் :—நீங்கள் சென்ற பிறகு நான் இரண்டு நாட்களவரை அந்தப் படிக்கை யறையிலேயே யிருந்தேன். அப்பொழுது ஒரு விசேஷம் நடந்தது. அது மாத்திரம் நிறைவேறி யிருக்குமானால் என்னை நீங்கள் இப்பொழுது காண்பதரிது. என்னையும் மானபங்கப் படுத்தி என்னுயிரையும் போக்கும் பொருட்டுச் சிலர் சதியாலோசனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

இரங்கநாதன் :—நடந்த விஷய மென்ன ?

ஷண்முகநாதன் :—அன்றிரவு எனக்கு உடல் சிறிது பலமா யிருந்தது. ஆகையால், குமாரசாமியின் துணை யில்லாமலே தூங்கினேன். இரவு முழுவதும் ஒரு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. இரவில் சுமார் இரண்டு மணி யிருக்கலாம், அப்பொழுது 'கிரீச்' என்றொரு சப்தங் கேட்டு விழித்துக் கொண்டேன். முதலில்

அந்தச் சப்தம் எலி கதவைச் சுரண்டுவது போலிருந்தது. சிறிது நேரத்திற்குப் பிறகு சப்தம் அதிகப்பட்டது. திடீரென்று எழுந்து உட்கார்ந்து கொண்டேன். பிறகு கொஞ்ச நாழிகை வரையில் சப்தமே கேட்கவில்லை. அதற்குப் பின் மறுபடியும் 'கிரீச்' என்ற சப்தம் கேட்டது. சாளரத்தின் கதவு படீரென்று திறந்து கொண்டது. எனக்குப் பயம் அதிகரித்துக் கொண்டே போயிற்று. நான் தைரியத்தோடு சாளரத்தின் வெளியே தலையை நீட்டிப் பார்த்தேன். ஒருவன் குனிந்தபடியே ஓடினான். அவனை முழுதும் பார்க்க முடியவில்லை. ஏதோ அவன் முகத்தை மறைத்து முக்காடு போட்டுக்கொண்டிருந்தான். அவன் கையில் பளபள வென்றொரு கத்தியிருந்தது, என்னால் ஓடிப் பிடிக்கவும் முடியவில்லை. பயந்து கூச்சலிட்டேன். வெளியிற் படுத்திருந்த குமாரசாமி ஓடி வந்தான். பிறகு வேலைக்காரர் யாவரும் வந்தார்கள். எல்லாரும் கூடிய வரையில் தேடினார்கள். ஆசாமி அகப்படவே யில்லை. ஆனால், சாலைப் பக்கத்திலிருக்கும் மரக் கிராதியைத் தாண்டியிருப்பதாயும், கால் வைத்த இடம் முறிந்து கிடப்பதாயும் சொன்னார்கள்—என்றான்.

இவ்விஷயம் இரங்கநாதனுக்குப் பெரிய உவகை ஊட்டியதாகப் புலப்பட்டது. அவர் எழுந்து தன் கைகளைப் பின் கட்டாய்க் கட்டிக்கொண்டு சிறிது நேரம் உலாவினார். பிறகு ஷண்முகநாதனை நோக்கி, "அப்புறம் என்ன செய்தீர்கள்?" என்று கேட்டார்.

ஷண்முகநாதன்:—அன்றிரவு தூங்கியதைத் தவிர மறுபடி நான் அந்த அறைக்குள் போக விரும்பவில்லை. மறுநாட் காலையிலேயே சாளரங்களை மூடிக் கதவையும் பூட்டி

விட்டேன். நிறவுகோல் என்னிடமே யிருக்கிறது. சுற்றிலும் காவற்காரர்கள் இருக்கிறார்கள்.

இரங்கநாதன் :—தங்களால் ஆனதைத் தாங்கள் செய்திருக்கிறீர்கள். இந்த மாளிகையைச் சுற்றிப் பார்க்க வேண்டும். என்னுடன் நீங்கள் வர முடியுமா ?

ஷண்முகநாதன் :—ஆகா ! நானும் வருகிறேன்—என்றான்.

இருவரும் வீட்டைச் சுற்றிப் பார்வை யிட்டனர். அவர்கள் கூறியபடி தடங்கள் இருந்தன. ஆனால், நீண்ட நாட்களாகி விட்டபடியால் அவைகள் சிறிது சின்னப்பட்டிருந்தன. இரங்கநாதன், அவைகளைக் கூர்ந்து குனிந்து பார்த்துவிட்டு, " இந்த அடித் தடங்களால் ஒன்றும் பயனில்லை. இந்த வீட்டைச் சுற்றி வந்து திருடன் இந்த அறையில் நுழையக் காரண மென்ன வென்று பார்ப்போம். சாமான்கள் வைக்கும் அறை, இரும்புப் பெட்டி யிருக்கும் அறை இவைகளுக்குச் சாளரங்கள் பொருத்தா யிருக்கின்றனவா ?" என்று கேட்டார்.

ஷண்முகநாதன் :—அந்தச் சாளரங்கள் வீதியிலிருந்து பார்த்தாற்கூட நன்றாகத் தெரியும்—என்றான்.

இரங்கநாதன், வீட்டைச் சுற்றி வரும்போது, " திருடன் எங்கேயோ வேலியைத் தாண்டினானென்றீர்களே, அதைப் பார்க்கலாம். வாருங்கள் " என்றார். அங்குச் சென்று பார்த்தபோது அவ்விடத்தில் ஒரு கட்டை முறிந்து தொங்கிக் கொண்டிருந்தது. இரங்கநாதன் அதை இழுத்துச் சோதித்துப் பார்த்து விட்டு, " இது சமீபத்தில் ஒடிந்ததாகத் தோன்றவில்லையே ; பல நாட்களுக்கு முன் ஒடிந்ததாகப் புலப்படவில்லையா ?" என்றார். " அப்படித் தான் தோன்றுகிறது " என்றான் ஷண்முகநாதன். இரங்கநாதன், இதைத் தவிர அதன் பக்கத்திற் குதித்ததைக் காட்

டும் ஆதாரத்தைக் காணோம்; ஆதலால், இதி லொன்றும் பயனில்லை. வாருங்கள்; படுக்கை யறைக்குப் போவோம்" என்றார்.

அங்குச் சென்றவுடன், இரங்கநாதன் குமாரசாமியை அழைத்து, அதிரகசியமாக "நீ இந்த அறையின் வாயிற் படியிலேயே நாளைக்காலை வரையி லிருக்க வேண்டும். எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்த இடத்தை விட்டு நகரக் கூடாது. இவ்விடத்திலேயே இருக்கவேண்டியது. மிகவும் அவசியம்" என்றார்.

குமாரசாமி:—நீங்கள் கூறுகிறபோது மறுப்பேனா? அவ் விதமே தவறாமல் இருப்பேன்.

இரங்கநாதன்:—செட்டியாரிட மிருக்கும் திறவுகோலை வாங் கித் தருகிறேன். இன்று பகல் முழுதும் கதவைத் திறந்துவை. இரவில் சாப்பிடப் போகும்போது வெளிப்புறம் பூட்டித் திறவுகோலை நீயே வைத்துக் கொள். நான் கூறும் வண்ணம் உறுதியாகச் செய் வாயா? என்று கேட்டார்.

குமாரசாமி அதற்கொப்புக் கொண்டான். இரங்க நாதன், ஷண்முகநாதனை நோக்கி, "இங்கு எல்லா விஷயங் களும் தெரிந்து கொண்டேன். நாளை உம்முடைய கையைக் கண்டு பிடித்துத் தந்துவிடுகிறேன். ஆனால் நீர் தயை செய்து இம் மாளிகையை விட்டு நாளைக் காலை பத்து மணி வரையில் என்னுடைய வீட்டில் விருந்தினராக இருக்க வேண்டும்" என்றார்.

ஷண்முகநாதன் அதற் கொப்புக் கொண்டான். வண் டியில் போகும்பொழுதும் இதைக் குறித்துப் பேசினர். ஆனால், ஷண்முகநாதனுக்கு இரங்கநாதனிடம் சரியான நம் பிக்கை யுண்டாக வில்லை. அன்றிரவில் நடந்ததைச்

சாமானியமாக எண்ணி இரங்கநாதன் பிடிக்கப் பிரயத்தனப் படுகிறானென்றும், அத் திருடன் தன்னைக் கொல்லும் பொருட்டே வந்தானென்றும் பலவாறு எண்ணினான். அன்று இரவில் ஷண்முகநாதனுக்கு மிக விமரிசையான விருந்து நடை பெற்றது. இரங்கநாதன் காலையிற் சந்திப்பதாகக் கூறி எங்கோ சென்று விட்டார். மறுநாள் காலை ஒன்பது மணிக்கு ஒரு வண்டி வந்து வாயிலில் நின்றது. அதினின்று இரங்கநாதன் இறங்கினர். அவருடைய கையில் துணியிற் கட்டப்பட்ட கட்டு ஒன்றிருந்தது. அவர் முகம் கடுகடுப்பாகவும் வெளுப்பாகவும் இருந்தது. அவர் வீட்டினுள் நுழைந்து கொஞ்ச நேரம் சென்ற பிறகு ஷண்முகநாதனுடைய அறையினுட் புகுந்தார். இவரைக் கண்டவுடன் ஷண்முகநாதன், "வரவேண்டும்! ஏதோ அடிபட்டவர் போலிருக்கிறீர்களே; காயம் ஒன்றும் இல்லையே? நடந்ததென்ன?" என்றான்.

இரங்கநாதன்:—ஒன்றும் இல்லை. அற்ப விஷயம்! கொஞ்சக் காயம்; அதுவும் என்னுடைய அஜாக்கிரதையால்! செட்டியாரவாள்! இதுவரையில் நான் கண்டுபிடித்த கேஸ்களில் தங்களுடையதுதான் மிகக் கடினமானது" என்றார்.

ஷண்முகநாதன்:—தங்கள் கையிற் கட்டப்பட்டுள்ள கட்டால் தெரியவில்லையா? சரி; நடந்தவைகளைச் சொல்லுங்கள்!

இரங்கநாதன்:—அவையெல்லாம் சாப்பாட்டிற்குமேல். நான் எவ்வளவு தூரம் கஷ்டப்பட்டு வந்துள்ளேன் தெரியுமா?

என்று கூறிக்கொண்டிருக்கும்போது, சமையற்காரன் இரண்டு தாம்பாளங்களில் பலகாரங் கொண்டுவந்து வைத்தான். அவை மூடப்பட்டிருந்தன. இரங்கநாதன், ஒரு

தாம்பாளத்தை எடுத்து ஷண்முகநாதனுக்கெதிரில் வைத்து, "நண்பரே! சாப்பிடுங்கள்" என்றார். ஷண்முகநாதன் அதைத் திறந்ததும், "ஆ!" என்று ஒரு சப்தம்போட்டு, அந்தத் தாம்பாளத்தி லிருந்ததைக் குறிப்பாகப் பார்த்துக் கொண் டிருந்தான். அத்தட்டின் நடுவில் ஒரு பெரிய காகிதச் சுருள் இருந்தது. ஷண்முகநாதன், அதைப் பேராநந்தத்தோடு எடுத்துப் பிரித்துப் பார்த்துக் கண்களில் ஒற்றிக்கொண்டான்; மார்பில் அணைத்துக் கொண்டான். மகிழ்ச்சியால் ஆநந்தக் கூத்தாடினான். பிறகு இரங்கநாதனை நோக்கி, "ஐயா! நீர் மகாராஜா யிருப்பீர்! உமக்குக் கடவுள் நிறைந்த அருள் புரிவார். இந்தமட்டில் என் கௌரவத்தைக் காப்பாற்றினீர்களே" என்றான்.

இரங்கநாதன்:—"என் மானமும் போய்விடும்போல் தான் இருந்தது. நான் எடுத்துக்கொண்ட இக்கேஸில் வெற்றியடையாமல் தவறிவிடுவேனோ என்று நான் கொண்ட பயம் இவ்வளவென்பதைக் கடவுளே அறி வார்" என்றார்.

ஷண்முகநாதன்:—ஐயா, இந்த நகை எப்படி அகப்பட்டது? அதைக் கேளாதிருந்தால் என் வயிறு வெடித்து விடும்போ லிருக்கிறது. தயைசெய்து விபரமாய்ச் சொல்லுங்கள்!

இரங்கநாதன்:—நேற்றுத் தங்களை இங்கு அழைத்துக் கொண்டுவந்த பிறகு நான் நேராகத் தங்கள் மாளி கைக்குச் சென்று மாறுவேடத்துடன் கவனித்துக் கொண்டிருந்தேன். மாலை ஏழுமணி ஆயிற்று. உமது மாளிகையின் தோட்டத்திலுள்ள சாலையில் சுற்றத் தொடங்கினேன். பிறகு மூன்று புளிய மரங்கள் சேர்ந்தாற்போ லிருக்கின்றனவே; அவற்றின் மறை வில் ஒருவருங் காணுதபடி நின்றேன். அங்கிருந்து

உம்முடைய படுக்கையறைக்கு. எதிரிலிருக்கும் உரோஜாச் செடிகள்வரையில் தவழ்ந்துகொண்டே போனேன். அந்தச் செடிகளின் மறைவிலிருந்து மேல் நடக்கும் சங்கதிகளைக் கவனித்தேன். அந்த அறையின் சாளரத்தில் திரை போடாதிருந்தபடியால் குமாரசாமி ஏதோ பத்திரிகை படித்துக்கொண் டிருந்தது நன்றாகப் புலப்பட்டது. இரவு சுமார் பத்துமணி யிருக்கலாம். அவன் பத்திரிகையை ஒரு மூலையில் போட்டுவிட்டுச் சாளரக் கதவுகளை மூடிக் கதவைப் பூட்டிக்கொண்டு போனான். நான் தங்களிடம் அவ் வறைத் திறவுகோலை வாங்கி அவனிடம் கொடுத்த போது, கதவைப் பூட்டித் திறவுகோலைக் கொண்டு போகும்படி சொல்லியிருந்தேன். அவன் நான் சொல்லியபடியே ஒவ்வொன்றையும் தவறாது செய் தான். அவனுடைய உதவி யில்லாவிட்டால் இப் பொழுது இந்த நகை நமக்குக் கிடைத்திராது. இவ் விதம் அவன் வெளியிற் போகும்போது விளக்கை யணைத்துப் போய்விட்டான். நான்மட்டும் இருட்டில் பதுங்கிக்கொண்டு ஜபஞ் செய்துகொண் டிருந்தேன். என் செய்வது? தூக்கமோ ஒரு பக்கம் கண்ணைச் சுற்றுகிறது. தூங்குவோமென்றால் எடுத்த காரியம் முடிவதெப்படி? காலம் சென்றுகொண்டே யிருந்தது. ஏதேனுங் காரியம் பார்த்துக்கொண்டிருந்தால் காலம் தோன்றாது. சும்மா ஒளிந்து கிடப்பதென்றால் மிகவும் கஷ்டமாகவே யிருந்தது. இறுதியாக மணியும் இரண் டடித்தது. ஏதோ ஒருவித சப்தம் கேட்டது. மறு நிமிடம் பொன்னுச்சாமி தேவர் தோன்றினார்.

ஷண்முகநாதன்:— "பொன்னுச்சாமி தேவரா!" என்று விநயப்புடன் கூவினான்.

இரங்கநாதன் :—அவர் ஒரு பெரிய கருப்புப் போர்வை போர்த்துக்கொண் டிருந்தார். யாதேனும் வருவதாகத் தெரிந்தால், அப் போர்வையிலேயே முகத்தை மூடிக்கொள்ளலாம். அத்தகைய போர்வையுடன் எள் ளளவுஞ் சப்தம் கேளாதபடி அடிமேல் அடிவைத்து நடந்து, சாளரத்தின் அருகிற்போய் ஒரு ஆயுதத்தால் துவாரம் செய்து தாழ்ப்பாளைத் திருப்பினர். திருப்பிக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்து விட்டார். நானிருக்கும் இடத்திலிருந்து பார்த்தால் அறைக்குள் நடப்பன யாவும் தெரியும். அவர் உள்ளே சென்றதும் விளக்கை யேற்றினர். பிறகு, கட்டிலின்மேல் போட்டிருந்த கம்பளியை யெடுத்து விட்டு, உள்ளே கையை நுழைத்து, மிகவும் கஷ்டப்பட்டு ஒரு பெட்டியை எடுத்தார். உடனே அந்தக் கம்பளியை முன்னிருந்தபடியே விரித்துவிட்டு வெளியே குதித்தார். இதற்குள்ளாக நான் சாளரத்தின் அருகிற் போய்விட்டேனதலின், குதித்தவுடன் நான் அவரைப் பிடித்துக்கொண்டேன். அவர் தன் கையிலிருந்த கத்தியால் என்னை வெட்ட வந்தார். அப்பொழுது நான் அவரைப் பிடித்து இருமுறை கீழே தள்ளினேன். அப் பொழுது வெட்டின வெட்டுகளுள் ஒன்றுதானிது. பிறகு அவரிடமிருந்து பெட்டியைப் பிடுங்கிக்கொண்டு அவரைப் போகவிட்டு வந்தேன். இன்று காலையில் நடந்த விஷயங்களை விபரமாக வரைந்து போலீஸ் கமிஷனருக்கு அனுப்பிவிட்டேன்.

ஷண்முகநாதன் :—ஆகா ! நான் பெரிதும் வருந்திக்கொண் டிருந்த முப்பது நாட்களிலும் இந்த நகை என் படுக்கையின் அடியிலா இருந்தது !

இரங்கநாதன் :—ஆம் ;

ஷண்முகநாதன் :—ஆருயிர் நண்பனென நான் கருதியிருந்த பொன்னுச்சாமித் தேவரா திருடர்!

இரங்கநாதன் :—சந்தேகமென்ன? இன்று நான் விசாரித்ததில் அவர் தம்முடைய சொத்து முழுவதையும் இழந்துவிட்டாரென்றும், எந்தக் காரியத்தையும் துணிந்து செய்யக் கூடியவரென்றும் விளங்கின ஆதலின், தன் நண்பருக்குத் துன்பமாயிற்றே என்று கூடக் கவனியாமல் இவ்விதம் திருடிவிட்டார். உம்முடைய கேஸில் முக்கிய சிரமமெல்லாம் உண்டாயிற்று. அவற்றுள் இன்னதுதான் அவசியமானதென்று தெரியாதபடி சாக்ஷியங்கள் இருந்தன. அவைகளைத் தள்ளி முக்கியமானவைகளை ஒன்று சேர்த்துப் பார்ப்பதுதான் கடினமாகிவிட்டது. எப்பொழுது—அஃதாவது நகை திருடப்பட்ட நாளில்—அன்றிரவு பொன்னுச்சாமித் தேவருடன் நாடகம் பார்க்கப் போவதாக ஏற்பாடு செய்திருந்தேனென்று சொன்னீர்களோ, அப்பொழுது தங்கள் கடைக்கு வரும் வழிதெரிந்த பொன்னுச்சாமித் தேவர்தான் போகும்போது தங்களை அழைக்க வந்திருக்க வேண்டுமென்று சந்தேகம் பலமாகக் கொண்டேன். பிறகு யாரோ தங்கள் படுக்கையறையிற் புக எத்தனித்தாரென்று சொல்லவும் அவராகத்தான் இருக்கவேண்டுமென்று நினைத்தேன். ஏனெனில், திருடன் களவுசெய்ய வந்தால் படுக்கையறைக்கு வரமாட்டான். இவரோ, என்றிரவு ஆள்துணையில்லாமல் தனியே உறங்கினீர்களோ அதைத் தெரிந்துகொண்டு வந்திருக்கிறார். பிறகுதான் இவ்விதம் நடந்திருக்கலாமென்று கருதினேன். நாடகம் பார்க்கும்பொருட்டுத் தங்களை அழைத்து

செல்லவந்த போன்னுச்சாமித் தேவர், வழி தெரிந்தவ ராதலின் நேரே தங்களுடைய அறைக்கு வந்திருக் கிறார்; தங்களைக் காணமல், இருக்கும் இடம் தெரிந்து கொள்ளும் பொருட்டுச் சமையற்காரனுக்கு மணி அடித்திருக்கிறார்; மணி யடித்தவுடனே மேஜையின் மீதிருந்த நகையைக் கண்டு, அதை விற்கலாமென்ற பேராசையால் தூண்டப்பட்டவராய் எடுத்துக் கொண்டு தான் வந்த வண்டியிலேயே போய்விட்டார். இவ்விதம் வந்தவர், நகை மிகவும் விலையுயர்ந்ததென்று நிச்சயித்துத் தம்முடைய படுக்கை யறையிலுள்ள கட்டிலின் கீழ்மறைத்து வைத்துவிட்டார். அதைச் சாவகாசமாக எடுத்து விற்றுவிடலாமென்பது அவர் கருத்து. அவருடைய கெட்டகாலம்! வேலைக்காரர் கள் படுக்கையறை தெரியாமல் தங்களைக் கொண்டு வந்து இடத்திவிட்டார்கள். அதன் பிறகு நகையை எடுப்பதற்குச் சமயம் வாய்க்காதிருந்து, இறுதியாக நீர் தனியாகத் தூங்குவதைக் கண்டு, அதைக் கைப் பற்ற முயன்றிருக்கிறார். நல்ல வேளை நீர் விழித்துக் கொண்டீர். ஆகவே, மறுபடியும் அதை எடுக்க முயல்வாரென்பது எனக்குத் தெரியும். தாங்களும், வேலைக்காரரும் இல்லாத சமயம் பார்த்துத்தான் அவர் நுழைவாசாகையால், காவலிருந்த வேலைக்காரரை நீக்கி, தங்களை என் வீட்டிற் கழைத்துக்கொண்டு, குமாரசாமியை மாத்திரம் இரகசியமாய்க் காவல் வைத்தேன். அதற்காகவே நானும் அங்குத் தங்கி யொளிந்திருந்தேன். நகை அந்த அறையில்தான் இருக்கிறதென எனக்குத் தெரிந்ததேயாயினும், வீணே நாம் சிரமப்படுவானேன்; அவரே யெடுக்கட்டு மென்றிருந்தேன். அப்படியே முடிந்தது. இதுதான்

நடந்த விஷயம். இதில் ஏதேனும் சந்தேகம் இருந்தால் கேளுங்கள்; சொல்லுகிறேன்.

ஷண்முகநாதன்:—ஒரு சந்தேகம்; அவர் கதவின் வழியாகவே வந்திருக்கலாமே? அவர் எதற்காக முதன் முறையிலேயே சாளரத்தைப் பெயர்த்தார்?

இரங்கநாதன்:—அந்த அறைக்கு வர வேண்டுமானால், பல அறைகளைக் கடந்து வரவேண்டும். இங்கேயானால், தோட்டத்தைக் கடந்ததும் சாளரத்தின் வழியாக உள்ளே நுழைந்து விடலாம்.

ஷண்முகநாதன்:—அவர் அன்றிரவில் வந்தபோது கையில் கத்தி வைத்திருந்தாரே; அஃது எதற்காக? என்னைக் கொல்வதாகவே கருதி வந்திருப்பாரோ?

இரங்கநாதன்:—அப்படி யிருந்தாலும் இருக்கலாம். நாம் எதைக் கண்டோம்? பொன்னுசாமித் தேவர் இன்னதுதான் செய்வாரென்று உறுதியாய்க் கூற என்னால் இயலவில்லை—என்றார்.

இதைக் கேட்ட ஷண்முகநாதன் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்திருப்பா னென்பதை நண்பர்களே ஊகித்துக் கொள்க.

பதினொன்காவது அதிகாரம்

ஜோதிட சிரோமணி—சுப்ராமையர்

ஷண்முகநாதன், மைனர் திருவிளையாடல் செய்யத் தொடங்கி ஒரு வருடமாயிற்று. அதற்குள் சுமார் மூன்று லக்ஷ ரூபாய்களுக்கு அதிகமே அழிந்து விட்டதென்று கூற வேண்டும். வெள்ளையன் செட்டியாருக்கு உண்டான கவலையை நம்மால் வரைப்படுத்திக்

கூற முடியாது. வக்கீல்களிடம் யோஜித்துத் தன் மக னுடைய பிரதாபங்களைப் பல ஆங்கிலப் பத்திரிகைகளிலும், தமிழ்ப் பத்திரிகைகளிலும், ஜில்லாக் கெஜட்டிலும் வெளி யிட்டார். தனித் துண்டுப் பிரசுரங்கள் அச்சிட்டுப் பல இடங்களிலும் வழங்கச் செய்தார். இந் நிகழ்ச்சியைப் பார்த்தாவது இம்மட்டோடு அமைந்து கடன் வாங்காம லாவது போகட்டு மென்று வெள்ளையன் செட்டியார் இப்படிச் செய்தார். ஆனல், நமது சண்முகநாதனுகிய ஷோக் மைனர் இந்த வசம்பில் நிற்கக் கூடியவனில்லை. பல இடங்களில் கடன் வாங்கி மனம் போனவாறு செலவு செய்து கொண்டிருந்தான். மாலை மூன்று மணி யிருக்க லாம். வெள்ளையன் செட்டியார் ஏதோ யோசனை செய்து கொண்டு உட்கூடத்தில் அமர்ந்திருந்தார். அப்பொழுது வாசலில் ஒரு குடு குடுப்பைக்காரன் வந்து, "நல்ல வாக்குப் பறக்குது! நல்ல வாக்குப் பறக்குது!! சேல் சொக்கம்மா! குடு! குடு! குடு!" என்று நல்லவாக்குப் பறக்கப் போவதை உள்ளே யிருப்பவர்க்குத் தெரிவித்தான். அந்தச் சப்தத்தைக் கேட்டு என்னவென்று பார்க்க வந்த வெள்ளையன் செட்டியார், வீட்டின் முகப்பில் ஒருவர் படுத்திருப்பதைக் கண்டு "யார் அங்கே படுத்திருக்கிறது?" என்று கேட்டார்.

அம்மனிதன் :—யாரும் இல்லை.

வெ. செட்டியார் :—ஓய்! இமய மலையைப்போல இருந்து கொண்டு யாரும் இல்லை யென்கிறீர்! என்ன, தன்னை மறந்து பேசுகிறீரா?

அம்மனிதன் :—நான் ஒரு வழிப்போக்கன்.

வெ. செட்டியார் :—அப்படிச் சொல்லும். உம்முடைய ஊர் எது?

அம்மனிதன் :—நான் இருப்பது தெற்கே.

வே. செட்டியார் :—தெற்கே யென்றால் புரியவில்லையே ; விளங்கச் சொல்லும்.

அம்மனிதன் :—திருநெல்வேலிக்கு அப்புறம்.

வே. செட்டியார் :—சேரமாதேவியா ?

அம்மனிதன் :—அதற்கப்புறம்.

வே. செட்டியார் :—அதற்கப்புறமுள்ள கல்லிடைக் குறிச்சியா ?

அம்மனிதன் :—இல்லை. அம்பாசமுத்திரம்.

வே. செட்டியார் :—இதை அப்பொழுதே ஒரே தடவையில் சொல்லித் தொலைத்தா லென்ன ?

அம்மனிதன் :—தங்கட்கு என்னூர் தெரியா தென்று மொத்தமாய்ச் சொன்னேன்.

வே. செட்டியார் :—உம்முடைய தொழி லென்ன ?

அம்மனிதன் :—எனக்குச் சாதகம் பார்க்கத் தெரியும். பரம்பரையாகவே தொழில் அதுதான். தெற்கேயுள்ள ஜமீன்தார்களின் சாதகமெல்லாம் நான்தான் கணித்தேன். என்னுடைய பெருமையை நானே சொல்லிக் கொள்ளப்படாது. எஜமானுக்கு என்ன ஆக வேண்டும்.

வே. செட்டியார் :—உம்முடைய பெயர் என்ன ?

அம்மனிதன் :—ஜோதிட சிரோமணி—சுப்ராமையர்.

வே. செட்டியார் :—என்னுடைய பையன் கொஞ்ச நாளாக ஒரு மாதிரியாகத் திரிகிறான். அவனுடைய ஜாதகத்தைக் கொஞ்சம் பார்த்துச் சொல்லும். ஏதேனும் செலவுக்கு வாங்கிக் கொண்டு போகலாம்.

சுப்ராமையர் :—அதற்கென்ன, பார்ப்போம். நான் வேறூர் இடத்திற்குப் போவதற்காகப் புறப்பட்டு வந்தேன்.

ஜமீன்தார் கிருஷ்ணதேவர் வரும்படி கடிதம் வரைந் திருந்தார். உடனே புறப்பட்டு வந்து பார்க்க, அவர் பல்லாவரத்திற்குப் போயிருக்கிறாராம். மாலையில்தான் வரக்கூடும். வைக்கோற் போரில் மாடு மேய்ந்த விஷய மாய்க் கேஸ் நடந்து அவருடைய பணம் முழுவதும் செலவழிந்து விட்டது. இப்பொழுது சாப்பாட்டுக்கே திண்டாடுகிறார். தம் வீட்டில் ஏதேனும் புதையல் அகப்படுமா என்று ஜோஸ்யம் பார்ப்பதற்காகத்தான் என்னை உடனே புறப்பட்டு வரும்படி எழுதி யிருந் தார். இன்னும் சற்று நேரம் சென்று போய்ப் பார்க்க வேண்டும். புண்ணியவான்! கடனோடி! கடன்; செலவோடு செலவு. குறைந்தது ஐம்பது ரூபாயாவது கொடுப்பார். போகட்டும். சாப்பாட்டு வகையில் ஒன்று சொல்லுங்கள்!

வே. செட்டியார்:—மோர்க்குழம்பு.

சுப்ராமையர்:—சரி; பத்தாமிடத்தில் சனி; இருந்தாலு மென்ன? பாக்கியஸ்தானாதிபதி பார்க்கிறார். ஒன்றுங் குறைவில்லை. சனீஸ்வரனுக்கு மாத்திரம் ஒரு வருடத் திற்கு நெய் விளக்குப் போடவேண்டும். நாலு பிராம ணர்களைக் கூப்பிட்டு, ஸ்வர்ணத்தினால் ஒரு பிள்ளையும், இரண்டு ஜோடி வேஷ்டியும், மூன்று குடைகளும் தானம் பண்ணினால் போதுமானது. இனி மேலே பார்ப்போம். தொகையில் ஒன்று சொல்லுங்கள்!

வே. செட்டியார்:—பதினொன்று.

சுப்ராமையர்:—பதினொன்றும் பதினொன்றும் இருபத் தைந்து; அதில் ஏழு போனால் பத்தொன்பது; சரி; ஒற்றையாய்த்தான் வந்திருக்கிறது. நல்ல யோகம் பலமாய் அடிக்கப் போகிறது!

வே. செட்டியார் :—ஐயரவாள்! நீங்கள் கணக்குக் கூட்டினதும், கழித்ததும் சரியாக இல்லையே? ஜோஸ்யம் பிசகப் போகிறது!

சுப்ராமையர் :—பிசகா! ஒருநாளு மில்லை. இன்று வரையில் என் கணக்குப் பிசகியதில்லை. நான் கணக்கை விட்டு விட்டாலும் அஃது என்னை விடமாட்டாதென்பது எனக்குத் தெரியும். என் பாட்டன் பரம்பரையாய் ஜோஸ்யம் பார்த்தவர்; என் தகப்பன், பரோடா சமஸ்தானத்தில் இருபது வருடம் பஞ்சாங்கம் பார்த்தவர்; நான் ஜோஸ்யத்தில் மஹா நிபுணன்; என் மகன், இராமநாதபுரம் அரண்மனை ஜோஸ்யன்; என் பேரன் ஜோஸ்யம் படித்துக்கொண்டிருக்கிறான். இவ்வளவு பெருமை இருக்க, கணக்குப் பிசகிவிட்டதென்கிறீர்களே!

வே. செட்டியார் :—வாயினால் சொல்லுவது இருக்கட்டும். தயை செய்து, ஜாதகக் குறிப்பைப் பார்த்துச் சொல்ல முடியுமா?

சுப்ராமையர் :—நன்றாய் மேளதாளத்துடன் சொல்லுவேன். என்னுடைய பஞ்சாங்கத்தை வீட்டில் மறந்து வைத்துவிட்டேன். எடுத்து வரவில்லை. இருந்தாலு மென்ன? மாசம், தேதியைச் சொல்லுங்கள்!

வே. செட்டியார் :—பிலவங்க வருடம்; சித்திரை மாசம்; மூன்றும் தேதி.

சுப்ராமையர் :—மூன்று, ஐந்து, எட்டு, ஞாயிறு, சனி, வியாழன், சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி. அதுவும் சரி! உத்தராடம், பூரட்டாதி, திருவாதிரை, ஆயிலியம், ரோகணி, பொருத்தந்தான்!

ஏகாதசி, திரயோதசி ; நிருதி, யமன், அக்னி, குபேரன் செம்ப விசேஷம் ! கிழக்கு, மேற்கு, வடக்கு தெற்கு திசைப் பொருத்தம் கிடைத்தற்கரியது ! நல்ல யோகம் ; இராப்பட்டினி ! செட்டியாரவாள் ! ஒன்று கூடப் பாக்கி யில்லாமல் புரிந்து விட்டது. பைய னுக்குக் கிரகம் கொஞ்சம் போறது. சனி தோஷம் பிடித்தபடியால் இப்படி யாகிவிட்டது. கொஞ்சம் பணம் விசயம் ; உயிருக்குப் பயமே யில்லே. இவற்றை யெல்லாம் நான் சொல்லுகிறே னென்று நினைக்க வேண்டாம். அழுகணிச் சித்தர் பாடலிலே விபர மாகச் சொல்லி யிருக்கிறது. எல்லாம் கடவுள் கிருபை ! காக்கை பாடினியார் சொல்லி யிருக்கிறபடி பரிகாரம் செய்தால் போதுமானது.

வே. செட்டியார் :—ஒன்றும் புரியவில்லேயே ; பெயர் : ஷண் முகநாதன், இராசியை பார்த்துச் சொல்லுங்கள் !

சுப்ராமையர் :—தடை யென்ன ? பேஷாய்ப் பார்க்கலாம். ஷண்முகநாதன் ; ஷ-ண்-மு-க-நா-த-ன்-சரி, ஷ-ஷ-ஷி

" சாவென்ற குற்றெழுத்தின் தன்மை கேளு ;
சத்தியமாய்ச் சொல்லுகிறேன் அப்பா ! நம்பு ;
காவென்றால், பூவென்பான் ; கவிஞ ரின்பக்
கன்னியர்தம் வலைவீழ்ந்து கருத்து மாள்வான் ;
போவென்றால், போதல்செயான் ; புகழில்லாத
போக்கிரிக ளுடனுறவு புரிந்து வாழ்வான் ;
வாவென்றால், வரமாட்டான் ; வஞ்ச மில்லே ;
வலியனும் சனிதிசையின் வண்மையீதாம் "

செட்டியாரவாள் ! இனிப் பாட்டு வேண்டியதில்லே. நடை யாகவே சொல்லுகிறேன் : சனி மகா கெட்டவன். கொடுத் தாலுங் கொடுப்பான் ; கெடுத்தாலுங் கெடுப்பான். இன்னும் இரண்டு மாதத்திற்கு இப்படித் தான் இருக்கும். ஆனால், இன்னும் பணம் விரயமாகும்—என்றார்.

இதைக் கேட்டவுடன் வெள்ளையன் செட்டியார் பாடு வெல வெலத்துப் போய்விட்டது. இவர் அன்று வரையில் கேட்டிராத பாட்டைப் பாடியதுடன், இன்னும் பணம் விரயமாகுமென்று சுப்ராமையர் கூறிவிட்டாராகையால், செட்டியாருடைய துயரம் பன்மடங்கு பெருகிப்போயிற்று. தேகம் ஒரு பக்கம் 'வெடவெட' என்று நடுங்கிக்கொண்டிருந்தது. இதைக் கவனித்த சுப்ராமையர் "அடடா! சும்மா வாயில் வந்ததைச் சொல்லி விட்டோமே; ஏதேனும் சன்மானங் கொடுக்காவிட்டால் என் செய்வது!" என்று கருதியவராய்ச் "செட்டியாரவாள்! எதற்காக ஆயாசப்பட வேண்டும்? பெயர் இராசி பொருத்தமாயில்லாவிட்டால் குற்றமென்ன? மற்ற கிரகங்களெல்லாம் பலமாயிருக்கின்றன. இன்னும் இரண்டு மாசத்திற்குப் பிறகு, செலவழிந்த பணம் திரும்ப வரப் போகின்றது. கவலைப்படாமலிருங்கள்" என்றார். இதைக் கேட்டவுடன் வெள்ளையன் செட்டியாருக்கு மனதிற்குள் கொஞ்சம் சந்தோஷம் வந்துவிட்டபடியால், "ஐயரவாள்! சிறிது ஆகாரம் பார்த்துக் கொண்டு வாருங்கள்! பணம் கொடுக்கிறேன்" என்றார்.

சுப்ராமையர்:—ஆகாரமா! பேசப்படாது. எல்லாம் சந்தியா வந்தனத்திற்குப் பிறகுதான். இப்பொழுதென்ன அவசரம்?

வே. செட்டியார்:—சரி; நம்முடைய பையன் திருவிளையாடல் எப்போது முடியும்?

சுப்ராமையர்:—அதுதான் அப்போதே விளங்கிவிட்டதே! பணம் செலவழிந்து தான் நிற்கும்.

வே. செட்டியார்:—அதை நிறுத்த ஏதேனும் வழியிருக்கிறதா?

சுப்ராமையர் :—பணச் செலவு அதிகம் பிடிக்கும். ஆனால், அவ்விதமே செய்துவிடுவோ மானால், ஒன்றும் பயம் இல்லை. தங்கள் அபிப்பிராயம் எப்படியோ ?

வே. செட்டியார் :-அதைத் தான் விபரமாய்ச் சொல்லுங்கள்.

சுப்ராமையர் :—இந்த மாதிரி எத்தனையோ பேருக்குச் செய்திருக்கிறேன். பிரமாதமான ஏற்பாடு வேண்டிய தில்லை. கும்பம் வைக்கவேண்டும். ஒரு பொன் தாயத்துப் போட்டுக் கொள்ளலாம். பூசைக்காகச் சில சாமான்கள் தேவை. தாயத்தைப் பையன் இடுப்பில் கட்டிவிட வேண்டும். பிறகு தானே எல்லாம் ஒடுங்கிப் போகும். பையன் வழிக்கு வந்துவிடுவான். மீண்டும் கெட்ட செய்கைக்குப் போகாதபடி நான் பூசையில் தடுத்துவிடுகிறேன். சுப்ராமையன் ஜோஸ்யம் எப்படியிருந்ததென்று பிறகு சொல்லுவீர்கள். நான் செய்தது செய்ததுதான். அதற்கு மாற்றேது ? பிசகுவது மாத்திரம் வழக்கமில்லை. கும்பம் வைத்து விட்டால், நான் பகலில் போஜனமே செய்ய மாட்டேன். துஷ்ட கிரகங்களின் சேஷ்டைகளை நான் பொறுத்துக் கொள்ளவேண்டும். வேறு ஆளாக இருந்தால், நான் இதைச் செய்ய ஒப்புக்கொள்ள மாட்டேன். என் செய்வது ? பெரிய இடம் ; சிரமத்தைப் பார்க்க முடியுமா ?

வே. செட்டியார் :—என் சொல்லுக் கிணங்கிப் பையன் தாயத்துக் கட்டிக்கொள்ள வந்தால் போதுமே. பிறகு, பரிகாரம் எதற்கு ? ஒன்றுக்கும் இணங்காத தடிப் பிள்ளையை யல்லவா நான் பெற்றிருக்கிறேன் !

சுப்ராமையர் :—நான் சொல்லிச் சரிபண்ணி விடுகிறேன். பூஜையை ஆரம்பித்து விட்டால், பையன் தானாக வருவான்.

வே. செட்டியார் :—என்னென்ன சாமான்கள் வேண்டும்?

சுப்ராமையர் :—சும்மா, சொற்பச் சாமான்கள். நூறு ரூபா எடையில் ஒரு வெள்ளிக் குடம்—

வே. செட்டியார் :—அது வீட்டிலேயே இருக்கிறது—

சுப்ராமையர் :—பத்துத் தங்கப் பவுன் ; சொர்ண புஷ்பத்துக்கு வெள்ளி ரூபாய் ஐம்பது ; சேலம் ஜரிகைக்கரை வேஷ்டி ஒன்று ; கும்ப வஸ்திரத்துக்காகக் கிளாஸ்கோ ஒன்பதாயிர நம்பர் பீஸ் ஒன்று ; அடியேனுக்குக் கட்டிக் கொள்ளப் பரமகுடி வேஷ்டி இரண்டு ; மற்றப்படி ஊதுவத்தி, பாக்கு, வெற்றிலை, சந்தனம், புஷ்பம் இவைகள் தாம். எல்லாம் இப்பொழுதே வந்துவிட வேண்டும்.

வே. செட்டியார் :—ஏற்பாடு பிரமாதமாயிருக்கிறதே! போகட்டும் ; தயார் செய்து விடுவோம். அப்படியே நடைபெறுமென்பது என்ன நிச்சயம்? எனக்கு நம்பிக்கை வரும் பொருட்டுப் பையனுடைய தற்காலச் செய்கைகளில் சில கூறுங்கள் ; பார்க்கலாம்.

சுப்ராமையர் :—என்ன, ஐயா! இவ்வளவு அவ நம்பிக்கைப் படுகிறீர்கள். இடையபட்டி, ஜமீன்தார் புத்திரனுக்கும் இப்படித்தான் இருந்தது. நான்தான் மகா கும்பம் வைத்து எல்லாக் காரியங்களும் சேய்தேன். இப்போது அவருடைய பையன் நல்லொழுக்கமுடையவனாகி, ஜமீன் காரியங்களைப் பொறுத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறான். நான் எதற்காக அவற்றையெல்லாம் பேசவேண்டும்? சம்மதமிருந்தால் செய்யுங்கள் ; இல்லாவிட்டால் போய்விடுகிறேன்.

வே. செட்டியார் :—ஐயா, கோபித்துக் கொள்ள வேண்டாம். கொஞ்சம் சொல்லுங்கள். மாதிரி பார்ப்பதற்குத் தானே! பிடிவாதம் செய்யாதீர்கள்.

சுப்ராமையர்:—" சரி ; கொஞ்சம் சொல்லுகிறேன் ; கேளுங்கள். தாராளமாகக் கடன் வாங்கிச் செலவு செய்வான் ; தோட்டத்தை ஈடு வைத்துக் குதிரை வண்டி வாங்குவான் ; ஒரு மாதத்திற்கு மூன் நிலத்தை ஈடு வைத்து மோட்டார் வண்டி வாங்கவில்லையா ? இன்னும் எத்தனை சொல்லவேண்டும் ? என்னுடைய உபாசனை தெய்வத்தைச் சாமான்யமாகக் கருதவேண்டாம். எந்த இரகசியத்தையும் அந்தத் தெய்வத்தின் உதவியால் அடியோடு பெயர்த்துச் சொல்லி விடுவேன் !"

என்று கூறியவுடன் வெள்ளையன் செட்டியாருக்குத் திருப்தி யுண்டாகிவிட்டது. உடனே கணக்குப் பிள்ளையை அழைத்துச் சுப்ராமையர் கூறியபடி சாமான்களெல்லாம் தயார் செய்து கொடுக்கும்படி கட்டளை யிட்டார். சாமான்கள் வந்தவுடன் சுப்ராமையர், 'தான் பூஜை செய்வதாயிருந்தால் இயந்திரம் போடவேண்டு மென்றும், தன்னுடைய ஊருக்குப் போய்த் தான் காரிய மாகவேண்டும்' என்றும் பிடிவாதமாய்க் கூறித் தன் விலாசத்தையும் எழுதிக் கொடுத்து விட்டுச் சென்றார். போகும் போது, தன்னுடைய பூஜை முடிந்தவுடன், அழிந்துபோன செல்வ மெல்லாம் திரும்ப வந்துவிடுமென்றும், பையன் ஒழுங்காக இருப்பானென்றும், பத்துத் தினங்கட்குள் தாயத்து அனுப்புவதாயும், கும்பத்தை விரைவில் தொடங்கிச் செய்வதாயும் சொன்ன ராகையால், வெள்ளையன் செட்டியார் பூரிப்படைந்தவராய், ரூபாய் நூறு சன்மானம் பண்ணி யனுப்பியதுடன், தாயத்து வரும் இன்பமான நாளை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். இவ்விதம் ஜோஸ்யரென்று சொல்லிக் கொள்வோர் பலர் உலகத்தை வஞ்சிப்பதில் வியப்பு ஒன்றுமில்லை. வெள்ளையன் செட்டியாரைப் போல ஜோஸ்யத்திலும், மந்திரத்திலும்

குருட்டு நம்பிக்கை வைப்பவர்கள் இருக்கிற வரையில், சுப்ராமையரைப் போன்ற இறகோட்டிகள் புறப்பட்டுக் கொண்டு தான் இருப்பார்கள். இதனால் நாம் ஜோஸ்யத்தைப் பழித்ததாக நண்பர்கள் கருதிவிடக் கூடாது. உண்மையான ஜோதிடர்கள் ஆங்காங்குச் சிலருளர். மக்கள் அறிவில்லாமல் யார் சொன்ன போதிலும் நம்பும் இயல்புடையவர்களா யிருக்கிறார்கள்! வீட்டு வாயிலில் தொட்டியன் வந்தால், அவனிடம் ஜோஸ்யம் கேட்போர் பலருண்டு. ஆனு, ஆவன்னாத் தெரியாதவர்களே யெல்லாம் ஜோஸ்யரெனக் கருதிப் பணத்தையும் இழந்து, முட்டாள்ப் பட்டம் பெறுவோர் பலரை இப்பொழுதும் காணலாம். ஆகவே, அவர்கள் தொகுதியில் வைத்து எண்ணத் தகுந்த வெள்ளையன் செட்டியார், பத்து நாட்கள் வரையில் தாயத்து வருமென்று எதிர்பார்த்தார்; ஒரு மாதம் பார்த்தார்; இரண்டு மாசம் பார்த்தார். தாயத்தாவது, சுப்ராமையராவது வந்து சேரவில்லை. வெள்ளையன் செட்டியாருக்குக் கட்டுக் கடங்காத கோபம் பொங்கிற்று. என் செய்வது! சந்தோஷ மிகுதியில், எழுதித் தந்த விலாசம் சரியா என்று கூடக் கவனிக்கவில்லை. விலாசமெழுதப்பட்டிருந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ள ஊர் உலகத்திலேயே இல்லை. சுப்ராமையர் போனவர் போனவர்தான்! ஒரு கால் இன்னும் தாயத்துச் செய்து முடியவில்லையோ, என்னவோ நமக்குத் தெரியாது. அவரைப் பற்றிய மட்டில் அவர் புத்திசாலிதான்; ஏழுங்கானவர் தான். வெள்ளையன் செட்டியாரைச் சந்தித்தால், தாயத்தையாவது, அல்லது பணத்தையாவது கொடுத்து விடுவார். அதில் சந்தேகமே கிடையாது. ஆனல், சந்திப்பது எப்பொழுது?

பதினைந்தாவது அதிகாரம்

மு டி வு ரை

மக்களின் அறிவு தீய வழியினுஞ் செல்கின்றது; நல் வழியினுஞ் செல்கின்றது. தீய வழியிற் செல்லுவது மிகுதியோ, நல்வழியிற் செல்வது மிகுதியோ என்று பகுத்துப் பார்த்தால், பெரும்பாலும் மாந்தர் செய்கைகளெல்லாம் தீ நெறிக் கண்ணேதான் முனைத்துப் போகின்றன. பாருங்கள்! ஒருவன் ஒருநாள் முழுவதும் வருந்தி உழைத்துக் கூலியாகப் பெற்ற நான்கு பணத்தில் மூன்று பணத்தைக் கள்ளுக் கடையிற் கொடுத்துக் கள்ளை வாங்கிப் பருகி, அறிவு வேறுபட்டு வீட்டிற்போய் மனைவி மக்களுடன் கலகம் விளைவித்து, அவர்கள் மிச்சமான ஒரு பணத்தைக் கொண்டு ஆக்கிய உணவையும் தானே உண்டுவிட்டு அவர்களைப் பசியாலும், பட்டினியாலும் வருந்த விட்டுப் போகின்றான்! ஒருவன் தான் தேடும் பொருளை வேசி வீட்டிற் கொண்டுபோய்ச் செலவிட்டு, மனைவி மக்களைத் தெருவில் அலையும்படி செய்து, நோய் வாய்ப்பட்டு, வறுமையால் நொந்து இறக்கிறான்! ஒருவன் சூதாடிப் பொருள் முழுவதையும் செலவிடுகிறான்! ஒருவன் பிறரை ஏமாற்றிப் பொருளீட்டி வாழ நினைக்கிறான்! ஒருவன் திருட முயல்கிறான்! ஒருவன் கொலை புரிந்து காலங் கழிக்க விரும்புகிறான்! ஒருவன் பொய்ச் சொற்கள் பேசி காளைக் கடத்துகிறான்! ஒருவன் பொருளுடையார் நேசம் பெறுவதற்காக, அவர் வீட்டுத் தலைக்கடை நாய்போல் அவரிடம் காத்திருந்து, அவர் விரும்பும் வண்ணம் இன்சொற் பேசி வாலை வீணாக்குகிறான்! ஒருவன் நாடகசாலைக்குப்

போய் விளையாட்டயர்ந்து காலங் கழிக்கிறான்! ஒருவன் பல ஊர்கட்குச் சென்று பலரோடு உண்டாட்டிற் காலங்கழிக் கிறான்! இன்னும் மக்கள் தம் வாணாளிற் செய்யும் தீயசெயல் கள் எண்ணிறந்தன! தமது நெற்றித் தண்ணீர் நிலத்தில் வீழ நல்வழியில் பொருள் தேடிப் பொருளைப் பகுத்து, இரப் போர்க்கு மனங் களிந்து கொடுத்துத் தாமும் துய்த்து வாழ் வோர் உலகில் மிகச் சிலரினுஞ் சிலரே. மேலும் இக் காலத் தில் புது நாகரிகத்தைப் பின் பற்றிய பெரும்பாலாரும், வேறுமொழி கற்றவர்களும் மன அடக்கம் கொஞ்சமேனும் இல்லாமலும், அறிவையும் ஒழுக்கத்தையும் வளரச் செய் யாமலும், ஏழை எளியவர்கட்கும் குருடு கொண்டிகட்கும் எள்ளளவேனும் உதவி செய்யாமலும் நெஞ்சம் பாறைபட்டுச் செய்யும் பயனற்ற செயல்களும், ஆரவாரங்களும், தீமை களும் சொல்லளவில் அடங்கா. எண்ணிக்கைக்கு அகப் படாமற் பெருகி யிருக்கின்ற மக்கட் பரப்பில் இத்தகை யோர் சிலரை யாயினும் எண்ணிச் சொல்வதற்கு இட மில் லாமற் போகிற தென்றால், மக்கள் வாழ்க்கை எவ்வளவு இழிந்த நிலைமையி லிருக்கின்ற தென்பதனை வேறு எடுத் துப் பேசுதலும் வேண்டுமோ? தம்மிடத்துள்ள வியக்கத் தக்க ஆற்றல்களை யெல்லாம் மக்கள் இங்ஙனம் வீண் செலவு செய்து விடுவாராயின், அவர்கள் உயர்ந்த வசிகர சக்தியினை அடைதல் எங்ஙனங் கூடும்?

ஷண்முகநாதனுடைய கெட்ட செய்கைகளைக் குறைக்க வேண்டு மென்று வெள்ளையன் செட்டியார் செய்த முயற்சி யாவும் பயன் பெற வில்லை; ஆகவே, ஒரு பைசாக்கூட ஷண்முகநாதனுக்குக் கொடுக்கக் கூடாதென்று சுந்தரேசன் செட்டியாருக்குக் கண்டிப்பான உத்தரவு கொடுத்து விட் டார். ஷண்முகநாதன் பாடு திண்டாட்டமாக முடிந்தது. தாராளமாகச் செலவு செய்துகொண்டிருந்த அவன், திடீ

சென்று பணவருவாய் நின்று விட்டபடியால், வகை யறி யாது திகைத்தான். என்றாலும், செலவு செய்ய்ாதிருக்கவும் இயல வில்லை. சிலருடைய சிபாரிசின் உதவியால் கொஞ்சத் தொகை கடன் வாங்கிச் செலவு செய்தான். இவ்விதம் நாட்களும், மாதங்களும் சென்று கொண்டிருந்தன.

கடன் கொடுத்த பலரும் நெருக்கத் தொடங்கினர். சிலர் தாது விட்டும், சிலர் பஞ்சாயத்தார் மூலமாகவும், பணத்தை உடனே அனுப்பும்படி கேட்டார்கள்; சிலர் பதிவு செய்யப்பட்ட கட்டளை (Notice) மூலமாய், ஒரு வாரத்திற்குள் தங்கள் பணத்தை அனுப்ப வேண்டு மென்று கேட்டார்கள்; சிலர் மூன்று நாள் தவணையில் அசலும் வட்டியும் கிடைக்க வேண்டு மென்று கேட்டார்கள்; சிலர் பன்னிரண்டு மணி நேரத்திற்குள் பணமும், வட்டியும், கட்டளைச் செலவும் கொண்டு வந்து கணக்கைத் தீர்த்துப் பற்றுச் சீட்டுப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டார்கள்; சிலர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து அறிக்கை அனுப்பி விட்டார்கள். இவ்வளவு தொந்தரவுகட்குட்பட்ட ஷண் முகநாதன், தப்பித்துக்கொள்ளும் வழி யறியாமல் தவித் தான்; பலநாள் தன்னுடன் பழகித் தன்னுடைய பணங் களை அபகரித்துக் கொண்ட நண்பர் ஒவ்வொருவரிடமும் போய், தன்னுடைய தற்கால நிலைமையைக் கூறி வருந் தினான்; அவர்கள் இவனது ஆற்றுமைக்கு வருந்துகிறவர் கள் போல நடித்து "எல்லாம் திருவருள்! தங்கட்கும் இந் தத் துன்பம் வருமென்று யாரேனும் எதிர் பார்த்திருப்பார் களா? என் செய்வது! வரும் விதி வழியில் தங்குமா?" என்று வேதாந்தப் பிரசங்கம் செய்யத் தொடங்கினரன்றி, ஒருவராவது பண உதவி செய்து அவனுடைய துன்பத்தை நீக்க முன்வர வில்லை. இந் நிலையில் நமது ஷோக்மைனர்

ஷண்முகநாதனுடைய மனம் எப்படித் தவித்திருக்கும் என்பதை நண்பர்களே ஊகித்துக் கொள்ளுதல் நலம்.

கிடங்குத் தெருவில் சுந்தர்லால் என்ற வங்கநாட்டார் ஒருவர் பல நாட்களாக வியாபாரம் செய்து வருகின்றார். அவர் நூறு ரூபா கொடுத்து, ஐநூறு ரூபாய்க்கு எழுதி வாங்கிக் கொள்வதில் சிறந்த நிபுணர். சென்னையிலுள்ள பல மைனர்கள் அவரிடம் போய்ப் பணம் வாங்குவதுண்டு. ஷண்முகநாதன் அவரிடம் ஆறுயிரம் ரூபாய்கள் கடன் வாங்கி யிருந்தான். அவருக்கு ஷண்முகநாதனுடைய நிலைமையை யாரோ பாதேசித் தபால் மூலம் தெரிவித்து விட்டனர். உடனே அவர் பதறியடித்துக்கொண்டு, வழக்குத் தொடர்ந்து, அதை வெளிப்படுத்தாமலே வாரண்டிற்கு உத்தரவு வாங்கிவிட்டார். ஆனாலும் திடீரென்று போய்ப் பிடிக்கவும் மனம் துணிய வில்லை. ஆகவே, 'தாம் மறைவாக நின்று சேவகனைப் போய்ப் பிடிக்கும்படி செய்வோம்' என்று தீர்மானித்தவராய்ச் சேவகனைத் தேடிக்கொண்டு சென்றார்.

எழும்பூர் புகைவண்டிச் சாலைக்கு அருகில் 'சக்ரவர்த்தி ஹோட்டல்' என்னும் பெயருடைய உணவுச்சாலை ஒன்றிருக்கின்றது. அக் கட்டிடத்தினுள் விரைவாக ஒரு மகம்மதியர் நுழைந்தார். அவர் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து "இன்று கடன் கேட்காதீர்கள்!" என்று எழுதப்பட்டிருந்த பலகையை மிகக் கஷ்டப்பட்டுப் படித்துக் கொண்டிருந்தார். அவரைக் கண்ட ஒரு பிராமணர் ஓடி வந்து "என்ன வேண்டும்?" என்று கேட்டார். அவர் வேண்டியவைகளைச் சொன்னார். பிராமணர் அவைகளைக் கொண்டு வந்து வைத்தவுடன் மகம்மதியர் சாப்பிடத் தொடங்கினார். அவ்வளவுதான் தாமதம்; பிராமணர் முதலாளிக்குக் கேட்

கும் வண்ணம் "சாய்புவுக்கு ஒரு ரூபா எட்டணா!" என்று கூவினர். இவ்விதம் அவர் கூவிய சப்தம் முதலாளியின் காதைத் துளைத்து, உட்கார்ந்திருப்பவர் காதுகளே யெல்லாம் பிய்த்துக்கொண்டு போயிற்று. வெளியே தெருவில் நடந்து செல்பவர் காதுகளிலும், பக்கத்திலுள்ள புகைவண்டிப் பேட்டையி லிருப்பவர்கட்கும், கேட்டது. ஒருவர் உண்ட உணவின் விலையை இவ்விதம் ஐந்து வீட்டிற் கப்பாலுங் கேட்கும்படி கூவுவது அவ்வளவு நாகரீகம் இல்லை யென்று வேலைக்காரர் அறிந்து கொள்ளவும் இல்லை; அதைத் திருத்த முதலாளிக்கும் அறிவில்லை, இங்ஙனம் கூவியதைக் கேட்ட மகம்மதியராகிய சுல்தான் கோபங் கொண்டவராய், "ஓய்! என்ன கத்தான்! இவன் இவ்வளவு சாப்பிடவில்லை என்கிறான்!" என்று வழக்குச் சொல்லத் தொடங்கினர். உணவுச்சாலை முதலாளிக்கும், சாய்புவுக்கும் பெருத்த வாக்கு வாதம் நடந்து கொண்டிருந்தது. அவ்வமயத்தில் சாய்பைத் தேடிக்கொண்டு வந்த சுந்தர்லால், வழக்கைத் தீர்த்துத் தம்முடைய பையிலிருந்து ஒரு ரூபா எட்டணாக் கொடுத்துவிட்டுச் சுல்தான் சாய்பை நோக்கி, "ஷண்முகநாதன் செட்டியாருடைய வாரண்ட் உம்மிடம் இருக்கிறதா?" என்று கேட்டார். சுல்தான் சாயபு, அவர் சற்றுமுன் செய்த உதவியைக்கூட மறந்து, தம்முடைய புகையிலைக் கத்தை போல் விளங்கும் மீசையை முறுக்கிக்கொண்டு, "உமக்கு என்ன முடியணும்? இவன் அவசரமா யிருக்கான்" என்றார்.

சுந்தர்லால் :—"ஷண்முகநாதன் செட்டியாருடைய வாரண்ட் உம்மிடம் வந்திருக்கிறதா?" என்று முன் கேட்டதையே மறுபடியுங் கேட்டார்.

சுல்தான் :—ஓ, அதுவா! நம்மிடந்தான் இருக்கி.

சுந்தர்லால் :—அந்த வழக்கிற்குரியவன் நான்தான்.

சுல்தான் :—ரொம்ப சரி ; அதற்கு நம்பள்கு என்ன செய்ய சொல்ரான் ?

சுந்தர்லால் :—பிரதிவாதி பெரும் பணக்காரனுடைய பிள்ளை; இரகசியமாய்க் காரியத்தை முடித்துவிட வேண்டும். தெரிகிறதா ? இல்லாவிட்டால், ஆள் மறைந்து கொள்வான். பிறகு கஷ்டமாய் முடியும்.

சுல்தான் :—நீ என்ன சொல்றது ? இவன் எல்லாம் தெரிஞ்சிக்குவான். கோட்லே சம்பளம் நம்பள்கு கொடுக்கிறங்க ; இவன் வாங்குறாங்க. நீங்கள்கள் அவசரமாய்க் கூப்பிட்டா, நம்பள்கு வரமாட்டாங்க.

சுந்தர்லால் :—என்ன, ஐயா, இப்படிச் சொல்லுகிறீர்கள் ! தயை செய்யுங்கள். உடனே போகாவிட்டால், ஆசாமியைக் காண முடியாது.

சுல்தான் :—சும்மா என் இப்பிடி கத்ரான் ? நம்பள்கு சாஸ்தி வேலே இருக்கிறாங்கோ. இப்ப வர மாட்டான்.

சுந்தர்லால் :—சாய்பவான் ! கொஞ்சம் கவனிக்கணும். அவசரமான வேலே. நான் கூட உங்களுடன் வரமாட்டேன். தூர நின்று பேர்வழியைக் காட்டி விடுகிறேன். வாருங்கள் !

சுல்தான் :—நம்பள்கு அசாமியைத் தெரியாதிண்ணு நீங்கள்கள் நினைக்கிறன். இவன் நன்ரய்த் தெரிஞ்சுக்குவான். இவன் இப்போது போவான் ; ஆசாமி ஆப்பிட்டால் பிடிச்சி வருவான் ; இல்லாட்டிப்போனு ஆப்பிடலேன்னு சம்மனே திரும்பி அனுப்புவான். நம்பள் எப்போதும் சட்டத்து மேலே நடப்போம், தெரியுதா?

சுந்தர்லால் :—சாய்பவாள் ! ஒரே பிடிவாதமாய்ப் பேசப்படாது. பெரிய உத்தியோகஸ்தர்கள் கூட நான்

அவசர மென்றதை ஏற்றுக்கொண்டு உடனே வாரண்டிற்கு உத்தரவு தந்து விட்டார்கள். உங்கள் மனசு கொஞ்சங்கூட இரங்க வில்லே.

சுல்தான்:—ஏன் பின்னிப் பின்னிப் பேசுறான்? பெரிய உத்தியோகஸ்தன் சாஸ்தி படிச்சான்; சாஸ்தி சம்பளம் வாங்குறான்; சாஸ்தி எரங்குறான். நம்பள்கு கொஞ்சம் படிச்சான்; கொஞ்சம் பணம் வாங்குறான்; கொஞ்சம் மனசு எரங்குவான். நம்பள்கு பச்சை நோட்டு ஒண்டு குடுத்தா ரொம்ப ரொம்ப எரங்குவான்—என்று கூறினார்.

இதைக் கேட்ட சுந்தர்லால் அவர் கேட்டபடி நூறு ரூபா கொடுத்து அழைத்துக்கொண்டு சென்றார். அதன் பிறகு, சுல்தான் சாயபு மிகவும் விரைவாகச் சென்று, 'சுகுணா விலாச'த்தினுட் புகுந்து ஷண்முகநாதனை வாரண்டில் பிடித்துக்கொண்டு சென்றார்.

இத் தகைய பரிதாபகரமான செய்தி சென்னை முழுவதும் காட்டுத் தீப் போலப் பரவி விட்டது. இதைக் கேள்வியுற்ற சுந்தரேசன் செட்டியார், ஓட்டமாகப் போய் வெள்ளையன் செட்டியாரைக் கண்டு, "கேட்டீர்களா, சங்கதியை? ஷண்முகநாதன் கடனுக்காக வாரண்டில் பிடிபட்டிருக்கிறானும். என்ன செய்வார்களோ தெரியவில்லே!" என்றார். உடனே இருவரும் கூடி ஒரு வழக்கறிஞ (வக்கீல்) ரிடம் போய் யோஜித்துச் சிவில் வாரண்டிற்குச் செய்யக் கூடிய பரிகாரத்தையுந் தெரிந்துகொண்டு, ஷண்முகநாதனை மீட்டு வருவதற்காகக் கொஞ்சத் தொகை அதாவது சுமார் ஆயிரம் ரூபாய் எடுத்துக்கொண்டு நீதிமன்றத்திற்குப் புறப்டுச் சென்றார். ஷண்முகநாதன் வெளியில் கடன் வாங்கியிருப்பது எத்தனையோ ஆயிரம்! வெள்ளையன் செட்டியார்

கடன் தீர்க்க எடுத்துச் சென்றிருப்பது ஒரு ஆயிரம்! 'சிறு பையன்; ஆயிரத்திற்குள்ளாகவே கடன் வாங்கி யிருப்பான்' என்பது வெள்ளையன் செட்டியார் கருத்து. நீதி மன்றத்திற்குப் போய் விசாரிக்க, ஆறாயிரம் ரூபாய் என்று தெரிந்தது. மறுபடியும் வீட்டிற்குப் போய் ஐயாயிரம் ரூபாய் எடுத்துக்கொண்டு வந்தார். அப்போது மணி ஐந்தாகி விட்டபடியால், மன்றம் கலைந்து போய்விட்டது. மறு நாள் காலையிலேயே மீட்க வேண்டுமென்று கருதிக்கொண்டு வெள்ளையன் செட்டியார் அளவற்ற விசனத்துடன் வீட்டிற்குச் சென்றார்.

காலை எட்டு மணி ஆயிற்று. நீதிமன்றம் திறப்பதற்கு முன்னேயே கட்சிக்காரர்கள் வந்து, கச்சேரியினுட் புறத்திலுள்ள உணவுச்சாலையில் சிற்றுண்டி யருந்தி விட்டு, வெற்றிலையும் கையுமாக அங்குள்ள மரத்தின் அடியில் அமர்ந்திருந்தனர். சேவகர்கள் ஒவ்வொருவராகக் குடித்துணி போட்டு, டவாலியைக் கட்கத்தில் வைத்துக்கொண்டு, தலையில் ஒரு சிறு துணியால் முண்டாசு கட்டிய வண்ணம் வந்தார்கள். பிறகு குமாஸ்தாக்கள் அவசரமாய்த் தங்கள் உடுப்பைத் தரித்து, தம் வீட்டு வாயிலில் சட்டைப் பொத்தான் மாட்டுவதற்குத் தொடங்கியவர்கள், நீதிமன்றத்திற்கு வந்து படியேறுவதற்கும், சட்டைப் பொத்தான் மாட்டி முடிவதற்கும் குமாஸ்தாக்களுக்கு நேரம் சரியாயிருந்தது. சிறிது நேரத்தில் நீதிமன்றத் தலைவர் (Judge) இட்டைக் குதிரை பூட்டிய வண்டியில் வந்து இறங்கினர்.

அவர் போய் ஆசனத்தில் அமர்ந்ததும் வெள்ளையன் செட்டியார், தன் மகன் ஷண்முகநாதன் கடனுக்காக வாரண்டில் பிடிபட்டு வந்திருப்பதால், "தொகையைக் கட்டி விடுகிறேன்: பையனை விட்டுவிட வேண்டும்" என்று

கூறித் தாம் எடுத்துவந்த ரூபாய் ஆறுயிரத்தையும் மேஜையில் வைத்தார். அவ்வேண்டுகோள் நீதிமன்றத்தாரால் அங்கீகரிக்கப் பெற்றது. ஷண்முகநாதன் உடனே மீட்கப்பட்டான்.

* * * *

கௌரவம், அகௌரவம், நன்மை, தீமை, அவசியம், அனுவசியம், இன்பம், துன்பம் முதலிய யாவும் சொன்மாத்திரையில் வேறுபட்டிருக்கின்றனவே யொழிய, உண்மையான கருத்து ஒன்றே என்பது அறிஞர் கொள்கை. நம்முடைய சாதாரண அறிவைக்கொண்டு அவற்றைத் தெரிந்து கொள்வோ மென்பது இயலாத காரியம். மனதை ஒரு நிலைப்படுத்தி அவைகளைக் கவனித்தால் விளங்கும். இவ்வுலகம் சம்பந்தப்பட்ட மட்டில் மேற்கண்ட பொருள்கள் வேறு வேறுகத் தோன்றுமாயினும், நம்முடைய உயிர் சம்பந்தப்பட்ட மட்டில் ஒன்றுகவேதான் தோன்றும். ஆகையால், மனிதர்கள் இவைகளை வேறு விதமான கருத்துடன் கூடியவைக ளென்று கருதுவார்களாயினும், அவைகளைப் பற்றிச் சிறந்த அறிஞர்கள் கருத்து வேறு. செல்வமுடையவனுக இருப்பது கௌரவமெனவும், வறுமையுடையவனுக இருப்பது அகௌரவமெனவும் எண்ணுவது பேதைமை என்றும், கல்யாண குணங்கள் நிறைந்த கருணையங் கடலாகிய கடவுளை ஏமாற்றினே மென்றெண்ணுதல் தான் அகௌரவதை என்றும், அவரை ஏமாற்றுவதென்பது நம்முடைய சக்தியிலில்லை என்றும் அறிந்து கொண்டோ மாயின், அதுவே கௌரவம் என்றும், நம்முடைய வாழ்நாட்களில் ஏற்படும் ஒவ்வொன்றும் நம்முடைய நன்மைக்கே இறைவனால் அளிக்கப்பட்டிருக்கின்றன எனவும், 'நாம் இப்புவியில் ஏன் உண்டானேம்? உண்டாவதற்கு முன் எந்த விதமாக இருந்தோம்? கடைசி

யில் எந்த விதமாக இருப்போம்?' என்பதையும், 'இவ் வளவு காரியங்கட்கும் ஆதிகாரணர் யார்' என்பதையும் அறிந்து கொள்ள வேண்டியதே அவசிய மென்றும், மற்றவை யனைத்தும் அவசிய மென்றும், எவருடைய உண்மையான வடிவத்தையும் குணங்களையும் வேதங்கள் கூட முற்றும் சொல்லுவதற்கு முடியாமல் திகைக்கின் றனவோ, அவருடைய—கடவுளுடைய—அருட் கடலைக் கண்டு மகிழ்வதே இன்பமென்றும், அதை உணர்ந்தவருக் குத் துன்பமே இடையாது என்றும் துணிந்து கூறத் தடை யாது?

நண்பர்களே! இப்பொழுது நமது ஷண்முகநாதனை நீங்கள் சென்னையில் பார்க்க முடியாது; ஏனெனில், அவனுடைய கடன்களை யெல்லாம் தீர்த்த பிறகு வெள்ளை யன் செட்டியார் ஷண்முகநாதனையும், வள்ளியம்மையும் அழைத்துக்கொண்டு சரபோஜி ராஜபுரத்திற்கு வந்து விட் டார். அவன் தன்னுடைய வாழ்நாட்களில்—சில நாட் களில்—நடந்த ஒவ்வொன்றையும் சிந்தித்துப் பார்த்தான்; இறுதியாக உலகத்தினுடைய கௌரவங்கள் கோணலாகப் போய்க்கொண் டிருக்கின்றன என்றும், அதனால் தான் கொஞ்சு சுமையும், பணவிரயமும், வீண் ஆடம்பரங்களு மாக இருக்கிறதன்றி, இகபரங்கட்கு அவற்றுல் யாதேனும் பயன் இல்லை என்றும் உணர்ந்தான். ஏதோ ஒரு சக்தி அவனுடைய மனசில் தோன்றி, "ஏ, அறிவிலி! உன்னை அறிந்த பல ஊர்களிலும், உன்னுடன் பழகிய ஒவ்வொரு வரையும் உதவி நாடிச் சென்றாய்; எவனுவது—எந்தப் பெரிய மனிதனுவது—எந்த நண்பனுவது—உன்னை எட்டிப் பார்த்தானு? வா என்று அழைத்தானு? எப்போது நீ கையில் பணம் இல்லாமல் இருந்தாயோ, அப்போதே உன் னுடைய வாழ்வு, 'கோடைவள்ளல்' என நீ பெற்ற பட்

டத்தின் பெருமை முதலிய யாவும் பெருமை இழந்து போயின. இனியாவது நன்னெறியில் நடந்து கொள்!" எனக் கூறுவது போலிருந்தது. இங்ஙனம் இவ்வுலகின் இயல்பை அநுபவத்தி லுணர்ந்த ஷண்முகதாதன், அது முதல் சிறந்த யோக்கியனாக விளங்கலானான்.

* * * *

சரபோஜிராஜபுரத்தில் அருணாசலம் செட்டியார் என்றால் அழுத பிள்ளைகூட வாயை மூடிக்கொள்ளும்; அவ்வளவு நல்லவர். அவர் கொஞ்ச நாட்களாகக் காபி சாப்பிடும் வழக்கத்தையே விட்டு விட்டார். காபி சாப்பிட்டாலும் அவருக்குச் சரிப்படுவதில்லை. அவர் தொந்தி சரியப் பெற்று மதுரைக் கோவிற் பெரிய பிள்ளையார் போலிருப்பவராதலால், இட்லியில் ஒரு இருபதும், பத்துச் சேர் காபியும் சாப்பிடுவார்; அப்படிச் சாப்பிட்டாலும் அது பாதி ஆகாரமாகவே அவருக்குத் தோன்றும். அவர் எவ்வளவு ரூபாய் வேண்டுமானாலும் தருகிறே னென்றாயினும், உணவுச் சாலைக்காரர்கள் அவருக்கு ஒன்றுமே கொடுப்பதில்லை என்று ஒத்துழையாமையை மேற்கொண்டு விட்டனர். செட்டியாரும் பார்த்தார்; பெருங் கஷ்டமாகவே யிருந்தது. இனிக் காபி சாப்பிடுவதில்லை யென்று நீராகாரம் சாப்பிடும் வழக்கத்தி லிறங்கிவிட்டார். காலை ஒன்பது மணி ஆயிற்று. அருணாசலம் செட்டியார் வழக்கம்போல ஆகாரம் பார்த்துக் கொண்டு வெள்ளையன் செட்டியார் வீட்டை நோக்கிச் சென்றார்.

அவருக்கு ஆண் குழந்தை இரண்டும், பெண் குழந்தை மூன்றும் உண்டு. கடைசிக்குழந்தையாகிய தெய்வயானையை நமது ஷண்முகநாதனுக்குக் கொடுப்பதாக அவருக்கு ஒரு எண்ணம் தோன்றியது. வெள்ளையன் செட்டியாரிடம்

போய்க் கலந்து பேசி, கலியாணத்திற்கு நாள் வைத்துக் கொண்டு திரும்பினர். கலியாண நாளில் கணக்கற்ற ஜனங்கள் வந்து கூடிவிட்டனர். கன்னிகாதானம் ஆரம்பமாகிப் புரோ ஹிதர் ஹோமம் வளர்த்து மந்திரங்களை உச்சரித்துக்கொண் டிருந்தார். எல்லாச் சடங்குகளும் முடிந்தவுடன் ஷண்முக நாதன், தெய்வயானைக்குத் திருமாங்கல்யம் பூனைந்தான்.

அன்றையதினம் சாப்பாடு மிக விமரிசையாக யாவருக் கும் பரிமாரப்பட்டது. ஆனல், அருணுசலம் செட்டியார் எப்பொழுது சாப்பிட்டாலும் ஒருவரும் இல்லாத இடத் தில் தனியே அமர்ந்து, கதவைச் சாத்திக் கொண்டு சாப்பிடுதல் வழக்கம். கலியாணச் சமயமாகையால் அப்படி வசதி செய்துகொள்ள முடியவில்லை. மூன்ருவது நாள் மாலை எட்டு மணிக்கெல்லாம் ஊர் வலம் தொடங்கிற்று. கான்த விளக்குகள் வரிசையாய்ப் போய்க் கொண்டிருந்தன. உயர்ந்த குதிரை பூட்டிய சாரட்டில் அலங்கரிக்கப் பெற்ற புட்பப்பல்லக்கில் மணமக்கள் இருவரும் அமர்ந்திருந்தனர். பலர் மேளக்கச்சேரி கேட்கப் பெருங் கூட்டமாகக் கூடி யிருந்தனர். ஜனக்கூட்டத்தைக் கண்டவுடன் மேளக்காரன் அபரிமிதமாக இராகங்களை வீசலானன். தவில்காரன் தீர் மானம் கொடுக்கத் தொடங்கினன். அவன் ஒரு தீர்மானம் வைத்து முடிப்பதற்குள் அவன் தலைக்குடுமி ஐந்து முறை அவிழ்ந்து, ஈத சபையில் பேய் கூத்தாடுவது போலிருந் தது. நாகஸ்வரக்காரன், ஜனங்கள் இயந்திரங்களைப் போல விடாமல் தலையாட்டங் கொள்வதைக் கண்டு பல ரோக மூலிகைகளைக் கஷ்டப்பட்டு ஊதி ஜனங்களை நடக்க வொட் டாமல் தடுத்துக்கொண் டிருந்தான். இம்மாதிரி அளவுக்கு மேல் காலதாமதமாகி விட்டபடியால், ஊர் வலத்தில் வந்த ஜனங்கட்குக் கால் வலி எடுத்துவிட்டது. கால் வலிக்கும் வரையில் மேளக்கச்சேரி மிகுந்த இரஸமாக இருந்தது.

கால்வலி யெடுத்தவுடன் மேளக்கச்சேரி நன்று யில்லை யென்று அவரவர் தங்கள் தங்கள் வீட்டிற்குச் சென்றார்கள். காந்த விளக்கைத் தூக்கிக்கொண்டு நின்றவர்கள், 'மேளக் கச்சேரியும் நிற்கப் போகிறதில்லை; ஊர் வலமும் வீடு வரப் போகிறதில்லை' என்று விளக்குகளை அங்கங்கே வரிசையாக இறக்கி வைத்துவிட்டுக் கூலி கிடைக்காவிட்டாலும் குற்ற மில்லை யென்று போய்விட்டார்கள். அருணாசலஞ் செட்டி யாரும், வெள்ளையன் செட்டியாரும் பெரிய மனிதர்களாத லால், அலைய முடியாமல் ஊர்வலம் சுற்றிவரட்டு மென்று வீட்டிலேயே நகராமல் இருந்து விட்டனர். ஊர்வலம் மேற் பார்ப்பதற்கு ஆளில்லாமல், மாப்பிள்ளை தூங்கி விழுந்தார்; பெண் குறட்டை விட்டாள். இவ்வாறு ஊர் வலம் ருசி தவறி, பெண்ணும், மாப்பிள்ளையும், மேளக்கார ரும்மாத்திரம் மறுநாட் காலை ஒன்பது மணிக்கு வீடு வந்து சேர்ந்தனர்.

* * * * *

ஷண்முகநாதன் இப்போது தன் மனைவியுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகிறான். அவனுடைய ஒழுக் கத்தில் இவ்வமயம் எள்ளத்தனை குற்றமும் கூற முடியாது. வெள்ளையன் செட்டியார் தன் மகனுடைய ஒழுக்கத்திற்கு மகிழ்ந்து, போன் பேர்த்திகளுடன் சல்லாபமாய்ப் பேசிக் கொண்டு ஆனந்தமாய் இருந்து வருகிறார்.

* * * * *

வள்ளியம்மை, "பொருத்தஞ் சிறிதும் இல்லாமல் செய்யப்படும் மணங்களால் விளையும் தீமை இதுதான்" என்று காட்டுவாள் போலத் தன் வியாபாரத்தைச் சுமாராகச் செய்து கொண்டிருக்கிறாள்.

* * * * *

பொன்னுசாமித் தேவர் நகை திருடிய குற்றத்திற்க
ஆறு வருடம் கடுங்காவல் தண்டனை விதிக்கப் பெற்
கூடலூர் சிறைக் கோட்டத்தில் அரசினருடைய விருந்
ராக இருக்கிறார். கிருஷ்ணதேவர் கடன் பொறுக்க மு
யாமல் பெருந் துன்ப முற்றுத் தற்கொலை செய்துகொ
டிறந்து விட்டார்.

* * * * *

கோகிலம், மாசிலாமணியுடன் இராஜமகேந்திரபுரத்தி
பேரின்பப் பெருவாழ்வு வாழ்ந்து வருகின்றாள்.

* * * * *

நண்பர்களே! மனிதர்கள் நாகரீகமுடையவர்களாக
இருக்கிறார்கள் என்றால்—ஆத்மஞானிகளாக இருக்கிறா
ளென்பது தான் உண்மையான பொருளே ஒழிய—உல
பொருள்களைப் புதிய முறையில் அநுபவிப்பதன்று எ
பதை விளக்க, ஷண்முகநாதனுடைய சரிதம் ஈண்
கூறப்பட்டது. உண்மை நாகரீகமாகிய ஞானத்தை நம
அளித்து, போலி ஆடம்பரம், உண்டு களியாடல், அ
ஞானம் முதலியவைகளினின்று மீட்பித்து, எல்லாம் வ
இறைவன் நம்மைக் காப்பாற்றுவாராக! சுபம்!

ஷண்முகநாதன்
அல்லது
தனவைசிய மைனர்
முற்றும்.

Printed by P. R. Rama Iyar & Co., Madras.